ADVANCED TAMIL READER

PART I

[Texts, Notes and Exercises]

D. P. PATTANAYAK
M. S. THIRUMALAI
K. RANGAN

Central Institute of Indian Languages
MYSORE-570006

ADVANCED TAMIL READER

PART I

ADVANCED TAMIL READER

PART I

(Texts, Notes and Exercises)

D. P. PATTANAYAK
M. S. THIRUMALAI
K. RANGAN

CENTRAL INSTITUTE OF INDIAN LANGUAGES
MYSORE—570006

First Published: *March 1974*

Phalguna 1895

Price: Rs.

Published at the Central Institute of Indian Languages, Manasagangotri, Mysore - 570006 by D. P. Pattanayak, Director, and Printed at M's Printersall (P) Ltd., 26, Crescent Road, Highgrounds, Bangalore - 560001 by S. V. Viswanathan, Managing Director.

FOREWORD

The Central Institute of Indian Languages was set up on the 17th July, 1969 with a view to assisting and co-ordinating the development of Indian Languages. The Institute was charged with the responsibility of serving as a nucleus to bring together all the research and literary out-put from the various linguistic streams to a common head and narrowing the gap between basic research and developmental research in the fields of languages and linguistics in India.

The Institute and its four Regional Language Centres are thus engaged in Research and teaching which lead to the publication of a wide-ranging variety of materials. Preparation of materials designed for teaching/learning at different levels and suited to specific needs is one of the major areas of interest of the Institute. Basic research relating to the acquisition of language and study of language in its manifold psycho-social relations constitute another broad range of its interest. The publications will include materials produced by the members of the staff of the Central Institute of Indian Languages and its Regional Language Centres and associated scholars from Universities and Institutions, both Indian and foreign.

The Central Institute of Indian Languages, as part of their material production programme present this *Advanced Tamil Reader* chiefly with a view to familiarising the learner with varieties of spoken Tamil. The *Reader* also gives rules for moving from spoken to written Tamil and *vice-versa*. Practical learners of Tamil language will find in this book a variety not to be found elsewhere.

I am grateful to Mrs. Indira Gandhi, Prime Minister of India, who, as the then Union Minister of Information and Broadcasting, responded

very favourably to my proposal to utilise the material broadcast by the AIR for language teaching purposes. I must thank the authorities of the AIR, who, in turn, authorised me to visit various AIR stations in India and select material which could be used for language teaching.

Dr. E. Annamalai read the full manuscript and gave suggestions for improvement. Dr. R. Mahadevan and Mrs. Kaushilya Hart helped me in the earlier stages in preparing the manuscript. Sri Chidambarnathan Pillai, Sri N. Ramaswami, Sri S. Rajaram, Sri S. Arokianathan, Sri V. Gnanasundaram, Sri H. L. N. Bharati have helped in different ways in making the manuscript press ready. I acknowledge with thanks all the help.

D. P. PATTANAYAK
Director

CENTRAL INSTITUTE OF INDIAN LANGUAGES, MYSORE-6.

INTRODUCTION

This *Advanced Tamil Reader* presents a collection of radio programmes broadcast over All India Radio from time to time and texts recorded by the senior author especially for inclusion in this *Reader*. It is intended to help the second language Tamil learners to gain an insight into the social and regional dialect variations and the wide ranging differences in the spoken and written styles of Tamil.

This *Reader* can be used with greater profit by those who have already acquired a good knowledge of the basic structures of Tamil. It is visualised that this *Reader* will be a good companion for those who have completed, for instance, basic and intermediate level courses similar to those of the Central Institute of Indian Languages, which consist of approximately 800 hours of class work covering all the four language skills.

This *Reader* is designed in two volumes. Volume I consists of twenty texts with exercises; Volume II is a short dictionary of the items occurring in the texts.

This *Reader* was conceived by the senior author in the early sixties when he was the Chief Linguist at the American Institute of Indian Studies in Poona. The contents of this *Reader* have been tried out in classroom by the senior author for several years.

Several linguists, both Indian and foreign, have published books for teaching and learning the Indian languages. As regards Tamil, we may mention particularly the works of Shanmugam Pillai (1965; 1968), Jothi Muthu (1965), Kumaraswami Raja and Doraswami (1966), Rajaram (1970 a; 1970 b), Gnanasundaram and Ramaswami (1971) Asher and Radhakrishnan (1971), Schiffman (1971) and Samraj (1972). We may also

mention Pattanayak (1967) who gives a programmed script course. Several universities in India and abroad have produced taped lessons for teaching Tamil. Schiffman (1971) and Asher and Radhakrishnan (1971) have produced materials for advanced learners. Schiffman presents a few plays from the A.I.R. with an excellent grammatical sketch of the language. Asher and Radhakrishnan, however, restrict themselves to written literature. Both these works include limited glossary.

This *Advanced Tamil Reader*, unlike Schiffman's, presents all the materials in Tamil script. A cautious and consistent strategy for the transcription has been followed here since the spoken language is not generally written using the Tamil script. Further, Schiffman has restricted himself to only plays. We have included plays, speeches, interviews and discourses (கதாகாலட்சேபம்). These materials cover the spoken and written styles, and social and regional dialects of Tamil. The glossary companion of this *Reader* is radically different from the glossary given in Schiffman and Asher and Radhakrishnan in that it contains corresponding written Tamil forms for the spoken forms in addition to grammatical sub-categorization, and cultural explanation.

Gradation of passages with reference to grammatical complexity is always a problem, particularly when the collected passages are not written for teaching purposes. The texts presented here have been graded intuitively from the point of view of the styles involved.

The differences between spoken and written styles seem to have been maintained for ages and is part of the general diglossic situation prevalent in India. In Sanskrit dramaturgy spoken language was prescribed for characters of lower class and low social status. In the Tamil *Tolkappiyam* reference is made to dialectal Tamil and to the language used by poets. In literary Tamil, the spoken style is not usually written in the Tamil script. The creative writers write down the spoken forms in Tamil script when they want the utterances of a charecter to convey his or her social and/or economic status. They write down the spoken forms in Tamil script to give a local colour and a

'realistic' background. But authors do differ from each other in the modes of transcription of the spoken forms. This difference in transcription is due to the fact that a particular linguistic item which has a consistently uniform shape in the written style may differ widely in its shape in its social and regional variations. The creative writer's degree of awareness of the differences between spoken styles can also contribute to differences in the transcription of spoken forms in Tamil script. Last but not the least, the conventions of the Tamil script also work as a constraint when an author writes exclusively in the spoken style. For instance, Tamil script does not have separate letters for the unaspirated voiced stops which occur in the word-initial position in many commonly used words. The phenomenon of nasalization which is common to all the dialects in Tamil cannot be represented without using some new device in Tamil script. The occurrence of more than two consonants as clusters in a written word arouses strong feelings in a Tamilian. For reasons like these, one has to take recourse to the already existing conventions in reading a text given in Tamil script, with the help of internalized phonological rules. In the word கங்கை, the word initial க is to be pronounced as a voiced sound; the க after the homorganic nasal is to be read voiced. Whenever the existing conventions are found inadequate or unsatisfactory writers have tried to introduce diacritic at marks. For instance, M. Varadarajan denotes the deletion of certain suffixes by putting an apostrophe in the middle of a phrase from where the suffix is deleted. Some magazines use a bold type for a letter which should be pronounced differently from the usual pronunciation meant for that letter, e.g., **ப**ாவம் 'expression' as against பாவம் 'sin'.

In the transcription of the texts presented here, we have followed faithfully the utterances recorded on tape. Thus we have given the nasal graphemes within parantheses whenever the preceding vowel is pronounced nasalized.

While reading the text, the reader is expected to use the phonological rules applied for pronouncing the graphemes of Tamil script. These rules form part of any basic course in Tamil. For instance, one

such rule will tell the reader to read த as *t* in the word initial position and also in the medial position in gemination. The same letter should be pronounced as *d* after the homorganic nasal ந் and in between vowels except in the vicinity of the central unrounded ம where it is pronounced with relatively more friction [ ]. We assume that these rules have been mastered already by the learner in his basic course.

Each text given in this volume consists of three sections: the first consisting of the transcribed text, followed by notes which are printed as footnotes giving cultural and grammatical information, etc., and the third consisting of exercises. In this *Reader* 13 different types of exercises have been used, though not all of them are used for every text. Some of the exercises are designed for the classroom and others to be given as homework. We have not conceived this volume entirely as a self-instructional book. Some additional help from a teacher would be required to derive maximum benefit from reading the texts given here.

The following is the list of exercises used in this volume.

1. Rewrite the following in written Tamil.

2. Change the underlined into written form.

3. Vocabulary Exercise :

   (i) Write at least two derivatives for each of the words given below, following the model.

   (ii) Split the following compounds into constituent words and write meanings for the same.

   (iii) Read the following phrases and write meanings for the same.

   (iv) Use the following phrases in sentences.

4. Fill up the blanks choosing the correct item. Make changes in the sentence if necessary.

5. Substitute the following for ———— after making necessary changes in the given words.

6. Rewrite the following sentences by substituting one item at a time.

7. (*a*) Transform the following into negative sentences using underlined phrase/word.

   (*b*) Transform the following negative into positive and positive into negative sentences.

8. (*a*) Transform the following into interrogative sentences using the underlined phrase/word.

   (*b*) Transform the following into as many interrogative sentences as possible following the model.

9. (*a*) Transform the following into imperative sentences.

   (*b*) Transform the following into declarative sentences.

10. Change each of the following complex sentences into simple sentences.

11. Change the following sentences into complex sentences.

12. Match the phrases given in column I with those given in column II to make appropriate sentences.

13. (*a*) Using the points given below, write a short composition not exceeding ———— lines.

    (*b*) Summarize the story of the drama/text in a narrative form not exceeding ———— lines.

Note that we have refrained from asking the learners to convert the written style into spoken style and write down the same in Tamil script.

There are four sets of 'rules' a learner of Tamil as a second language has to internalize for gaining competence to switch from the spoken to written register and *vice versa*. These are (1) Literary conversion rules, (2) Phonological rules to pronounce the texts in written Tamil, (3) Morphophonemic rules and (4) Dialectal identification. We give below some of the most important details of rules under the above categories. These should not be taken as exhaustive.

1. Of the above four sets of 'rules', the literary conversion rules enable us to derive the spoken forms from the written. Some of the rules within this domain are as follows:

(*a*) இ and உ become எ and ஒ respectively when followed by a syllable beginning with அ or ஐ. This syllable usually has a single consonant.

இலை	becomes	எலை
உலை	becomes	ஒலை
பிற	becomes	பெற
உடை	becomes	ஒடை
சிலை	becomes	செலை
சில	becomes	செல

Note that words like முட்டை, பிட்டு, இல்லை are not pronounced as மொட்டை, பெட்டு, எல்லை since there are two intervening consonants.

(*b*) த்த become ச்ச when they follow இ and ஐ and ந்த become ஞ்ச

படித்தேன்	becomes	படிச்சேன்
நடித்தேன்	becomes	நடிச்சேன்
குடித்தேன்	becomes	குடிச்சேன்
ஐந்து	becomes	அஞ்சு

Also note the following

பாய்ந்தான் becomes பாய்ஞ்சான் or பாஞ்சான்

செய்தான் becomes செஞ்சான்

செய்தேன் becomes செஞ்சேன்

Note also மைந்தன், விந்து do not become மைந்து or விஞ்சு.

(c) ஐ becomes எ in all the cases except in the initial position. In the initial position, as indicated earlier, it becomes அ.

இலை becomes இலெ

முட்டை becomes முட்டெ

மழை becomes மழெ

அவளை becomes அவளெ

வளையல் becomes வளெயல்

Note also that பை may be pronounced either as பய் or as பை

(d) ற்ற becomes ச்ச

போயிற்று becomes போச்சு

ஆயிற்று becomes ஆச்சு

Note that யி is deleted in the above cases in the process converting the immediately following consonants.

2. Some of the phonological rules to pronounce the texts given in written Tamil are as follows:

(*a*) Final ன் and ம் nasalize the preceding vowel. The nasal letters are omitted. But note that in classroom situation while reading a text, the learner is taught to avoid nasalization of the preceding vowel and the nasal letter is pronounced fully. Note also that when a suffix is added to the word ending in ன் or ம், the pronunciation retains the nasal letter fully, as for example :

போகிறான் போறான் போறா(ன்) போறானா?

(*b*) Final உ is deleted usually from the nouns when suffixes are added

காசு காசை காசெ

But an exception is,

ஏசு ஏசுவை and not ஏசை, ஏசெ

(*c*) Other phonological rules include voicing of intervocalic consonants and post-nasal consonants and deletion of வ் in non-initial syllables as in கொடுத்துடு or குடுத்துடு from கொடுத்துவிடு

3. Morphophonemic rules include glide insertion, vowel harmony and stem alternation.

(*a*) Glide insertion takes place between word final vowels and affixes beginning with vowels. If the word ends with இ, (ஈ) or எ, (ஐ), ய் is inserted and if the word ends with அ, உ, ஒ, வ is inserted.

கரி + ஆல் ⊳ கரியால்

இமயமலை + இல் ⊳ இமயமலையில்

ரஷ்யா + இல் ⊳ ரஷ்யாவில்

(b) *Vowel harmony:* Vowels of some case markers change if the final vowel of the noun is இ or ஐ

(c) All nouns ending in ம் change the ம் to த் (த்) before the addition of case markers. For example: மரம் ▷ மரத்தைத். Other rules in this regard are illustrated by the following examples:

நாடு + இல் ▷ நாட்டில்

சோறு + இல் ▷ சோத்தில் (சோற்றில்)

(d) Vowels are rounded between labial and retroflex consonants:

இ and எ become உ and ஒ respectively

பிடி	becomes	புடி
பெண்ணு	becomes	பொண்ணு
வீடு	becomes	வூடு
விழு	becomes	வுழு
மிளகாய்	becomes	முளகாய்

Note also that in some cases, even without a following retroflex consonant the vowel can be rounded as in

மிதக்கும் — மெதக்கும்

மெதக்கும் — மொதக்கும்

4. The informations or rules given above occur in most of the dialects. In addition to these, however, dialects differ from one another in many ways with reference to addition or deletion and shapes of forms including suffixes.

REFERENCES

Asher R. E. and Radhakrishnan, R. (1971) — *A Tamil Prose Reader* Cambridge Univ. Press.

Gnanasundaram V. and Ramaswami, N. (1970) — *Selections from Modern Tamil Literature* Mysore : C. I. I. L. (mimeo)

Jothimutthu, P. (1965) — *A Guide to Tamil* Madras : Christian Literature Society

Kumaraswami Raja, N. and Doraswami, K. (1966) — *Conversational Tamil* Annamalainagar : Annamalai University

Pattanayak, D. P. (1967) — *Programmed Introduction to the Reading and Writing of Tamil* (mimeo)

Rajaram, S. (1970) — *An Intensive Course in Tamil* Mysore : C. I. I. L. (mimeo)

Samraj, S. (1972) — *Tamil Vol. I (Tamil as a second language)* Mussoorie : National Academy of Administration

Schiffman, H. (1967) — *Reader for Advanced spoken Tamil Part I & II* Washington.

Shanmugam Pillai, M. (1965) *Spoken Tamil* Part I
Annamalainagar : Annamalai University.

— (1968) *Spoken Tamil* Part II'
Annamalainagar : Annamalai University.

CONTENTS

சீன ஆக்கிரமிப்பு

காமராஜ்

[This text presents a formal platform speech with a few colloquial features, namely nasalisation, variation between l and ḷ, and n and ṇ. The style involved is simple and the speech uses loan words found in newspapers as well as in colloquial speech.]

நண்பர்களே! நமது நாட்டின் வடக்கு எல்லையில் சீனர்கள் படையெடுத்திருப்பது பற்றி சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். கொஞ்ச காலமாக எல்லையில் தொல்லை கொடுத்த சீனர்கள் இன்று எல்லையைக் கடந்து இந்தியாவின் தூய மண்ணில் துராக்கிரமிப்பு தொடங்கியிருக்கிறார்கள். சரித்திரத்திலேயே மிக நயவஞ்சகமான, நம்பிக்கை மோசடியான தாக்குதலாக இந்தப் படையெடுப்பு நிகழ்ந்திருக்கிறது. உலக நாடுகளிடையே உறவுகளைக் கட்டிக் காக்கும் நியதிகள், நீதிகள், நெறிகள், அனைத்தையும் மீறி சீனா இந்தியாவைத் தாக்கத் தொடங்கியிருக்கிறது. வலிமை கொண்டதும் ஈவு இரக்கமற்றதுமான ஒரு பகைவனை எதிர்த்து இந்தியா போராடிக்கொண்டிருக்கிறது. இந்தியா [1]காலமெல்லாம் சமாதானத்தை விரும்பி வாழ்ந்த ஒரு நாடு. உலகுக்கெல்லாம் நல்லறம் கூறிவரும் நாடு. [2]எங்கெங்கு அநீதி நடைபெற்றதோ அங்கெல்லாம் தன் கண்டனத்தை [3]ஆணித்தரமாகத் தெரிவித்து வந்திருக்கிறது. இந்த சீனா உலக நாடுகளின் அரங்கில் இடம் பெற வேண்டும் என்பதற்காக இந்தியா செய்த முயற்சிகள் கொஞ்சமல்ல. வேறு பல நாடுகளின் அதிருப்தியையும் பொருட்படுத்தாமல் நாம் நியாயத்தின் அடிப்படையில் நமது கொள்கைகளை வற்புறுத்தினோம். இதற்கெல்லாம் பிரதிபலனாக சீனா குரூரமான ஆக்கிரமிப்பில் இறங்கியிருக்கிறது. நியாயத்துக்கும் அநியாயத்துக்குமிடையே நடைபெறும் இந்தப் போரில் யாருக்கு வெற்றி என்பதில் சந்தேகமே

---

[1] காலமெல்லாம் — எல்லாக் காலத்திலும் - at all times; all through the ages.

[2] எங்கெங்கு — wherever

[3] ஆணித்தரமாக — emphatically

கிடையாது. கொடியவர்களை எதிர்த்துப் போராடும்போது நாம் வல்லவர்களாக வளரவேண்டியது அவசியம். தேச பாதுகாப்புக்காக நமது வலிமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். வசதிகளையும் வாய்ப்புக்களையும் அமைத்துக்கொண்டு உறுதி யான நம்பிக்கையுடன் எதிர்த்தாக்குதல் நடத்தி பகைவர்களைத் துரத்தியடிக்க வேண்டும். இந்தப் போர் அதிக காலம் நீடித்தாலும் நீடிக்கலாம் என்று நமது பிரதம மந்திரி நேருஜி எச்சரித்திருக்கின்றார். இந்தப் போரில் நாம் தன்னந்தனியாக நிற்கவில்லை. உலகத்தை இயக்கும் [4]உயிரோட்டமான தருமம் நமக்குத் துணை நிற்கிறது. குருக்ஷேத்திரப் போரில் தருமம்தான் வென்றது. நம் கண் முன்னால் இரண்டாவது உலகப் போரில் ஹிட்லரும் முசோலினியும் டோஜோவும் மிகுந்த பலங் கொண்டவர்களாகப் போரைத் துவக்கினார்கள். ஆரம்பத்தில் வெற்றிகளும் கண்டார்கள். ஆனால் முடிவில் அநீதியும் சர்வாதிகாரமும் அழிந்து சத்தியம்தான் மிஞ்சி நின்றது. நமது நாடும், நாட்டின் சுதந்திரமும் உயிரினும் மேலான அரிய பொக்கிஷங்கள். இந்தப் பொக்கிஷங்களைக் காப்பாற்றக் கேட்ட விலையை நாம் கொடுத்தே ஆகவேண்டும். நாட்டுக்காகவும் சுதந்திரத்துக்காகவும் எந்தத் தியாக மும் பெரிதல்ல. நாடு இன்று நம்மை அழைக்கிறது. நாட்டு மக்களின் ஊக்கம், உழைப்பு, சக்தி, சாதனம், அனைத்தும் நாட்டின் பாதுகாப்புக்கு—பாதுகாப்புப் பணிக்கு ஈடுபடுத்தப்படவேண்டும். இந்த ஜன்மபூமியின் எல்லைகளைச் சேதமின்றிக் காக்கும் பெரும் பணிக்குப் பொன் வேண்டும். ராணுவ சாதனங்கள் வாங்குவதற் குப் பணம் வேண்டும். உழைக்கும் மக்கள் நலிவுறுவண்ணம் பொருளுற்பத்தி பெருக வேண்டும். நமது வீரர்களுக்கு ஆயுதங்கள், சாதனங்கள், மற்றுமித்ர வசதிகள் [5]மேலும் மேலும் தொடர்ந்து கிடைத்து வர வழி செய்யவேண்டும். காடு, கழனி, தொழிற்சாலை அனைத்திலும் இன்று ஒரே நோக்கம் நிலவவேண்டும். நமது சகல சக்திகளும் தேசப்பாதுகாப்பு என்ற மையத்தை நாடிப் போகவேண்டும். இந்த நெருக்கடியான நேரத்தில் [6]மக்களிடையே தேச பக்தியும் வீர உணர்ச்சியும் பீறிட்டுக் கிளம்புவதைப் பார்க்கின்றேன். பாதுகாப்பை பலப்படுத்தவும் நமது ஜவான்களுக்கு வேண்டிய வசதிகள் செய்யவும் பொன்னும் பொருளும் வரத் தொடங்கியிருக்கின்றன. இந்த கடமை உணர்ச்சி மேலும் வளர வேண்டு மென்று கேட்டுக்கொள்கின்றேன். ஏனென்றால் தேசம் வாழ்ந்தால்தான் நாம் வாழ முடியும். நம் நாட்டின் தொழிலாளிகள் நல்ல உணர்ச்சியுள்ளவர்கள். அரசியலி லும் நாட்டுப் பிரச்சினைகளிலும் கருத்துக் கொண்டவர்கள். அந்த நண்பர்களை இன்று எதிர்நோக்கியிருக்கும் ஒரே பணி உற்பத்தியை அதிகரிப்பதேயாகும்.

---

4 உயிரோட்டம் — the stream of life

5 மேலும் மேலும் — over and over, again

6 மக்களிடையே — among the people

[7]வேலை நிறுத்தங்களோ சோம்பலுக்கோ இடந்தராமல் உற்பத்தியைப் பெருக்குவதில் அவர்கள் முழுமூச்சுடன் பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். ஆக்கிரமிப்பு கண்டு இளைஞர்களும், மாணவர்களும் தங்கள் [8]உள்ளத் துடிப்பை வெளியிட்டிருக்கிறார்கள். இந்த ஆர்வமெல்லாம் வகையான முறையில் பயன்படுத்தப்படும் என்று நம்புகின்றேன். பயிற்சிகள் பெறுவோர் தங்கள் பணிகளில் நல்ல திறம் பெறுவார்களாக! மற்ற மாணவர்கள் ஓய்வு நேரத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு ஆதரவான பணிகளில் ஈடுபடுவார்களென்று நம்புகிறேன். நம் நாட்டில் பல்வேறு அரசியல் கட்சிகள் இருக்கின்றன. நாட்டுப் பாதுகாப்புக்கு நேர்ந்திருக்கும் அபாயத்தைப்பார்க்கும்போது கட்சிவேறுபாடுகள் என்பவை மிகச்சிறிய விஷயங்கள். சர்ச்சைகளுக்கும் வாதப்பிரதி வாதங்களுக்கும் குறை கூறுவதற்கும் இது நேரமல்ல. ஆக்கிரமிக்கப் புகுந்த கொடியவர்களைத் துரத்தும் பெரும்பணியில் எல்லாக் கட்சிகளும் வேறுபாடுகளை மறந்து ஒரு மனதாகச் செயல்பட வேண்டும். நாட்டில் தோன்றியுள்ள இந்த நிலைமையை [9]ஒரு சாக்காக வைத்து விலைவாசிகளை உயர்த்தும் போக்குக்கு ஒருபோதும் இடந்தரக்கூடாது. தீய சபலங்கள் அடியோடு தொலைய வேண்டும். நாட்டுக்கு அவதி நேரும்போது அதைப் பயன்படுத்தி சொந்தத்துக்கு லாபம் அடிப்பது [10]பச்சைத் துரோகம் என்பதை உணரவேண்டும். ஐந்தாண்டு திட்ட வேலைகளில் விவசாயப் பெருமக்கள் நல்ல முறையில் ஒத்துழைத்து உற்பத்தியைப் பெருக்கியிருக்கின்றார்கள். மக்கள் அமைதியாகத் தங்கள் தங்கள் பணியைத் திறம்படச் செய்துகொண்டு போகவேண்டுமானால் விவசாய உற்பத்தி மேலும் பெருகவேண்டும். • ஒவ்வொரு ஏக்கரிலும் அதிகமான உற்பத்தி எடுக்க முனைந்து வேலை செய்யவேண்டும். இழந்திருந்த சுதந்திரத்தை 15 ஆண்டுகளுக்கு முன்புதான் திரும்பப் பெற்றோம். நமது [11]அறப்போர் முறையையும் அதன் விளைவையும் கண்டு உலகம் வியந்தது. அத்தகைய சிறப்புடைய நம் நாட்டு மக்கள் போரைப் பற்றி பீதியோ, திகிலோ அடையக்கூடாது. திகிலடையக் காரணம் இல்லை. நமது ராணுவம் நல்ல தேர்ச்சியுள்ள ராணுவம். ராணுவ அதிகாரிகள் திறமை மிகுந்தவர்கள். சீனர்களின் தொகை அளவும் கபடமான அவர்களது நீண்டகால ஏற்பாடு

---

[7] வேலை நிறுத்தங்களோ } — appropriate form here is வேலை நிறுத்தங்களுக்கோ

[8] உள்ளத்துடிப்பு — anxiety of the heart

[9] ஒரு சாக்கு — an excuse

[10] பச்சைத்துரோகம் — utter treachery, பச்சை used to intensify the quality

[11] அறப்போர் — Satyagraha, the agitatation using non-violent methods.

களும் அவர்களுக்கு [12]தாற்காலிகமாக சில சாதகங்களை அளித்திருக்கலாம். ஆனால் சீனர்களைத் துரத்தியடிப்பதற்கு நமது ராணுவத்துக்கு எல்லா வலிமையும் உண்டு. எல்லைப் புறத்துக் கடுமையான குளிரில் நமது ஜவான்கள் தீரத்துடன் சமர் புரிந்து வருகின்றார்கள். நமது நாடு குடியரசு நாடு. மக்களே அரசோச்சும் நாடு. வந்துள்ள ஆபத்து நம் ஒவ்வொருவருடைய உரிமைக்கும் வந்துள்ள ஆபத்து. இதை உணர்வதால் நாம் அடையும் புதிய வலிமையும் நமது ராணுவத்தின் ஆற்றலும் இணைந்து செயல்படுவதின் மூலம் எதிரிகள் துரத்தியடிக்கப்படுவது திண்ணம். [13]இறுதி வெற்றி இந்தியாவுக்கே என்பது உறுதி. நடக்கிறபடி நடக்கட்டும் என்ற மனப்பான்மை நம் நாட்டில் சற்று அதிகம். அத்தகைய போக்குக்கு இனி இடமே கிடையாது. ஏற்பட்டுள்ள அபாயத்தைப் போக்க காரியங்கள் வேகமாக நடைபெற வேண்டும். பாதுகாப்பு முயற்சிகளை பலப்படுத்துவதற்கு உதவியாக நாம் அனைவரும் சிக்கனத்தை அனுசரிக்க வேண்டும். குறிப்பாக தாய்மார்கள் இந்த விஷயத்தில் கவனஞ் செலுத்துமாறு வேண்டிக்கொள்கின்றேன். உலக முழுவதற்குமே சமாதானத்தின் தீவிர சின்னமாகத் திகழுபவர் நேருஜி. அவர் தலைமையில் இயங்கும் நமது நாடு தான் இன்று தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கிறது. இதுபோன்ற சமயத்தில் நமது குணங்களை உலகம் நன்றாக அறிந்துகொள்ளும் என்று நம்புகின்றேன். சீனர்களின் படையெடுப்பில் ஒரு உண்மை தெளிவாகப் புலப்படுகிறது. நாட்டைக்காக்க இந்திய மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு எல்லா உதவியையும் அளிக்க முன்வந்துள்ளனர். அவர்களுடைய தேசபக்தி நமது எதிர்காலத்தைப் பற்றி நாம் பூர்ண நம்பிக்கை கொள்ளச் செய்கிறது. பிரகாசமான ஒரு பொற்காலம் நமக்குக் காத்துக் கிடக்கிறது. இடையில் தோன்றிய இந்த சோதனைகளை தீரத்துடன் சமாளிப்போம். நமது வீரர்களின் ஆற்றலை உலகமுழுதும் அறிய இப்பொழுது ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இந்திய மக்கள் அனைவரும் தங்களுக்கு பக்கபலமாக நிற்கின்றார்கள் என்பதை நமது வீரர்கள் அறியும் வகையில் கட்டுப்பாடாகவும் தியாக உணர்ச்சியுடனும் நாம் செயலாற்றுவோமாக! வெற்றி நமதே!

ஜெய் ஹிந்த்!

---

[12] தாற்காலிகமாக — also தற்காலிகமாக, temporarily

[13] இறுதி வெற்றி — final victory

EXERCISES

I Vocabulary Exercise :

(*a*) Write a derivative noun for each of the words given below:

Model: தாக்கு—தாக்குதல்

(i) மோது
(ii) போராடு
(iii) ஏசு
(iv) பேசு
(v) புகழ்

(*b*) Split the following compounds into constituent words and write meanings for the same.

(i) படையெடுப்பு
(ii) பக்கபலம்
(iii) தூயமண்
(iv) ஜன்மபூமி
(v) முழுமூச்சு
(iv) குடியரசு

II Fill up the blanks choosing the correct item.

Make changes in the sentence if necessary.

1. குறிப்பாகத் தாய்மார்கள் இந்த விஷயத்தில் கவனஞ்செலுத்துமாறு— கொள்கிறேன்.

(i) வேண்டுக்
(ii) வேண்டிக்
(iii) வேண்டுமென்று

2. திகிலடையக் காரணமே——

(i) இல்லை
(ii) இருக்கிறது
(iii) உண்டு

3. ஆனால் சீனர்களைத் துரத்தியடிப்பதற்கு நமது ராணுவத்திற்கு எல்லா வலிமை—— உண்டு.

(i) கள்
(ii) உம்
(iii) ஓடு

4. இந்த ஜென்ம பூமியின் எல்லைகளைச் சேதமின்றிக் காக்கும் பெரும் பணி—— பொன் வேண்டும்.

(i) ஆல்
(ii) கு
(iii) கள்

5. நமது நாடும் நாட்டின் சுதந்திரமும் உயிரினும் மேல்—— அரிய பொக்கிஷங்கள்.

(i) ஆக
(ii) ஆன
(iii) இல்

6. நாட்டில் தோன்றியுள்ள இந்த நிலைமை—— சாக்கு வைத்து விலைவாசியை உயர்த்தும் போக்கு.

(i) ஆல்
(ii) ஐ
(iii) ஓடு

III *Substitution* :

1. கொடியவர்களை எதிர்த்துப் போராடும்போது நாம் வல்லவர்களாக வளர வேண்டியது அவசியம்.

(*a*) Substitute the following for கொடியவர்களை after making necessary changes in the given words:

(i) முரடர்கள்
(ii) எதிரி
(iii) காவிகள்

(*b*) Substitute the following for **வல்லவர்களாக** after making necessary changes in the given words :

(i) நல்லவர்

(ii) அஞ்சாதவர்

(iii) பொறுமையுடையவர்

(*c*) Substitute the following for **வளர** after making necessary changes in the given words :

(i) மாறு

(ii) உயர்

(iii) இயங்கு

2. நியாயத்துக்கும் அநியாயத்துக்குமிடையே நடைபெறும் இந்தப்போரில் யாருக்கு வெற்றி என்பதில் சந்தேகமே கிடையாது.

(*a*) Substitute the following for **நியாயத்துக்கும் அநியாயத்துக்கும்** after making necessary changes in the given words :

(i)	இந்தியா	சீனு
(ii)	நான்	நண்பன்
(iii)	நீ	மந்திரி

(*b*) Substitute the following for **நடைபெறும்** after making necessary changes in the given words :

(i) ஏற்படு

(ii) தொடங்கு

(iii) மூள்

(*c*) Substitute the following for **போரில்** after making necessary changes in the given words :

(i) போராட்டம்

(ii) போட்டி

(iii) சண்டை

3. நமது சகல சக்திகளும் தேசப்பாதுகாப்பு என்ற மையத்தை நாடிப் போக வேண்டும்.

(a) Substitute the following for நாடி after making necessary changes in the given words :

(i) நோக்கு
(ii) குறி
(iii) நிலை

(b) Substitute the following for போக after making necessary changes in the given words :

(i) அடை
(ii) சேர்
(iii) வா

(c) Substitute the following for சகல after making necessary changes in the given words :

எல்லாம்

IV Rewrite the following sentences by substituting one item at a time.

1. தேச பாதுகாப்புக்காக நமது வலிமையை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

(i) பெருக்கி
(ii) பொருளாதாரத்தை
(iii) முன்னேற்றத்திற்காக
(iv) மக்களுடைய

2. இந்தப் போரில் நாம் தன்னந்தனியாக நிற்கவில்லை.

(i) சக்தியற்று
(ii) இருக்க
(iii) ஊரில்
(iv) நம்நாடு

3. நமது அறப்போர் முறையையும் அதன் விளைவையும் கண்டு உலகம் வியந்தது.

(i) படித்து

(ii) பயனையும்

(iii) மகிழ்ந்தது

(iv) இந்தியாவின்

V *Transform the following sentences into negative ones, using the* **underlined phrases.**

1 சீனா காலமெல்லாம் சமாதானத்தை விரும்பி <u>வாழ்ந்த</u> நாடு.

2. உலகுக்கெல்லாம் நல்லறம் <u>கூறிவரும்</u> நாடு

3. இடையில் தோன்றிய இந்தச் சோதனைகளை தீரத்துடன் <u>சமாளிப்போம்.</u>

4. நாம் நியாயத்தின் அடிப்படையில் நமது கொள்கைகளை <u>வற்புறுத்தினோம்.</u>

5. இந்தப் போர் அதிக காலம் <u>நீடிக்கலாம்.</u>

VI *Transform the following into interrogative sentences using the* **underlined phrases.**

1. பாதுகாப்பைப் பலப்படுத்தவும் நமது ஜவான்களுக்கு வேண்டிய வசதிகள் செய்யவும் <u>பொன்னும் பொருளும்</u> வரத்தொடங்கி இருக்கின்றன.

2. நமது நாட்டில் <u>பல்வேறு</u> அரசியல் கட்சிகள் இருக்கின்றன.

3. நாட்டுக்கு <u>அவதி</u> நேரும்போது அதைப் பயன்படுத்தி சொந்தத்துக்கு லாபம் அடிப்பது பச்சைத் துரோகம்.

4. <u>எல்லைப் புறத்தில்</u> கடுமையான குளிரில் நமது ஜவான்கள் தீரத்துடன் சமர் புரிந்து வருகிறார்கள்.

5. ஏற்பட்டுள்ள அபாயத்தைப் போக்க காரியங்கள் <u>வேகமாக</u> நடைபெற வேண்டும்.

VII *Change each of the following complex sentences into simple sentences.*

1. நமது நாட்டின் வடக்கு எல்லையில் சீனர்கள் படையெடுத்திருப்பதுபற்றி சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

2. அவர்கள் வேலை நிறுத்தங்களுக்கோ சோம்பலுக்கோ இடம் தராமல் உற்பத்தியைப் பெருக்குவதில் முழுமூச்சுடன் பணியாற்ற வேண்டும்.

3. கொஞ்ச காலமாக எல்லையில் தொல்லை கொடுத்த சீனர்கள் இன்று எல்லையைக் கடந்து இந்தியாவின் தூய மண்ணில் துராக்கிரமிப்பு தொடங்கியிருக்கிறார்கள்.

4. நாட்டுப் பாதுகாப்புக்கு நேர்ந்திருக்கும் அபாயத்தைப் பார்க்கும்போது கட்சி வேறுபாடுகள் என்பவை மிகச் சிறிய விஷயங்கள்.

VIII *Change the following into complex sentences :*

1. தேசப் பாதுகாப்புக்காக நமது வலிமையை வளர்த்துக்கொள்ள வேண்டும். வசதிகளையும் வாய்ப்புக்களையும் அமைத்துக்கொண்டு நம்பிக்கையுடன் எதிர்த்தாக்குதல் நடத்தி பகைவர்களைத் துரத்தியடிக்க வேண்டும்.

2. ஏற்பட்டுள்ள அபாயத்தைப் போக்க காரியங்கள் வேகமாக நடைபெற வேண்டும். பாதுகாப்பு முயற்சிகளைப் பலப்படுத்துவதற்கு உதவியாக நாம் அனைவரும் சிக்கனத்தை அனுசரிக்கவேண்டும்.

3. உலக முழுவதற்குமே சமாதானத்தின் தீவிரச் சின்னமாகத் திகழுபவர் நேருஜி. அவர் தலைமையில் இயங்கும் நமது நாடுதான் இன்று தாக்குதலுக்கு உள்ளாயிருக்கிறது.

4. பிரகாசமான ஒரு பொற்காலம் நமக்குக் காத்துக்கிடக்கிறது. இடையில் தோன்றிய இந்த சோதனைகளை தீரத்துடன் சமாளிப்போம்.

5. ஆக்கிரமிப்பு கண்டு, இளைஞர்களும், மாணவர்களும் தங்கள் உள்ளத் துடிப்பை வெளியிட்டிருக்கிறார்கள். இந்த ஆர்வமெல்லாம் வகையான முறையில் பயன்படுத்தப்படும் என்று நம்புகிறேன்.

IX Using the points given below, write a short composition not exceeding 25 lines:

இந்தியா சமாதான நாடு—சீனாவுக்காக இந்தியாவின் பல முயற்சிகள்— ஆனால் சீனாவின் படையெடுப்பு—நியாயத்திற்கும் **அநியாயத்திற்கும்** இடையே போர்—தேசப் பாதுகாப்புக்கு **வேண்டிய** தேவைகள்—தொழிலாளர் கடமை—இளைஞர்கள், **மாணவர்கள்** கடமை—அரசியல் கட்சிகள் கடமை—வியாபாரிகள் கடமை—விவசாயிகள் கடமை—தாய்மார்கள் கடமை—நமது ராணுவம் நல்ல ராணுவம்—நமது நாடு குடியரசு—உரிமைக்கு ஆபத்து—இந்தியாவுக்கே இறுதி வெற்றி.

தி. மு. க. பதவியேற்பு - வானொலிச் சொற்பொழிவு

சி. என். அண்ணாதுரை

[This text presents a formal platform speech. Although the speech is characterized by the use of simple sentences, certain stylistic features give an aura of complexity. This may be due to an excessive use of embedded sentences, enumerative/additive phrases and alliteration. Particular mention should be made of the use of the suffix இட to infinitive phrase, where a simple infinitive phrase would be sufficient.

Examples :

முடித்திட	முடிக்க
செம்மையானதாகிட	செம்மையாக
அமைந்திட	அமைய
நடந்திட	நடக்க

This text abounds in such additions to phrases. It uses words and phrases which have been generously borrowed and used in the formal platform speech, especially in the DMK platform. We are confronted here with a problem in Tamil as to how much of the written register even when it is very close to the formal spoken style could be understood by the average Tamilian with a little or no formal education. This problem applies to any and every platform speech made in Tamil.]

நண்பர்களே! உங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இன்று சட்ட மன்றத்தில் உறுதிமொழி தெரிவித்து பொறுப்பினை ஏற்றுக்கொண்டுள்ளனர். இந்நாட்டு மன்னர்களாகிய நீங்கள் பிறப்பித்த ஆணையினை ஏற்றுக்கொண்டு அவர்கள் சட்ட

மன்றத்திலமர்ந்துள்ளனர். அவர்களின் துணையுடன் நானும் என்னுடனுள்ள மற்ற அமைச்சர்களும் [1]ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளோம். மன்னர்களாகிய உங்களிடம் எமது வணக்கத்தையும் [2]நன்றியறிதலையும் தெரிவித்துக் கொள்கிறோம். பல ஆண்டுகளாக தொடர்ந்து என்னிடமும் என் தோழர்களிடமும் பாசம் கலந்த பரிவு காட்டி வருகின்றீர்கள். இந்த ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் நாடாளும் பொறுப்பினையும் தந்துள்ளீர்கள். தங்களன்பினையும் ஆதரவினையும் மிகப் பெரிய அளவுக்குப் பெற்றிருக்கும் நான் நெஞ்சு நெகிழ்ந்திடும் நிலையிலேயே பேசுகிறேன். தங்களின் மேலான நம்பிக்கைக்கு முழுவதும் ஏற்றவனாக நடந்துகொள்ள வேண்டும் என்ற பொறுப்புணர்ச்சியைத் துணை கொண்டு கடமையைச் செய்திடுவதில் ஈடுபடுகிறேன். என்னைச் சுற்றிலும் கனிவு நிரம்பிய கண்கள்; என்னைச் சுற்றிலும் கை கொடுக்கும் கரங்கள்; என்னை ஊக்குவிக்க [3]எந்தப்பக்கமிருந்தும் அன்பு மொழிகள். துணை நிற்கிறோம், வழி காட்டுகிறோம், முறை அறிவிக்கிறோம், குறை களைகிறோம், தயக்கம் வேண்டாம், பொறுப்பினை நிறைவேற்றிடுக என்று தகுதி மிக்க தமிழகத்தார் கூறிடுவது செவிக்குச் [4]செந்தேனாக இருக்கிறது. பொறுப்பினை ஏற்றுக்கொண்டேன். ஒரு புனிதக் கடமையிலீடுபடுகிறோம் என்ற உணர்ச்சியுடன் பொறுப்பினை ஏற்றுக்கொண்டிருக்கிறேன். நான் பொறுப்பேற்றுக் கொண்டிருப்பது தமிழ் நாட்டில். வழி வழி வந்த வல்லவர்கள், வித்தகர்கள் நிரம்பிய தமிழ் நாட்டில். காவிரி, தென்பெண்ணை, பாலாறு, வைகை போன்ற ஆறுகளும், அருவிகளும் பண்பாடி வளமளித்திடும் தமிழ் நாட்டில். [5]ஆயிரமாயிரம் தொழில்களில் ஈடுபட்டு நாட்டுக்குச் செல்வத்தை ஈட்டித்தரும் பாட்டாளிகள் நிரம்பிய தமிழ்நாட்டில். [6]பாட்டு மொழியாம் தமிழ் மொழியுடன் இழைந்துள்ள பண்பாடு சிறந்திடும் தமிழ்நாட்டில். பாருக்குள்ளே நல்ல நாடு என்று பாவலர் கொண்டாடிடும் தமிழ்நாட்டில். அதனை எண்ண எண்ண இனிக்கிறது. ஆனால், ஆமாமந்தக் கவலை தந்திடும் சொல் வரத்தான் செய்கிறது.

1	ஆட்சிப் பொறுப்பு	— the responsibility of running the government
2	நன்றியறிதல்	— gratitude
3	எந்தப்பக்கமிருந்தும்	— எல்லாப் பக்கமிருந்தும்
4	செந்தேன்	— good honey; செம்மை is used here in the sense of 'good condition'. See the usage of செந்தமிழ் - செம்மை standard/good Tamil
5	ஆயிரமாயிரம்	— thousands of. Also லட்சோப லட்சம் — lakhs and lakhs of
6	பாட்டுமொழி	— (Tamil) language which is of musical nature

ஆனால் எத்தனை எத்தனை சிக்கலுள்ள பிரச்சினைகள் நெளிந்துகொண்டுள்ள தமிழ்நாடு என்பதனை எண்ணும்போது கவலை ஏற்படத்தான் செய்கிறது. இந்தப் பிரச்சினைகளைச் சந்திக்கவும், சிக்கல்களைத் தீர்க்கவும் போதுமான உறுதியும், திறமையும், துணையும், தோழமையும் தொடர்ந்து கிடைத்திட வேண்டுமே என்பதனை எண்ணும்போது நீங்கள் உடனிருக்கிறீர்கள் என்ற நினைவுதான் கவலையை ஓட்டுகிறது, கடமையைச் செய்வோம் என்ற உறுதியைத் தருகிறது. உங்களுக்காக நான் என்பது மட்டுமல்ல, நண்பர்களே! உண்மையைச் சொல்வதானால் [7]உங்களால் நான். அதனை உணருகிறேன். மறந்திடுபவனும் நானல்ல. ஆனால் என்னிடம் நீங்கள் ஒப்படைத்துள்ள வேலையின் கடினத்தையும், ஆண்டு பலவாகக் குவிந்து குவிந்து கெட்டிப்பட்டுவிட்டுள்ள சீர்கேடுகளையும், சிக்கல்களையும் மறந்து விடாதீர்கள். கடமையை நான் செய்து முடித்திட உங்கள் ஒவ்வொருவருடைய முழு ஒத்துழைப்பும் தேவை என்பதை மறந்து விடாதீர்கள். ஆட்சி நடத்திட ஆணை பிறப்பித்துவிட்டோம், இனி நாமில்லாமலேகூட ஆட்சி செம்மையாக நடந்திடும் என்று இருந்து விடமாட்டீர்கள் என்று நம்புகிறேன். நீங்கள் ஒவ்வொருவரும் அவரவர் துறையிலிருந்து நற்பணியாற்றினால் மட்டுமே என் வேலை நடந்திடும். நாடு சீர்படும். நாட்டு ஆட்சி செம்மையானதாகிட நானும் எனது நண்பர்களும் அமைச்சரகத்தில் அமர்ந்து பணியாற்றினால் மட்டும் போதாது. அரசு நடந்திட ஆயிரமாயிரம் திறமைமிக்க அலுவலாளர்கள் பணியாற்றினால் மட்டும் போதாது. ஆட்சி உண்மையில் செம்மையானதாக அமைந்திட வேண்டுமென்றால் வயலில், தொழிற்சாலையில், அங்காடியில் பணி புரிந்திடும் உற்பத்தியாளர்கள், உழைப்பாளர்கள் அனைவரும் ஆட்சி நடத்திடுவோர் நாமேயென்ற உணர்வுடன் தத்தமது கடமையினைச் செய்யவேண்டும். கற்றறிவாளர் எம்மை நல்வழி நடந்திடச் செய்ய வேண்டும். [8]இதழ் நடாத்துவோர் உடனிருந்து [9]முறை கூறிடவேண்டும். இவர் யாவரும் சேர்ந்து நடத்துவதே அரசு. நாங்கள் உங்களாலே அமர்த்தப்பட்டவர்கள். வயல்களிலே கதிர் குலுங்கிடும், சர்க்கார் அலுவலங்களில் மகிழ்ச்சி துள்ளும்; தொழிற்சாலைகளிலே தோழமை மலர்ந்து, நீதியும், நிம்மதியும் கிடைத்து உற்பத்திபெருகிடும்; நாட்டு நிலை உயர்ந்திடும். அங்காடியிலுள்ளோர் [10]கொள்வனகொடுப்பன என்பவை நேர்மையினடிப்படையிலமைத்திருத்தல்

---

[7] உங்களால் நான் — Because of you, I am

[8] இதழ் நடாத்துவோர் — those who run the newspapers; here it includes the journalists.

[9] முறைகூறு — here inform the proper course of action.

[10] கொள்வன கொடுப்பன — things received and things given i.e. things bought and things sold.

வேண்டும் என்று இருந்திட, அகவிலையும், பதுக்கலும் அழிந்து படும். பொதுமக்களின் வாழ்வு சீர்படும். நாட்டின் நிலை உயர்ந்திட பணியாற்றிடவே நாம் என்ற உணர்வுடன் மாணவமணிகள் கல்விக்கூடங்களில் பயிற்சி பெற்றிட நாடு மேம்பாடடையும். இவையெல்லாவற்றின் கூட்டே ஆட்சி. சில மண்டபங்களிலே மட்டும் செய்யப்படுகிற காரியமல்ல ஆட்சியென்பது. நாட்டு ஆட்சி [11]வீட்டுக்கு வீடு காணப்படும் பண்பைப் பொறுத்திருக்கிறது. இல்லாமை, போதாமை நீக்கப் பட்டு வலியோர் எளியோரை வாட்டிடுங் கொடுமை ஒழிக்கப்பட்டு எல்லோருக்கும் ஏற்றம், இன்பம் உறுதியளிக்கப்பட்டு நாடு பூக்காடாகத் திகழ்ந்திட வேண்டுமென்ற ஆசையால் உந்தப்பட்டு இந்த நிலை பெறுவதற்கான பணியில் ஒரு சிறு பகுதியை யேனும் நாம் செய்து முடிக்க வேண்டுமென்ற ஆவலுடன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளேன். எல்லா முனைகளிலும் பற்றுக்குறை மிரட்டியபடி இருப்ப தைக் காண்கிறேன். பல்வேறு முனைகளில் தவறான நோக்கம், தனக்குத்தான் என்ற எண்ணம், மேலோங்கியிருக்கக் காண்கிறேன். பொது நன்மையில் மட்டுமே தனி மனிதன் நலன் காண முடியும் என்பது ஏட்டுக்கு, நாட்டுக்கு அல்ல என்று எண்ணங் கொண்டோர் உலவிடக் காண்கிறேன். பிளவுகள் ஏற்படுவதற்கான முறைகள், எண்ணங்கள் இவைகளை விட்டொழிக்க மனமற்றிருப்பவர்களைக் காண்கிறேன். கூட்டு முயற்சிக்குப் பல தடைக்கற்கள் போடப்பட்டிருப்பதைக் காண்கிறேன். இவைகளை நீக்கிட நாடு எத்தகைய எழில் பெறும் என்பதனை எண்ணுகிறேன். உம்மையழைக்கின்றேன் நண்பர்களே! நம்பிக்கையுடனழைக்கின்றேன். இந்தத் தூய தொண்டாற்ற வாரீர் என்றழைக்கின்றேன். ஒவ்வொருவரிடமும் உள்ள அறிவும், ஆற்றலும், கிடைத்திடும் வசதியும் வாய்ப்பும் பெற்றிடும் நேரமும் நினைப்பும் இதற்காகவே பயன்படுத்தப்பட வேண்டும். உங்களோடு சேர்ந்து இதற் காக உழைத்திட நானும், பொறுப்பேற்றுக் கொண்டுள்ள என் நண்பர்களும் காத்திருக்கிறோம். உணவுக்கே உழல்கிறோம், அறிவீர்கள். அறிந்த பின் செய்திட வேண்டியது என்ன? இந்த நிலைமைக்கான காரணம் காண்கின்றோம், குறை களைகின் றோம், முறை வகுக்கின்றோம், அரசாள்வோர் என்ற நிலையில். ஆனால் வகுத்திடும் முறைகள் வெற்றி பெற உங்களைத்தான் நம்பியிருக்கின்றோம். நாமாகத் தேடிப் பெற்றுக்கொண்ட அரசு இது. நம்முடைய துணையை நம்பியேயிருக்கும் அரசு இது. எனவே இது செம்மையாக நடந்திட நாம்தான் துணையிருக்க வேண்டும் என்று ஒத்துழைத்திட முனைந்து நின்றிட வேண்டுகிறேன். உணவு உற்பத்திப் பெருகிடவும், உற்பத்தியாவது உண்போருக்கு முறையாகக் கிடைத்திடவும், கிடைப்பது [12]அடக்க மான விலையில் நின்றிடவும், முறைகள் யாவை என்பதறிந்திட விற்பன்னர்களிடம்

---

[11] வீட்டுக்கு வீடு — house to house

[12] அடக்கமான விலை — reasonable price; the cost of the price.

கருத்தறிந்து வருகின்றேன். செயலில் ஈடுபடு முன்னர் சிந்தித்திடல் தேவையல்லவா? அதிலே இப்போது கவனம் செலுத்தி வருகின்றோம். உழைப்பவன் வாழ்வு உயர்ந்திட வழியாது என்பதனை ஆராய்ந்துவருகின்றோம். மக்களுடன் மிகநெருங்கிய தோழமைத் தொடர்பு கொண்டதாக நிர்வாகம் இருந்திட என்ன செய்ய வேண்டும் என்பது பற்றியும்யோசித்து வருகின்றோம். ஊழலும், ஊதாரித்தனமும் [13]போக்கப்பட என்ன நடவடிக்கை மேற்கொள்வதென்பது பற்றி [14]கலந்து பேசி வருகின்றோம். எங்கள் துறையிலிருந்து என்னென்ன செய்ய இயலுமோ, அவற்றைச் செய்திட துயங்கிடோம். உடனிருந்து எமது முயற்சிக்கு வெற்றி கிடைத்திடச் செய்வது உமது கடமை. புதிய அரசு அமைந்திருக்கிறது இங்கு. புதிய அரசு மட்டுமல்ல, அரசியலிலே புதிய பிரச்சினையை எழுப்பி விடும் நிலையில் உள்ள அரசு. இங்கும் கேரளத்திலும், வங்கத்திலும், பீஹாரிலும், பஞ்சாப்பிலும், ஒரிஸ்ஸாவிலும் ஆட்சிப் பொறுப்பில் காங்கிரஸ் அல்லாத கட்சியினர் உள்ளனர். வேறு சில மாநிலங்களில் காங் கிரஸ் கட்சி அரசமைத்திருக்கிறது. மத்திய சர்க்காரில் காங்கிரஸ் கட்சி அரசோச்சு கிறது. இந்த நிலை கடந்த இருபது ஆண்டுகளாக நாடு காணாத நிலைமை. இந்த நிலை காரணமாக சிக்கல்கள், எரிச்சல்கள், மோதுதல் ஏற்பட்டுவிடுமோ, ஒற்றுமைக்கு ஊறு நேரிடுமோ, குழப்ப நிலை வளர்ந்திடுமோ என்று அச்சமும் ஐயப்பாடும் கொண்டிடுவோர் உள்ளனர். தமிழகத்தில் அரசோச்சும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கூறிக்கொள்கிறேன்—இங்கு அமைந்துள்ள அரசு மேற்கொள்ளும் நடவடிக்கை அந்த நிலைமையை நிச்சயமாக உண்டாக்காது. மாநில அரசுகளுக்கும் மத்திய அரசுக்கும் உள்ள உறவுமுறைகள், அந்த முறைகள் செயல்படுத்தப்படும் வகை, என்பன பற்றிய புதிய சிந்தனையைக் கிளறவும், செம்மையானதாக்கப் படவும், இன்று பல இடங்களில் காங்கிரஸ் அல்லாத அரசு அமைந்திருப்பதை ஒரு நல்ல, தேவையான, பயன்தரத்தக்க வாய்ப்பாக கருதவேண்டுமே யொழிய கை பிசைந்துகொண்டு [15]கலக்கமடைவது தேவையற்றதாகும். என்றென்றும் எல்லா மாநில அரசுகளும் மத்திய அரசும் ஒரே கட்சி ஆட்சியில் தானிருக்கும் என்று அரசியல் நுட்பம் அறிந்த யாரும் கூறமாட்டார்கள், கருதிட மாட்டார்கள், எதிர் பார்த்திட மாட்டார்கள். ஆகவே இங்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியும், வேறு இடங்களில் பல கட்சிகள் கொண்ட கூட்டாட்சியும் ஏற்பட்டிருப்பது கண்டு திகைப்புக் கொள்ளாமல், எரிச்சல் அடையாமல், கசப்புக் கொள்ளாமல் மத்திய சர்க்காரை நடாத்திடும் காங்கிரஸ் அரசு நடந்து கொள்ளுமானால் எரிச்சலும், மோதலும் எழவேண்டிய நிலையே வராது. மிகச் சிறந்த பண்பு மிக்க ஆட்சி முறை நுண்ணறிவு இதற்குத் தேவை. மற்றவர்களின் கருத்தறிவதிலே ஓர் அக்கறை,

---

[13] போக்கப் பட — போக; passive form is used.

[14] கலந்து பேசு — to have consultation talks

[15] கலக்கம் அடை — to get confused; to become afraid

அவர்களின் முறையீட்டைக் கேட்பதிலே ஒரு கனிவு, [16]அவர்களுக்கான காரிய மாற்றுவதிலேயும், துணை நிற்பதிலேயும் ஒரு ஆர்வம், இவையெல்லாவற்றையும் விட ஒருவர் மனதை ஒருவர் புரிந்து கொள்வதிலே தனித்திறமை, இன்சொல், நட்பு, பரிவு ஆகிய இவை மிக மிகத் தேவை. இந்தியப் பிரதமராக வந்திருக்கும் திருமதி இந்திரா காந்தியவர்கள் இந்தப் பண்புடன் நடந்துகொள்வார்கள் என்று நம்பிக்கை கொண்டிருப்பவர்களில் நான் ஒருவன். சின்னுட்களுக்கு முன்புகூட அவர்கள் இந்தி பேசாத பகுதியினரின் உரிமைக்காக உத்திரவாதத்தை சட்ட வடிவமாக்கித் தந்திட உறுதிகொண்டிருப்பதாகக் கூறி நம்மை மகிழ்வித்தார்கள். மாநிலங்களின் தேவைகள், நாளுக்கு நாள் வளருகின்றன. அடிப்படை தேவைகளை மட்டுமே கூறுகிறேன். இவைகளை மக்கள் பெறுவதற்கான முறையில் மாநில அரசு செயல்பட இயலாது தடுத்திடுகிற குறைபாடுகள் நீக்கப்பட்டாக வேண்டும். நிதி நிலை, வருவாய்ப் பெருக்கம், உதவி, கடன் என்பவைகளை மட்டுமல்ல நான் குறிப்பிடுவது. செயலாற்றுவதற்குத் தேவைப்படும் அதிகாரம் பற்றியும் குறிப்பிடுகிறேன். அரசியல் சட்டத்தில் தரப்பட்டுள்ள அதிகார வரம்பு, வகை மாற்றியமைக்கப் பட்டால்தான் மாநில அரசு முழு வளர்ச்சி பெறமுடியும், மக்களின் வாழ்வைச் செம்மைப்படுத்த முடியும் என்றால் அந்த நோக்கத்துடன் அரசியல் சட்டத்தைத் திருத்தத் தயக்கம் காட்டக் கூடாது. அணைத்தல், பிணைத்தல், கட்டுண்டு கிடத்தல் இவை வெவ்வேறு. மாநில மத்திய சர்க்கார் உறவு எம்முறையிலிருந்தால் பொது நன்மையைக் கெடுக்காத வகையில் மாநிலத்தின் மாண்பும் வளமும் ஏற்றம் பெறமுடியும் என்பது அக்கறையுடன் கவனித்தாக வேண்டிய அவசரப் பிரச்சினையாகும். எனது நண்பரும் கேரளத்து முதலமைச்சருமான நம்பூதிரிபாது அவர்கள் இதே கருத்தைக் கொண்டவர்கள். அவருடைய சீரிய முயற்சி இந்தப் பிரச்சினைக்குப் பெரிதும் வலிவளிக்கும் என்று நம்புகிறேன். வங்கத்து முதல்வர் அஜாய் குமார் முகர்ஜியவர்கள் காங்கிரஸ் அல்லாதார் நடத்திடும் அரசுகளின் கூட்டு மாநாடு நடத்திட விரும்புகிறார். அத்தகைய மாநாடும் இந்தப் பிரச்சினையை ஆராய உதவுமென்பதால் அந்த முயற்சியை வரவேற்கிறேன். அதுபோலவே தென் மாநிலங்களான தமிழகம், ஆந்திரம், கேரளம், கர்னாடகம் ஆகியவை தோழமைத் தொடர்பை வலுவாக்கிக் கொள்வது தேவை. எத்தனையோ துறைகளில் இந்த மாநிலங்கள் தமக்குள்ள இயற்கை வளங்களை இணைப்பதன் மூலம் புதிய பொலிவும் வலிவும் பெற்றிட முடியும். அதற்கான முயற்சிக்கு ஆக்கம்தரவேண்டுமென்று அந்த அரசுத் தலைவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். உள்ளத்திலே தோன்றிடும் யோசனைகள் பலப்பல. சில மட்டுமே இங்கு கூறுகின்றேன். ஆனால் எல்லா எண்ணங்களும் ஒரு அடிப்படையான லட்சியத்தையே சுற்றி வட்டமிடுகின்றன. மக்களுக்கு

[16] அவர்களுக்கான காரிய மாற்றுவதிலேயும் — அவர்களுக்கான காரியத்தை ஆற்றுவதிலேயும்.

நல்வாழ்வு தரவேண்டும் என்ற லட்சியம். லட்சியம் தூய்மையானது. அந்த லட்சியம் வெற்றி பெற்றால் மட்டுமே அறநெறி அரசு அமைந்ததாகப் பொருள் படும். அந்த லட்சியத்துக்காகப் பணியாற்றப் புறப்படுகிறேன், உமது நல்லெண்ணத்தைத் துணைகொண்டு. லட்சியம் மிகப் பெரியது, நான் மிகச் சாமானியன். ஆனால் உங்கள் தோழன். ஆகவே என்னுடைய திறமையை நம்பியல்ல, உங்கள் எல்லோருடைய திறமையையும் நம்பி இந்தப் பணியில் ஈடுபடு கிறேன். முன்பு தரிசாகக் கிடந்த இடத்தை விளைநிலமாக்கிட வியர்வை சிந்துவோம். குறையளவு இயங்கி வந்த இயந்திரத் தொழிற்சாலையை முழு அளவு இயங்கிடச் செய்யப்பாடுபடுவோம். மக்களின் வசதிப் பெருக்கத்துக்காக உற்பத்தி, விநியோகம் ஆகியவற்றில் ஈடுபட்டு அதனை நேர்மையான முறையில் நடத்திடுவோர் இவர்களெல்லாம் என் நண்பர்கள், என் வணக்கத்திற்கு உரியவர்கள். உற்பத்தித் துறைக்கு முட்டுக்கட்டையிடுவோர், உற்பத்திக்காகப் பாடுபடுவோரின் [17]வயிற்றிலடிப்போர், இவர்கள் எனக்கு மட்டுமல்ல, சமூகத்துக்கே பகைவர்கள். விலையை ஏற்றிடுவோர், விளைந்ததைப் பதுக்கிக் கொள்வோர், நாட்டை நாசமாக் கும் [18]நடமாடும் நோய்கள். ஊழல், ஊதாரித்தனம், லஞ்சலாவணம், ஆகிய கேடுகளைச் செய்திடுவோர் நாட்டின் அவமானச் சின்னங்கள். நண்பர்களே! நாட்டின் பகைவர்கள், சமூக விரோதிகள், ஆகியோரிட மிருந்து நாட்டைக் காத்திடவேண்டிய பொறுப்பும், கடமையும் நமக்கிருக்கிறது. கேடு களைந்திட, நாடு வாழ்ந்திட, சுயநலம் மடிந்திட, பொதுநலம் மலர்ந்திட தொண்டாற்றுவோம், வாரீர்! வாரீர்! என்றழைக்கின்றேன். வணக்கம். நன்றி.

---

[17] வயிற்றிலடி — hit one in the stomach, in an economic sense; i.e. by cheating one out of one's money, privileges etc.

[18] நடமாடும் நோய்கள் — mobile diseases; here the hoarders etc. are referred to as mobile diseases.

EXERCISES

I Vocabulary Exercise :

(*a*) Write a derivative noun for each of the words given below, following the model.

Model :- உழைப்பு——உழைப்பாளர்

(i) தொழில்
(ii) நெசவு
(iii) அலுவல்
(iv) உற்பத்தி
(v) கற்றறிவு

(*b*) Split the following compounds into constituent words and write meanings for the same:

(i) சீர்கேடு
(ii) கல்விக்கூடம்
(iii) மாணவ மணி
(iv) பூக்காடு
(v) கூட்டாட்சி
(vi) நுண்ணறிவு
(vii) நல்வாழ்வு

II Fill up the blanks choosing the correct item.

Make changes in the sentence if necessary.

1. என்னோடு சேர்ந்து உழைத்திட நீங்களும்——

(i) காத்திருக்கிறேன்
(ii) காத்திருக்கிறீர்கள்
(iii) காத்திருக்கிறோம்

2. இந்த நிலை காரணம்——சிக்கல்கள் ஏற்பட்டுவிடுமோ?

(i) ஆல்
(ii) ஆக
(iii) ஒடு

3. உங்களோடு சேர்ந்து உழைத்திட நண்பர்களும் நானும்——

(i) காத்திருக்கிறேன்
(ii) காத்திருக்கிறீர்கள்
(iii) காத்திருக்கிறோம்

4. நாட்டு ஆட்சி செம்மை——நானும் எனது நண்பர்களும் அமைச்சரகத்தில் பணியாற்றினல் போதாது.

(i) ஆனதாகிட
(ii) ஒடு
(iii) ஆல்

5. செயல்——ஈடுபடுமுன்னர் சிந்தித்திடல் தேவையல்லவா?

(i) கு
(ii) ஒடு
(iii) இல்

III *Substitution*:

1. பாருக்குள்ளே நல்லநாடு என்று பாவலர் கொண்டாடும் தமிழ்நாடு

(*a*) Substitute the following for **பாருக்குள்ளே** after making necessary changes in the given words:

(i) பூமி
(ii) பாரதம்
(iii) ஆசியா

(*b*) Substitute the following for **நல்ல** after making necessary changes in the given words:

(i) சிறிது
(ii) புனிதமானது
(iii) வளம்பொருந்தியது

(c) Substitute the following for கொண்டாடிடும் after making necessary changes in the given words :

(i) புகழ்

(ii) போற்று

(iii) பேசு

2. நீங்கள் உடனிருக்கிறீர்கள் என்ற நினைவுதான் கவலையை ஓட்டுகிறது.

(a) Substitute the following for **உடனிருக்கிறீர்கள்** after making necessary changes in the given words :

(i) உடன் வா

(ii) உடன் போ

(iii) உடன் வாழ்

(b) Substitute the following for **நினைவு** after making necessary changes in the given words :

(i) தைரியம்

(ii) எண்ணம்

(c) Substitute the following for **ஓட்டுகிறது** after making necessary changes in the given words:

(i) நீக்கு

(ii) மறை

(iii) ஒழி

3. உங்கள் எல்லோருடைய திறமையை நம்பி இந்தப் பணியில் ஈடுபடுகிறேன்.

(a) Substitute the following for **திறமையை** after making necessary changes in the given words :

(i) ஒத்துழைப்பு

(ii) வேண்டுகோள்

(iii) வற்புறுத்தல்

(b) Substitute the following for **நம்பி** after making necessary changes in the given words :

(i) எதிர்பார்

(ii) எண்ணு

(c) Substitute the following for **ஈடுபடுகிறேன்** after making necessary changes in the given words:

(i) பங்கெடு

(ii) சேர்

(iii) கவனம் செலுத்து

IV Rewrite the following sentences by substituting one item at a time:

1. இந்நாட்டு மன்னர்களாகிய நீங்கள் பிறப்பித்த ஆணையினை ஏற்றுக் கொண்டு அவர்கள் சட்டமன்றத்தில் அமர்ந்துள்ளனர்.

   (i) கட்டளையை

   (ii) கொடுத்த

   (iii) தேசத்தின்

   (iv) பாராளுமன்றத்தில்

   (v) பணியாற்றுகின்றனர்

2. பல ஆண்டுகளாகத் தொடர்ந்து என்னிடமும் என் தோழர்களிடமும் பாசம் கலந்த பரிவு காட்டி வருகின்றீர்கள்.

   (i) நண்பர்களிடமும்

   (ii) வருடங்களாக

   (iii) கூடிய

   (iv) அநேக

3. ஒரு புனிதக் கடமையில் ஈடுபடுகிறோம் என்ற உணர்ச்சியுடன் பொறுப்பினை ஏற்றுக் கொண்டிருக்கிறேன்.

   (i) எண்ணத்தோடு

   (ii) எடுத்து

   (iii) நல்ல

   (iv) செயலில்

V *Transform the following negative sentences into affirmative sentences:*

1. தயக்கம் வேண்டாம்
2. அரசியல் நுட்பம் அறிந்த யாரும் கூறமாட்டார்கள்.
3. அரசியல் சட்டத்தைத் திருத்த தயக்கம் காட்டக்கூடாது.
4. ஆண்டு பலவாகக் குவிந்து குவிந்து கெட்டுப்பட்டுவிட்டுள்ள சீர்கேடுகளையும், சிக்கல்களையும் மறந்துவிடாதீர்கள்.
5. இனி நாமில்லாமலே கூட ஆட்சி செம்மையாக நடந்திடும் என்று இருந்து விட மாட்டீர்கள்.

VI *Transform each of the following sentences into as many interrogative sentences as possible, following the model:*

Model :—இந்த ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் நாடாளும் பொறுப்பினையும் தந்துள்ளீர்கள்.

(i) இந்த ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் நாடாளும் பொறுப்பினையும் தந்துள்ளீர்களா?

(ii) இந்த ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் நாடாளும் பொறுப்பினையுமா தந்துள்ளீர்கள்?

(iii) இந்த ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலிலா நாடாளும் பொறுப்பினையும் தந்துள்ளீர்கள்?

1. நாங்கள் உங்களாலே அமர்த்தப்பட்டவர்கள்.
2. எல்லா முனைகளிலும் பற்றுக்குறை மிரட்டியபடி இருப்பதைக் காண்கிறேன்.
3. இந்த நிலை கடந்த இருபது ஆண்டுகளாக நாடு காணாத நிலை.
4. உழைப்பவன் வாழ்வு உயர்ந்திட வழி யாது என்பதனை ஆராய்ந்து வருகின்றோம்.

VII *Change each of the following complex sentences into simple sentences:*

1. இந்நாட்டு மன்னர்களாகிய நீங்கள் பிறப்பித்த ஆணையினை ஏற்றுக் கொண்டு அவர்கள் சட்டமன்றத்தில் அமர்ந்துள்ளனர்.
2. தங்கள் அன்பினையும் ஆதரவினையும் மிகப் பெரிய அளவுக்குப் பெற்றிருக்கும் நான் நெஞ்சு நெகிழ்ந்திடும் நிலையிலேயே பேசுகிறேன்.
3. இந்த ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் நாடாளும் பொருப்பினையும் தந்துளீர்கள்.
4. கடமையை நான் முடித்திட உங்கள் ஒவ்வொருவருடைய முழு ஒத்துழைப்பும் தேவை என்பதை மறந்துவிடாதீர்கள்.

VIII Match the phrases given in column I with those given in column II to make appropriate sentences:

I	II
1. அமைச்சரகத்தில் அமர்ந்து பணியாற்றினால் மட்டும்.	காத்திருக்கிறோம்.
2. பிரச்சினைகள் நெளிந்து கொண்டுள்ள தமிழ்நாடு என்பதனை எண்ணும்போது.	போதாது.
3. நீங்கள் உங்களுடைய முழு ஒத்துழைப்பும் தேவை என்பதை.	கவலை ஏற்படத்தான் செய்கிறது.
4. நாட்டு ஆட்சி வீட்டுக்கு வீடு காணப்படும் பண்பை.	பொறுத்தது.
5. உங்களோடு சேர்ந்து உழைத்திட நானும் என் நண்பர்களும்.	மறந்து விடாதீர்கள்.

IX Using the points given below, write a short summary of Anna's speech, not exceeding 20 lines:

தி.மு.க.வின் தேர்தல் வெற்றி—தமிழ்நாட்டின் ஆட்சிப் பொறுப்பு—தமிழ் நாட்டின் இயற்கையும் இயல்பும்—தமிழ்நாட்டின் சிக்கல்கள்—சிக்கல்களைத் தீர்க்க ஆட்சிக்கு மக்கள் உதவி தேவை—கடமையைச் செய்ய வேண்டும்—எங்கும் பற்றாக்குறை—உற்பத்தி பெருக வேண்டும்—மாநில அரசு, மத்திய அரசு உறவுகள்—மாநில அரசுக்கு அதிக அதிகாரம்—தென் மாநிலங்களுக்கு இடையில் தோழமைத் தொடர்பு—கழக அரசின் லட்சியம்—மக்கள் நல் வாழ்வு.

விடுதலை வெள்ளி விழா

மு. கருணாநிதி

[The following text presents a Vigorous D M K style platform speech Known for its rhetorical exuberance. This style abounds in expressions which can be used for news headlines exhortations.]

இருபத்தைந்து ஆண்டுகட்கு முன்பு கையில் ஒரு தடியுடன், கதராடையும் [1]அரையாடையாக உடுத்தி காந்தியடிகள் சுதந்திர அகல் விளக்கைக் கையில் ஏந்திக் கொண்டு, சரளைக் கற்கள் நிறைந்த பாறையின் உச்சி நோக்கி, கல்லும், முள்ளும் காலில் குத்துவதைப் பொருட்படுத்தாமல் "காற்றடிக்குது மழை பொழியுது ஆனாலும் கலங்கமாட்டேன்" என்று [2]கை மலரால் விளக்கின் சுடர் அணையாமல் காத்தளித்துக் குன்றின் மீது வைத்துச் சென்றார்.

வழக்கறிஞராக வாழ்வு தொடங்கி—அந்த வாழ்வு இந்த மண்ணின் விடுதலைக்கே ஆகட்டுமென்று [3]அறமுரசு ஒலித்து, ஆங்கிலேயர் ஆட்சிதனை அகற்றிக் காட்டி, அடிமை விலங்கொடித்த காந்தியண்ணல் கண்ட கனவு, விடுதலைக்குப் பின் புதிய இந்தியா எனும் புனிதக் கனவாகும்!

அந்தக் கனவு பலித்திட தாயகத்தின் ஐம்பது கோடிக்கு மேற்பட்ட மக்களின் கரங்கள் உயர்ந்து நிற்கின்றன.

அந்தக் கரங்கள் மிகப் பெரும்பாலும் உழைக்கும் கரங்கள்!

---

[1] அரையாடை — (lit) half dress; partly clad, not fully clothed

[2] கைமலர் — (lit) hand flower; flower-like hand, a hand as soft as flower

[3] அறமுரசு — the drum spreading the message of righteousness

சம்மட்டி பிடித்துத் தழும்பு கொண்ட கரங்கள்!

ஏர் ஓட்டிக் காய்ப்பேறிய கரங்கள்!

நாற்று நடுகின்ற கரங்கள்! நூல் நூற்றுத் தருகின்ற கரங்கள்!

பால் கிண்ணம் ஏந்தும் கரம்—

[4]பழரசக் கோப்பை எடுக்கும் கரம்—

பாதாம்—பிஸ்தா—பச்சை முந்திரி—
பொறுக்கும் கரம்—மிக மிகக் குறைவு!

எல்லாக் கரங்களும் இந்திய மண்ணில் முளைத்த கரங்களே! அவற்றில் சில கரங்களாகவும் பல மரங்களாகவும் இருப்பானேன்?

ஏற்றத்தாழ்வு இன்னும் இருந்திடவா இந்தச் சுதந்திரம் பெற்றோம் அன்று! இல்லை—இல்லை—இல்லவே இல்லை!

முல்லை நட்ட கொல்லையிலே கள்ளி முளைப்பனேன்? காலில் குத்தித் தொல்லை பல தருவானேன்?

இந்தக் கேள்விக்கு விடை கண்டிடத்தான் இன்று ஏற்கின்றோம், சபதம்!

இனி நம் நாட்டில் இல்லார் இல்லை—
கல்லார் இல்லை—நல்லார் மீது
பாய்கின்ற வல்லார் இல்லை!
எங்கும் புதுமை! எதிலும் புதுமை!
அனைத்தும் பொது உடைமை!

அந்நிலை நோக்கிப் படிப்படியாக ஆனால் உறுதியாக நடைபோடும் நம் அரசு என்பதை நாடறியும்!

அடித்தளத்தில் அழுந்திக் கிடக்கின்ற மக்களுக்கு வாழ்வில் ஆனந்த அருவி பாய்ந்திடச் செய்வதுதான் சுதந்திரம் பெற்றதன் பயன் என்பதை அறிந்து செயலாற்றி வருகின்றோம். சுதந்திரத்திற்குத் தந்த விலை, [5]மதிப்பில்லாதது! உண்மைதான்! ஆனால் தியாகிகளைப் பாராட்டும் அதே நேரத்தில் அது ஒன்றுதான்

---

[4] பழரசக்கோப்பை — the cup used for drinking fruit juices
[5] மதிப்பில்லாதது — invaluable

நம் வேலை என்று எண்ணிடாமல் எதற்காகச் சுதந்திரம் கேட்கப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேற செயலாற்ற முனைதல் வேண்டும்.

[6]புரட்சிக் கனலால் புதையுண்ட நாடுகளின் புதிய வடிவங்கள் கண்ணுக்குத் தெரிகின்றன, களிப்பூட்டும் வகையில்!

போரின் [7]கோரத் தாண்டவத்தால் அழிந்துவிட்ட நாடுகளின் ஏற்றமும் எழிலும் எவ்வளவு விரைவில் பூத்துக் குலுங்குகின்றன என்று வியந்திருக்கின்றோம்

இங்கு அடிமை ஒழிந்து ஆண்டுகள் பலவாயினும் அகிலத்தில் தலை தூக்கிச் செழுமை மிகுந்த [8]சித்திரப் புன்னகையைக் காட்ட முடியாமல் ஏக்கப் பெருமூச்சு விடுகின்றோம்; எதனால்?

சிந்திக்க வேண்டாமா?

சிந்தித்துச் செயல்பட வேண்டாமா?

"நமது இந்தியாவின் உயிர்நாடி கிராமங்களில்தான் உள்ளது. அந்த அடிப்படையில்தான் நமது பணிகள் அமையவேண்டும். நம்முடைய ஒவ்வொரு பணியிலும் புதிய புதிய சோதனைகள் ஏற்படலாம். பணிவு, எளிமை, அகிம்சை, பொறுமை ஆகிய நல்ல பண்புகளினால் அந்தச் சோதனைகளில் நாம் வெற்றி பெற்று விடலாம்" என்று உத்தமர் காந்தி உரைத்திட்டார் பல முறையும்!

அந்த அண்ணல் வழிதான் அண்ணன் தந்த வழியென்று, நம் அயராத உழைப்பையெல்லாம், சிற்றூரிலும் வரப்பெடுத்த வயல்களிலும், [9]ஆறு தேக்கிய நல் வாய்க்கால்களிலும் வகைப்படுத்திப் பசுமைப் புரட்சி செய்து [10]தீவிரச் சாகுபடி மூலம் உணவிலே தன்னிறைவு பெற்றிருக்கிறோம்.

நகரத்தின் வசதிகள் கிராமங்களை அலங்கரிக்க வேண்டுமென்பதற்காக மின் விளக்கில்லாத கிராமங்களே இருக்கலாகாது என்று உறுதியெடுத்து அந்தப் பணியினைப் பெரும்பகுதி முடித்துவிட்டோம்.

---

6 புரட்சிக் கனல்	—	the flame of revolution
7 கோரத்தாண்டவம்	—	the fierce and fearsome dance;
8 சித்திரப் புன்னகை	—	the smile as found in paintings
9 ஆறு தேக்கிய நல்–வாய்க்கால்கள்	—	the good canals of fields formed by blocking the rivers
10 தீவிரச் சாகுபடி	—	Intensive Cultivation

இணைப்புச் சாலைகள்—மாநில முழுதுமுள்ள எல்லா கிராமங்களையும் சில ஆண்டுகளில் இணைத்துவிடும்.

[11]குடிநீர் வாரியத்தின் பணியும் விரைவுபடுத்தப்பட்டு ஆங்காங்கு பாது காக்கப்பட்ட குடிநீர்த்தேவை வேக வேகமாகத் தீர்க்கப்பட்டு வருகிறது.

அரிஜன மக்களின் காலனிகள் பல ஆண்டு காலமாக இருண்டு கிடந்திருந்த நிலை மாற்றி, அவர் தம் இருபதாயிரம் காலனிகளில் முக்கால் பங்கிற்கு மேல் ஒளி விளக்கு அமைத்துவிட்டோம்!

சமதர்மத் திட்டங்களின் புது நோக்கோடு நிலச் சீர்திருத்த சட்டங்கள்! ஏற்கனவே இருந்த விதி விலக்குகள் ரத்து!

ஐந்தாண்டுகளுக்குள் [13]பேருந்துத் தொழில் முழுவதையும் [14]பொதுத் துறையாக மாற்றுகின்ற திட்டம்!

பொதுத் துறையில் தொழிலாளர்க்கு, முதலீட்டில் இருபத்து நான்கு சதவிகிதம் பங்கு ஒதுக்கப்பெறும் என்ற முடிவு!

இதுபோன்ற நற்பணிகள், நமது மாநிலத்து மக்களின் மனத்தில் புதியதோர் உணர்ச்சியை உருவாக்கியுள்ளன என்பதில் [15] எள்ளளவும் ஐயமுமில்லை.

அந்த உணர்ச்சிப் பெருக்கை நாம் எடுக்கும் [16]விடுதலை வெள்ளி விழாவிலே காண்கிறோம். அறிஞர் அண்ணா கூறியதுபோல் 1947 ஆகஸ்டு 15—[17]கணக்குத் தீர்த்த நாள்! ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடுகிற விடுதலை நாள், [18]கணக்குப் பார்க்கும் நாள்!

11	குடிநீர் வாரியம் —	Corporation (for the supply) of drinking water
12	நிலச் சீர்திருத்த சட்டங்கள் —	Land Reforms Acts
13	பேருந்துத் தொழில் —	Bus transport industry
14	பொதுத் துறை —	Public Sector (industry)
15	எள்ளளவும் —	(lit) not even the size of a gingelly seed; even an iota of
16	விடுதலை வெள்ளிவிழா —	Independence Silver Jubilee celebration
17	கணக்குத் தீர்த்த நாள் —	the day on which the account was settled or reckoned
18	கணக்குப் பார்க்கும் நாள் —	the day of reckoning

ஆம்—அந்தக் கணக்கைப் பார்த்து அகமகிழும் காரணத்தால் தான்—இந்த ஆண்டு மட்டும் தமிழகத்தில் ஒரு லட்சம் ஏழை மக்கள் [19]கண் ஒளி பெறப்போகிறார்கள் என்ற கணக்கைப் பார்த்துக் களிப்படையும் காரணத்தால்தான்—விழாச் சிறப்பை எங்கும் காணுகிறோம் தமிழகத்தில்! இன்று சென்னையில் இந்தியப் பாதுகாப்பு அமைச்சரும் நானும் அனைத்துக் கட்சித் தலைவர்களும் கலந்து கொள்ளும் விழா! இதுபோல் தமிழகத்தில் ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் நமது மாண்புமிகு அமைச்சர்கள் கலந்து கொள்கிறார்கள். ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் தியாகிகளுக்குப் பாராட்டும், விருந்தும் இன்று நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

தில்லிமாநகர் சென்ற தியாகச் செம்மல்களை சென்னை ரயிலடிக்குச் சென்று மாலையிட்டு வழியனுப்பி வைத்தேன். அவர்களின் கண்களில் [20]"ஆனந்த பாஷ்பம்" என்பார்களே அதனைக் கண்டேன்!

தியாகிகளை மதிக்கும் அரசு! இதனால்தான் ஆயிரம் தியாகிகட்கு மாதம் ஐம்பது மானியம் வழங்குகின்றோம்! இனிமேல் அதனை 75 ரூபாயாக அளிக்க இருக்கிறோம்.

பாரதிக்கு, வ. உ. சி., க்குமற்றும் பல வீர தளபதிகட்குச் சிலையெடுத்தோம். வள்ளியம்மை பெயராலே நகர் ஒன்றை ஏழு லட்ச ரூபாய் செலவில் தில்லையாடியில் அமைத்துள்ளோம்.

வாஞ்சிநாதன் குடும்பத்துக்கு மானியம், கட்டபொம்மன் சந்ததிக்கும் மானியம், நாமக்கல்லார், நெல்லையப்பர் குடும்பத்திற்கு மாதாந்திர உதவித் தொகை, சங்கரலிங்க நாடார் குடும்பத்திற்கு நிதி உதவி.

இத்தனையும் செய்திட்ட இந்த அரசு—கோவைச் சிறையில் சிதம்பரனார் இழுத்திட்ட செக்குதனை சென்னையிலே கண்காட்சிப் பொருளாக ஆக்குதற்கும் திட்டம் தீட்டியுள்ளது.

தியாகத்தைப் போற்றுகின்றோம்—
தியாகிகளைத் தெய்வமெனத்
தொழுகின்றோம்—

அவர்கள் எதற்காகத் தியாக வேள்வி வளர்த்தனரோ அந்த நோக்கம் பாழ்படாது பணியாற்றுவோம்!

---

19 கண் ஒளி — (lit) eye light; eye sight

20 ஆனந்த பாஷ்பம் — ஆனந்தக் கண்ணீர்

சமதர்மம்— வெறும் உதட்டு உச்சரிப்பாக இல்லாமல் செயல்படுத்தப்பட வேண்டும்!

கவர்ச்சிகரமான முழக்கங்கள் எளிது! அதனை [21]உளத் தூய்மையுடன் நிறைவேற்ற முன்வர வேண்டும்!

முற்போக்குக் கொள்கை வழி நின்று இந்தியா முன்னேற வேண்டும்! ஒருமைப்பாட்டில் அசையாத நம்பிக்கையுள்ள தமிழகம், அந்த முற்போக்கு முகிழ்ப்பதற்கு வழிகாட்டியாகத் திகழ்கின்ற அளவுக்கு —பாமர பாட்டாளி மக்கள் பட்டிக்காட்டு மக்கள்—வாழ்வை மையமாக வைத்துச் செயலாற்றி வருகிறது!

மேலும் அத்தொண்டு சிறந்திட தொல்லைகள் அகற்றிட தூய நெஞ்சங் கொண்டோர் அனைவரும் இந்நாளில் உறுதியெடுத்துக்கொள்ள வேண்டுகிறேன்.

---

[21] உளத்தூய்மை — the purity of heart

EXERCISES

I. *Vocabulary Exercise*:

(*a*) Write a derivative for each of the words given below:

Model: பேசு—பேசுதல்

(i) எழுது

(ii) படி

(iii) சாப்பிடு

(iv) நட

(v) செய்

(*b*) Split the following compounds into independent words and write the meanings for the same:

(i) புரட்சிக்கனல்

(ii) கோரத்தாண்டவம்

(iii) உயிர்நாடி

(iv) சிற்றூர்

(v) மின்விளக்கு

(vi) குடிநீர்

II. *Fill up the blank taking the correct item from those given after the test item or sentence. Rewrite the sentence after each substitution*:

1. சம்மட்டி பிடித்துத்——கொண்ட கரங்கள்!

(i) தழும்பு

(ii) தழும்பாகு

(iii) தழும்பான

2. அவற்றில் சில——பல மரங்களாகவும் இருப்பானேன்?

(i) கரங்களால்

(ii) கரங்களுக்கு

(iii) கரங்களாகவும்

3. இந்தக் கேள்வி——விடை கண்டிடத்தான் இன்று ஏற்கின்றோம், சபதம்!

(i) ஆல்

(ii) கு

(iii) ஆக

4. நமது இந்தியாவின் உயிர்நாடி கிராமங்கள்——தான் உள்ளது.

(i) இல்

(ii) கு

(iii) ஐ

5. ஐந்தாண்டுகளுக்குள் பேருந்துத் தொழில் முழுவதையும் பொதுத்துறை ——மாற்றுகின்ற திட்டம்.

(i) ஆல்

(ii) ஆக

(iii) இல்

6. தியாகிகள்——மதிக்கும் அரசு.

(i) கு

(ii) ஓடு

(iii) ஐ

III. *Substitution* :

1. *அந்தக் கனவு பலித்திட தாயகத்தின் ஐம்பது கோடிக்கு மேற்பட்ட மக்களின் கரங்கள் உயர்ந்து நிற்கின்றன.*

   (*a*) Substitute the following for **தாயகத்தின்** after making necessary changes in the given words :

   (i) நம்நாடு

   (ii) இந்தியா

   (iii) துணைக்கண்டம்

   (*b*) Substitute the following for **பலித்திட** after making necessary changes in the given words :

   (i) நிறைவேறு

   (ii) நனவாகு

   (iii) வெற்றிபெறு

   (*c*) Substitute the following for **நிற்கின்றன** after making necessary changes in the given words :

   (i) இரு

   (ii) தோன்று

   (iii) உள்

2. *புரட்சிக்கனலால் புதையுண்ட நாடுகளின் புதிய வடிவங்கள் கண்ணுக்குத் தெரிகின்றன.*

   (*a*) Substitute the following for **புரட்சிக்கனலால்** after making necessary changes in the given words :

   (i) போர்வெறி

   (ii) அணுகுண்டுகள்

   (iii) பூகம்பம்

(b) Substitute the following for புதையுண்ட after making necessary changes in the given words :

(i) மறை

(ii) அழி

(iii) வளர்

(c) Substitute the following for புதிய after making necessary changes in the given words:

(i) பழமை

(ii) அழகு

(iii) உண்மை

IV. Substitution :

Substitute the given words one by one in appropriate positions in the given sentence and rewrite the sentence after each substitution :

1. நமது இந்தியாவின் உயிர்நாடி கிராமங்களில்தான் உள்ளது.

(i) வளர்ச்சி

(ii) தொழிலாளிகளிடம்

(iii) நம்முடைய

(iv) நாட்டின்

2. நம்முடைய ஒவ்வொரு பணியிலும் புதிய புதிய சோதனைகள் ஏற்படலாம்.

(i) தொண்டிலும்

(ii) எல்லா

(iii) எங்களுடைய

(iv) அதிர்ச்சி தரக்கூடிய

3. தில்லிமாநகர் சென்ற தியாகச் செம்மல்களை சென்னை ரயிலடிக்குச் சென்று மாலையிட்டு வழியனுப்பி வைத்தேன்.

(i) வீரர்களை

(ii) பாராட்டி

(iii) இலண்டன் மாநகர்

(iv) விமான நிலையத்திற்கு

V. *Transform the following sentences into negative ones, using the underlined phrase:*

1. அந்தக் கரங்கள் மிகப் பெரும்பாலும் <u>உழைக்கும்</u> கரங்கள்.

2. அந்த அடிப்படையில் நம் பணிகள் அமைய <u>வேண்டும்</u>.

3. அந்த உணர்ச்சிப் பெருக்கை நாம் எடுக்கும் விடுதலை வெள்ளி விழாவிலே <u>காண்கிறோம்</u>.

4. ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடுகிற விடுதலை நாள், கணக்குப் <u>பார்க்கும்</u> நாள்.

5. அவர்களின் கண்களில் "ஆனந்த பாஷ்பம்" என்பார்களே அதனைக் <u>கண்டேன்!</u>

VI. *Transform the following into interrogative sentences using the underlined phrases:*

1. காந்தியடிகள் <u>விளக்கின் சுடர்</u> அணையாமல் காத்தளித்துக் குன்றின் மீது வைத்துச் சென்றார்.

2. அவை <u>ஏர் ஓட்டிக் காய்ப்பேறிய</u> கரங்கள்!

3. <u>இந்தக் கேள்விக்கு விடை கண்டிடத்தான் ஏற்கின்றோம்,</u> சபதம்!

4. <u>சுதந்திரத்திற்குத்</u> தந்த விலை, மதிப்பில்லாதது!

5. நமது இந்தியாவின் உயிர்நாடி <u>கிராமங்களில்தான்</u> உள்ளது.

VII. *Break the following into simple sentences :*

1. அந்தக் கனவு பலித்திட தாயகத்தின் ஐம்பது கோடிக்கு மேற்பட்ட மக்களின் கரங்கள் உயர்ந்து நிற்கின்றன.

2. அடிதளத்தில் அழுந்திக் கிடக்கின்ற மக்களுக்கு வாழ்வில் ஆனந்த அருவி பாய்ந்திடச் செய்வதுதான் சுதந்திரம் பெற்றதன் பயன்.

3. புரட்சிக்கனலால் புதையுண்ட நாடுகளின் புதிய வடிவங்கள் கண்ணுக்குத் தெரிகின்றன.

4. குடிநீர் வாரியத்தின் பணியும் விரைவுபடுத்தப்பட்டு ஆங்காங்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் தேவை வேக வேகமாகத் தீர்க்கப்பட்டு வருகிறது.

VIII. *Change the following into complex sentences :*

1. எல்லாக் கரங்களும் இந்திய மண்ணில் முளைத்த கரங்களே! ஆயினும் அவற்றில் சில கரங்களாகவும் பல மரங்களாகவும் இருப்பானேன்?

2. முல்லை நட்ட கொல்லையிலே கள்ளி முளைப்பானேன்? காலில் குத்தித் தொல்லை பல தருவானேன்?

3. நமது இந்தியாவின் உயிர்நாடி கிராமங்களில்தான் உள்ளது. ஆதலால் அந்த அடிப்படையில்தான் நமது பணிகள் அமையவேண்டும்.

4. அறிஞர் அண்ணா கூறியதுபோல் 1947 ஆகஸ்டு 15——கணக்கு தீர்த்த நாள்! ஆகையால் ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடுகிற விடுதலை நாள், கணக்குப் பார்க்கும் நாள்!

5. தில்லிமாநகர் சென்ற தியாகச் செம்மல்களை சென்னை ரயிலடிக்குச் சென்று மாலையிட்டு வழியனுப்பி வைத்தேன். அப்பொழுது அவர்களின் கண்களில் "ஆனந்த பாஷ்பம்" என்பார்களே அதனைக் கண்டேன்,

மேடைத் தமிழ்

மு. வரதராசன்

[At the request of the senior author, prof. Varadarajan gave an impromptu demonstration of the differences between formal and informal platform styles of speech. This and the following demonstrate this difference respectively. His third piece demonstrating chaste colloquial Tamil is given later in this volume.

This piece is presented in a formal platform speech which has the characteristic of reporting and narration. The speech abounds in text book type of vocabulary. Colloquialism is avoided. Only a few loan words found in spoken style are used.]

நம் வீட்டுக்கு வரும் விருந்தாளிகளை அன்போடு வரவேற்கிறோம். உதவிகள் புரிகிறோம். சாப்பிட்டு மகிழும்படியாகச் செய்கிறோம். சாப்பிடும்போது, அவர்கள் "போதும் போதும்" என்கிறார்கள். ஆனால் நாம் அன்போடு வற்புறுத்து கிறோம். "இன்னுங் கொஞ்சம் சாப்பிடுங்கள்! இன்னுங் கொஞ்சம் சாப்பிடுங்கள்!" என்றெல்லாம் சொல்லி, அவர் தடுத்தாலும் கேட்காமல், மேலும் சில உணவு வகைகளை வைத்துக் கொண்டிருக்கிறோம். விரும்பியோ விரும்பாமலோ அவரும் சாப்பிடுகிறார். நாம் இட்ட எல்லாவற்றையும் ஓரளவு சாப்பிடவேண்டுமென்று முயற்சி செய்கிறார்; ஒரு பகுதியாவது சாப்பிடுகிறார்கள். விருந்தாளிகள் தடுக்கும் போது இன்னுங்கொஞ்சம் சாப்பிடுமாறு மேலும் வைப்பது நம் நாட்டில் பழக்கமாகி விட்டது. வைத்ததை அப்படியே விட்டுவிட்டால் மற்றவர்கள் மனம் நோகுமே என்று கொஞ்சமாவது சாப்பிடுவது அவர்களுக்கும் வழக்கமாகி விட்டது. இதனால் என்ன தெரிகிறது? விருந்தாளிகளைப்பற்றி நமக்கு ஒரு வகை சந்தேகம் உள்ளது போல் தோன்றுகிறது. அதாவது, தேவையான உணவை, தேவையான அளவுக்கு, கேட்டுச் சாப்பிடுவதற்கு அவர்கள் தயங்குகிறார்கள் என்று நாம் எண்ணுகிறோம்.

இப்படிப்பட்ட சந்தேகம் ஏற்படக் காரணம், நம்முடைய சொந்த அனுபவமே. நாம் மற்றவர்களின் வீடுகளுக்கு விருந்தாளிகளாகச் சென்றபோது அப்படி நடந்து கொண்டிருக்கிறோம். அதனால் நம்மைப்போலவே மற்றவர்களும் நடப்பதாக நாம் எண்ணுகிறோம். நாம் அவர்களைப்பற்றி சந்தேகப்படுவது போலவே, அவர்களும் நம்மைப் பற்றிச் சந்தேகப்படுகிறார்கள். அதாவது, சுவையான உணவு என்று நாம் வைத்ததை முழுவதும் சாப்பிட்டால், இவன் ஒரு சாப்பாட்டு ஆசாமி என்று நாம் விருந்தாளிகளைப் பற்றி எண்ணக்கூடும் என்று அவர்கள் எண்ணுகிறார்கள். அதனால் முழுவதும் சாப்பிட வேண்டுமென்ற விருப்பம் மனத்திலே இருந்தாலுங் கூட, ஒரு பகுதி சாப்பிட்டுவிட்டு ஒரு பகுதி விட்டுவிடுகிறார்கள். இப்படி ஒருவரை ஒருவர் சந்தேகப்பட்டு நடப்பது, ஒரு வகை [1]நாகரிகப் பழக்கம் ஆகிவிட்டது. அதனால் தான் "போதும், போதும்" என்ற குரல் ஒரு பக்கமும், "இன்னும், இன்னும்" என்ற குரல் மற்றொரு பக்கமும் நம் நாட்டு வீடுகளில் பழக்கமாகி விட்டன. ஆங்கிலேயருடைய வீடுகளிலும் மற்ற ஐரோப்பியர் வீடுகளிலும், இந்தக் குரல்கள் கேட்பதில்லை. உணவு வகைகள் பொதுவாக மேசை மேலெடுத்து வைக்கப்படும். அவரவர்கள் தமக்குத் தேவையான அளவுக்கு எடுத்து உண்பார்கள்; குடிப்பார்கள். இந்தப் பழக்கங்கள்தான் நாகரிகமாக அங்கே கருதப்படுகின்றன. "போதும்" என்ற பிறகு மேலும் இடுவதில்லை. அங்கே அது அநாகரிகமாகவும் கருதப்படுகிறது. உண்ண வந்த விருந்தாளிகளைப் பார்த்து "இன்னங் கொஞ்சம்" என்று வற்புறுத்துவது, அவர்களைக் குழந்தை போலவோ, அல்லது ஒன்றும் அறியாதவர்கள் போலவோ கருதி அவமதிப்பதாகக் கொள்ளப் படுகிறது. நாட்டுக்கு நாடு இவ்வாறு வேறுபடும் பழக்கங்களும் உண்டு; அந்தப் பழக்க வழக்கங்களுக்கு அடிப்படையான காரணங்களும் உண்டு. ஆங்கில நாட்டில், முன் பழகியில்லாத ஒருவர் புதியவராக வீட்டுக்கு வருவாரானால், அவர் நம் வீட்டுக்குள் நுழைந்து உணவு எதிர் பார்க்க மாட்டார். குறிப்பிட்ட சிலரை வருவித்து, அவர்களுக்கு மட்டுமே உணவளிப்பது அந்த நாட்டு வழக்கம். உணவு அளிப்பதற்கென்றே அவரை அந்த வீட்டார் அழைப்பார்கள். எழுத்து மூலமாக, அல்லது [2]வாய்வழி மூலமாக அழைப்பு அனுப்பிய பிறகுத்தானவர்கள் வருவார்கள். உண்பதற்கு என்றே அவர்களும் அந்த வீட்டிற்கு அப்போது எதிர் பார்த்துத்தான் வருவார்கள். எல்லாம் எதிர் பார்த்தவை, எல்லாம் முன்னேற்பாடாக அமைந்தவை தான் அங்கே உண்டு. ஆகையால் அங்கே தயக்கமும் வேண்டியதில்லை. வற்புறுத்தலும் தேவையில்லை. உணவு பொதுவாக மேசை மேல் [3]விளங்க, அவரவர்கள் தாமே எடுத்துண்பார்கள். வீட்டார் விருந்தாளிகளைப் பற்றிய சந்தேகப்படுவதற்

---

[1] நாகரிகப் பழக்கம் — civilized manner

[2] வாய்வழி — through the (word of) mouth; oral.

[3] விளங்க — தெரியும்படி இருக்க

கும் இடமில்லை, விருந்தாளிகள் வீட்டாரைப் பற்றிச் சந்தேகப்படுவதற்கும் இடமில்லை. தமிழ் நாட்டில் [4]தொன்று தொட்டு இருந்து வரும் இன்னொரு வழக்கமும் உண்டு. அது ஒரு நல்ல வழக்கம். [5]முன் பழகியறியாத புதியவர்களுக்கு உணவு அளிப்பதே பழங்காலத்தில் விருந்து என்று கருதப்பட்டு வந்தது. "விருந்து" என்ற சொல்லுக்கே புதுமை என்பதுதான் பொருள். முன் பழகியறியாத ஒருவர் ஊர்க்குள் வருவார். வீட்டுத் திண்ணையில் இடம் நாடியிருப்பார். அவர் வெளியூராரென்பதை அதனாலே அறிந்து கொள்வார்கள். அந்த வீட்டார் அவரை [6]உணவுக்கு அழைப்பார். வருந்தியழைப்பார். வந்தவர் உடன்படுவார். அவர் புதியவராகையால் தயக்கத்தோடு உடன்படுவார், தயக்கத்தோடு உள்ளே வருவார், தயக்கத்தோடுதான் உண்பார். வீட்டாருக்காக ஆக்கிய உணவில் நமக்கு ஒரு பங்கு இடுகின்றார்களே, இதனால் அவர்களுக்கு வேண்டிய உணவு குறைந்து விடுமே என்ற எண்ணத்தால், விருந்தாளிகள் குறைந்த அளவே உண்ண முயல்வார்கள். இவ்வாறு அவர்கள் குறைந்த அளவு உண்பார்களேயென்று சந்தேகப்பட்டு அந்த குறைந்த அளவு என்றிருக்க வேண்டாம் என்று மேலும் மேலும் உண்ணுமாறு வற்புறுத்துவார்கள் வீட்டார். "போதும், போதும்" என்பதும், "இன்னும், இன்னும்" என்பதுமாகிய வழக்கங்கள் இப்படியேற்பட்ட வழக்கங்கள்தான். பழங்கால நாகரிகத்திற்கு அந்தப் பழக்கம் பொருந்தும். ஆனால் இந்தக் காலத்தில் பழகியறியாத ஒருவரை வீட்டினுள் வரவழைத்து உணவு அளிப்பது இல்லை. அதனால் அந்தப் பழக்கம் பழைய பழக்கம். தவிர இந்தக் காரியத்திற்கு வேண்டிய இன்றைய பழக்கமல்ல. பழகிய ஒருவரின் வயிற்றில் உணவைத் திணிக்க முயல்வது, அவரை மேலும் மேலும் உண்ணச் செய்து வற்புறுத்துவது, இவைதானின்று விருந்து என்ற பெயராலே ஒரு வகையான போலிப் பழக்கமாக உள்ளது. உண்பதற்கென்றே விருந்தாளிகளாய்ச் சென்ற வீட்டில் விரும்பிய உணவு வகையை விரும்பிய அளவுக்கு உண்ண வெட்கப்பட்டு, "போதும், போதும்" என்பதும் ஒரு வகையான போலி நாகரிகமாக ஆகிவிட்டது. விருந்தோம்புகின்ற இந்த முறையிலேயே, காலப்போக்கிலே, எவ்வளவு மாறுதல் ஏற்பட்டிருக்கிறது பாருங்கள்!

---

4 தொன்று தொட்டு — from the ancient times

5 முன் பழகியறியாத புதியவர் — new person(s) with whom one has had no previous acquaintance; stranger.

6 உணவுக்கு அழை — invite one for 'food' i.e. invite one to eat.

EXERCISES

I. Read the following in spoken Tamil:

உணவு வகைகள் பொதுவாக மேசை மேலெடுத்து வைக்கப்படும். அவரவர்கள் தமக்குத் தேவையான அளவுக்கு எடுத்து உண்பார்கள்; குடிப்பார்கள். இந்தப் பழக்கங்கள்தான் நாகரிகமாக அங்கே கருதப்படுகின்றன. "போதும்" என்ற பிறகு மேலும் இடுவதில்லை. அங்கே அது அநாகரிகமாகவும் கருதப்படுகிறது. நாட்டுக்கு நாடு இவ்வாறு வேறுபடும் பழக்கங்களும் உண்டு. அந்தப் பழக்க வழக்கங்களுக்கு அடிப்படையான காரணங்களும் உண்டு.

II. Vocabulary Exercise:

(*a*) Change the following as per the model given:

Model :–கருது———கருதப்படு

(i) வை
(ii) கொள்
(iii) கேள்
(iv) சந்தேகம்
(v) ஆசை
(vi) எதிர்பார்

(*b*) Split the following compounds into constituent words and write meanings for the same:

(i) உணவு வகை
(ii) விருந்தோம்பல்
(iii) தலைவலி
(iv) அவமதிப்பு
(v) பழக்கவழக்கம்

III. *Fill up the blanks choosing the correct item.*

Make changes in the sentence if necessary.

1. அந்தப் பழக்க வழக்கங்கள்————அடிப்படையான காரணங்களும் உண்டு.

   (i) இல்
   (ii) கு
   (iii) ஆல்

2. உண்பதற்கு என்றே அவர்களும் அந்த வீட்டிற்கு அப்போது எதிர்—————வருவார்கள்

   (i) பார்த்துத்தான்
   (ii) பார்க்காமல்
   (iii) நோக்காமல்

3. எழுத்து மூலமாக அல்லது வாய் வழி மூலமாக அழைப்பு அனுப்பு——————பிறகுதானவர்கள் வருவார்கள்

   (i) இன
   (ii) இன்
   (iii) அதற்கு

4. இவைதானின்று விருந்து என்ற பெயராலே ஒரு வகை————போலிப் பழக்கமாக உள்ளது

   (i) ஆக
   (ii) ஆன
   (iii) போல்

5. அவர் வெளியூரார்—————அதனாலே அறிந்து கொள்வார்கள்

   (i) என்பது
   (ii) என்பதால்
   (iii) என்பதை

IV. Substitution:

1. நம் வீட்டுக்கு வரும் விருந்தாளிகளை அன்போடு வரவேற்கிறோம்.

(*a*) Substitute the following for **வீட்டுக்கு** after making necessary changes in the given words:

(i) நாடு
(ii) இல்லம்
(iii) விடுதி

(*b*) Substitute the following for **அன்போடு** after making necessary changes in the words given:

(i) முகமலர்ச்சி
(ii) ஆசை
(iii) வேதனை

(*c*) Substitute the following for **வரவேற்கிறோம்** after making necessary changes in the words given:

(i) உபசரி
(ii) கவனி
(iii) அமர வை

2. அதனால் நம்மைப் போலவே மற்றவர்களும் நடப்பதாக எண்ணுகிறோம்.

(*a*) Substitute the following for **எண்ணுகிறோம்** after making necessary changes in the given words:

(i) கற்பனை செய்
(ii) பாவனை செய்
(iii) நினை

(*b*) Substitute the following for **மற்றவர்களும்** after making necessary changes in the given words:

(i) பிறர்
(ii) எல்லார்
(iii) குழந்தைகள்

(c) Substitute the following for **நடப்பதாக** after making necessary changes in the given words:

(i) இரு
(ii) பேசு
(iii) வா

3. இப்படி ஒருவரை ஒருவர் சந்தேகப்பட்டு நடப்பது, ஒருவகை நாகரிகப் பழக்கமாகி விட்டது

(a) Substitute the following for **ஒருவரை ஒருவர்** after making necessary changes in the given words:

(i) ஒருத்தி ஒருவன்
(ii) அடுத்தவன் மற்றவன்
(iii) ஆசிரியர் மாணவர்

(b) Substitute the following for **சந்தேகப்பட்டு** after making necessary changes in the given words:

(i) பின்பற்று
(ii) அவமதி
(iii) பார்

(c) Substitute the following for **பழக்கமாகி** after making necessry changes in the given words:

(i) வழக்கம்
(ii) நடத்தை
(iii) முறை

V. *Rewrite the following sentences by substitutiug one item at a time.*

1. இந்தப் பழக்கங்கள்தான் நாகரிகமாக கருதப்படுகின்றன.

(i) இவ்வகையான
(ii) மதிக்க
(iii) உயர்ந்ததாக
(iv) நடவடிக்கைகள்

2. அவரவர்கள் தமக்குத் தேவையான அளவுக்கு எடுத்து உண்பார்கள்.

(i) போதுமான
(ii) அவர்களுக்கு
(iii) பிடிக்கு
(iv) குடி

3. குறிப்பிட்ட சிலரை வருவித்து, அவர்களுக்கு மட்டுமே உணவளிப்பது அந்த நாட்டு வழக்கம்.

(i) எங்களுடைய
(ii) நண்பர்களை
(iii) மாத்திரம்

VI. Transform the following into negative sentences using underlined phrases.

1. அவர்கள் **தயங்குகிறார்கள்** என்று நாம் எண்ணுகிறோம்.
2. இப்படி ஒருவரை ஒருவர் சந்தேகப்பட்டு **நடப்பது,** ஒருவகை நாகரிகப் பழக்கம் ஆகிவிட்டது.
3. நாட்டுக்கு நாடு இவ்வாறு **வேறுபடும்** பழக்கங்களும் உண்டு.
4. அந்த வீட்டிற்கு அப்போது **எதிர்பார்த்துத்தான்** வருவார்கள்.
5. முன்னேற்பாடாக **அமைந்தவைதான்** அங்கே உண்டு.

VII. Transform the following into as many interrogative sentences as possible following the model:

நாம் மற்றவர்களின் வீடுகளுக்கு விருந்தாளியாகச் சென்றபோது அப்படி நடந்து கொண்டிருக்கிறோம்.

Model: (a) நாமா மற்றவர்களின் வீடுகளுக்கு விருந்தாளியாகச் சென்றபோது அப்படி நடந்து கொண்டிருக்கிறோம்?

(b) நாம் மற்றவர்களின் வீடுகளுக்கு விருந்தாளியாகச் சென்ற போதா அப்படி நடந்து கொண்டிருக்கிறோம்?

(c) நாம் மற்றவர்களின் வீடுகளுக்கு விருந்தாளியாகச் சென்றபோது அப்படி நடந்து கொண்டிருக்கிறோமா?

1. நாம் அவர்களைப் பற்றிச் சந்தேகப்படுவது போலவே, அவர்களும் நம்மைப் பற்றிச் சந்தேகப்படுகிறார்கள்.

2. முன் பழகியறியாத புதியவர்களுக்கு உணவு அளிப்பதே பழங்காலத்தில் விருந்து என்று கருதப்பட்டு வந்தது.

3. அதனால் நம்மைப் போலவே மற்றவர்களும் நடப்பதாக நாம் எண்ணு கிறோம்.

4. நாட்டுக்கு நாடு இவ்வாறு வேறுபடும் பழக்கங்களும் உண்டு.

VIII. Change each of the following complex sentences into simple sentences :

1. வீட்டாருக்காக ஆக்கிய உணவில் நமக்கு ஒரு பங்கு இடுகின்றார்களே, இதனால் அவர்களுக்கு வேண்டிய உணவு குறைந்து விடுமே என்ற எண்ணத்தால் விருந்தாளிகள் குறைந்த அளவே உண்ண முயல்வார்கள்.

2. விருந்தாளிகள் தடுக்கும்போது இன்னும் கொஞ்சம் சாப்பிடுமாறு வைப்பது நம் நாட்டில் பழக்கமாகி விட்டது.

3. அதாவது, சுவையான உணவு என்று நாம் வைத்ததை முழுவதும் சாப்பிட்டால், இவன் ஒரு சாப்பாட்டு ஆசாமி என்று நாம் விருந்தாளி களைப் பற்றி எண்ணக்கூடும் என்று அவர்கள் எண்ணுகிறார்கள்.

4, உண்பதற்கென்றே விருந்தாளிகளாகச் சென்ற வீட்டில் விரும்பிய உணவு வகையை விரும்பிய அளவுக்கு உண்ண வெட்கப்பட்டு 'போதும், போதும்' என்பதும் ஒரு வகையான போலி நாகரிகமாக ஆகிவிட்டது.

5. வைத்ததை அப்படியே விட்டுவிட்டால் மற்றவர்கள் மனம் நோகுமே என்று கொஞ்சமாவது சாப்பிடுவது அவர்களுக்கும் வழக்கமாகி விட்டது.

IX. Change the following sentences into complex sentences :

1. நம் வீட்டுக்கு வரும் விருந்தாளிகளை அன்போடு வரவேற்கிறோம். உதவிகள் புரிகிறோம். சாப்பிட்டு மகிழும்படியாகச் செய்கிறோம்.

2. உணவு அளிப்பதற்கென்றே அவரை அந்த வீட்டார் அழைப்பார்கள். எழுத்து மூலமாக, அல்லது வாய்வழி மூலமாக அழைப்பு அனுப்புவார்கள். அதற்குப் பிறகுதான் அவர்கள் வருவார்கள்.

3. நாம் இட்ட எல்லாவற்றையும் ஓரளவு சாப்பிட வேண்டுமென்று முயற்சி செய்கிருர். ஒரு பகுதியாவது சாப்பிடுகிருர்கள்.

4. உணவு வகைகள் பொதுவாக மேசை மேலெடுத்து வைக்கப்படும். அவரவர்கள் தமக்குத் தேவையான அளவுக்கு எடுத்து உண்பார்கள்; குடிப்பார்கள்.

5. முன் பழகியறியாத ஒருவர் ஊர்க்குள் வருவார். வீட்டுத் திண்ணையில் இடம் நாடி இருப்பார். அவர் வெளியூராரென்பதை அதனுலே அறிந்து கொள்வார்கள். அந்த வீட்டார் அவரை உணவுக்கு அழைப்பார்.

X. *Using the points given below, write a short composition not exceeding 20 lines :*

நம் வீட்டில் விருந்தாளி—விருந்தாளியை நிறையச் சாப்பிட வைக்கிருேம்—இதற்குக் காரணம் என்ன?—நாம் பிறருடைய வீட்டில் தயங்கிச் சாப்பிடுகிருேம்—நம் சந்தேகம்—விருந்து கொடுப்பவர்களுடைய சந்தேகம் —ஆங்கிலேயருடைய பழக்கம்—தமிழ்நாட்டின் பழைய பழக்கம்—இப்போது நாம் விருந்தாளிகளைக் கட்டாயப் படுத்துவதற்குக் காரணம் பழைய பழக்கமே.

இந்தியப் பண்பாட்டிற்குத் தமிழின் கொடை

மு. வரதராசன்

[The style of this text is similar to that of (3). It is characterised however by the use of enumerative/additive phrases.]

டாக்டர் பட்நாயக்! நீங்க தமிழின் ஒரு, தமிழ் மொழியின், தமிழ் நாகரிகத்தின், தமிழ்ப்பண்பாட்டின் பயனாக இந்தியாவுக்குக் கிடைத்தது என்ன என்று அறிய விரும்புகிறீர்கள். அதாவது தமிழ் இந்தியாவிற்குக் கொடுக்கத் தக்கது, கொடுத்தது என்ன என்பது. தமிழ்மொழி என்ற அளவிலே கொடுத்த அந்தக் கொடையைப் பற்றி நான் மிகுதியாகச் சொல்ல விரும்பவில்லை. ஏதோ எத்தனையோ சொற்கள் கொடுத்திருக்கலாம்; வாக்கிய அமைப்புக்கு உதவியிருக்கலாம். சந்தனம் தமிழ் கொடுத்தது. [1]தோகை தமிழ் கொடுத்தது, [2]கட்டுமரம் தமிழ் கொடுத்தது, [3]மிளகுத்தண்ணி தமிழ் கொடுத்தது என்று வெளிநாட்டார்கள் சொல்வது போல் நான் சொல்லிக்கொண்டே போகலாம். அது அவ்வளவு முக்கியமென்றும் நான் கருதவில்லை. ஆனால் தமிழ் என்றால் மொழி மட்டுமல்லாமல், அந்த மொழியை வளர்த்த ஒரு வரலாறு, நாகரிகம், அந்த மொழியை வளர்த்த அந்த மக்களுடைய கலைகள் இவையெல்லாம் சேர்த்துப் பார்த்தால், தமிழ் பிற நாடுகளுக்குக் கொடுத்த பகுதிகள் சில உண்டு. குறிப்பாகச் சொல்ல வேண்டு

---

1 தோகை — Fail feather of peacock

2 கட்டுமரம் — catamaran—This word is said to have been — borrowed from Tamil.

3 மிளகுத் தண்ணி — Pepper water

மானுல், தமிழ் நாட்டிலே, [4]ஆழ்வார்கள் [5]நாயன்மார்கள் பாடிய பாடல்கள் எவ்வளவோ செல்வாக்காக இந்திய வரலாற்றை, இந்திய மக்களின் நாகரிகத்தை மாற்றியமைத்திருக்கின்றதென்று கூறலாம். ஆழ்வார்களும், நாயன்மார்களும், ஏழாம் நூற்ருண்டு, எட்டாம் நூற்ருண்டு, ஒன்பதாம் நூற்ருண்டிலே, தமிழ் நாட்டிலே இருந்து தமிழ் மொழியிலே, சிவனையும் திருமாலையும் பாடிய பாடல்கள், தேவாரம், திருவாசகம், பிரபந்தம் என்று சொல்லப்படும். சுருக்கமாக பக்திப் பாடல்கள் என்று சொல்லலாம், (அவர்களுடைய) பக்திப் பாடல்களாலே நல்ல பயன் பெற்றது இந்த நாடு என்று நான் கூற விரும்புகிறேன். பக்திப்பாடல்கள் இவர்கள் பாடிய அந்தப் பாடல்களின் வாயிலாக ஒரு பக்தி இயக்கமே மலர்ந்தது. அதன் வழியாக கடவுளுக்கும், மக்களுக்கும் இருக்கின்ற தொடர்பிலே, நல்ல ஒரு பண்பாட்டினடிப்படையிலே கலைகள் வளர்ந்தன. ஒருவருக்கொருவர் அன்பைப் போற்றி, அன்பினுல் வளர்ந்த உறவைக் கொண்டு சமுதாயத்தைப் பிணைத்தார்கள். சமுதாயம், ஊர் இவைகள் வளரத்தக்க வகையிலே கோயில்கள் ஏற்படுத்தினுர்கள். அந்தக் கோயில்கள் கலைக்கூடங்களாக விளங்கின. சமுதாய உறவின் கூடங்களாகவும் வளர்ந்தன. தமிழ் நாட்டின் பெருமையை எடுத்துக்காட்டக்கூடிய உயர்ந்த கோபுரங்களைப் பார்த்தால் அந்த கோபுரங்கள் உலகத்துக்கு எடுத்துரைப்பது போன்ற ஒரு பண்பாட்டு அறிவுரை உண்டு. அந்த கோபுரங்கள் மனிதனுடைய எல்லா முயற்சிகளையும்விட, மனித மனம் படைத்தவனிடத்திலே ஈடுபடுகின்ற ஈடுபாட்டை உயர்த்திக்காட்டுகின்றனவாகும். அந்த பக்தி இயக்கம் தமிழ் நாட்டிலே, ஆழ்வார்கள், நாயன்மார்கள் காலத்திலே வளர்ந்த அந்த வளர்ச்சியிலே ஒரு மாறுதல் ஏற்பட்டது என்னவென்ருல், மனிதன் இந்த உலகத்தை விட்டு, குடும்பத்தை விட்டு, துறந்து, வாழ்க்கையைக் கண்டு வெறுத்து, ஒதுங்க வேண்டுமென்றிருந்த ஒரு நிலையை மாற்றி விட்டார்களிவர்கள். "இந்த உலகத்திலே கணவனும் மனைவியுமாக குடும்பங்களிலே வாழலாம்; சமுதாயமாக வாழலாம்; இறைவனிடத்திலே அன்பு செலுத்தலாம்; சமுதாயத்துக்குப் பணி செய்யலாம்; கலைகளை வளர்க்கலாம்; உலகத்தைக் கண்டு பயப்பட வேண்டியதில்லை; வாழ்க்கையைக் கண்டு வெறுக்க வேண்டியதில்லை; குடும்பத்தை விட்டுத் துறந்து ஓட வேண்டியதில்லை", என்றெல்லாம் மக்களுக்கு ஒரு நம்பிக்கை ஏற்படுத்துவதற்கு, ஆழ்வார்களும், நாயன்மார்களும் பெரிய காரணமாயிருந்தார்கள். அவர்கள்

---

[4] ஆழ்வார்கள் — twelve chief devotees of Lord Vishnu, who are authors of the anthology of Vaishnavite devotional poetry called நாலாயிர திவ்விய பிரபந்தம்.

[5] நாயன்மார்கள் — Saiva saints numbering 64 depicted in the poetic work periyapuranam.

வளர்த்த அந்த பக்தி இயக்கத்தின் பயனுகத்தான் அதற்குப் பிறகு மெல்ல, மெல்ல அந்த பக்தி அலே வங்காளத்திலே சைதன்ய இயக்கமாக, மற்ற இடங்களிலே வேறு வகை பக்தி இயக்கங்களாக வளர்ந்து ஓங்கியது என்று சொல்லலாம். தமிழ் நாட்டில் இன்றும் ஒரு பெரிய நன்மை உண்டு. அதை மெல்லமெல்ல பிற நாடுகள் பயன் பெற்றன, பயன் பெற்றுக்கொண்டு வருகின்றன என்று சொல்ல வேண்டும். எத்தனேயோ மதங்கள் வரலாம் தமிழ் நாட்டுக்குள்ளே; எல்லாம் கலந்து இருக்கின்ற சமுதாயத்தோடு ஒன்றுபட்டு உறவு கொண்டாடும் எத்தனேயோ மொழிகள் வரலாம்; எல்லாம் உறவு கொண்டாடும் நிலைமைதான். ஆக வந்த புதிய புதிய நாகரிகங்களே எல்லாம் வரவேற்று தன்னுள்ளே கலந்து கொண்டு ஒரு வகையான ஒன்றுபாட்டை உண்டாக்குகின்ற தன்மையை இங்கே தமிழ் நாட்டிலே பார்க்கலாம். அரசியல் குழப்பங்கள் ஏற்பட்ட காலம் உண்டு; போர்கள் நடந்த காலம் உண்டு; ஆனுலுங்கூட தொடர்ச்சியான ஒரு நாகரிகத்தை வளர்த்து வருகின்ற அந்தப் போக்கைத் தமிழ் நாட்டின் வரலாற்றிலே பார்க்கலாம் ஆகவே, "என்ன மாறினுலும், எவ்வளவு புதுமைகள் ஏற்பட்டாலும், மாறுதல்கள் ஏற்பட்டாலும், மனிதன் அடிப்படையான அன்பு மனத்தை வளர்த்து நல்ல சமுதாயமாக வாழக் கற்றுக்கொள்ள வேண்டும்" என்பது தமிழ் நாடு உலகுக்கு உணர்த்துகின்ற ஒரு நற்செய்தியாகும். திருவள்ளுவர் காலத்திலிருந்தே, அதற்கு முன்னே பூங்குன்றனுர் என்ற ஒரு புறநானூற்றுப் புலவர் காலத்திலிருந்தே, தமிழ் மக்களுக்கு ஒரு பரந்த மனப்பான்மையை அறிவுறுத்தி வந்திருக்கின்றுர்கள் சில சான்றேர்கள். அது என்ன என்று கேட்டால் உலகத்தையெல்லாம் ஒரு குடும்பமாகப் பார்க்கின்ற பார்வை.

"யாதும் ஊரே; யாவருங் கேளிர்" என்று புறநானூற்றிலே அந்தப் புலவர் கணியன் பூங்குன்றனுர் பாடினுர். "எல்லா ஊர்களும் நம் ஊர்கள் தாம்; எல்லாரும் நம்முடைய சுற்றத்தார் தாம்" என்ற அந்த மனப்பான்மையை ஒரு குறிக்கோளாக வைத்துக் கொண்டு அந்த நாகரிகம் வளர்ந்து வந்திருக்கிறது. திருவள்ளுவருங்கூட,

"யாதானும் நாடாமால் ஊராமால் என்ஞெருவன்
சாந்துணேயுங் கல்லாத வாறு"

என்ற குறளிலே, கற்றவர்கள் எல்லா ஊரையும் தங்கள் ஊர்களாக, எல்லா நாட்டையுந் தங்கள் நாடுகளாகக் கருதுகின்ற ஒரு மனப்பான்மை பெற்று அவர்கள் மனத்தை விரிவுடையதாக ஆக்கிக்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறுர்கள்.

திருமூலர் என்ற ஒரு [6]யோகிசித்தர், "ஒன்றே குலம், ஒருவனே தேவன்", "மனிதனென்றால் ஒரே குலந்தான்", "கடவுளென்றால் ஒரே கடவுள்தான்" என்ற உண்மையை அழுத்தந்திருத்தமாக வற்புறுத்திச் சொல்லியிருக்கின்றார். இப்படி தமிழ் நாடு என்ற ஒரு வீட்டுக்குள்ளே இருந்துகொண்டு, உலகத்தைப் பார்க்கின்ற பார்வை, இந்தியாவிலுள்ள மற்ற மாநிலங்களையெல்லாம் மற்ற வீடுகள்போல் பார்க்கின்ற பார்வை ஒரு பெரிய உலகக் குடும்பம் என்ற அந்த விரிவடைந்த ஒரு மனப்பான்மை. இதைத் தமிழ்மொழி, தமிழ் நாகரிகம், தமிழ்க்கலை எல்லாம் உணர்த்திக்கொண்டு வருகின்றன என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

---

[6] யோகிசித்தர் — *யோகி*—one who practises yoga or an ascetic;. *சித்தர்*—one who has acquired the great mystic powers.

EXERCISES

I. Read the following in spoken Tamil:

ஒருவருக்கொருவர் அன்பைப் போற்றி, அன்பினால் வளர்ந்த உறவைக்கொண்டு சமுதாயத்தைப் பிணைத்தார்கள். சமுதாயம், ஊர் இவைகள் வளரத்தக்க வகையிலே கோயில்கள் ஏற்படுத்தினார்கள். அந்தக் கோயில்கள் கலைக்கூடங்களாக விளங்கின. சமுதாய உறவின் கூடங்களாகவும் வளர்ந்தன. தமிழ் நாட்டின் பெருமையை எடுத்துக் காட்டக்கூடிய உயர்ந்த கோபுரங்களைப் பார்த்தால் அந்தக் கோபுரங்கள் உலகத்துக்கு எடுத்துரைப்பது போன்ற ஒரு பண்பாட்டு அறிவுரை உண்டு.

II. Vocabulary Exercise:

(*a*) Write atleast two derivatives for each of the words given below, following the model.

Model :—இயங்கு—இயக்கம்

இயங்கு—இயங்குதல்

(i) மயங்கு
(ii) சுருங்கு
(iii) குறுகு
(iv) தொடங்கு

(*b*) Split the compounds into constituent words and write meanings for the same :

Model :—பக்திப்பாடல்கள்

பக்தி = bhakti

பாடல்கள் = Poems

(i) கலைக்கூடம்
(ii) தமிழ் வரலாறு
(iii) அன்புமனம்
(iv) பக்தி இயக்கம்

III. *Fill up the Blanks choosing the correct item.*
Make changes in the sentence if necessary.

1. சமுதாய உறவு———கூடங்களாகவும் வளர்ந்தன.

   (i) ஆக
   (ii) இல்
   (iii) இன்

2. அந்த கோபுரங்கள் மனிதனுடைய எல்லா முயற்சிகளையும்——— மனித மனம் படைத்தவனிடத்திலே ஈடுபடுகின்ற ஈடுபாட்டை உயர்த்திக் காட்டுகின்றனவாகும்.

   (i) விட
   (ii) ஆக
   (iii) இன்

3. கலைகள்———வளர்க்கலாம்

   (i) ஐ
   (ii) கு
   (iii) மேல்

4. அந்தக் கோயில்கள் கலைக்கூடங்கள்———வளர்ந்தன.

   (i) இல்
   (ii) கு
   (iii) ஆக

5. உலக———கண்டு பயப்பட வேண்டியதில்லை.

   (i) ஐ
   (ii) கு
   (iii) மேல்

6. எத்தனையோ மதங்கள் வரலாம் தமிழ் நாடு———

   (i) இன்
   (ii) உள்ளே
   (iii) ஐ

IV. *Substitution :*

1. *தமிழ் பிற நாடுகளுக்குக் கொடுத்த* **பண்புகள்** *சில உண்டு.*

(*a*) Substitute the following for **நாடுகளுக்கு** after making necessary changes in the given words :

(i) *மாநிலங்கள்*

(ii) *தேசம்*

(iii) *வட்டாரம்*

(*b*) Substitute the following for **சில** after making necessary changes in the given words :

(i) *பல*

(ii) *கொஞ்சம்*

(iii) *நிறை*

(*c*) Substitute the following for **பண்புகள்** after making necessary changes in the given words :

(i) *இலக்கியம்*

(ii) *தத்துவம்*

2. *இந்திய மக்களின் நாகரிகத்தை மாற்றியமைத்திருக்கிறதென்று கூறலாம்.*

(*a*) Substitute the following for **மக்களின்** after making necessary changes in the given words :

(i) *நாடு*

(ii) *ஜனங்கள்*

(iii) *உழைப்பாளிகள்*

(*b*) Substitute the following for **மாற்றியமைத்து** after making necessary changes in the given words :

(i) *உருவாக்கு*

(ii) *ஏற்படுத்து*

(iii) *தோற்றுவி*

(c) Substitute the following for **கூறலாம்** after making necessary changes in the given words:

(i) சொல்

(ii) நினை

(iii) எழுதிவை

3. இந்த உலகத்திலே கணவனும் மனைவியுமாக குடும்பங்களிலே வாழலாம்

(a) Substitute the following for **உலகத்திலே** after making necessary changes in the given words:

(i) வீடு

(ii) ஊர்

(iii) நாடு

(b) Substitute the following for **கணவனும் மனைவியுமாக** after making necessary changes in the given words:

(i) அண்ணன், தம்பி

(ii) அக்கா, தங்கை

(iii) தாய், பிள்ளை

(c) Substitute the following for **வாழலாம்** after making necessary changes in the given words:

(i) ஜீவி

(ii) இரு

(iii) பிழை

V. *Rewrite the following sentences by substituting one item at a time.*

1. இவர்கள் பாடிய அந்தப் பாடல்களின் வாயிலாக ஒரு பக்தி இயக்கமே மலர்ந்தது

(i) வளர்ந்தது

(ii) எழுதிய

(iii) கவிதைகளின்

(iv) மறுமலர்ச்சி

(v) மூலமாக

2. தமிழ் இந்தியாவிற்குக் கொடுத்தது என்ன என்று அறிய விரும்புகிறீர்கள்

(i) வழங்கியது
(ii) யாது
(iii) வங்காளம்
(iv) உலகிற்கு

3. குடும்பத்தை விட்டுத் துறந்து ஓட வேண்டியதில்லை

(i) வாழ
(ii) வாழ்க்கையை
(iii) பிரிந்து
(iv) வேண்டாம்

4. வாழ்க்கையைக் கண்டு வெறுக்க வேண்டியதில்லை

(i) பயப்பட
(ii) நாட்டின் நிலையை
(iii) துன்பத்தை

5. அது என்ன என்று கேட்டால் உலகத்தையெல்லாம் ஒரு குடும்பமாகப் பார்க்கின்ற பார்வை

(i) இந்தியாவை
(ii) சொன்னால்
(iii) நாடாக
(iv) நோக்கு

VI. *Transform the following into as many interrogative sentences as possible following the model.*

Model:—1. தமிழ்நாட்டில் இன்றும் ஒரு பெரிய நன்மை உண்டு.
தமிழ்நாட்டில் இன்றுமா ஒரு பெரிய நன்மை உண்டு?
தமிழ்நாட்டில் இன்றும் ஒரு பெரிய நன்மையா உண்டு?
தமிழ்நாட்டில் இன்றும் ஒரு பெரிய நன்மை உண்டா?

2. தமிழ்ப் பண்பாட்டின் பயனாக இந்தியாவுக்குக் கிடைத்ததை அறிய விரும்புகிறீர்கள்.

3. இந்திய மக்களின் நாகரிகத்தை மாற்றியமைத்திருக்கிறதென்று கூறலாம்.
4. சுருக்கமாக பக்திப் பாடல்கள் என்று சொல்லலாம்.
5. உலகத்தைக் கண்டு பயப்பட வேண்டியதில்லை.
6. அந்தப் போக்கைத் தமிழ் நாட்டின் வரலாற்றிலே பார்க்கலாம்.

VII *Transform the following into imperative sentences:*

Model:—*1.* நான் சொல்கிறேன் நீ சொல் சொல்
2. நிலையை இவர்கள் மாற்றிவிட்டார்கள்
3. சமுதாயத்துக்குப் பணி செய்யலாம்
4. இறைவனிடத்தில் அன்பு செலுத்தலாம்.
5. 'யாதும் ஊரே, யாவருங் கேளிர்' என்று அவர் பாடினார்.

VIII. *Change each of the following complex sentences into simple sentences:*

1. தமிழ் நாட்டிலே, ஆழ்வார்கள் நாயன்மார்கள் பாடிய பாடல்கள் எவ்வளவோ செல்வாக்காக இந்திய வரலாற்றை இந்திய மக்களின் நாகரிகத்தை மாற்றியமைத்திருக்கின்றது.
2. இவர்கள் பாடிய அந்தப் பாடல்களின் வாயிலாக ஒரு பக்தி இயக்கமே மலர்ந்தது.
3. ஒருவருக்கொருவர் அன்பைப் போற்றி, அன்பினால் வளர்ந்த உறவைக் கொண்டு சமுதாயத்தைப் பிணைத்தார்கள்.
4. உலகத்தைக் கண்டு பயந்து வாழ்க்கையை வெறுக்க வேண்டியதில்லை.
5. பக்திப் பாடல்களாலே நல்ல பயன்பெற்றது இந்த நாடு என்று நான் கூற விரும்புகிறேன்.

IX. *Change the following into complex sentences:*

1. எத்தனையோ சொற்களைக் கொடுத்திருக்கலாம்; வாக்கிய அமைப்புக்கு உதவியிருக்கலாம்.
2. சந்தனம் தமிழ் கொடுத்தது. தோகை தமிழ் கொடுத்தது. கட்டு மரம் தமிழ் கொடுத்தது. மிளகுத்தண்ணி தமிழ் கொடுத்தது.
3. அந்தக் கோயில்கள் கலைக்கூடங்களாக விளங்கின. சமுதாய உறவின் கூடங்களாகவும் வளர்ந்தன.

4. எத்தனையோ மொழிகள் வரலாம். எல்லாம் உறவு கொண்டாடும் நிலைமைதான்.

5. தொடர்ச்சியான ஒரு நாகரிகத்தை வளர்த்து வருகின்றது தமிழ்நாடு அந்தப் போக்கை அதன் வரலாற்றிலே பார்க்கலாம்.

6. எல்லா ஊரையும் தங்கள் ஊர்களாகக் கருதுகின்றார்கள். எல்லா நாட்டையும் தங்கள் நாடுகளாகக் கருதுகின்றார்கள். இந்த மனப்பான்மை அவர்கள் மனத்தை விரிவுடையதாக்குகின்றது.

X. *Using the points given below, write a short essay not exceeding 25 lines.*

தமிழ் இந்தியாவிற்குக் கொடுத்தவை: சொற்கள்—வாக்கிய அமைப்பின் சில கூறுகள்—ஆழ்வார்கள், நாயன்மார்கள் பாடிய பாடல்கள் இந்திய வரலாற்றையும் நாகரிகத்தையும் மாற்றியமைத்தன—பக்திப் பாடல்கள்—இவைகளால் பக்தி இயக்கம் மலர்ந்தது—இவைகளால் கலைகளின் வளர்ச்சி—இல்லற வாழ்வின் உயர்வு—இதற்கு ஆழ்வார்களின் பாடல்கள் அடிப்படையாய் அமைந்தது—ஒருமைப்பாடு காணுகின்ற தன்மை—சங்க காலத்திலிருந்தே; உலகை ஒரு குடும்பமாகப் பார்க்கின்ற பார்வை—எல்லா நாட்டையும் தம் நாடாகக் காணுகின்ற ஒரு விரிந்த மனப்பான்மை—உலகை மற்ற மாநிலங்களை ஒரு குடும்பமாகக் காணுகின்ற மனப்பான்மை தான் தமிழ் நாகரிகம், தமிழ்க்கலை, தமிழ்ப்பண்பாடு.

கந்தபுராணச் சொற்பொழிவு

கிருபானந்தவாரியார்

[This piece is characterised by the use of sanskritic loan words. The author quotes verses from religious works. A few features of spoken style are retained. We have made no attempts to paraphrase the poems.]

கைத்தலம் நிறைகனி அப்பமொடவல் பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணி
கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவர்
கற்பகம் என வினை கடிதேகும்.

மத்தமும் மதியமும் வைத்திடும் அரன் மகன்
மற்பொருதிரள்புய மதயானை,
மத்தள வயிறனை, உத்தமி புதல்வனை,
மட்டவிழ் மலர் கொடு பணிவேனே.

முத்தமிழ் அடைவினை முற்படுகிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே!
முப்புரமெரி செய்த அச்சிவனுரைதலம்
அச்சது பொடி செய்த அதிதீரா!

அத்துயரது கொடு சுப்பிரமணிபடும்
அப்புறமதனிடை இபமாகி
அக்குறமகளுடன் அச்சிறு முருகனை
அக்கணம் மணவருள் பெருமாளே.

எல்லாம் வல்ல எம்பெருமானுடைய திருவருளினாலே ஸ்கந்த மகாபுராணம் என்பது பதினெட்டுப் புராணங்களிலே ஒன்று. சிவபுராணம் பத்து, விஷ்ணுபுராணம் நான்கு, பிரும்ம புராணம் இரண்டு, அக்கினி புராணம் ஒன்று, சூரியபுராணம் ஒன்று, ஆகப் பதினெட்டு. புராணம் என்ற சொல்லுக்குப் பழமை என்பது பொருள்.

வேதத்திலே உள்ள நுட்பமான பொருள்களை விரிவாக எடுத்துக் காட்டுவது புராணம். ஒரு சிறிய கடியாரத்திலே உள்ள நுண்ணிய சக்கரங்களை எடுத்து விரித்துக்காட்டுவது பூதக்கண்ணாடி. அதுபோல வேதத்திலே உள்ள நுண்ணிய கருத்துக்களை விரித்துக் காட்டுவது புராணம். புராணங்களைப் படிப்பதனாலே வேதத்தி(ன்) நுட்பங்களை அறியலாம். இந்தப் பதினெட்டு புராணங்களும் [1]வியாசபகவான் உலக(ம்) உய்யும் பொருட்டு அருளிச்செய்தார். பதினேழு புராணங்களுடைய கிரந்த எண்ணிக்கை மூன்று லட்சம். கந்தபுராணத்தின் கிரந்த எண்ணிக்கை மட்டும் ஒரு லட்சங் கிரந்தம். அத்துணை மகத்தான புராணம் ஸ்காந்தம். கந்தன் என்ற சொல்லுக்குப் பகைவர்(க)ளுடைய பராக்கிரமத்தை வற்றச் செய்கிறவன் என்பது பொருள். பகைவரை அழித்துவிடமாட்டானாண்டவன். பகைவர்(க)ளுடைய கொடுமைகளை வற்றச் செய்வான். "சத்துரூன் சோஷயத்தி ஸ்கந்த:" என்று அமரசிம்மன் நிகண்டு சொல்லுகிறது. பகைவர்(க)ளுடைய பராக்கிரமத்தை அடக்குகின்றவன். இதைத் தான் தமிழிலே கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் சொல்லுகிற பொழுது—

> இந்திரராகிப் பார் மேல் இன்பமுற்று இனிதுமேவி,
> சிந்தையில் நினைந்து முற்றி சிவகதியதனில் சேர்வர்,
> அந்தமில் அவுணர் சேனை அடல் கெட முனிந்து செவ்வேள்
> கந்தவேள் புராணந்தன்னைக்காதலித்து ஓதுவோரே.

அந்தமில் அவுணர் சேனை அடல் கெட முனிந்த செவ்வேள் கந்தவேள் புராணம். பகைவர்களுடைய வலிமையைக் குன்ற வைத்தாரே தவிர பகைவரை அழித்து விடவில்லை முருகப்பெருமான். தாரகனைப் பிளந்து சாஸ்தா என்ற ஐயனாருக்கு யானை வாகனமாக அனுப்பினார். சிங்கமுகனை அவனுடைய [2]அசுர உடம்பை மாற்றி உமாதேவியாருக்கு சிம்மவாகனமாக அனுப்பினார். சூரபன்மனைப் பிளந்து ஒரு பாதி சேவலாக ஒரு பாதி மயிலாக ஆக்கிக்கொண்டார். ஆகவே சூரபன்மன், சிங்கமுகன், தாரகன் மூவருக்கும் உயர்வு கிடைத்ததே தவிர அழிந்து போகவில்லை. முருகப்பெருமான் சூரனைப் பிளந்து ஒரு பாதி மயில் ஒரு பாதி சேவலாக அமைத்துக் கொண்டார். அந்தப் பச்சை மயில் மேல் ஆரோகணித்தார். சேவல் எம்பெருமான் மேலிருந்து கொக்கரக்கோ என்று கூவுகிறது. மாலையானதி [3]வானவர்கள்ளா(ம்) எம்பெருமானுடைய திருவடியிலே விழுந்து வணங்கினார்கள்.

---

[1] வியாச பகவான்	—	வியாசர் = the author of Mahabharata; பகவான் = a great person who possesses divine qualities.
[2] அசுர (adj.) அசுரர்	—	(n) — demons; the enemies of gods.
[3] வானவர்கள்ளா(ம்)	—	வானவர்கள் எல்லாம்

எழுந்து சென்னிக்கு மேலே கரங்களைக் கூப்பித் தொழுதார்கள். [4]அப்ப இந்த மயிலும்(ம்) சேவலும் சிரித்தன. இந்த சிரிக்கின்ற ஒன்று மனிதனுக்கே உரியது. அகாரணமாக சேவலும் மயிலும் சிரித்தன. முருகப்பெருமான் கேட்டார், "ஏன் சிரிக்கிறீர்க"ளென்று. "பெருமானே! இந்த இந்திராதி தேவர்கள் சூரனுயிருக்கிற என்னை அழித்து விட்டதாக எண்ணி மகிழ்கின்றுர்கள். முன்னும் எங்கள் கால் மேல்தான் விழுந்தார்கள். இப்பால் சூரன் மயிலாக இருக்கின்றுன். [5] சிரஸுக்கு மேலே கரத்தைக் கூப்பினுல் சேவலை வணங்குகிறுர்கள்; திருவடியிலே விழுந்து வணங்கினுல் மயிலை வணங்குகிறுர்கள். முன்னையும் எங்களைத்தான் வணங்கினுர்கள் இப்போதும் எங்களைத்தான் வணங்குகிறுர்கள்." என்று சேவலும் மயிலும் பெருமானுடைய கேள்விக்குப் பதில் சொல்லின. ஆகவே சூரபன்மனுக்குப் பெருவாழ்வு கொடுத்தான் முருகன். சூரபன்மனை அழித்துவிடவில்லை. இதைக் கச்சியப்பரே சொல்லுகின்றுர்—

> தீயவை புரிந்தாரேனும், முருகவேள் திருமுன் உற்றுல்
> தூயவராகி மேலைத்தொல்கதி அடைவர் என் கை
> ஆயவும் வேண்டும் கொல்லோ! அடுசமர் இந் நாள் செய்த
> மாயையின் மகனுமன்றே! வரம்பிலா வாழ்வு பெற்றுன்

எத்தனை கொடுமை செய்தவர்களும் முருகப்பெருமான் திருமுன் சென்றுல் அவர்கள் கொடுமை மாறி தூயதாரைத் தண்ணீர் கடலிலே விழுமானுல் அந்த ஜலதாரைத் தண்ணீர் கடலாக மாறிவிடுகிறது. கடல் ஜலதாரையாகாது: ஜலதாரை தான் கடலாக மாறிவிடுகிறது. அதுபோல, எத்தனை தீயவர்களானுலும் அருட்கடலாயிருக்கிற ஆண்டவனை அடைந்தவுடனே தூயவர்களாக ஆகிவிடுகிறுர்கள். "அதனை ஆராய வேண்டுமா?" என்று [6]கேழ்க்கிறுர் கச்சியப்பர். ஒருவன் அவசர(ம்) அவசரமாக மூக்கண்ணுடி(யை)யப் போட்டுப் பார்த்தால் "என்ன பார்க்கிறீர்னு" கேட்டா "திருப்பதி மலை தெரியுதாண்ணு கண்ணுடி போட்டுப் பார்க்கிறேன்"ஞ(ன்). கண்ணுடி போட்டா திருப்பதி மலை(யை)யப் பார்க்கணும், வானளாவிய மலை. ஒரு சிறிய பொருளைக் கண்ணுடி மூலமாக அறியவேண்டும். மலை(யை)யப் போய்க்கண்ணுடி போட்டுப் பார்க்கவேண்டாம். அதுபோல உலக(ம்) அறிந்த உண்மை(யை)ய ஆராயவேண்டுமா? "ஆயவும் வேண்டுங்கொல்லோ? அடுசமர் இந்நாள் செய்த மாயையின் மகனுமன்றே! வரம்பிலா அருள் பெற்று உய்ந்தான்." அப்படி சூரபன்மன் வாழ்வு பெற்ற வரலாறு ஸ்காந்தம்.

---

4 அப்ப — அப்பொழுது

5 சிரஸுக்கு — to the head: சிரஸு is a borrowed word from Sanskrit. தலை 'head' is the Tamil word.

6 கேழ்க்கிறுர் — கேட்கிறுர்

கிருபானந்தவாரியார் (2)

அதிலே முதலாவதாகப் பார்வதியம்மையார் திருமணம். சுவாமி உமாதேவியாரை மணந்து கொண்டாரென்று சொன்னால் அது உலக(ம்) உய்யும் பொருட்டுச் செய்த அருள் திருவிளையாடல். பிரும்மாவுடைய வலப் பெருவிரலிலே பிறந்தவன் தட்சப் பிரஜாபதி. அவன் சிவபெருமானை வேண்டி எண்ணில்லாத காலந் தபஞ்செய்து எல்லா நலன்களையும் பெற்றான். பரவீசுவரன் அனுக்கிரகத்தினாலே எம்பிராட்டி அவனுக்கு மகளாகத் தோன்றினாள், தாட்சாயணி என்ற திருநாமத்தோடு. வாழ்வினாலே மயங்கிய தட்சப் பிரஜாபதி, சிவபெருமானை தேவருக்கு மூவருக்கும் தலைவரென்று உணராமல் சிவ நிந்தை செய்து திரிந்தான். சிவபெருமானை புறக்கணித்து, [7]யாகஞ்செய்தான். பரவீசுவரன் வீரபத்திர சுவாமி(யை) அனுப்பி தக்ஷயக்ஞத்தை அழித்துவிட்டார். தக்கனுடைய தலையை அறுத்து ஆட்டுத்தலை வைத்தார். சிவ நிந்தை செய்த தக்கன் தண்டிக்கப் பெற்றான். கைலாயமலையிலே சிவபெருமானுடை(ய) வாம பாகத்தி(லே) உமாதேவியார், பெருமானை எழுந்து தொழுது ஆண்டவனே! ஒரு பெண்ணுக்கு நான்கு நிலை உண்டு. ஒன்று மகள், ஒன்று சகோதரி, ஒன்று மனைவி, ஒன்று தாய். மகளாக இருக்கிறாள். சகோதரியாக இருக்கிறாள். மனைவியாக ஆகின்றாள், தாயாராக விளங்குகின்றாள். ஒரு பெண்ணுக்குத் தந்தை தவறி விட்டான். உலகத்தி(லே) உள்ள அத்தனை பேரையு(ம்) தந்தையென்று அழைக்கலாம். உடன் பிறந்தான் தவறி விட்டான். நாற்பது கோடி மக்களையும் சகோதரன் என்று அழைக்கலாம். மகன் தவறி விட்டான், எல்லோரையுந் தன் மகனென்று எண்ணலாம். கணவனார் மறைந்து விட்டால் அப்படியெண்ண முடியாது. எல்லோரையும் மகனா எண்ணலா(ம்), எல்லாரையு(ம்) சகோதரனா எண்ணலா(ம்), எல்லோரையும் பிதாவா எண்ணலா(ம்). கணவன் ஸ்தானத்துக்கு அவனைத் தவிர [8]ஏழு ஜன்மத்துக்கு(ம்) ஆளில்லை. அத்துணை விழுமியது மனைவியினுடைய ஸ்தானம். பெருமானே! கணவனை விட நெருங்கிய உறவு பெண்களுக்கு இல்லை. "கண்ணில் சிறந்த உறுப்பில்லை, கொண்டானின் புண்ணிய கேளிர் பிறரில்லை, மக்களின் ஒண்மையவாச்சான்ற பொருளில்லை, ஈன்றாளின் என்ன கடவுளும் இல்" என்று நான் மணிக்கடிகை பேசுகிறது. தேவரீரை நிந்தித்த தட்சப்பிரஜாபதியின் மகளென்று நான் இனி வாழ மாட்டேன். பெண்களுக்கு நாயகன் தான் சிறந்த உறவு. கணவனுக்காக

---

[7] யாகம்—வேள்வி — sacrifice; an oblation

[8] ஏழு ஜன்மம் — seven births; Hindus believe that there are seven births for a soul in order to attain **Mukti.**

எல்லாவற்றையு(ம்) விட்டுவிட வேண்டும். இந்த உடம்பு தக்கன் வளர்த்த உடம்பு. எனக்கு தாட்சாயணி என்பது அவன் வைத்த பேர். தேவரீரை நிந்தித்த தக்கன் வளர்த்த [9]உடம்பும், அவன் வைத்த பேரும் இனி நான் சுமக்க மாட்டேன். அதனை விலக்கிவிடுவதற்கு தேவரீர் அருள் புரிய வேண்டுமென்று வணங்கினார். பெருமான் புன்னகைபுரிந்து "தேவி! உன்னுடைய குலமாயிருக்கிற பெண்குலம் தழைக்கும் பொருட்டு இந்த வார்த்தையை நீ சொல்லியருளினாய். நெடுங்காலமாக இமவான் தவஞ்செய்து கொண்டிருக்கிறான். அவனுக்கு நீ மகளாகப் பிறந்து மாதவஞ்செய், உன்னை வந்து நாம் திருமணஞ் செய்துக் கொள்வோமென்று சுவாமி அருள் புரிந்தார். கற்பூரம்காற்றிலே கரைவது போலே, தாட்சாயணியின் திருமேனி தானாகக் கரைந்து விட்டது. ஒளிமயமான திருவுருவம். இது மாதிரி எலும்பு, தோல், நரம்பு வடிவம் தெய்வங்களுக்கு இல்லை. அந்தத் திருமேனி தானே கரைந்து மறைய, நெடுங் காலமாக இமவான் மாதவஞ்செய்துக் கொண்டிருக்கிறான், பராசக்தியை மகளாகப் பெறும் பொருட்டு. மானச சரோவரத்திலே அவன் நீராடி பூஜை செய்து திரும்புகிறபோது ஆயிரத்து எட்டு இதழ் தாமரை கமலத்திலே எம்பிராட்டி தானே ஒரு குழந்தையாக விளங்கினாள். அந்த அற்புதமான தெய்வக்குழந்தையை [10]மலையரயன் எடுத்து தன் அரண்மனையிலே கொண்டு வந்து தன் மனைவி மேனையின் கையி(லே) கொடுத்தான். கணவனால் கொடுத்த குழந்தையைக் கும்பிட்டு வாங்கினாள். தாலாட்டி, சீராட்டி பார்வதி என்று பேர் வைத்தாள். [11]"பர்வத ராஜன் மகள் பார்வதி, தத்திதாந்த நாமம். அம்பாள் இப்படி இனிது வளர்ந்து ஐந்து ஆண்டு அடைந்தபொழுது பிதாவைத் தொழுது "நான் சிவபெருமானை வேண்டித் தவஞ்செய்ய வேண்டும், தவச்சாலை அமைத்துக் கொடுக்கவேண்டும் என்று கேட்டாள் தேவி. "அம்மா! நீ சின்னஞ்சிறு குழந்தை. தவஞ்செய்கிற ஆற்றல் உன்(னுடைய) இள(ம்) உள்ளத்துக்கமையாது" என்று மறுத்தான். அம்பிக்கை "சரீரம் என்றைக்கு(ம்) அழிந்து விடுவது, இறைவனை வணங்குவதற்கு வயது, காலம், இடம், இந்தத் தடைகளில்லை. ஆகவே நான் இறைவனை வேண்டி [12]மாதவம் செய்ய நீர் அமைத்துக்கொடுக்க வேண்டுந் தவச்சாலை"யென்று

---

9 உடம்பும்...பேரும் — the appropriate form here are உடம்பையும் and பேரையும்

10 மலையரயன் — king of a mountain; மலை–mountain அரயன்— king; அரசன்: அரையன்—அரயன்.

11 பர்வத ராஜன் — king of (a) mountain; பர்வதம்—mountain; ராஜன்—king. This is borrowed from sanskrit.

12 மாதவம் — great penance; மா—great; big தவம்—penance. See the usage of மா in compounds like மாநிலம், மாநாடு, மாமன்னன் etc.

கேட்டாள். இமாசலத்திலே ஒரு அற்புதமான சோலைக்கு நடுவே ஒரு தவஞ்சூழல் அமைத்துக்கொடுத்தான். ப்ராசக்தி சிவலிங்கத் திருமேனி வைத்து தோழிப் பெண்களோடு பரவீசுவரரை வேண்டி அரும் பெரும் தவஞ்செய்கின்றாள். அப்பொழுது பிரும்மாவுக்கு நான்கு புதல்வர்கள்—சனகர், சனந்தனர், சனாதனர், சனத்குமாரர். அவர்கள் வேதம், ஆகமம், புராணம், இதிகாசம் எல்லாம் படித்தும் மனம் தெளிவு பெறவில்லை. எத்தனைதான் விடாய் கொண்டவன் கடல் தண்ணீரைக் குடித்தாலுந் தாகந்தணியாது. கடல் தண்ணீரினாலே தாகந்தணிவது என்பது இல்லை. அந்தக் கடல் தண்ணீரைப்போலே சாஸ்திரங்கள். ஒரு மாணவன் தானே போய் சாஸ்திரங்களைப் படிப்பானானால், தானே சென்று கடல் நீரைக் குடிப்பதற்குச் சமானம். நமக்கு(ம்) கடல் நீருக்கு(ம்) நடுவிலே மேகம் ஒன்று இருக்கிறது. அது போய் உவர் நீரைக்குடித்து உவரை மாற்றி நன்னீராகப் பொழிகிறது. அப்படி சாஸ்திரமான சமுத்திரத்தைப் பருகி ஆசாரியன் நமக்கு நன்மையாகப் பொழிய வேண்டும். நெடுங்காலமாகப் படித்தும் மனந்தெளியவில்லை சனகாதி முனிவர்(க)ளுக்கு. அவர்கள் திருக்கயிலாய மலைக்கு வந்தார்கள். அங்(கெ)க பரவீசுவரன் கல்லால விருட்சத்தின் கீழே தென்முகப் பரமாசார்யனாக வீற்றிருக்கிறான் தட்சிணாமூர்த்தியாய். நால்வர்(க)ளும் பெருமானை வந்து பார்க்கிறார்கள். அவர்(க)ளுடைய நிலைமை என்னமாயிருக்கிறது என்று கச்சியப்பர் சொல்லுகிறார்—

மொழியது குழற, மேனி முச்சுடல் தெதிப்ப,
வார்த்தைகள் குழறுகின்றன, திருமேனி மயிர்க்கூச்சல் எரிகிறது—
விழிபுனல் பெருக, தீசேர் மெழுகென உள்ளம் விள்ள
அழகிய மறைக்கு(ம்) எட்டான் அலையருளால் நோக்கித்
தொழுதனர் துளக்கம் உற்றார் துள்ளினர் சொல்லுற்றார்.

EXERCISES

I. *Read the following in spoken Tamil:*

எல்லாம் வல்ல எம்பெருமானுடைய திருவருளினாலே ஸ்கந்த மகாபுராணம் என்பது பதினெட்டு புராணங்களிலே ஒன்று. சிவபுராணம் பத்து, விஷ்ணு புராணம் நான்கு, பிரம்மபுராணம் இரண்டு, அக்கினி புராணம் ஒன்று, சூரிய புராணம் ஒன்று, ஆகப் பதினெட்டு. புராணம் என்ற சொல்லுக்குப் பழமை என்பது பொருள். வேதத்திலே உள்ள நுட்பமான பொருள்களை விரிவாக எடுத்துக்காட்டுவது புராணம். ஒரு சிறிய கடியாரத்திலே உள்ள நுண்ணிய சக்கரங்களை எடுத்து விரித்துக் காட்டுவது பூதக்கண்ணாடி. அதுபோல வேதத்திலே உள்ள நுண்ணிய கருத்துக்களை விரித்துக்காட்டுவது புராணம்.

II. *Vocabulary Exercise:*

(*a*) Write atleast two derivatives for each of the words given below, following the model.

Model :- பகை——பகைமை

பகை——பகைத்தல்

(i) கொடு

(ii) அடி

(iii) பொறு

(iv) நிலை

(*b*) Split the following compounds into constituent words and write meanings for the same:

(i) திருவருள்

(ii) பூதக்கண்ணாடி

(iii) வியாச பகவான்

(iv) கந்தபுராணம்

(v) முருகப்பெருமான்

III. *Fill up the blanks choosing the correct item.*

Make changes in the sentence if necessary.

1. கந்தபுராண——கிரந்த எண்ணிக்கை மட்டும் ஒரு லட்சங் கிரந்தம்

   (i) இன்
   (ii) ஆல்
   (iii) மேல்

2. அத்துணை மகத்——புராணம் ஸ்காந்தம்

   (i) கு
   (ii) ஆன
   (iii) இன்

3. தாரகன்——பிளந்து சாஸ்தா என்ற ஐயனுருக்கு யானை வாகனமாக அனுப்பினுர்.

   (i) ஐ
   (ii) ஆல்
   (iii) இன்

4. சேவல் எம்பெருமான் மேல்——கொக்கரக்கோ என்று கூவுகிறது.

   (i) இருந்து
   (ii) கு
   (iii) ஆக

5. இந்த மயிலும் சேவலும் சிரித்——

   (i) ஆன்
   (ii) ஆர்கள்
   (iii) அன

6. பத்மன் சேவல்——இருக்கின்றான்.

   (i) ஆக
   (ii) கு
   (iii) இருந்து

IV. Substitution:

1. *புராணங்களைப் படிப்பதனாலே வேதத்தின் நுட்பங்களை அறியலாம்.*

(*a*) Substitute the following for **புராணங்களை** after making necessary changes in the given words:

(i) *இதிகாசம்*
(ii) *பழைய நூல்கள்*
(iii) *இலக்கியம்*

(*b*) Substitute the following for **படிப்பதனாலே** after making necessary changes in the given words:

(i) *கல்*
(ii) *ஆராய்*
(iii) *கேள்*

(*c*) Substitute the following for **வேதத்தின்** after making necessary changes in the given words:

(i) *மதம்*
(ii) *தத்துவம்*
(iii) *நீதி*

2. *அதுபோல, எத்தனை தீயவர்களானாலும் அருட்கடலாயிருக்கிற ஆண்டவனை அடைந்தவுடனே தூயவர்களாக ஆகிவிடுகிறார்கள்.*

(*a*) Substitute the following for **தீயவர்களாகவும்** after making necessary changes in the given words:

(i) *கொடியவர்கள்*
(ii) *வஞ்சகர்கள்*
(iii) *தீயவர்கள்*

(*b*) Substitute the following for **அடைந்தவுடன்** after making necessary changes in the given words:

(i) *சேர்*
(ii) *காண்*
(iii) *நினை*

(c) Substitute the following for தூயவர்களாக after making necessary changes in the given words :

(i) நல்லவர்கள்

(ii) புனிதமானவர்கள்

(iii) மகாத்மாக்கள்

3. மலையைப் போய்க் கண்ணாடி போட்டுப் பார்க்க வேண்டாம்.

(a) Substitute the following for மலையை after making necessary changes in the given words :

(i) காட்டுத்தீ

(ii) யானை

(iii) கடல்

(b) Substitute the following for போட்டு after making necessary changes in the given words :

(i) மாட்டு

(ii) கொள்

(iii) வை

(c) Substitute the following for பார்க்க after making necessary changes in the given words :

(i) காண

(ii) தேடு

(iii) நோக்கு

V. *Rewrite the following sentences by substituting one item at a time.*

1. மாலையனுதி வானவர்கள் எம்பெருமானுடைய திருவடியிலே விழுந்து வணங்கினார்கள்.

(i) மக்கள்

(ii) முருகனுடைய

(iii) பாதங்களிலே

2. முருகப் பெருமான் சூரனைப் பிளந்து ஒரு பாதி மயில் ஒரு பாதி சேவலாக அமைத்துக் கொண்டார்.

(i) வெட்டி
(ii) அரக்கனை
(iii) ஆறுமுகன்
(iv) மாற்றி

3. எழுந்து சென்னிக்கு மேலே கரங்களைக் கூப்பித் தொழுதார்கள்.

(i) தலைக்கு
(ii) கூட்டி
(iii) கைகளை
(iv) வணங்கினார்கள்

4. இந்த சிரிக்கின்ற ஒன்று மனிதனுக்கே உரியது.

(i) தன்மை
(ii) உரித்தானது
(iii) மானிடர்க்கே

5. சிவபெருமானை தேவருக்கும் மூவருக்கும் தலைவரென்று உணராமல் சிவ நிந்தை செய்து திரிந்தான்.

(i) பிரம்மாவுக்கும் விஷ்ணுவுக்கும்
(ii) அறியாமல்
(iii) நடராஜனை
(iv) அழிந்தான்

6. உலகத்திலே பிறந்த அனைவரையும் தந்தையென்று அழைக்கலாம்.

(i) கூப்பிடலாம்
(ii) எல்லோரையும்
(iii) நாட்டிலே
(iv) சகோதரரென்று

VI. Transform the following into negative sentences, using the underlined phrases:

1. புராணங்களைப் படிப்பதினுலே வேதத்தின் நுட்பங்களை <u>அறியலாம்</u>.
2. பகைவர்களுடைய பராக்கிரமத்தை <u>அடக்குகின்றவன்</u>.
3. சேவல் எம்பெருமான் மேலிருந்து கொக்கரக்கோ என்று <u>கூவுகிறது</u>.
4. ஒரு சிறிய பொருளைக் கண்ணுடி மூலமாக <u>அறிய வேண்டும்</u>.
5. சிவ பெருமானைப் <u>புறக்கணித்து</u>, யாகஞ் செய்தான்.
6. கணவனுக்காக எல்லாவற்றையும் விட்டு<u>விட வேண்டும்</u>.

VII. Transform the following into declarative sentences, following the model:

Model :– 1. அதனை ஆராய வேண்டுமா?
அதனை ஆராய வேண்டும்

2. கண்ணுடி போட்டா திருப்பதி மலையைப் பார்க்கணும்?
3. பரவீசுரன் அனுக்கிரகத்திஞலா எம்பிராட்டி அவனுக்கு மகளாகத் தோன்றிஞள்?
4. சிவ நிந்தை செய்த தக்கன் தண்டிக்கப் பெற்ருஞ?
5. ஒரு பெண்ணுக்கு நான்கு நிலையா உண்டு?
6. கணவன் ஸ்நானத்துக்கு அவளைத் தவிர ஏழு ஜன்மத்துக்கும் ஆளில்லையா?

VIII Change each of the following complex sentences into simple sentences.

1. பகைவர்களுடைய வலிமையைக் குன்ற வைத்தாரே தவிர பகைவரை அழித்துவிடவில்லை முருகப்பெருமான்.
2. சூரபன்மனைப் பிளந்து ஒருபாதி சேவலாக ஒருபாதி மயிலாக ஆக்கிக்கொண்டார்.
3. சுவாமி உமாதேவியாரை மணந்துகொண்டாரென்ருல் அது உலகம் உய்யும் பொருட்டு செய்த அருள் திருவிளையாடல்.
4. அவன் சிவபெருமானை வேண்டி எண்ணில்லாத காலம் தபஞ்செய்து எல்லா நலன்களையும் பெற்ருன்.
5. வாழ்விஞலே மயங்கிய தட்சப் பிரஜாபதி, சிவபெருமானை தேவருக்கு மூவருக்கும் தலைவரென்று உணராமல் சிவ நிந்தை செய்து திரிந்தான்.

IX. Change the following sentences into complex sentences:

1. ஒரு சிறிய கடியாரத்திலே உள்ள நுண்ணிய சக்கரங்களை எடுத்துக்காட்டுவது பூதக்கண்ணுடி. அதுபோல வேதத்திலே உள்ள நுண்ணிய கருத்துக்களை எடுத்துக் காட்டுவது புராணம்
2. பகைவரை அழித்துவிட மாட்டாளுண்டவன். பகைவர் களுடைய கொடுமைகளை வற்றச் செய்வான்.
3. எழுந்து சென்னிக்கு மேலே கரங்களைக் கூப்பித் தொழுதார்கள். அப்போது இந்த மயிலும் சேவலும் சிரித்தன.
4. இப்பால் சூரன் மயிலாக இருக்கின்ருன். பத்மன் சேவலாக இருக்கின்ருன்.
5. சிவபெருமானைப் புறக்கணித்தான். பின்பு யாகம் செய்தான். பரசுவீரன் வீரபத்திர சுவாமியை அனுப்பி தக்ஷயக்ஞத்தை அழித்துவிட்டார்.
6. பெண்களுக்கு நாயகன்தான் சிறந்த உறவு. கணவனுக்காக எல்லாவற்றையும் விட்டுவிட வேண்டும்.

X. Match the phrases given in column I with those given in column II to make appropriate sentences.

I	II
1. புராணங்களைப் படிப்பதனுலே	பகைவரை அழித்துவிடவில்லை முருகப்பெருமான்
2. பகைவர்களுடைய வலிமையைக் குன்றவைத்தாரே தவிர	உமாதேவியாருக்கு சிம்ம வாகனமாக மாற்றினுர்
3. சிங்கமுகனை அவனுடைய உடம்பை மாற்றி	வேதத்தின் நுட்பங்களை அறியலாம்
4. இந்த சிரிக்கின்ற ஒன்று	எல்லா நலன்களையும் பெற்ருன்.
5. அவன் சிவபெருமானை வேண்டி எண்ணில்லாத காலம் தபஞ் செய்து	மனிதனுக்கே உரியது

தமிழ்த் தாத்தாவின் குருபக்தி

கி. வா. ஜகந்நாதன்

[This is presenetd in a formal platform speech. We may characterize the style as simple literary style. The author quotes passages from literary works. In general, this text has the characteristic of reporting and narration.]

அந்தக் காலத்தில் அதாவது 100 ஆண்டுகளுக்கு முன்னே தமிழ் நாட்டில் மகாவித்துவான் என்ருல் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனுக்ஷிசுந்தரம் பிள்ளையவர்களைத்தான் நினைப்பார்கள். அவ்வளவு புகழ் பெற்றிருந்தார் அப்பெரும் புலவர். கங்கை வெள்ளம் போல தங்கு தடையின்றிக் கவி பாடுவதில் வல்லவரவர். கவித்திறமையில் அவர் அறியாத நூல் இல்லையென்றே தமிழ் மக்கள் எண்ணி வியந்து பாராட்டினுர்கள். அவரிடம் பாடங்கேட்ட மாணுக்கர்கள் பலர். பாடம் சொல்வதென்ருல் அவருக்கு மிகவும் விருப்பம். சிறிதும் சலிப்பு இல்லாமல் மணிக்கணக்காகப் பாடம் சொல்லிக் கொண்டேயிருப்பார். கல்விக்கும் கவிக்கும் அவர் ஓர் [1]உதாரண புருஷராக விளங்கினுர். அவர் கூடத் தெரிந்து கொள்ளாத நூல்கள் தமிழில் இருந்தன. அவர் மட்டுமா? அவர் காலத்தில் வாழ்ந்த புலவர்களில் யாரும் அந்த நூல்களைப் படித்ததில்லை. ஆனுல் அந்த மகாவித்துவானுக்குத் தெரியாத நூல்களை அவருடைய மாணுக்கர் ஒருவர் தெரிந்து கொண்டார். அவற்றில் வல்லரானுர். பிறரும் அவற்றைத் தெரிந்து கொள்ளும்படி செய்தார். இந்த வகையில் [2]குருவுக்கு மிஞ்சிய சிஷ்யராக அவர் விளங்கினுர். அவர் யார் தெரியுமா? தமிழ்த்தாத்தா என்று தமிழுலகமும், ஐயரவர்கள் என்று புலவர் உலகமும் போற்றும் மகாமகோபாத்தியாய தாக்ஷிணுத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களே அவர்கள். திருவாடுதுறை ஆதீனத்தில் மகாவித்துவாளுக விளங்கிய திரிசிரபுரம் மீனுக்ஷிசுந்தரம் பிள்ளையவர்களிடம்

---

[1] உதாரண புருஷர் — model man, i. e., man as an example

[2] குருவுக்கு மிஞ்சிய சிஷ்யர் — the disciple who surpasses the Guru. Used usually (but not here) in a sarcastic sense.

ஆறு ஆண்டுகள் தமிழ் நூல்களை ஐயரவர்கள் [3]பாடங் கேட்டார்கள். கம்பராமாயணம், பாரதம், பாகவதம், நைடதம், புராணங்கள், பிரபந்தங்கள், நன்னூல் முதலிய இலக்கணங்கள், இப்படி நூற்றுக்கு மேற்பட்ட நூல்களை, லக்ஷத்துக்கு மேற்பட்ட பாடல்களை, பாடங்கேட்டார்கள். ஆனால் [4]கடைச்சங்க நூல்களைக் கேட்கவில்லை. அந்த நூல்களைப் பற்றிய செய்திகளை ஓரளவு அக்காலத்துப் புலவர்கள் அறிந்திருந்தார்களே அன்றி அவற்றைப் படித்ததில்லை. மகா வித்துவான் பிள்ளையவர்களே அறியவில்லையென்றால் மற்றவர்களைப் பற்றி என்ன சொல்வது? அவை யாவும் எங்கோ மூலையில் பதுங்கிக் கிடந்தன. சுவடி வடிவில் கிடந்தன. பிள்ளையவர்கள் மறைந்த பிறகு ஐயரவர்கள் [5]கும்பகோணம் அரசியற் கல்லூரியில் தமிழாசிரியராகச் சேர்ந்தார்கள். மாதம் ஐம்பது ரூபாய் வாங்கும் ஏழைத் தமிழாசிரியராகத்தான் இருந்தார்கள். தமிழ் நாட்டின் தவப்பயனால் அவர்கள் பழந்தமிழ் நூல்களை ஆராயத் தலைப்பட்டார்கள். அந்த உலகமே புதிதாக இருந்தது. முதலில் [6]ஐப்பெருங் காப்பியங்களில் ஒன்றாகிய சீவக சிந்தாமணியை ஆராய்ந்து பதிப்பிக்கத் தொடங்கினார்கள். அப்போது நச்சினார்க்கினியரென்னும் [7]உரையாசிரியர் மேற்கோளாகக் காட்டும் பழம் பாடல்களில் அவர்கள் கவனம் சென்றது. கடைச்சங்க நூல்களாகிய பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என்பவற்றிலிருந்து பல பாடல்களையும், அடிகளையும், அவர் மேற்கோள் காட்டியிருந்தார். அவற்றின் மூலம் எங்கே என்று ஐயரவர்கள் தேடலானார்கள். புறநானூறு, அகநானூறு, பத்துப்பாட்டு, நற்றிணை, குறுந்தொகை என்று ஒவ்வொன்றாக அகப்பட்டது. சிலப்பதிகாரம் கிடைத்தது.

---

[3] பாடம் கேள் — lit. listen to lesson, i. e. to learn.

[4] கடைச் சங்க நூல்கள் — the works composed during the third Tamil Academy (Tamil Sangam), believed to have been in existence in Madurai in the pre and beginnings of Christian era.

கடைச் சங்கம் — lit. The last Tamil Sangam.

[5] கும்பகோணம் அரசியற் கல்லூரி — Government college. It is written presently as கும்பகோணம் அரசினர் கல்லூரி.

[6] ஐம்பெருங் காப்பியம் — Five great epics of Tamil Namely: சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, குண்டலகேசி and வளையாபதி.

[7] உரையாசிரியர் — commentator.

ஆனால் இவை அவ்வளவும் [8]பிழைபட்ட உருவில் குலைந்து, தெளிவுபடாமல் கலைந்து, கலங்கி, நலுங்கிக் கிடந்தன. அந்தக் காட்டுக்குள் புகுந்து ஆராயத் தொடங்கினார்கள். ஒளி கிடைத்தது. சங்ககால நூல் நடை தெளிவாயிற்று. எட்டுத் தொகை நூல்களையும், பத்துப்பாட்டையும் சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய காப்பியங்களையும் தேடித் தொகுத்தார்கள். எல்லாம் பனையேட்டில் எழுதிய சுவடிகள். அவற்றைத் தேட தமிழ் நாட்டின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் சென்று தேடினார்கள். [9]கெஞ்சாதவர்களையெல்லாம் கெஞ்சினார்கள். ஏடுகளில் புதையல் உள்ள இடத்தைப் பற்றிய குறிப்புகள் இருக்கும் என்று பலர் சுவடிகளைக் காட்டவே மறுத்தார்கள். பலர் குடும்பச் சொத்தைத் தரமாட்டோம் என்றார்கள். எப்படியோ விடாக்கண்டராக நின்று சில இடங்களிலுள்ள சுவடிகளை எடுத்து வந்தார்கள். முதலில் சீவகசிந்தாமணி வெளியாயிற்று. பிறகு பத்துப்பாட்டு வெளியாயிற்று. அப்பால் மணிமேகலை வந்தது. புறநானூறு வெளிப்பட்டது. தமிழகத்தின் பழைய நாகரிகமும், வாழ்க்கை வளமும் வெளியாயின. சங்க காலம் என்ற பகுதியே ஒரு பெட்டகத்தில் பல காலமாக மூடிக் கிடந்து திடீரென்று வெளியானது போலாயிற்று. புலவர்கள் வியந்தார்கள். ஆராய்ச்சிக்காரர்கள் அந்த நூல்களில் ஆழ்ந்தார்கள். தமிழ் நாட்டு இலக்கிய உலகத்தில் ஒரு புது யுகம் பூத்தது. அன்று முதல் தமிழ் மக்களின் பெருமை எவ்வளவோ உயர்ந்து விட்டது. ஐயரவர்கள் தாமே வெளியிட்டும், பிறர் வெளியிட வழி காட்டியும் உதவி புரிந்தமையால் இன்று பழந்தமிழ் மக்களின் வீரத்தையுங் காதலையும், கொடைச்சிறப்பையும் யாவரும் அறிந்து பெருமிதமடைகிறோம். மகாவித்துவான் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்களிடம் ஐயரவர்கள் பாடங்கேட்டு வந்த காலத்தில் ஏதோ பழைய உரையினிடையே பதிற்றுப் பத்து என்ற நூலின் பெயர் வந்தது. அதை விளக்கிய பிள்ளையவர்கள் அது பதிற்றுப் பத்து அந்தாதிகளில் ஒன்று என்று சொன்னாராம். இன்று தமிழ் படிக்கும் மாணவனைக் கேட்டால் சேர அரசர்கள் பத்துப் பேரைப் பாடிய நூறு பாடல்களமைந்த கடைச்சங்க நூலது என்று எளிதிலே சொல்வான். பாரி என்பவன் ஒருவன், ஒரு வள்ளல் என்ற அளவிலே அந்தக் காலத்திலே தெரிந்து கொண்டிருந்தார்கள். இப்போது புறநானூற்றில் அவனைப் பற்றிய வரலாற்றுச் செய்திகளெல்லாம் காணக் கிடைக்கின்றன. இப்படி எத்தனை எத்தனையோ வரலாறுகளை நாம் இன்று அறிந்திருக்கிறோம், ஆயிரத்து எண்ணூற்று ஐம்பத்தஞ்சாம் ஆண்டில் ஐயரவர்கள் தோன்றினார்கள். அப்போது தமிழ்த் தாய் தன்னுடைய பழைய அணிகலன்களை இழந்து வாடியிருந்தாள்

---

[8] பிழைபட்ட உரு — erroneous form, i. e. in an erroneous manner.

[9] கெஞ்சாதவர் — one who need not or does not deserve to be beseeched.

அந்த அணிகலன்கள் இருப்பதையே பலர் அறியாமலிருந்தார்கள். ஐயரவர்கள் ஆயிரத்(து) தொளாயிரத்து நாற்பத்திரண்டாம் ஆண்டில் அமரரானார்கள். அப்பொழுது தமிழ்த்தாயின் பழைய அணிகலன்களெல்லாம் புது மெருகோடு விளங்கின. அவள் சிலம்பொலி கேட்டது. மணிமேகலை இன்னொலி இசைத்தது. பத்துப்பாட்டின் ஓசை எங்கும் பரவியது. பரிபாடலின் இன்னிசை படர்ந்தது. சங்க நூல்கள் புலவர் கூட்டங்களிலும், ஆராய்ச்சியாளரவைகளிலும், பள்ளிக் கூடங்களிலும் அரசியல் மேடைகளிலும் முழங்கின. தமிழரின் வாழ்க்கையிலேயே ஒரு புத்தொளி படர்ந்தது. ஐயரவர்களுக்குக் கிடைத்த ஏட்டுச் சுவடிகளை வேறு பிறரும் கண்டு பிடித்து வெளியிட்டிருக்கலாம். ஆனால் இறைவன் திருவருள் அவர்களுடைய அறிவையும், உழைப்பையும் உருவாக்கித் தமிழ்நாட்டுக்குப் பயன்படும்படி செய்தது. தம்முடைய ஆசிரியர் அறியாத நூல்களை தாம் வெளியிட்டு விட்டதாக ஒரு சிறிதும் அவர்கள் எண்ணிச் செருக்கு அடைந்ததில்லை. அவர்களுக்கிருந்த [10]குருபக்திக்கு ஈடுமில்லை, எடுப்புமில்லை. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை என்று சொல்லமாட்டார்கள். பிள்ளையவர்கள் என்றே சொல்லுவார்கள். ஆறே ஆண்டுகள் ஆசிரியரிடம் அவர்கள் பாடங் கேட்டார்கள். அவ்வளவுதான். ஆனால் 600 ஆண்டுகள் கேட்டது போன்ற ஆழ்ந்த பக்தி அவர்களிடம் இருந்தது. ஐயரவர்களுடைய சங்க நூல் ஆராய்ச்சிக்கும் அவர்கள் பாடங்கேட்ட நூல்களுக்கும் பெருந்தொடர்பு ஏதுமில்லை. ஆயினும் ஆசிரியரிடம் அவர்கள் வைத்திருந்த மதிப்பு எல்லையற்றது. தம் ஆசிரியருடைய வரலாற்றை 800 பக்கங்களுக்கு மேல் இரண்டு பகுதிகளாக அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். அதில் ஓரிடத்தில் ஆசிரியரின் இளமைப் பருவத்தைப் பற்றிச் சொல்லும்போது, மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை பள்ளிக்கூடம் சென்றார் என்று எழுதுகிறார். அங்கே நக்ஷத்திரக்குறி போட்டு அடிக்குறிப்பில் இப்படி எழுத என் கை கூசுகிறது என்று எழுதியிருக்கிறார்கள் அதாவது தம்முடைய ஆசிரியரின் பெயரை அப்படி எழுதுவதற்கு அவர்கள் நடுங்கினார்கள். மற்ற இடங்களிலெல்லாம் இப்புலவர் பெருமான், இக்கவிஞர், பிள்ளையவர்கள் என்றே எழுதியிருக்கிறார்கள். மீனாக்ஷிசுந்தரம் என்ற பெயருடைய யாரைக் கண்டாலும் அவர்களிடம் தனியான அன்போடு பழகுவார்கள். ஐயரவர்களிடம் பாடங்கேட்கும் பேறு எளியேனுக்கும் கிடைத்தது. 15 ஆண்டுகள் அவர்களுடைய திருவடி நிழலிலே இருந்து இலக்கியப் புதையல்களையெல்லாம் தெரிந்துகொண்டேன். பிள்ளையவர்களைப் பற்றி அவர்கள் பேசும்போது எவ்வளவு மரியாதையுடனும் அன்புடனும் பேசுவார்கள்! சில சமயங்களில் மனம் உருகி கண்ணீர் விடுவார்கள். அறிவினாலும், ஆண்டினாலும், மதிப்பினாலும் உயர்ந்திருந்த ஐயரவர்கள் நினைந்து உருகும்படி இருந்தவர் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள் என்பதை எண்ணும்போது என்னைப் போன்றவர்களுக்கு அப்புலவர் பெருமானிடம்

---

[10] குருபக்தி — devotion to Guru, teacher.

மதிப்பு உண்டாகி, பெருகியது. பிள்ளையவர்களுடைய சிறு நூல்களையெல்லாம் திரட்டி ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத் திரட்டு என்ற பெயரோடு ஐயரவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். சில புராணங்களையும் பதிப்பித்திருக்கிறார். அப்புலவர்பிரான் தியாகராச லீலை என்ற நூலை இயற்றியிருக்கிறார். திருவாரூரில் எழுந்தருளியிருக்கும் தியாகராஜப்பெருமான் 360 [11] திருவிளையாடல்களைச் செய்தாராம். அவற்றைப் பற்றிச் சொல்லும் நூல் வடமொழியிலிருக்கிறது, அதுதான் தியாகராஜ லீலை. அதை மொழி பெயர்த்து பாட்டாகப் பாடினார் பிள்ளையவர்கள். பத்து லீலைகள் மாத்திரம் அவருக்குக் கிடைத்தன. அவற்றைப் பாடி பதினோராவது நிலைக்குரிய முன்னுரையைத் தொடங்கினார். மேலே வடமொழி மூலமும் கிடைக்கவில்லை. ஆகவே தியாகராஜலீலை அதனோடு அரைகுறையாக நின்று விட்டது. அந்த அரைகுறை நூலை ஐயரவர்கள் பதிப்பித்திருக்கிறார்கள். பத்துப்பாட்டு முதலிய சங்க நூல்களையும், சிலப்பதிகாரம் முதலிய பழந்தமிழ்க் காப்பியங்களையும் பதிப்பித்த திருக்கரத்தால் அதைப் பதிப்பித்தார்கள். அவர்கள் பதிப்பித்த நூல்களிலெல்லாம் அழகிய முகவுரைகளிருக்கும். ஆராய்ச்சி உரையாகவும் அது விளங்கும். அவற்றின் இறுதியில் நூலைப் பதிப்பித்த வரலாறுகளை எழுதியிருப்பார்கள். தமிழர் வரலாற்றையும், தமிழ்ப் புலவர் பெருமையையும் தெரிந்த உள்ளமுடைய இக்காலத்துப் புலவர்களுக்குப் புராணம் என்றால் அவ்வளவு மதிப்பு உண்டாவதில்லை. தியாகராஜ லீலையோ முழுமையாக இல்லாமல் அரைகுறையாக உள்ள புராணம்; திருவாரூர்ப் புராணம். அதைப் பதிப்பித்த ஐயரவர்கள் அதற்கும் முகவுரை எழுதினார்கள். அதன் இறுதியில் இரண்டு மூன்று பாடல்களைச் சேர்த்திருக்கிறார்கள். தம்முடைய ஆசிரியருடைய நூலைப் பதிப்பிப்பதில் அவர்களுக்கு இருந்த மனநிலை இன்னது என்று அந்தப் பாடல் தெளிவாகக் காட்டுகிறது. பல பழைய நூல்களை வெளியிட்டு தமிழ் மக்களின் பெரும் பாராட்டைப் பெற்ற மகாமகோபாத்தியாய ஐயரவர்கள் தம்முடைய முதிர்ந்த பருவத்தில் இப்படிப் பாடினார்கள் என்பதைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். பாட்டு இதுதான்—

எண்ணிய பலவும் மாணவர்க்கு அன்பின் ஈந்திடும் நிதி
தமிழ் விளங்க நண்ணிய புகழ் மீனாக்ஷிசுந்தர நன்னாவலன்
நன்கு இனிது ஆய்ந்து பண்ணிய வீதிவிடங்கர் ஆடற்பனுவலை(ப்) பதிப்பிக்க
இயைந்த புண்ணியமதனை நினைந்தொறும் எனது குந்தி மிக்க
இன்புறுமாலோ—

[11] திருவிளையாடல்கள் — It is believed by the devotees of Lord Siva (Saivates) that Lord took human form in many places and caused many divine incidents to happen. These are called **திருவிளையாடல்கள்.** lit. sacred games.

பிள்ளையவர்கள் பாடிய இந்த வீதிவிடங்கர் ஆடற்பனுவலாகிய தியாகராஜ லீலையைப் பதிப்பிக்கும் புண்ணியம் எனக்குக் கிடைத்ததே இதை நினைத்து நான் மிகவும் இன்புறுகிறேன் என்று பாடுகிறார்கள். தம்முடைய ஆசிரியரை "எண்ணிய பலவும் மாணவர்க்கு அன்பின் ஈந்திடும் நிதியென்றும், தமிழ் விளங்க நண்ணிய புகழ் மீனாட்சிசுந்தர நன்னாவலனென்றும்" வாயாரப் புகழ்கிறார்கள். இந்த நூலைப் பதிப்பிப்பதனால் புண்ணியம் உண்டாயிற்று என்று நினைக்கிறார்கள், நினைக்கிற பொழுது "குந்திமிக்க இன்புறுமாலோ" என்று பாடுகிறார்கள். புறநானூறு, பதிப்பித்ததை புண்ணியமென்று போற்றவில்லை, பத்துப்பாட்டுப் பதிப்பு வெளி வந்தபோது அது புண்ணியமாகத் தோன்றவில்லை, நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தை அச்சிட்டதைக் கூட புண்ணியமாகப் போற்றவில்லை. ஒரு தலபுராணத்தை அதிலும் அரைகுறையான நூலை வெளியிட்டது தம் புண்ணியம் என்று சொல்லி உருகுகிறார்கள். அவர்களுடைய மனநிலை எப்படி இருந்திருக்கும்? பாருங்கள். மீனாக்ஷிசுந்தர நன்னாவலன் நன்கு இனிது ஆய்ந்து பண்ணிய வீதிவிடங்கர்தம் பனுவலை பதிப்பிக்க இயைந்த புண்ணியமதனை நினைந்தோறும் எனது குந்தி இன்புறுமாலோ" என்பதிலுள்ள குருபக்தி உணர்ச்சியை எப்படி அளவிட்டு உரைக்க முடியும்? ஐயரவர்கள் வாழ்க்கையில் எத்தனையோ துறைகள் உண்டு. அவர்கள் சிறந்த ஆராய்ச்சியாளர், பெரும் புலவர், நல்ல பேச்சாளர், உயர்ந்த குணவான். அவர்களுடைய குணங்கள் மிகமிகப் பல. ஆனால் அவர்களுக்கு இருந்த குருபக்திக்கு இணையாக எதையேனும் சொல்லமுடியுமா என்றால் ஒரு கால் அவர்களுடைய தமிழ்க் காதலைச் சொல்லலாம். தமிழ் விளங்க நண்ணிய புகழ் மீனாஷிசுந்தர நன்னாவலராகிய குருவினிடம் பக்தி கொண்டதே தமிழ்க் காதலின் வேறு உருவம் என்று கூடச் சொல்லலாம் அல்லவா?

EXERCISES

I. Read the following in spoken Tamil:

அந்த நூல்களைப் பற்றிய செய்திகளை ஓரளவு அக்காலத்துப் புலவர்கள் அறிந்திருந்தார்களே அன்றி அவற்றைப் படித்ததில்லை. மகா வித்துவான் பிள்ளையவர்களே அறியவில்லையென்றால் மற்றவர்களைப் பற்றி என்ன செய்வது? அவை யாவும் எங்கோ மூலையில் பதுங்கிக் கிடந்தன. சுவடி வடிவில் கிடந்தன. பிள்ளையவர்கள் மறைந்த பிறகு ஐயரவர்கள் **கும்பகோணம்** அரசினர் கல்லூரியில் தமிழாசிரியராகச் சேர்ந்தார்கள். மாதம் ஐம்பது ரூபாய் வாங்கும் ஏழைத் தமிழாசிரியராகத்தான் இருந்தார்கள். தமிழ் நாட்டின் தவப்பயனால் அவர்கள் பழந்தமிழ் நூல்களை ஆராயத் தலைப்பட்டார்கள்.

II. Vocabulary Exercise:

(*a*) Give the derived nouns of the following words, following the model:

Model :—வடிவு—வடிவம்

(i) உருவு
(ii) நான்
(iii) ஆழ்
(iv) உயர்

(*b*) Split the following compounds into constituent words and write meaning for the same:

(i) தமிழாசிரியர்
(ii) கம்பராமாயணம்
(iii) கடைச்சங்கம்
(iv) தவப்பயன்
(v) பழந்தமிழ்
(vi) பத்துப்பாட்டு

III. *Fill up the blanks choosing the correct item.*

Make changes in the sentence if necessary.

1. கவித்திறமை——அவர் அறியாத நூல் இல்லையென்றே தமிழ் மக்கள் எண்ணி வியந்து பாராட்டினார்கள்.

   (i) இன்
   (ii) இல்
   (iii) ஐ

2. ஆனால் கடைச்சங்க நூல்கள்——கேட்கவில்லை

   (i) ஐ
   (ii) ஆல்
   (iii) கு

3. அவையாவும் எங்கோ மூலையில் பதுங்கிக் கிடந்த——

   (i) ஆன்
   (ii) ஆள்
   (iii) அன

4. தமிழ்நாட்டின் தவப்பயன்——அவர்கள் பழந்தமிழ் நூல்களை ஆராயத் தலைப்பட்டார்கள்.

   (i) ஆல்
   (ii) கு
   (iii) இன்

5. முதலில் ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றாகிய சீவக சிந்தாமணி—— ஆராய்ந்து பதிப்பிக்கத் தொடங்கினார்கள்.

   (i) ஐ
   (ii) கு
   (iii) மேல்

6. இப்படி எத்தனை எத்தனையோ வரலாறுகள்——நாம் இன்று அறிந்திருக்கிறோம்.

   (i) ஐ
   (ii) கு
   (iii) இன்

IV *Substitution*:

1. அவரிடம் பாடம் கேட்ட மாணாக்கர்கள் பலர்.

(*a*) Substitute the following for **அவரிடம்** after making necessary changes in the given words :

(i) நான்

(ii) நீங்கள்

(iii) நாங்கள்

(*b*) Substitute the following for **கேட்ட** after making necessary changes in the given words:

(i) பயில்

(ii) படி

(iii) கல்

(*c*) Substitute the following for **பலர்** after making necessary changes in the given words:

(i) சிலர்

(ii) நிறைய பேர்

(iii) ஏராளமான பேர்

2. சிறிதும் சலிப்பு இல்லாமல் மணிக்கணக்காகப் பாடம் சொல்லிக் கொண்டேயிருப்பார்

(*a*) Substitute the following for **சிறிதும்** after making necessary changes in the given words:

(i) துளி

(ii) கொஞ்சம்

(*b*) Substitute the following for **இல்லாமல்** after making necessary changes in the given words:

(i) வா

(ii) ஏற்பாடு

(iii) தட்டு

(c) Substitute the following for மணி after making necessary changes in the given words:

(i) வாரம்
(ii) மாதம்
(iii) வருடம்

3. அவை யாவும் எங்கோ மூலையில் பதுங்கிக் கிடந்தன.

(a) Substitute the following for மூலையில் after making necessary changes in the given words:

(i) அறை
(ii) வீடு
(iii) மண்

(b) Substitute the following for பதுங்கி after making necessary changes in the given words:

(i) மறை
(ii) ஒளி
(iii) உருமாறு

(c) Substitute the following for கிடந்தன after making necessary changes in the given words:

(i) இரு
(ii) போ
(iii) அழி

V. *Rewrite the following sentences by substituting one item at a time.*

1. தமிழரின் வாழ்க்கையிலேயே ஒரு புத்தொளி படர்ந்தது.

(i) புதிய
(ii) இந்தியரின்
(iii) பிறந்தது
(iv) வரலாற்றிலேயே

2. பத்துப்பாட்டின் ஓசை எங்கும் பரவியது

(i) புகழ்

(ii) கலித்தொகையின்

(iii) சென்றது

(iv) எல்லா இடங்களிலும்

3. ஆசிரியரிடம் அவர்கள் வைத்திருந்த மதிப்பு எல்லையற்றது

(i) தம்பி

(ii) மரியாதை

(iii) அளவு

(iv) என்னிடம்

4. மீனாக்ஷிசுந்தரம் என்ற பெயருடைய யாரைக் கண்டாலும் அவர்களிடம் தனியான அன்போடு பழகுவார்கள்

(i) நாமமுடைய

(ii) மிகுதியான

5. ஐயரவர்களிடம் பாடங்கேட்கும் பேறு எளியேனுக்குக் கிடைத்தது.

(i) அடியேனுக்கு

(ii) இலக்கியம்·பயிலும்

(iii) கிட்டியது

(iv) உங்களிடம்

6. சில சமயங்களில் மனம் உருகி கண்ணீர் விடுவார்கள்

(i) இளகி

(ii) சிந்துவார்கள்

(iii) நேரங்களில்

(iv) நெஞ்சம்

VI. Transform the following into negative sentences:

1. பாடம் சொல்வதென்றால் அவருக்கு மிகவும் விருப்பம்.

2. பிறரும் அவற்றைத் தெரிந்துகொள்ளும்படி செய்தார்.

3. புறநானூறு, அகநானூறு, பத்துப்பாட்டு, நற்றிணை, குறுந்தொகை என்று ஒவ்வொன்றாக அகப்பட்டது,

4. இன்று தமிழ் படிக்கும் மாணவனைக் கேட்டால் சேர அரசர்கள் பத்துப் பேரைப் பாடிய நூறு பாடல்கள் அமைந்த கடைச்சங்க நூலது என்று எளிதிலே சொல்வான்.

5. அப்போது தமிழ்த்தாய் தன்னுடைய பழைய அணிகலன்களை இழந்து வாடி யிருந்தாள்.

6. சங்க நூல்கள் புலவர் கூட்டங்களிலும், ஆராய்ச்சியாளரவைகளிலும், பள்ளிக் கூடங்களிலும், அரசியல் மேடைகளிலும் முழங்கின.

VII. Transform each of the following into atleast two interrogative sentences:

1. தமிழரின் வாழ்க்கையில் ஒரு புத்தொளி படர்ந்தது.

2. தம் ஆசிரியருடைய வரலாற்றை 800 பக்கங்களுக்கு மேல் இரண்டு பகுதிகளாக அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள்.

3 தம்முடைய ஆசிரியரின் பெயரை எழுதுவதற்கு அவர்கள் நடுங்கினார்கள்.

4. 15 ஆண்டுகள் அவர்களுடைய திருவடி நிழலில் இருந்து இலக்கியப் புதையல்களை யெல்லாம் தெரிந்துகொண்டேன்.

5. சில சமயங்களில் மனம் உருகி கண்ணீர் விடுவார்கள்.

6. அப்புலவர்பிரான் தியாகராச லீலை என்ற நூலை இயற்றியிருக்கிறார்.

VIII. Change each of the following complex sentences into simple sentences:

1. அந்த மகானுக்குத் தெரியாத நூல்களை அவருடைய மாணக்கர் ஒருவர் தெரிந்துகொண்டார்.

2. தமிழ்த்தாத்தா என்று தமிழுலகமும், ஐயரவர்கள் என்று புலவர் உலகமும் போற்றும்.

3. திருவாவடுதுறை ஆதீனத்தில் மகாவித்துவானக விளங்கிய திரிசிரபுரம் மீனுக்ஷிசுந்தரம் பிள்ளையவர்களிடம் ஆறு ஆண்டுகள் தமிழ் நூல்களை ஐயரவர்கள் பாடம் கேட்டார்கள்.

4. ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றுகிய சீவக சிந்தாமணியைப் பதிப்பிக்கத் தொடங்கினுர்கள்.

5. சங்க காலம் என்ற பகுதியே ஒரு பெட்டகத்தில் பல காலமாக மூடிக் கிடந்து திடீரென்று வெளியானது போலாயிற்று.

6. ஐயரவர்கள் தாமே வெளியிட்டும், பிறர் வெளியிட வழி காட்டியும் உதவி புரிந்தமையால் இன்று பழந்தமிழ்மக்களின் வீரத்தையும் காதலையும், கொடைச் சிறப்பையும் யாவரும் அறிந்து பெருமிதமடைகிறேம்.

IX. *Change the following into complex sentences*:

1. அவ்வளவு புகழ்பெற்றிருந்தார் அப்பெரும் புலவர். கங்கை வெள்ளம் போல தங்கு தடையின்றிக் கவிபாடுவதில் வல்லவரவர்.

2. கல்விக்கும் கவிக்கும் அவர் ஓர் உதாரண புருஷராக விளங்கினுர். அவர் கூடத் தெரிந்துகொள்ளாத நூல்கள் தமிழில் இருந்தன.

3. அவை யாவும் எங்கோ மூலையில் பதுங்கிக் கிடந்தன. சுவடி வடிவில் கிடந்தன.

4. அந்தக் காட்டுக்குள் புகுந்து ஆராயத் தொடங்கினுர்கள். ஒளி கிடைத்தது. சங்க கால நடை தெளிவாயிற்று.

5. தமிழ் நாட்டின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் சென்று தேடினுர்கள். கெஞ்சாதவர்களையெல்லாம் கெஞ்சினுர்கள்.

6. தமிழ்நாட்டு இலக்கிய உலகத்தில் ஒரு புதிய யுகம் பூத்தது. அன்று முதல் தமிழ் மக்களின் பெருமை எவ்வளவோ உயர்ந்துவிட்டது.

X. *Match the phrases given in column I with those given in column II to make appropriate sentences.*

I	II
1. பாடம் சொல்வதென்றால்	என்றால் மற்றவர்களைப்பற்றி என்ன சொல்வது?
2. கவித்திறமையில் அவர் அறியாத நூல் இல்லையென்றே	சேர அரசர்களில் பத்துப் பேரைப் பாடிய நூறு பாடல்களமைந்த கடைச்சங்க நூலது என்று எளிதில் சொல்வான்.
3. மகாவித்துவான் பிள்ளையவர்களே அறியவில்லை	அவருக்கு மிகவும் விருப்பம்.
4. சங்க காலம் என்ற பகுதியே ஒரு பெட்டகத்தில் பல காலமாக மூடிக்கிடந்து	தமிழ்மக்கள் வியந்து பாரட்டினார்கள்.
5. இன்று தமிழ்ப்படிக்கும் மாணவனைக்கேட்டால்	தமிழ்நாட்டுக்குப் பயன்படும்படி செய்தது.
6. ஆனால் இறைவன் திருவருள் அவர்களுடைய அறிவையும் அழைப்பையும் உருவாக்கி	திடீரென்று வெளியானது போலாயிற்று.

XI. *Summarize the text in 20 sentences :*

பிள்ளை வரம்

அகிலன்

[This is a short story presented in a simple narrative style. A few characteristics of spoken style, are to be found in this story.]

இரண்டாவது உலகப்போர் நடந்து முடிந்த காலம். சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் சட்டை தைப்பதற்கு வெள்ளைத் துணி கிடைக்க வில்லை, திருச்சி நகரத்துப் [1]பெரிய கடைத்தெருவில் ஒவ்வொரு கடையாக ஏறி இறங்கினேன். கடைத் தெருவிற்கு வரும்போது மாலை நாலரை மணி. இப்போது ஆறு மணிக்கு மேலாகிவிட்டது. பலரிடம் வெள்ளைத் துணியே இல்லை. துணி வைத்திருந்த சிலர் அதிக விலை கேட்டார்கள். இன்னும் சிலர் வைத்துக்கொண்டே இல்லையென்று சாதித்தார்கள். [2]கறுப்பு விலையில் வெள்ளையை வாங்க என்னிடம் பணமுமில்லை, மனமுமில்லை. ஓர் ஓட்டலில் நுழைந்து [3]காப்பி சாப்பிட்டுவிட்டு வெளியே வந்தேன். "சாமி! காலணா கொடுங்க. உங்க [4]புள்ளைகுட்டி நல்லாயிருக்கணும்" என்று கையை நீட்டிக்கொண்டு ஒரு பிச்சைக்காரன் எதிரே நின்றான். நான் அவனுடைய முகத்தை சரியாக கவனிக்கவில்லை. எங்கோ யோசனையாக இருந்தேன், என்றாலும் அவனுடைய தோற்றம் பிச்சைக்காரன் தோற்றமாக

---

[1] பெரியகடைத்தெரு — Big Bazaar, name of a bazaar in Thiruchirappalli (Trichy).

[2] கறுப்பு விலை — Black market price. கறுப்பு—black;— விலை price.

[3] காப்பி சாப்பிடு — drink coffee. Though the actual word is சாப்பிடு 'to eat', it is used in the sense of 'to drink' here. The word for 'to drink' is குடி

[4] புள்ளைகுட்டி — children. This is colloquial form of பிள்ளை குட்டி, குழந்தைகுட்டி is also used to refer to children.

இல்லை. வயது முப்பது முப்பத்தைந்து இருக்கும். [5]தாடியும் மீசையுமாய் கிழிந்த சட்டையும் அழுக்கு [6]வேஷ்டியுமாய்க் காட்சியளித்தான். பணப்பைக்குள் கையை விட்டு [7]காலணாவைத் தேடினேன். நிக்கல் நாணயங்களுக்குள் அந்தச் செப்புக் காசு ஒளிந்திருந்ததால் அதைத் தேடி எடுக்க அரை நிமிஷம் ஆயிற்று. காசை எடுத்துக்கொண்டு பிச்சைக்காரனைப் பார்த்தேன். அவனை அங்கே காணவில்லை. ஆச்சரியமாக இருந்தது. காசை நான் எடுக்கப்போனது அவனுக்குத் தெரியும். பைக்குள் கையை விட்டுத் தேடியதும் தெரியும். இப்போதவன் எங்கே போனான்? ஏன் போனான்?

சுற்று முற்றும் பார்த்தேன். பக்கத்திலிருந்த சந்துக்குள் அவன் வேகமாய் நுழைவது தெரிந்தது. "ஏய்! இந்தா காசு" என்று கூப்பிட்டேன். அவன் திரும்பிப் பார்க்கவில்லை. காது கேளாதவன் போல் சந்துக்குள் கிடந்த பெரிய கல்லில் போய் உட்கார்ந்து கொண்டான். முகத்தை அவன் தன்னுடைய கைகளால் மூடிக்கொள்வதை நான் கவனித்தேன். ஓட்டல் படிகளை விட்டு இறங்கி அந்த சந்துப்பக்கம் நடந்தேன். அவனுக்குப் பக்கத்தில் ஓர் ஏழைப் பெண் [8]கந்தலை உடுத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். அவளுடைய மடியில் ஒரு வயது ஆண் குழந்தை ஒன்று விளையாடிக் கொண்டிருந்தது. குழந்தையின் உச்சியில் கண்ணீர் வழியும்படியாக அவள் அழுது கொண்டிருந்தாள். தேம்பித் தேம்பியழுதாள். கணப்பொழுது நான் அங்கே நின்று கவனித்தேன். அவளுடைய அழுகை குறைந்தது. என்னை ஏறிட்டுப் பார்த்தாள். "ஐயா சாமி" என்று கை எடுத்துக் கும்பிட்டாள். நான் அவளைப் புரிந்துகொண்டேன். குழந்தையைக் காண்பித்து "உன்னுடைய பையனா" என்று கேட்டேன். "ஆமாங்க" என்றாள் அவள். இப்போது அவனும் திரும்பிப் பார்த்தான். அவர்களை அந்த

---

[5] தாடியும் மீசையுமாய் — unshaven face (with beard and mustache).
தாடி—beard;.
மீசை—mustache

[6] வேஷ்டி — dhoti; a long cloth of two meters in length worn by South Indians around the waist.

[7] காலணா — one quarter of an anna. 16 annas make one rupee. This coinage was in use before the introduction of decimal coinage in India.

[8] கந்தல் — a cloth which is torn; rags.
கந்தலானாலும் கசக்கிக் கட்டு'
'even if the cloth is a torn one' you wash it and wear'.

நிலையில் பார்த்தபோது எனக்குப் பகீர் என்றது. [9]எலும்பும் தோலுமாய் இருந்தாள் அவள். தாடியும் மீசையுமாக இருந்தான் அவன். அவனுடைய நெஞ்சுக்கூடு தனியே விழுந்துவிடுவது போல் கழுத்துக்குக்கீழே தொங்கியது. அவனுடைய கதையை அவன் சொல்லாமலேயே நான் தெரிந்துகொண்டேன். சேலத்துக்குப் பக்கத்திலிருந்து வேலையும் சோறுமில்லாமல் திருச்சிக்குப் பத்துப் பதினைந்து நாட்களாக நெசவாளர் குடும்பங்கள் வந்துகொண்டிருந்தன. முதன் முதலாக அந்தப் பரிதாபக் காட்சியைப் பார்த்தபோது மனத்தைக் கசக்கிப்பிழிவது போலிருந்தது. நாளடைவில் அதைவிடக் கொடுமையான காட்சிகளைத் திரும்பிப் பார்த்தால் நெஞ்சை [10]மரத்துப் போகும்படி செய்துகொண்டேன், "உனக்கா இந்த கதி வந்தது?" என்றேன். "என்னைவிட நல்ல நிலையிலே இருந்தவங்கள்ளா(ம்) இப்ப ரொம்பக் கஷ்டப்படறாங்க" என்றான் அவன். "தவமாய்த் தவமிருந்து பெத்த பிள்ளை தண்ணியில்லாமத் தவிக்குதுங்க" என்றாள் அவன் மனைவி. அவர்களுடைய குழந்தையைப் பார்த்தேன். இதுவரையில் அது பஞ்சத்தில் வளர்ந்ததாகத் தெரியவில்லை. [11]கொழு கொழு என்றிருந்தது. ஆனால் இனிமேலும் அது பஞ்சமில்லாமல் வாழமுடியாது என்பது அதன் உடல் வாட்டத்தால் தெரிந்தது. நன்றாக வளரும் பசலைக்கொடியின் மேல் திடீரென்று வெப்பம் தாக்கினால் எப்படியிருக்கும்? வயிறு ஒட்டிக் கிடந்த அந்தக் குழந்தை தன்னுடைய வலது கையின் ஐந்து விரல்களையும் வாயில் வைத்து சூப்பிக்கொண்டிருந்தது. ஒரு ரூபாயை எடுத்து அந்தக் குழந்தையின் கையில் வைத்தேன். அதை அவன் வாங்கிக்கொண்டு "ஏதாச்சும் வேலை இருந்தாச் சொல்லுங்கய்யா, நாங்க ரெண்டு பேரும் பார்க்கிறோம். அவரு சோறு திண்ணு சரியா மூணு நாள் ஆகுது" என்றாள். "உடனே வேலை கிடைப்பது கஷ்டம். எதற்கும் ஒருவாரம், பத்து நாளில் என்னை வந்து பார்" என்று அவனிடம் என் முகவரியைக் கொடுத்து வந்தேன். கடைத்தெருவில் நான் மீண்டும் நடந்தபோது அதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அவர்களைச் சந்தித்த நினைவு வந்தது. அப்போது இலங்கையிலிருந்து கப்பல் வழியாக தனுஷ்கோடித் துறைமுகத்தில் வந்து இறங்கினேன். இந்தோ—ஸிலோன் எக்ஸ்பிரஸ் தயாராகக் காத்துக்கொண்டிருந்தது. பெட்டி படுக்கையை ரயிலில் வைத்துவிட்டு சன்னல் கதவோரமாக உட்கார்ந்தேன். சற்று நேரத்துக்கெல்லாம் நானிருந்த பெட்டிக்குள் ஓர் ஆணும் பெண்ணும் ஏறினார்கள். அவர்களுடைய

[9] எலும்பும் தோலுமாய்— bony and skinny; எலும்பு—bone: தோல் —skin

[10] மரத்துப்போ — becoming numb. Here it is used to express that the heart became unable to feel Sorrow/ happy,

[11] கொழுகொழு — this phrase is used when the person referred to is fat; well—fed.

தோற்றம் அவர்கள் ராமேசுவரத்துக்கு பிள்ளைவரத்துக்காக வந்த யாத்திரிகர்கள் என்பதைச் சொல்லியது. அப்போதுதான் தனுஷ்கோடி கடற்கரையில் நீராடி விட்டு சரியாக உலராத துணிகளுடன் ஊருக்குப் புறப்பட்டிருக்கிறார்கள். ரெயிலுக்கு வெளியே அவர்களுக்கு உதவியாக வந்த [12]யாத்திரைத் தரகர்கள் இரண்டு பேர் நின்று கொண்டிருந்தார்கள். ஐந்து ரூபாய் நோட்டை எடுத்து அவர்களிடம் நீட்டினான் அந்த ஆண் பிள்ளை. "அஞ்சு ரூபாய் தானிருக்கு, பாக்கி" என்றான் ஒரு தரகன். "பாக்கி ஏது? அஞ்சு ரூபாய் தானே பேசினேன்?" என்றான் அந்த ஆண் பிள்ளை. "எனக்குச் சரியாய்ப் போச்சு இந்தப் பணம், அவனுக்கு இன்னும் மூணு ரூபாய் கொடுங்க" என்று பக்கத்தில் நின்றவனைக் காண்பித்துக் கூறினான் தரகன். "இன்னும் மூணு ரூபாயா? கால் ரூபாய் கூடக் கொடுக்க முடியாது. உங்க ரெண்டு பேருக்கும் [13]சேத்துப் பேசினது தான் அஞ்சு ரூபாய்" என்றாளந்தப் பெண்பிள்ளை. "எட்டு ரூபாய்க்குத் தம்பிடி குறைஞ்சா எங்களுக்கு காசே வேண்டாம்" என்று முன்னால் கொடுத்த பணத்தையும் திருப்பி நீட்டினான் தரகன். அதற்குள் மற்றவன் "இந்த மாதிரி கஞ்சத்தனம் பண்ணறவங்களுக் கெல்லாம் பிள்ளை எங்கேப் பிறக்கப் போகுது?" என்று [14]அலட்சியமாய்க் கூறினான். விஷப் பாம்பு நஞ்சைக் கக்குவதுபோல் எனக்கு அவனுடைய வார்த்தைகள் ஒலித்தன. அந்த ஆண் பிள்ளையும் அப்படியே அயர்ந்துவிட்டான். அவன் மனைவியின் முகத்திலேற்பட்ட மாறுதல்கள் மிக பயங்கரமாக இருந்தன. குபீரென்று அவள் கண்ணீரைச் சிந்தினாள். சேலைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக்கொண்டே "மூணு ரூபாயை அவன் முகத்திலே விட்டெறியுங்க" என்றாள். அந்த மனிதர்கள் பல்லைக் காட்டிக் கொண்டே பணம் பெற்றுச் சென்றனர். ரெயிலும் புறப்பட்டது. ஆனால் அவள் அழுகை நிற்கவில்லை. அவளுடைய கணவன் அவளை எவ்வளவோ சமாதானப் படுத்தினான். அவள் கேட்கவில்லை. இந்தப் பாவிப்பயல்களோடே பல்லில் விழுகிறதுக்குத்தானா இத்தனை தூரம் வந்தோம்?" என்று சொல்லி ஏங்கினாள். பெருத மனத்தின் ஏக்கம் எனக்குத் தெரிந்தது. புண்பட்ட அந்த மனதிற்கு ஆறுதலாக நானும் இரண்டு வார்த்தைகள்

---

[12] யாத்திரைத்தரகர்கள்— pilgrim guides;

[13] சேத்து — together; but it is used here in the sense of 'in total' This is a colloquial form of சேர்த்து. சேர் means 'to join'

[14] அலச்சியம்-அலட்சியம்— without any aim; idly. Here it means that the person uttered the words without caring to offend. This is an opposite word of லச்சியம்-லட்சியம்—அ is the negative prefix. It is borrowed from Sanskrit.

அவளிடம் பேசினேன். என்னுடைய தலையீடு அவளுக்குச் சற்று உதவியாக இருந்திருக்க வேண்டும். சில நிமிடங்களில் அவள் கலகலப்பாகப் பேசத் தொடங்கினாள். சேலத்தில் அவர்களுக்கு நெசவு வேலையாம். இருவரும் வேலை செய்தார்களாம். அவனுக்கு கைத்தறியில் துணி நெய்யும் வேலை. அவளுக்கு ராட்டினத்தின் உதவியால் நூல் சுற்றும் தொழில். சிக்கனமாய்க் குடும்பம் நடத்துவதற்குப் போதுமான வருமானம் வந்து கொண்டிருந்தது. கல்யாணமாகி ஏழு எட்டு ஆண்டுகள் ஆன பிறகும் அவர்களுக்கு குழந்தை பிறக்கவில்லை. அவன் அதைப் பற்றிக் கவலைப்படாமல் இருந்தான். அவளால் அப்படியிருக்க முடியவில்லை. ராமேசுவரம் புறப்படுவதற்காக ஒரு வருடமாய்ப் பணம் சேர்த்து வைத்தாள். அவனுக்கு இதில் நம்பிக்கை இல்லாவிட்டாலும் அவளுக்காகப் புறப்பட்டான். தனுஷ்கோடியிலிருந்து திருச்சி வரும் வரை அவர்களுடன் பேசிக்கொண்டும் அவர்களுடைய பேச்சைக் கவனித்துக் கொண்டும் வந்தேன். [15]ஒருமனப் பட்டவர்கள். அந்த ரயில் பிரயாணத்தை அவர்கள் மிகவும் ரசித்து அனுபவித்தார்கள். வருகிற பிச்சைக்காரனுக்கெல்லாம் அவர்களிடமிருந்து காசு கிடைத்தது. வழியில் உள்ள ஸ்டேஷன்களில் மல்லிகைப் பூ, வெள்ளரிப்பிஞ்சு, ஆரஞ்சு கிரஷ் முதலியவற்றை வாங்கினார்கள். திருச்சி சந்திப்பு வந்தவுடன் அதிக நாள் பழகியவர்கள் போல் நாங்கள் விடைபெற்றுப் பிரிந்தோம். அவர்களுக்கா இப்போது பிச்சை எடுக்கும் நிலை? அந்த நினைவோடு நான் திருச்சிக் கடை வீதியில் நடந்தேன், இரவு எட்டு மணியாகிவிட்டது. வேறு வழியில்லாமல் அதிகவிலையில் விற்ற துணியில் கொஞ்சம் வாங்கிக்கொண்டு அதே கடைத்தெரு வழியாக வீடு திரும்பினேன். அவர்கள் உட்கார்ந்திருந்த சந்து அருகில்தான் இருந்தது. அன்றைக்கு இரவாவது அவர்களுக்கு நான் கொடுத்த பணத்தில் சோறு கிடைக்கும் என்று நினைத்தபோது எனக்குச் சிறிது ஆறுதலாக இருந்தது. அப்போது எதிரே தலைவிரி கோலமாய் அந்தப் பெண் பிள்ளை ஓடிவந்தாள். அதே நெசவாளிப் பெண் தான். என் முன்னே நின்று உற்றுப் பார்த்தாள். நானும் பார்த்தேன். ஆ! அவளுடைய பார்வையில் இருந்த துயரம்! "ஐயா! என்னுடைய [16]கைக்குழந்தையைப் பார்த்தீங்களா? பார்த்தீங்களா? என்னோட மகனைப் பார்த்தீங்களா?

---

[15] ஒருமனப்பட்டவர்கள்— this phrase is used when we refer to the couple who share common ideas and feelings; husband and wife who live peacefully without quarrel.

[16] கைக்குழந்தை — infant; child whose age is below one year. is commonly used to refer to small object usually carried in hand. e. g. கைக்குட்டை; கைக்குடை; கைத்தடி etc.

[17] ஐயா?" "உன்னோட மகனா? உன் மடியில் உட்கார்ந்திருந்தானே? அந்தக் குழந்தையா?" "ஆமய்யா. அவனை யாரோ தூக்கிட்டுப் போய்ட்டாங்கய்யா." "எங்கேயும் போய்விடமாட்டான். பயப்படாதே. எங்கே உன் கணவன்? வா, போலீஸில் புகார் செய்வோம்," என்று அவளை சாந்தப்படுத்தி அவர்கள் இருந்த இடத்திற்கு அழைத்துச் சென்றேன். அங்கே அவள் கணவன் தலையில் கையை வைத்துக்கொண்டு இடிந்துபோய் உட்கார்ந்திருந்தான். அவன் என்னைப் பார்த்த பார்வை பைத்தியக்காரனுடையதைப் போல இருந்தது. "இங்கே இவரிடம் விட்டுட்டு அரிசி வாங்கப் போனேனுங்க. திரும்பி வந்து பாக்கிறத்துக்குள்ளே என் பிள்ளையைக் காணோம்" என்றாள் அவள். அதன் பிறகு அவள் என் முன்னே நிற்கவில்லை. முகத்திலும் நெஞ்சிலும் அறைந்துகொண்டு "என் செல்ல ராஜா! எங்கேடா போனே" என்று கத்திக்கொண்டே கடைத்தெருவுக்கு மத்தியில் பாய்ந்தாள். கையில் குழந்தையோடு போவோரை யெல்லாம் வழி மறித்து நிறுத்தினாள். அழுகையும் புலம்பலும் அதிகமாய் ஒலித்தன. "போலீஸில் புகார் செய்யலாம் வா" என்றேன் அவளிடம். "தேடாத இடமெல்லாம் தேடிட்டேன். போலீஸிலும் எழுதிக் கொடுத்திட்டேனுங்க" என்றாளவள். ஐந்து நிமிட நேரம் அங்கு நின்றுவிட்டு பிறகு வீட்டை நோக்கி நடந்தேன். எத்தனையோ வருடங்கள் கழித்து தவமாய்த் தவமிருந்த பிள்ளை இப்போது எங்கே போயிற்று? வீட்டில் என்னுடைய குழந்தையைத் தூக்கிக்கொண்டு என் மனைவி எதிரே வந்தபோது எனக்குக் கடைத்தெருவில் காணாமற்போன குழந்தையும் அதற்காக அலறித் துடிக்கும் தாயும் நினைவுக்கு வந்தார்கள். குழந்தையை வாங்கி அன்போடு தழுவிக் கொண்டேன். இரண்டு நாட்கள் சென்றன. வாசலில் மாம்பழம் விற்பவனின் சத்தம் கேட்டது. குரல் கொடுத்துக் கொண்டே பழம் வாங்குவதற்காக வெளியே வந்தேன். பழம் விற்பவன் வேறு யாருமில்லை, சேலத்துக்கார நெசவாளி இளைஞன் தான். உயர்ந்த ரக மாம்பழங்களைப் பொறுக்கி யெடுத்தேன். அவன் உதடுகள் துடித்தன. கண்கள் கலங்கின, "பிள்ளை அகப்பட்டு விட்டானா?" என்று கேட்டேன். "அவன் கிடைக்க மாட்டாங்க" என்றான். "அகப்படமாட்டானா? ஏன்?" என்றேன். "பிள்ளை காணாமல் போகலீங்க, இந்தப் பாவி அவனை அம்பது ரூபாய்க்கு வித்துட்டேனுங்க." "பிள்ளையை விற்றுவிட்டாயா?" அவன் திண்ணையில் உட்கார்ந்து கண்களைத் துடைத்துக்கொண்டான். "பிள்ளையைக் காப்பாத்தறத்துக் காக அவ பட்டினி கிடந்து உயிரை விட்டிடுவாபோல இருந்தது. கிடைத்ததை யெல்லாம் பிள்ளைக்கே கொடுத்தா. அப்படிக் கொடுத்துங்கூட அந்தப் பிள்ளைக்கு வயிறு நெரையலே. அதற்காக? பிழைக்கிறத்துக்கு வேறெ வழியுமில்லேங்க.

---

[17] ஐயா — a term used while addressing an elderly male person. In certain communities, this is used as a kinship term to refer to the father.

வெளியூர்க்கார சேட் ஒருத்தர் பிள்ளையக் கேட்டார். நல்லா வளர்க்கிறதாகச் சொன்னார். நாங்க எல்லோரும் பிழைக்கிறதுக்கு அதுதான் வழிண்ணு நெனச்சு பிள்ளையெ வித்துட்டேனுங்க. அது அவளுக்குத் தெரியாதுங்க" என்றான். நான் பெருமூச்சு விட்டேன். அவன் பேசினான், "இந்தப் பாவி கையாலாகாதவனுங்க, பிள்ளையைத் தூக்கிக் கொடுத்தேன். அந்தப் பணத்தை வெச்சுத்தான் இப்ப மாம்பழ வியாபாரம் செய்யறேன். அவ கிட்ட நீங்கதான் ஐம்பது ரூபா கடன் கொடுத்து உதவினதாச் சொல்லியிருக்கேன். பிள்ளையெ நான் வித்தது அவளுக்குத் தெரிஞ்சா அவ உடனே ஆத்திலே விழுந்து [18]செத்துப் போயிருப்பா" என்றான், "எப்படியப்பா உனக்கு மனசு வந்தது? ராமேசுவரம் போய் வரங் கேட்டுப் பிறந்த பிள்ளையாயிற்றே" என்றேன் நான். அவன் வருத்தத்தொடு சிரித்துவிட்டு "என்னைப் போல இருக்கிறவங்களுக்கெல்லாம் இனிமேல் பிள்ளை வரம் வேண்டாங்க. [19]பசியா வரம் படச்சவங்களுக்குத்தான் பிள்ளை வரம் வேணுமுங்க" என்றான். அவனுடைய அந்தச் சொற்கள் வெகுநேரம் என் செவிகளில் ஒலித்துக்கொண்டே இருந்தன.

---

[18] செத்துப்போ	—	to die; it is a compound verb. **போ** is an anxiliary verb here. It shows the completion of an action. e. g. **தொலைந்துபோ; பிழைத்துப்போ,** etc.
[19] பசியா வரம்	—	பசி—hungry வரம்—boon; **ஆ** is a negative marker; boon for not having hungry.

EXERCISES

I. Read the following in spoken Tamil:

இரண்டாவது உலகப் போர் நடந்து முடிந்த காலம். சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் சட்டை தைப்பதற்கு வெள்ளைத்துணி கிடைக்கவில்லை. திருச்சி நகரத்துப் பெரிய கடைத் தெருவில் ஒவ்வொரு கடையாக ஏறி இறங்கினேன். கடைத் தெருவிற்கு வரும்போது மாலை நாலரை மணி. இப்போது ஆறு மணிக்கு மேலாகி விட்டது. பலரிடம் வெள்ளைத் துணியே இல்லை. துணி வைத்திருந்த சிலர் அதிக விலை கேட்டார்கள். இன்னும் சிலர் வைத்துக்கொண்டே இல்லை யென்று சாதித்தார்கள். கறுப்பு விலையில் வெள்ளையை வாங்க என்னிடம் பணமுமில்லை, மனமுமில்லை.

II. Vocabulary Exercise:

(*a*) Write two derivative nouns for each of the words given below, following the model:

Model :- பிச்சை——பிச்சைக்காரன், பிச்சைக்காரி

(i) கடை
(ii) பைத்தியம்
(iii) யாத்திரை

(*b*) Split the following compounds into constituent words and write meanings for the same:

Model :- வெள்ளைத்துணி — white cloth

வெள்ளை = white

துணி = cloth

(i) நெஞ்சுக்கூடு
(ii) கடைத்தெரு
(iii) விஷப்பாம்பு
(iv) பணப்பை
(v) உலகப் போர்
(vi) பிள்ளை வரம்

III. *Fill up the blanks choosing the correct item. Make changes in the sentence if necessary.*

1. இனிமேலும் அது பஞ்சமில்லாமல் வாழ முடியாது என்பது அதன் உடல் வாட்ட(ம்)————தெரிந்தது

   (i) ஆல்
   (ii) ஓடு
   (iii) ஆக

2. தாடியும் மீசை ———— இருந்தான்

   (i) ஓடு
   (ii) கு
   (iii) உம்

3. ஒரு ரூபாயை எடுத்து அந்தக் குழந்தையின் கை ———— வைத்தேன்

   (i) ஓடு
   (ii) இல்
   (iii) கு

4. அவர்களுடைய தோற்றம் அவர்கள் ராமேசுவரம் ———— பிள்ளை வரத்துக்காக வந்த யாத்திரிகள் என்பதைச் சொல்லியது

   (i) கு
   (ii) இல்
   (iii) ஆக

5. விஷப் பாம்பு நஞ்சைக் கக்குவது ———— எனக்கு அவனுடைய வார்த்தைகள் ஒலித்தன

   (i) ஆக
   (ii) போல்
   (iii) ஆல்

6. குபீரென்று அவள் கண்ணீரைச் சிந்தி ————

   (i) யது
   (ii) னுள்
   (iii) னுன்

IV. Substitution :

1. இரண்டாவது உலகப் போர் நடந்து முடிந்த காலம்

(*a*) Substitute the following for **உலக**, after making necessary changes in the given words :

(i) நாடு
(ii) மாநிலம்
(iii) மதம்

(*b*) Substitute the following for **நடந்து** after making necessary changes in the given words :

(i) தொடங்கு
(ii) ஆரம்பி
(iii) வா

(*c*) Substitute the following for **முடிந்த** after making necessary changes in the given words :

(i) ஓய்ந்து
(ii) முடிவுறு
(iii) இரு

2. திருச்சி நகரத்துப் பெரிய கடைத் தெருவில் ஒவ்வொரு கடையாக ஏறி இறங்கினேன்.

(*a*) Substitute the following for **பெரிய** after making necessary changes in the given words:

(i) சிறு
(ii) நீளம்
(iii) அகலம்

(b) Substitute the following for **கடையாக** after making necessary changes in the given words:

(i) வீடு
(ii) மாடி
(iii) படி

(c) Substitute the following for இறங்கினேன் after making necessary changes in the given words:

(i) பார்

(ii) சொல்

(iii) கேள்

நான் அவனுடைய முகத்தை சரியாக கவனிக்கவில்லே.

(a) Substitute the following for **அவனுடைய** after making necessary changes in the given words:

(i) என்

(ii) தம்பி

(iii) தங்கம்

(b) Substitute the following for **சரியாக** after making necessary changes in the given words:

(i) நன்று

(ii) உண்மை

(iii) முறை

(c) Supstitute the following for **கவனிக்க** after making necessary changes in the given words:

(i) பார்

(ii) நோக்கு

(iii) வரை

V. Rewrite the following sentences by substituting one item at a time.

1. என்னே ஏறிட்டுப் பார்த்தாள்

(i) மேல் நோக்கி

(ii) அவனே

(iii) கேட்டாள்

2. சில நிமிடங்களில் அவள் கலகலப்பாக பேசத் தொடங்கினாள்

(i) மகிழ்ச்சியாக
(ii) பாட
(iii) கொஞ்ச நேரத்தில்
(iv) சீதை
(v) ஆரம்பித்தாள்

3. கல்யாணமாகி ஏழு எட்டு ஆண்டுகள் ஆன பிறகும் அவர்களுக்குக் குழந்தை பிறக்கவில்லை

(i) பின்பும்
(ii) எனக்கு
(iii) ஆணோ பெண்ணோ
(iv) திருமணமாகி
(v) நான்கு ஐந்து

4. இரவு எட்டு மணி ஆகிவிட்டது

(i) பத்து
(ii) கழிந்து
(iii) ராத்திரி

5. ஐந்து நிமிட நேரம் அங்கு நின்றுவிட்டு வீட்டை நோக்கி நடந்தேன்

(i) மாடியில்
(ii) மணி
(iii) இருந்து
(iv) ஊரை
(v) பத்து

VI. *Transform the following negative into positive and positive into negative sentences.*

1. துணி வைத்திருந்த சிலர் அதிக விலை கேட்டார்கள்
2. ஆச்சரியமாக இருந்தது
3. நான் அங்கே நின்று கவனித்தேன்
4. நானிருந்த பெட்டிக்குள் ஓர் ஆணும் பெண்ணும் ஏறினார்கள்
5. அந்த ஆண் பிள்ளை அப்படியே அயர்ந்துவிடவில்லை

6. நான் அவளைப் புரிந்துகொள்ளவில்லை

7. அவனுடைய கதையை அவன் சொல்லாமலேயே நான் தெரிந்து கொள்ள வில்லை

8. கால் ரூபாய் கொடுக்க முடியாது

VII. *Transform the following into interrogative sentences using the underlined phrase/word.*

1. காசை நான் எடுக்கப் போனது அவனுக்குத் தெரியும்

2. முகத்தை அவன் தன்னுடைய கைகளால் மூடிக்கொள்வதை நான் கவனித்தேன்

3. அவனுக்குப் பக்கத்தில் ஓர் ஏழைப்பெண் கந்தலை உடுத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்

4. எலும்பும் தோலுமாக இருந்தாள் அவள்

5. இந்தோ - ஸிலோன் எக்ஸ்பிரஸ் தயாராக காத்துக்கொண்டிருந்தது

VIII *Change each of the following complex sentences into simple sentences.*

1. கடைத் தெருவிற்கு வரும்போது மாலை நாலரை மணி.

2. காசை எடுக்கப் போனது அவனுக்குத் தெரியும்

3. அவனுடைய கதையை அவன் சொல்லாமலேயே நான் தெரிந்து கொண்டேன்.

4. முதன்முதலாக அந்தப் பரிதாபக் காட்சியைப் பார்த்தபோது மனத்தைக் கசக்கிப் பிழிவது போலிருந்தது.

5. வயிறு ஒட்டிக்கிடந்த அந்தக் குழந்தை தன்னுடைய வலது கையின் ஐந்து விரல்களையும் வாயில் வைத்து சூப்பிக் கொண்டிருந்தது.

6. கடைத்தெருவில் நான் மீண்டும் நடந்தபோது அதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அவர்களைச் சந்தித்த நினைவு வந்தது.

IX *Change the following into complex sentences.*

1. பலரிடம் வெள்ளைத்துணியே இல்லை. துணி வைத்திருந்த சிலர் அதிக விலை கேட்டார்கள்.

2. பணப் பைக்குள் கையைவிட்டு காலணாவைத் தேடினேன். நிக்கல் நாணயங்களுக்குள் அந்தச் செப்புக் காசு ஒளிந்திருந்தது.

3. காசை எடுத்துக்கொண்டு பிச்சைக்காரனைப் பார்த்தேன். அவனை அங்கே காணவில்லை.

4. குழந்தையின் உச்சியில் கண்ணீர் வழியும்படியாக அவள் அழுது கொண்டிருந்தாள். தேம்பித் தேம்பி அழுதாள்.

5. தாடியும் மீசையுமாக இருந்தான் அவன். அவனுடைய நெஞ்சுக்கூடு தனியே விழுந்து விடுவதுபோல் கழுத்துக்குக் கீழே தொங்கியது.

6. இதுவரையில் அது பஞ்சத்தில் வளர்ந்ததாகத் தெரியவில்லை கொழு கொழுவென்றிருந்தது.

X *Using the points given below write a short composition, not exceeding 30 lines* :

இரண்டாவது உலகப் போர் நடந்து முடிந்த சமயம்—திருச்சி நகர கடைவீதி—பிச்சைக்காரத் தோற்றம், ஆனால் பிச்சைக்காரன் அல்ல—காசு எடுத்துக் கொடுக்கையில் அவன் இல்லை—அவன் ஓடினான்—அவனுடைய மனைவி அருகில் இருந்தாள்—அவளுடைய தோற்றம்—அருகில் ஒரு குழந்தை—அவர்களுடைய நிலைமை—பஞ்சத்தால் நெசவாளிகள் சேலத்திலிருந்து திருச்சிக்கு வருகிறார்கள்—அவர்கள் வேலை கேட்பது—இவர்களை ரயிலில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு சந்தித்த ஞாபகம்—அதே ரயில் பெட்டியில் ஓர் ஆணும் பெண்ணும் பிள்ளை வரத்துக்காக ராமேசுவரம் சென்று வருகிறார்கள்—கூலிக்காரர்களுடன் அவர்களுடைய வாக்குவாதம்—அவர்களின் தொழில் நெசவு—பிறகு அவர்கள் சென்றுவிட்டார்கள்—அவர்களுடைய குழந்தை காணமல் போய்விட்டது—தாயின் துயரம்—இரண்டு மூன்று நாட்கள் கழித்து மாம்பழம் விற்போனைச் சந்தித்தல்—நெசவாளி மாம்பழம் விற்பவனாகிறான்—பிள்ளையைப்பற்றி விசாரிக்கிறார் ஆசிரியர்—பிள்ளையை சேட் ஒருவரிடம் 50 ரூபாய் வாங்கிக்கொண்டு தாய்க்குத் தெரியாமல் விற்றுவிட்டதைக் கூறுகிறான்—பசியாவரம் படைத்தவர்களுக்குத்தான் பிள்ளை வரம் வேணும் என்று கூறி அவன் செல்கிறான்.

கதா காலட்சேபம்

எஸ். பி. பாலகிருஷ்ணன்

[This text is presented in a narrative style. Several features of spoken style including appropriate vocabulary, are retained.]

[1]ஜானுவு(ம்) தான் பிடித்த [2]முயலுக்கு நான்கு கால்கள் தானென்று சாதித்தாள். கஜேந்திரகுமாரியின் [3]அஜமுக நடனம் பார்க்கத்தான் போக வேண்டுமென்று அடம் பிடித்தாள். இப்படியாக வருடம் பிறந்த அன்று சண்டை கூடாது என்று சபதம் எடுத்துக் கொண்டவர்கள் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்காமல் [4]அல்ப சந்தோஷம்தான், அஜமுக நடனம்தான், அல்ப சந்தோஷம் தான், அஜமுக நடனம்தான், இப்படியாக வாதாட வாதாட, முடிவில் சண்டை முற்றி விட்டது. ரகு கோபம் தாளாமல் "ஏ, ஜானு! உன் பிடிவாதத்திற்கும் அடத் திற்கும் எல்லையே இல்லாமல் போய்விட்டது. ஆகட்டும் பார்க்கிறேன். பரவாயில்லை. நான் மாட்னி ஷோ அல்ப சந்தோஷ சினிமாவிற்குப் போகிறேன். இன்னொரு டிக்கட்டை யாராவது எனது நண்பர்களுக்குக் கொடுத்தால் வாயார வாழ்த்தி என்னை மனமாரப் போற்றுவார்கள். வருகிறேன் ஜானு!" என வெளியே போகத்

---

1 ஜானு — ஜானகி

2 முயலுக்கு நான்கு கால்கள் — This is used as a parody of the original — phrase தான் பிடித்த முயலுக்கு மூன்று கால்கள். The latter is used to depict the irrational argument/insistence of the person referred to by the speaker of the phrase.

3 அஜமுக நடனம் — horse (mask) dance
dance performed wearing the horse-mask.

4 அல்ப சந்தோஷம் — short lived pleasure

துடித்த நேரத்தில் அடுத்த வீட்டு அண்ணுச்சாமி அங்கு பரபரப்பாக ஓடி வந்தான். "டேய் ரகு! ரகு! இன்னிக்கு மாட்னி ஷோ கிடையாதாண்டா. அந்தப் படத்திலே சம்பந்தப்பட்ட பிரதம நடிகையின் கால்ஷீட்டு சரிவரக் கிடைக்காத்துனுலே படம் முடிஞ்சு தியேட்டருக்கு வரமுடியாமப் போய்ட்டுதா(ம்). இப்போது வாங்கின டிக்கட்டு இன்னு(ம்) ரெண்டு நாள் கழிச்சு ரிலீஸாகுந் தேதிக்கு செல்லுபடியாகும்னு தியேட்டர்லே போர்டு போட்டுட்டாங்கடா" எனக் கூறிவிட்டுப் புறப்பட்டானண்ணுச்சாமி. அதன் பிறகுதான் ஜானுவிற்கு உயிர் வந்தது.

"அற்ப ஸந்தோஷ ஸினிமா ஆசையை அகற்றிடுவீர், அஜமுக நடனம் பார்த்து ஆனந்தமாய்த் திரும்பலாம் கணநாதா! இனிமேலாவது அடியாளின் அபிலாஷையை நிறைவேற்றி வைப்பீர்கள் என்று எண்ணுகிறேன். கஜேந்திர குமாரியின் நடனத்தைக் கண்டு களித்து வருவோம், அமைதி தந்தேன் என்று ஒரு வார்த்தை கூறவேண்டும். வருடம் பிறந்த இன்று ஒரே போராட்டமாயிருக்கிறது. அதைத் தீர்க்க பொழுது போக்க வாரும் வாரும்" என வருந்தி வருந்தியழைத்தாள். ரகுவிற்கு பிகுவை விட உத்தேசமில்லை. என்ன சொல்லுவதென்று சிந்தித்துக் கொண்டிருக்கும் பொழுது புழக்கடைப் பக்கமாக பக்கத்து வீட்டு பங்கஜம் ஜானகிக்கு அழைப்பு விட்டாள். என்னவென்று கேட்டாள் ஜானு. "ஜானு! குமாரி கஜேந்திரா...இல்லேல்லே ஹிஹிஹி...குஜேந்திரா, சேசேசே! குமாரி இல்லே குமாரி, அது அந்த அஜமுகி டான்ஸு, ஹூம், ஏதோ அசந்தர்ப்பமா கான்ஸலா யிடுத்து. ஹி ஹி ஹி அடுத்த மாதம் மேடையாடி, இல்லே இல்லே இல்லே, தேதியாடி, இல்லே...அதே தேதீலே அதே மேடேலெ ஆடறாளாம் கஜேந்திரகுமாரி" என்றாள்.

பக்கத்து வீட்டுப் பங்கஜம் சொன்னது யாருக்காவது புரிஞ்சுதோ? புரியல்லியே! எப்படி புரியும்? இப்பச் சொல்றேன். இதுதான்சொன்னு—கஜேந்திர குமாரியின் நடனம் ஏதோ அசந்தர்ப்பமாகக் கான்ஸலாயிடுத்து. அவளொரு படத்திற்கு ஒப்பந்தமாகி அவுட்டோர் ஷூட்டிங்க்கு போய்ட்டாளா(ம்). அடுத்த மாதம் அதே தேதியில் மீண்டும் நடனம் நடக்குமாம். ஹி ஹி...இதத்தாஞ் சொன்னு. ஜானுவிற்கு என்ன செய்வது, ஏது செய்வது என்று ஒன்றும் புரியவில்லை. இது அத்தனையும் கேட்டுக் கொண்டிருந்த ரகுவிற்கு ஒரு புறம் மகிழ்ச்சி, ஒரு புறம் சங்கடமாக இருந்தது. வருடப் பிறப்பன்று வீட்டில்தான் என்டர்—டெய்ன் மென்ட்டு இல்லை, வெளியிலாவது சென்று வரலாமென்றால் அதற்கும் ஏதாவது டிஸ்டர்பென்ஸ் ஏற்பட்டு விடுகிறதே என்று நினைத்துக் கொண்டிருந்தபொழுது, ரகுவின் பெரம்பூர்ப் பெரியம்மா வந்து, "அடே ரகு! இன்று நமது தெரு பிள்ளையார் கோவில்லே பர்வதராஜ பாகவதரின் கதாகாலட்சேபம் நடக்கிறது, போகலாமா?" எனக் கேட்டதும், ரகுவும் ஜானகியும் வருடப் பிறப்பு ஒப்பந்தப்படி இருமனதும் ஒரு மனதாய் ஏககாலத்தில் "சம்மதம், சம்மதம் சம்மதம்" என்றார்கள்.

வருடம் பிறந்த இந்த நன்னாளில்
இருவருக்கும் வாய்ச்சண்டை கூடாது
ஒருவர் மனத்தினை ஒருவர் புரிந்து
இருவரும் ஒரு மனமாகுதல் வேண்டும்.

வருடம்......கூடாது.

என்ற ஒப்பந்தப்படி வருடப் பிறப்பு அன்று மட்டுமில்லாமல் இனி என்றென்றும் ஒற்றுமையாயிருப்பதற்கு ஒப்புக் கொண்டாற்போல் பெரியம்மாவின் முன் விளைந்த பயிரைப் போல் தலைவணங்கி, கோடையில் காய்ந்த மாங்கிளை போல் தலை வணங்கி, பூத்த சரக்கொன்றைபோல் தலை வணங்கி நின்றார்கள். இவர்களைப்போல் லோகத்தில் எல்லா தம்பதிகளும்—யார்யாரெல்லா(ம்)?——எதிர் வீட்டுக்காரர், பக்கத்து வீட்டுக்காரர், அண்டை வீட்டுக்காரர், மேல்மாடிக்காரர், கீழ்மாடிக்காரர், எல்லா வீட்டுக்காரர்களும், பாலோடு தேன்போல்—உஹூம்—பழத்தோடு சுவைபோல்—உம்—மலரோடு மணம் போல்—ஹ ஹ் ஹ—மனமொத்து வாழ இறைவன் அருள் புரிவாராக! ஹ ஹ் ஹ—

புதுக்கதை கேட்டவர்க்கும், புதுமணதம்பதிக்கும்
நிதியொடு நிம்மதியும் சதிபதிகள் பெறணம்
மங்களம் சுப மங்களம், கதையைக் கேட்டோர்
வாழ்வெல்லாம் சுப மங்களம்.

EXERCISES

I. Read the followiny in spoken Tamil :

இனிமேலாவது அடியாளின் அபிலாஷையை நிறைவேற்றிவைப்பீர்கள் என்று எண்ணுகிறேன். கஜேந்திர குமாரியின் நடனத்தைக் கண்டு களித்து வருவோம். அனுமதி தந்தேன் என்ற ஒரு வார்த்தை கூறவேண்டும். வருடம் பிறந்த இன்று ஒரே போராட்டமாயிருக்கிறது. அதைத் தீர்க்க பொழுது போக்க வாரும் வாரும்" என வருந்தியழைத்தாள். ரகுவிற்கு பிகுவை விட உத்தேசமில்லை. என்ன சொல்லுவதென்று சிந்தித்துக் கொண்டிருக்கும்பொழுது புழக்கடைப் பக்கமாக பக்கத்து வீட்டு பங்கஜம் ஜானகிக்கு அழைப்பு விட்டாள்.

II. Rewrite the following in written Tamil :

1. இன்னிக்கு மாட்னி ஷோ கிடையாதாம்
2. இப்போ வாங்கின டிக்கட்டு இன்னு(ம்) ரெண்டு நாள் கழிச்சு ரிலீஸாகும் தேதிக்கு செல்லும்படியாகும்னே(ன்).
3. அதே தேதிலே அதே மேடெலெ ஆடறாளாம்.
4. இதத்தாஞ் சொன்னா
5. ஒன் பிடிவாதத்துக்கும் அடக்கத்துக்கும் எல்லையே இல்லாம போயிடுச்சு.
6. "வர்றேன் ஜானா!" என வெளியே அடுத்த ஊட்டு அண்ணாச்சாமி பரபரப்பா ஓடியாந்தா(ன்).

III. Vocabulary Exercise :

(*a*) Give the feminine forms of the following masculine forms following the model :

Model : கதாநாயகன் கதாநாயகி

(1) பாடகன்
(2) அழகன்
(3) தோழன்
(4) குமரன்
(5) துணைவன்

(*b*) **Split the compounds into constituent words and write meanings for the same.**

(1) மாட்னிஷோ

(2) அஜமுகநடனம்

(3) கணநாதா

(4) வருடப்பிறப்பு

(5) பெரியம்மா

IV. *Fill up the blanks choosing the correct item. Make changes in the sentence if necessary.*

1. இப்படி——வருடம் பிறந்த அன்று சண்டை கூடாது என்று சபதம் எடுத்துக்கொண்டார்கள்.

   (i) ஆக
   (ii) கு
   (iii) மேல்

2. நான் மாட்னி ஷோ அல்ப ஸந்தோஷ சினிமா——போகிறேன்

   (i) இல்
   (ii) கு
   (iii) இன்

3. கணநாதா! இனிமேலாவது அடியாள்——அபிலாஷையை நிறைவேற்றி வைப்பீர்கள் என்று எண்ணுகிறேன்

   (i) இன்
   (ii) கு
   (iii) இல்

4. கஜேந்திர குமாரியின் நடனம்——கண்டு களித்து வருவோம்

   (i) கு
   (ii) இன்
   (iii) ஐ

5. "பொழுது போக்க வாரும்" என அவள் வருந்தி வருந்தியழைத்——

(i) ஆள்

(ii) ஆன்

(iii) ஆய்

6. கஜேந்திர குமாரியின் நடனம் ஏதோ அசந்தர்ப்பம்——கான்ஸலாயிடுத்து

(i) கு

(ii) இன்

(iii) ஆக

V. Substitution

1. ஜானுவும் தான் பிடித்த முயலுக்கு நான்கு கால்கள்தானென்று சாதித்தாள்.

(*a*) Substitute the following for **பிடித்த** after making necessary changes in the given words :

(i) கான்

(ii) பார்

(iii) சொல்

(*b*) Substitute the following for **முயலுக்கு** after making necessary changes in the given words;

(i) கோழி

(ii) புறு

(iii) சிங்கம்

(*c*) Substitute the following for **சாதித்தாள்** after making necessary changes in the given words :

(i) திருபி

(ii) எழுது

(iii) சொல்

2. கஜேந்திர குமாரியின் அஜ்முக நடனம் பார்க்கத்தான் போகவேண்டு மென்று அடம்பிடித்தாள்.

(*a*) Substitute the following for **கஜேந்திரகுமாரி** after making necessary changes in the given words:

(i) ஷர்மிளா

(ii) வைஜந்தி

(iii) கமலம்

(*b*) Substitute the following for **அடம் பிடித்தாள்** after making necessary changes in the given words:

(i) சொல்

(ii) விடாப்பிடியாக பிடி

(iii) தொந்தரவு கொடு

3. ரகுவிற்கு பிகுவை விட உத்தேசமில்லே.

(*a*) Substitute the following for **ரகுவிற்கு** after making necessary changes in the given words:

(i) ராமன்

(ii) ராதை

(iii) சுசீலா

(*b*) Substitute the following for **பிகுவை** after making necessary changes in the given words:

(i) கர்வம்

(ii) ஆசை

(iii) உயிர்

(*c*) Substitute the following for **உத்தேசம்** after making necessary changes in the given words:

(i) எண்ணம்

(ii) தயக்கம்

(iii) மனம்

VI *Rewrite the following sentences by substituting one item at a time.*

1. அடுத்த மாதம் அதே தேதியில் மீண்டும் நடனம் நடக்குமாம்.

    (i) திரும்பவும்
    (ii) இந்த
    (iii) ஆரம்பமாகும்
    (iv) ஸினிமா

2. இது அத்தனையும் கேட்டுக்கொண்டிருந்த ரகுவிற்கு ஒருபுறம் மகிழ்ச்சி ஒரு புறம் சங்கடமாக இருந்தது.

    (i) ஆனந்தம்
    (ii) பார்த்து
    (iii) இவ்வளவையும்
    (iv) வேதனையாக

3. பக்கத்து வீட்டுப் பங்கஜம் சொன்னது யாருக்காவது புரிஞ்சுதோ?

    (i) அலுமேலு
    (ii) அடுத்த
    (iii) கூறியது
    (iv) தெரியுமோ

4. ரகுவும் ஜானகியும் வருடப் பிறப்பு ஒப்பந்தப்படி இருமனதும் ஒரு மனதாய் ஏக காலத்தில் "சம்மதம், சம்மதம், சம்மதம்" என்றார்கள்.

    (i) ஆண்டு
    (ii) ராமனும் சீதையும்
    (iii) ஒரே சமயத்தில்
    (iv) சரி, சரி

5. வருடம் பிறந்த இந்த நன்னாளில் இருவருக்கும் வாய்ச்சண்டை கூடாது.

    (i) இன்று
    (ii) உங்களுக்குள்
    (iii) கலகம்
    (iv) வேண்டாம்

6. அதன் பிறகுதான் ஜானுவிற்கு உயிர் வந்தது.

(i) எனக்கு

(ii) நினைவு

(iii) நின்றது

(vi) பின்பு

VII. *Transform the following into affirmative sentences.*

1. வருடம் பிறந்த அன்று சண்டை வேண்டாம்
வருடம் பிறந்த அன்று சண்டை வேண்டும்.

2. உன் பிடிவாதத்திற்கும் அடத்திற்கும் எல்லையே இல்லை.

3. இன்னிக்கு மாட்னி ஷோ கிடையாது.

4. ரகுவிற்கு பிகுவை விட உத்தேசம் இல்லை.

5. புரியல்லியே!

VIII. *Transform the following into interrogative sentences, using the underlined phrase word.*

1. **தியேட்டர்லே** போர்டு போட்டுட்டாங்கடா.

2. அதே தேதியிலே **மேடேலெ** ஆடறுளாம் கஜேந்திரகுமாரி.

3. வருடப் பிறப்பன்று **வீட்டில்** என்ட்டர்டெய்ன்மெண்ட்டு இல்லை.

4. **நமது தெருப்பிள்ளையார் கோவில்லே** பர்வத ராஜா பாகவதரின் கதா காலச்சேபம் நடக்கிறது.

5. **பெரியம்மாவின் முன்** விளைந்த பயிரைப்போல் தலை வணங்கினர்கள்.

6. **இவர்களைப்**போல் லோகத்தில் மனமொத்து வாழவேண்டும்.

IX. *Change each of the following complex sentences into simple sentences.*

1. இன்னொரு டிக்கட்டை யாராவது என் நண்பர்களுக்குக் கொடுத்தால் வாயார வாழ்த்தி என்னை மனமாரப் போற்றுவார்கள்.

2. அந்தப் படத்திலே சம்பந்தப்பட்ட பிரதம நடிகையின் கால்ஷீட்டு சரிவரக் கிடைக்காத்துனலே படம் முடிஞ்சு தியேட்டருக்கு வர முடியாமப் போய்ட்டுதாம்.

3. கஜேந்திரகுமாரி படத்திற்கு ஒப்பந்தமாகி அவுட்டோர் ஹூட்டிங்குக்கு போய்ட்டதாலே அவள் நடனம் அசந்தர்ப்பமாகக் கான்ஸலாயிடுத்து.

4. இது அத்தனையும் கேட்டுக்கொண்டிருந்த ரகுவிற்கு ஒருபுறம் மகிழ்ச்சி, ஒருபுறம் சங்கடமாக இருந்தது.

5. வருடப் பிறப்பு அன்று மட்டுமில்லாமல் இனி என்றென்றும் ஒற்றுமையா யிருப்பதற்கு ஒப்புக்கொண்டாற்போல் பெரியம்மாவின் முன் விளைந்த பயிரைப் போல் தலைவணங்கி, கோடையில் காய்த்த மாங்கிளைபோல் தலை வணங்கி, பூத்த சரக்கொன்றைப்போல் தலை வணங்கி நின்றார்கள்.

6. இவர்களைப்போல் லோகத்தில் எல்லா தம்பதிகளும் மனமொத்து வாழ இறைவன் அருள் புரிவாராக.

X. Change the following into complex sentences.

1. ஜானுவும் தான் பிடித்த முயலுக்கு நான்கு கால்கள்தானென்று சாதித்தாள். கஜேந்திரகுமாரியின் அஜமுக நடனம் பார்க்கத்தான் போக வேண்டுமென்று அடம் பிடித்தாள்.

2. இப்போது வாங்கின டிக்கெட்டு இன்னும் இரண்டு நாள் கழிச்சு ரிலீஸாகும் தேதிக்கு செல்லுபடியாகும்னேன். தியேட்டர்லே போர்டு போட்டுட்டாங்க.

3. அற்ப ஸந்தோஷ ஸினிமா ஆசையை அகற்றிடுவீர். அஜமுக நடனம் பார்ப்பீர். ஆனந்தமாய்த் திரும்பலாம்.

4. வருடம் பிறந்த அன்று ஒரே போராட்டமாயிருக்கிறது. அதைத் தீர்க்க பொழுது போக்க வாரும்.

5. ரகுவிற்கு பிகுவை விட உத்தேசமில்லை. என்ன சொல்லுவதென்று சிந்தித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது புழக்கடைப் பக்கமாக பக்கத்துவீட்டு பங்கஜம் ஜானகிக்கு அழைப்பு விட்டாள்.

6. அவளொரு படத்திற்கு ஒப்பந்தமாகி அவுட்டோர் ஹூட்டிங்குக்கு போய்ட்டாளாம். அடுத்த மாதம் அதே தேதியில் மீண்டும் நடனம் நடக்குமாம்.

மு. வரதராசனார் - வானொலிப் பேட்டி

[This text is characterised by the use of spoken register. But this spoken style avoids loan words and has several of the characteristics of written style. Note also that towards the end of the interview the speaker switches over to a sort of formal platform speech.]

இராமகிருஷ்ணன்: வணக்கங்க! என்ன வெய்யில் அதிகமா இருக்குல்லீங்க?

பேராசிரியர் வரதராசன்: வெய்யில் வழக்கம் போல தா(ன்). இந்த மாச(ம்) வந்தாலே வெய்யில் அதிகமாகிறது, வழக்கந்தானே? அதுவு(ம்) ஏப்ரல் [1]பிறந்துட்டுது, ஏப்ரல் ரெண்டாந் தேதி, இன்னமேலிருக்க இருக்க வெய்யில் அதிகமாகு(ம்) இப்பதானே தொடங்குதுன்னே சொல்லணு(ம்)?

இராமகிருஷ்ணன்: ஆமா(ம்)

பேராசிரியர் வரதராசன்: மே முதல் வாரம் வந்தவுடனே வெய்யில் ரொம்ப [2]வேகமாருக்கும்

இராமகிருஷ்ணன்: அப்பிடீங்களா? அப்பொ இன்னிக்கின்ன விடுமுறைங்களா ஒங்களுக்கு?

---

1 பிறந்துட்டுது — Note that in Tamil the commencement of day, month and year may be referred to as 'be born'

2 வேகமாருக்கும் — வேகமாக இருக்கும்—Note the following: வேலையாருந்தாலும், வெய்யில்ருக்குதோ, பாத்திண்ட்ருப்பே(ன்), கூட்டங்கள்ருக்கும், வேண்ட்ருக்கும் etc. In these the initial vowel in இரு is dropped: In the preceding stem/phrase the final vowel or semi vowel is also sometimes dropped as in the case of வேண்ட்ருக்கும் (வேண்டி)

7

பேராசிரியர் வரதராசன்: அ, இன்னிக்கு விடுமுறை தா(ன்). நான், விடுமுறையா இருந்தாலு(ம்) வேலையாருந்தாலு(ம்) எல்லா(ம்) ஒன்று தா(ன்) எனக்கு. விடுமுறை நாள்ளெயும் ஏதாவது வேலை செய்திட்டு தா(ன்) இருக்கேன்.

இராமகிருஷ்ணன்: ஹ ஹ் ஹ...

பேராசிரியர் வரதராசன்: ஓய்வு கெடையாது, விடுமுறை நாள்ளெ இன்னு(ம்) சொல்லப்போனு...

இராமகிருஷ்ணன்: ஊம்

பேராசிரியர் வரதராசன்: எனக்கொஞ்ச(ம்) வேலெ அதிகமாகவே இருக்கு(ம்).

இராமகிருஷ்ணன்: ஆ(ங்) ஹா(ங்). அப்பொ நீங்க்ய பல்கலைக் கழக(த்து)க்கு போறதார்ந்தா எப்ப போவீங்க்ய?

பேராசிரியர் வரதராசன்: நா(ன்) சாதாரணமா காலையிலெ சாப்ட்டு வீட்டெ விட்டுப் பொறப்படுவே(ன்)

இராமகிருஷ்ணன் : ஊம்

பேராசிரியர் வரதராசன்: எனக்கு...அந்த வெய்யில் நேரத்தில் தா(ன்) போயி நா(ன்) வேலயெல்லா(ம்) தொடங்கறே(ன்).

இராமகிருஷ்ணன்: ஊம்

பேராசிரியர் வரதராசன்: அங்கெ பலவகையான வேலெ உண்டு, ஆகையினுலே வெய்யிலோ, வெய்யில்ரு(க்)குதோ தெரியாது.

இராமகிருஷ்ணன்: ஊம்

பேராசிரியர் வரதராசன்: மழை பெய்தான்ன, ஒரு "ஓகோ! மழை பெய்யுதா"ன்ற எண்ண(ம்) வரு(ம்). மத்த நாள்ளெ, வெய்யிலெல்லா(ம்) நெனவு வராது.

இராமகிருஷ்ணன் ; ஆங்

பேராசிரியர் வரதராசன்: [3]அது மே மாசம் பொறந்திட்டா எனக்கு விடுமுறை யில்லையா?

---

[3] அது—அதுவும்

இராமகிருஷ்ணன்: ஆமா(ம்)

பேராசிரியர் வரதராசன்: ஆகையினுலெ வெய்யில் நாள்ளெ வேறெ எங்கியாவது போயிடுவே(ன்)

இராமகிருஷ்ணன்; ஊ(ம்)

பேராசிரியர் வரதராசன்: பெங்களூருக்குப் போயிடுவே(ன்). மே மாசமு(ம்) ஜூன் மாசமு(ம்)

இராமகிருஷ்ணன்; ஊஹூ(ம்)

பேராசிரியர் வரதராசன்: இந்த வெய்யில் ஒரு பிராப்ளமா எடுத்துக் கொள்ள முடியாது நாம்.

இராமகிருஷ்ணன்: உம்...அ...[4]அப்பொ பல்கலைக் கழகத்திலெ நீங்க்ய என்ன செய்யறீங்க்ய போனது(ம்)? உங்களுக்கு நெறைய வேலெ உண்டுங்களா?

பேராசிரியர் வரதராசன்: [5]எனக்குத் தபாலெல்லா(ம்) பிரிச்சுப் பாத்து...

இராமகிருஷ்ணன்: ஊம்

பேராசிரியர் வரதராசன்: அதுக்கப்பாலெ அ வ ச ர மா எழுதவேண்டியதெல்லா(ம்) எழுதிட்டு,

இராமகிருஷ்ணன்: ஊம்

பேராசிரியர் வரதராசன்: ஆங்...மற்றதெல்லா(ம்) மெல்ல எழுத வேண்டியதெல்லா(ம்) படிச்சு என்ன செய்யலா(ம்)னு எண்ணிக் கொண்டிருப்பே(ன்)

---

4 } அப்பொ பல்கலைக்கழகத்திலெ——போனதும்.
5 } — Appropriate form here is நா(ன்) Such slips are common in every language, when the spoken discourse is interrupted.

Note that as the time goes by and as the topic of interview takes the form of an analysis, the style of the interviewee also becomes rather formalized and gets closer to the written register (here of the interviewee). This is a common feature of educated registers in Tamil.

இராமகிருஷ்ணன் : ஊம்

பேராசிரியர் வரதராசன் } அதுக்குள்ளே யாராவது வருவாங்க

இராமகிருஷ்ணன் : ஊம்

பேராசிரியர் வரதராசன் } ஏதாவது கேழ்ப்பே(ன்) பேச, மாணவர்(க)ள் வருவாங்க

இராமகிருஷ்ணன் : ஊம்

பேராசிரியர் வரதராசன் } அவுங்க ஏதாவது கேழ்ப்பாங்க. இதெல்லா(ம்) பார்த்து பதில் சொல்லிவிட்டு, அதுக்கப்புறம் என்னுடைய துறையில் இருக்கிற மற்றவர்(க)ளோடு யோசிக்க வேண்டியதெல்லா(ம்) யோசித்துப் பாத்திண்ட்ருப்பே(ன்)

இராமகிருஷ்ணன் : ஊம்

பேராசிரியர் வரதராசன் } ஊம். எதாவது கமிட்டி கூட்டங்கள்ருக்கு(ம்), அதுக்குப் போக வேண்ட்ருக்கு(ம்), அதுக்குப் பெறகு பரீட்சை வேலைகள் எதாவதுருக்கு(ம்). இப்பிடீ பல வகையான வேலைகள் எதாவது வந்துகொண்ட்ருக்கு(ம்) இதுக்கிடையிலெ நா(ன்) ஆராய்ச்சியெப் பற்றி எண்ணிக் கொண்ட்ருக்கணு(ம்), பெரும்பாலு(ம்) ஆராய்ச்சி யெல்லா(ம்) அங்கெ செய்ய முடியறதில்லெ. அங்கெ சில குறிப்புகள்ளா(ம்) பாத்து எடுத்திட்டு வீட்டுக்கு வந்(து)தா(ன்) செய்ய வேண்டி வருது.

இராமகிருஷ்ணன் : அங்கெ நீங்க்ய மாணவர்(க)ளுக்கு கற்பிக்கிறீங்களா, சாதாரண கல்லூரி(க)ளெப்போல அங்கெ கற்பிக்கிறீங்களா, அல்லது வெறு(ம்) ஆராய்ச்சிக்கு மட்டு(ம்) வழி காட்டறீங்களா?

பேராசிரியர் வரதராசன் } வாரத்துக்கு ஒரு நாளெக்கி எம். ஏ. மாணவர்

இராமகிருஷ்ணன் : ஊம்

பேராசிரியர் வரதராசன் } அவர்(க)ளுக்கு ஒழுங்கா பாட(ம்) நடத்திக்கொண்டு வரே(ன்). எல்லாக் கல்லூரி மாணவர்களு(ம்) வருவாங்க. அது அல்லாமெ, அங்கெருக்கற ஆராய்ச்சி மாணவர்கள், அவுங்கவுங்க ஆளுக்கொரு பொருளெடுத்துக்கொண்டு ஆராயறுங்க

இராமகிருஷ்ணன் : ஊம்

பேராசிரியர் வரதராசன் : ஆய்ஞலெ தனித்தனியா ஒவ்வொருவருக்கு(ம்) ஒரு நேர(ம்) ஒரு நாள் குறிப்பிட்டு, அந்த நாள்ளெ வரச்சொல்லி அவர்(க)ளுடைய அந்த ஆராய்ச்சியெப் பற்றிப் பேசி அவர்(க)ளுக்கு வழி காட்ட வேண்ட்ருக்கு(ம்). இதையல்லாமல் நாஞகவே சில பொருள் எடுத்துக்கொண்டு ஆராய வேண்டியுமிருக்குது. இது தவிர பல்கலைக் கழக குழுக்கள் வேலெ வேறெ. அரசாங்க கமிட்டி வேலைகள் வேறெ. இந்த வேலெ(க)ளு(ம்) செய்ய வேண்டி வரு(ம்) ஒரு வகையான வேலையின்(னு) சொல்ல முடியாது.

இராமகிருஷ்ணன்: அப்போது அங்(கெ) கற்பிக்கிற நேரங் கொறைவு உங்களுக்கு

பேராசிரியர் வரதராசன் : கற்பிக்கிற நேரங்கொறவுதா(ன்)

இராமகிருஷ்ணன்: இப்பொழுது இந்த மாணவர்கள் எப்படி இருக்காங்க வளர்ச்சி? அவுங்க அறிவு வளர்ச்சி எப்படியிருக்குங்க?

பேராசிரியர் வரதராசன் : மாணவர்கள், அந்த மற்ற கல்லூரி மாணவர்(க)ளுக்கு(ம்) பல்கலைக் கழகத்திலெ ஆராய்ச்சி செய்யிற மாணவர்(க)ளுக்கு(ம்) கொஞ்சம் வேறுபாடு உண்டு

இராமகிருஷ்ணன் : ஊம்

பேராசிரியர் வரதராசன் : அந்தப்பாடத்திலெ ஈடுபாடு உண்டாகி, அதிலெ ஒரு பட்டப்படிப்பு பெற்ற பிறகுதானே பல்கலைக் கழகத்துக்கு வராங்க?

இராமகிருஷ்ணன் : ஆமாங்க

பேராசிரியர் வரதராசன் : அதுவும் வருகின்ற மாணவர்(க)ளு(ம்) தொகை கொறவுங்க அதஞலெ, அங்கெ இப்படிப்பட்ட இந்த ஒழுங்குமுறைப் பிரச்சினையெல்லா(ம்), பல்கலைக் கழகத்துக்குள்ளெ அவ்வளொ வரதில்லெ

இராமகிருஷ்ணன் : ஆங்

பேராசிரியர் வரதராசன் : ஆஞ மற்ற கல்லூரிகள்ளெ இருக்க நெலமெ வேறெ

இராமகிருஷ்ணன் : அங்கெப்படி...

பேராசிரியர் வரதராசன் : கல்லூரிகள்ளெ மாணவர்கள் பெருங்கூட்டமாருக்காங்க. அங்கெ அவர்களுக்கு அந்த தங்கியிருக்கும் விடுதியிலெ இருக்கிற சில சிக்கல்கள், பாடங்கள்ளெ சில சிக்கல்கள் அதுக்கப்புற(ம்) அவர்(க)ளுக்குவேண்டிய உரிமைப் பிரச்சினைகள் இதையெல்லா(ம்) வைத்துக்கொண்டு அவுங்க ஒரு வகையா குழுவா தெரண்டு என்னென்னமோ செய்றுங்க. இருந்தாலும் அதெல்லா(ம்) இப்பத் தேவலெ, கொஞ்ச(ம்) சரிப்படுத்திக்கொண்டு வராங்க. பொதுவா மாணவர்(க)ளுக்கு முன் காலத்தைப் போல அவ்வள(வு) ஒரு அமைதியான சூழ்நிலை இல்லேன்(னு) சொல்லலா(ம்). அதுக்குக் காரணம் ஒரு பக்க(ம்) பத்திரிகை(க)ள், அந்த அரசியல் செய்திகள், அரசியல் கட்சிகள், இவைகளெல்லா(ம்) ஒரு பக்க(ம்) இழுக்க இன்னொரு பக்க(ம்) அவர்களுடைய சிந்தனை, அவர்(க)ளுடைய ஓய்வு நேரம் இவையெல்லா(ம்) இந்தக்கலையென்ற பெயராலே சினிமா, நாடக(ம்) இதிலெல்லா(ம்) மிகுதியா போவுது. அவர்களுக்கு 'முன்னெ ஆசிரியர்(க)ளும் நூல் நிலையமுமா இருக்கிற ஒரு நெலமெ இப்போ இல்லெ. மாணவர்கள் கல்லூரிலெ படிக்கும் போதே இப்ப பலவற்றைத் தெரிந்து கொள்ளவேண்டிய நெருக்கடியில்ருக்காங்க.

இராமகிருஷ்ணன் : ஹ ஹ் ஹ

பேராசிரியர் வரதராசன் : ஆகையினாலெ, இளம் சிறு பிள்ளைகள் ஒலகமறியாத பிள்ளைகளா இனிமேல் வாழமாட்டார்கள், மாணவர்கள். ஏறக்குறைய பெரியவர்களுக்குத் தெரியவேண்டிய அவ்வள(வு) செய்திகள்ளெ முக்கால் பகுதியாவது...

இராமகிருஷ்ணன் : ஹ ஹ் ஹ

பேராசிரியர் வரதராசன் : தெரிந்து கொண்டு..
மாணவர்கள்...
அவர்களோடு வாழ்க்கையில் போட்டியிட்ற நெலமெக்கி வந்திருக்காங்க. அதனால்தான் சிக்கல்கள். படிப்பு மட்டுமா இருந்தா(ங்க)ன்னு சிக்கல் வராது. படிப்போடு மட்டு(ம்) இருக்க முடியலெ இன்றைக்கு. அவர்(க)ளிருந்தா கூட வெளியார் இருக்கவிட்டலெ. அரசியல் கட்சிகள்ளெ இழுத்து, அவர்களுக்கு ஏதாவது அந்த சில உணர்ச்சிகளையெல்லா(ம்)

ஊட்டி அவர்(க)ளுடைய படிப்பிலெர்ந்து கொஞ்ச(ம்) இழுக்கறுங்க. அது அப்பிடித்தா(ன்) இருக்கு(ம்). ஆனு இத்தனைக்கிடையிலெ நல்ல மாணவர்கள்ருக்காங்க, படிப்பிலே ஆர்வமுள்ளவர்கள் இருக்காங்க. அவர்(க)ளை யாரு(ம்) மாற்ற முடியலெ, அவர்(க)ள் ஒழுங்கா கடமெயெச் செய்திட்டு, அவங்க படிச்சிட்டுதான் வராங்க.

இராமகிருஷ்ணன் : அப்பொழுது இந்த மாணவர்கள் பிரச்சினைக்கு அடிப்படையான காரண(ம்) வந்து இப்பொழுது இருக்கிற சமுதாய நெலைங்கிறீங்க.

பேராசிரியர் வரதராசன் : ஆமா சமுதாயமே இப்ப மாறிட்டு வருது.

இராமகிருஷ்ணன் : ஊம்.

பேராசிரியர் வரதராசன் : சமுதாய(ம்) இப்ப ரொம்ப வேகமா மாறுகின்ற அந்த மாறுதலாலெ, பல வகையான பிரச்சினைகள் எழுந்துதான் தீரு(ம்), அவற்றை நாம் எப்பிடியாவது தீர்த்து வைத்துக் கொண்டு வாழ்க்கை நடத்தி தா(ன்) ஆகணு(ம்). பள்ளிக்கூட வகுப்பிலெ கற்பித்து(ம்) ஆகணு(ம்). எல்லா(ம்) நடந்து கொண்டுதா(ன்) இருக்கு(ம்). முன்னெக் காலத்தெப்போல, நாம் அந்தக் காலத்தெப் பாத்திட்டு அந்த நல்ல காலமில்லையே நல்ல காலம் போய்ட்டுதேன்னு கவலெப்படுவதிலெ பிரயோசனமில்லெ. இருக்கற நெலமெயெல்லா(ம்) எண்ணிப் பாத்து, இருக்கிற சூழ்நிலைக்குத் தகுந்தபடி நாம் மாற்றி யமைத்துக் கொண்டு மாணவர்(க)ளு(ம்) நாட்டுக்குப் பயன்படணு(ம்), இந்த வகையிலெ ஏதாவது திட்டங்கள் அமைக்கணு(ம்)

EXERCISES

I. Rewrite the following sentences in written Tamil :

1. அப்பிடீங்களா? அப்பொ இன்னிக்கின்ன விடுமுறைங்களா ஒங்களுக்கு?
2. அதுவும் ஏப்ரல் பிறந்துட்டுது, ஏப்ரல் ரெண்டாந்தேதி இன்னமேலிருக்க வெய்யில் அதிகமாகும். இப்பதானே தொடங்குதுன்னே சொல்லணும்?
3. அப்பொ நீங்கய பல்கலைக் கழக(த்து)க்கு போறதார்ந்தா எப்போ போவீங்கய?
4. நா(ன்) சாதாரணமாக காலையிலெ சாப்ட்டு வீட்டெ விட்டுப் பொறப்படுவே(ன்).
5. ஆகையினுலெ வெய்யில் நாள்ளெ வேறெ எங்கியாவது போயிருவே(ன்).
6. ஏதாவது கேழ்ப்பே(ன்). அவுங்க ஏதாவது கேழ்ப்பாங்க.
7. ஏதாவது கமிட்டி கூட்டங்கள்ருக்கும்; அதுக்குப் போக வேண்ட்ருக்கும்.
8. அதுக்குப் பெறகு பரீட்சை வேலைகள் ஏதாவதுருக்கும்.
9. ஆராய்ச்சி யெல்லாம் அங்கெ செய்ய முடியறதில்லெ. அங்கெ சில குறிப்புகள்ளாம் பார்த்து எடுத்திட்டு வீட்டுக்கு வந்(து)தா(ன்) செய்ய வேண்டிய வருது.
10. அவர்களோடு வாழ்க்கையில் போட்டியிட்ற நெலமெக்கி வந்திருக்காங்க.

II. Vocabulary Exercise :

(*a*) *write a derivative noun each of the words given below, following the model :*

Model :- வளர்—வளர்ச்சி

(i) மலர்
(ii) பயில்
(iii) எழு
(iv) தாழ்
(v) உணர்
(vi) தளர்
(vii) குளிர்
(viii) தொடர்

(b) Split the following into constituent words and write meanings for the same :

(i) பல்கலைக் கழகம்

(ii) நூல் நிலையம்

(iii) விடுமுறை

(iv) சூழ்நிலை

III. *Fill up the blanks choosing the correct item.*

Make changes in the sentence if necessary.

1. விடுமுறையா இருந்தால்——,வேலையாருந்தாலும் எல்லாம் ஒன்றுதான்.

(i) என்றால்

(ii) உம்

(iii) கு

2. நான் அவர்கள்——வழிகாட்ட வேண்டிருக்கும்.

(i) கு

(ii) இல்

(iii) ஒடு

3. அப்போ நீங்க்ய பல்கலைக் கழகம்——போறதார்ந்தா எப்ப போவீங்க்ய?

(i) இல்

(ii) கு

(iii) ஆல்

4. ஒலகமறியாத பிள்ளைகள்—இனிமேல் வாழமாட்டார்கள் மாணவர்கள்.

(i) ஆ

(ii) ஒடு

(iii) கு

5. அவர்கள் ஒழுங்கா கடமெ—— செய்திட்டுதான் வராங்க.

(i) ஆல்

(ii) ஒடு

(iii) ஐ

IV. *Substitution*:

1. நான் சாதாரணமா காலேயிலே சாப்பட்டு வீட்டெ விட்டுப் பொறப்படுவேன்.

(*a*) Substitute the following for சாதாரணமா after making necessary changes in the given words:

(i) வேகம்

(ii) அவசரம்

(iii) ஆயாசம்

(vi) மெதுவு

(*b*) Substitute the following for காலையிலெ after making necessary changes in the given words:

(i) சாயங்காலம்

(ii) ராத்திரி

(iii) மத்தியானம்

(*c*) Substitute the following for சாப்பாடு after making necessary changes in the given words:

(i) குளி

(ii) எழுது

(iii) கும்பிடு

(iv) படி

(*d*) Substitute the following for வீட்டெ after making necessary changes in the given words:

(i) கல்லூரி

(ii) பள்ளிக்கூடம்

(iii) ஆபீஸ்

(iv) தியேட்டர்

2. அவர்களுக்கு ஒழுங்காபாடம் நடத்திக் கொண்டு வரேன்

(*a*) Substitute the following for **நடத்தி** after making necessary changes in the given words:

(i) சொல்லு
(ii) கற்பி
(iii) எழுது

(*b*) Substitute the following for **அவர்களுக்கு** after making necessary changes in the given words:

(i) மாணவர்கள்
(ii) மாணவியர்கள்
(iii) தம்பி

3. அந்தப் பாடத்திலெ ஈடுபாடு உண்டாகி, அதிலெ ஒரு பட்டப் படிப்பு பெற்ற பிறகுதானே பல்கலைக் கழகத்திற்கு வராங்க.

(*a*) Substitute the following for **பாடத்திலெ** after making changes in the given words:

(i) துறை
(ii) விஞ்ஞானம்
(iii) அரசியல்

(*b*) Substitute the following for **உண்டாகி** after making necessary changes in the given words:

(i) ஏற்படு
(ii) வளர்
(iii) உருவாகு
(iv) கொள்

(*c*) Substitute the following for பெற்ற after making necessary changes in the given words:

(i) அடைந்தது
(ii) கிட்டியது
(iii) வாங்கியது

V. *Rewrite the following sentences by substituting one item at a time.*

1. தனித்தனியா ஒவ்வொருவருக்கு(ம்) ஒரு நேர(ம்) ஒருநாள் குறிப்பிட்டு, அந்த நாள்ளெ வரச் சொல்லி அவர்(க)ளுடைய அந்த ஆராய்ச்சியெப் பற்றிப் பேசி, அவர்(க)ளுக்கு வழி காட்ட வேண்ட்ருக்கு(ம்).

   (i) பொதுவா
   (ii) சமயத்திலெ
   (iii) கதையெ
   (iv) ஒதுக்கி

2. இருந்தாலு(ம்) அதெல்லா(ம்) இப்பத் தெவலெ, கொஞ்ச(ம்) சரிப்படுத்திக் கொண்டு வராங்க.

   (i) பரவாயில்லெ
   (ii) சிலதெல்லாம்
   (iii) பெரிசாக்கி
   (iv) போறுங்க

3. மாணவர்கள் கல்லூரிலெ படிக்கும்போதே இப்ப பலவற்றைத் தெரிந்து கொள்ள வேண்டிய நெருக்கடியில்ருக்காங்க.

   (i) நிறைய
   (ii) சந்தர்ப்பத்லெ
   (iii) இருக்கும்
   (iv) பேசி

VI. *Transform the following into positive sentences:*

1. மத்த நாள்ளெ வெய்யிலெல்லா(ம்) நெனவு வராது.
2. ஆகையினுலே வெய்யிலோ, வெய்யில்ரு(க்)குதோ தெரியாது.
3. பெரும்பாலு(ம்) ஆராய்ச்சியெல்லா(ம்) அங்கெ செய்ய முடியறதில்லெ.
4. ஒருவகையான வேலெயின்(னு) சொல்ல முடியாது.
5. சுவர்களுக்கு முன்னெ ஆசிரியர்களும் நூல் நிலெயமுமா இருக்கிற ஒரு நெலமெ இப்பொ இல்லெ.

VII. *Transform the following into declarative sentences.*

1. அப்பொ இன்னிக்கின்ன விடுமுறைங்களா ஒங்களுக்கு?
2. மே மாசம் பொறந்திட்டா எனக்கு விடுமுறையில்லையா?
3. அங்கெ நீங்கிய மாணவர்களுக்கு கற்பிக்கிறீங்களா? அல்லது வெறும் ஆராய்ச்சிக்கு மட்டும் வழிகாட்றீங்களா?
4. வெய்யில் அதிகமா இருக்குல்லீங்க?
5. உங்களுக்கு நெறைய வேலெ உண்டுங்களா?

VIII. *Change each of the followiny complex sentences into simple sentences.*

1. மே முதல் வாரம் வந்தவுடனே வெய்யில் ரொம்ப வேகமாருக்கும்.
2. நா(ன்) சாதாரணமா காலையிலெ சாப்ட்டு வீட்டெ விட்டுப் பொறப்படுவே(ன்).
3. அந்த வெய்யில் நேரத்தில்தா(ன்) போயி நா(ன்) வேலயெல்லா(ம்) தொடங்கறே(ன்).
4. தபாலெல்லா(ம்) பிரிச்சுப் பாத்து, அதுக்கப்பாலெ அவசரமா எழுத வேண்டியதெல்லா(ம்) எழுதிட்டு, மெல்ல எழுத வேண்டியதெல்லா(ம்) படிச்சு என்ன செய்யலாம்னு எண்ணிக்கொண்டிருப்பே(ன்).

IX. *Change the following into complex sentences :*

1. ஏதாவது கமிட்டி கூட்டங்கள்ருக்கும். அதுக்குப்போக வேண்ட்ருக்கும்.
2. அவற்றை நாம் எப்பிடியாவது தீர்த்து வைத்துக்கொண்டு வாழ்க்கை நடத்திதா(ன்) ஆகணும். பள்ளிக்கூட வகுப்பிலெ கற்பித்து(ம்) ஆகுணும்.
3. வருகின்ற மாணவர்களும் தொகை கொறவுங்க. அதனுலெ, அங்கெ இப்படிப்பட்ட இந்த ஒழுங்கு முறைப் பிரச்சனை யெல்லாம், பல்கலைக் கழகத்துக்குள்ளெ வரதில்லெ.
4. விடுமுறையா இருந்தாலும் வேலையாருந்தாலும் எல்லாம் ஒன்றுதான் எனக்கு. விடுமுறை நாள்ளெயும் ஏதாவது வேலை செய்திட்டுதான் இருக்கேன்.

X. *Match the phrases given in column I with those given in column II to make appropriate sentences.*

	I	II
1.	இதையெல்லாம் வைத்துக் கொண்டு அவுங்க	வேறெ எங்கியாவது போயிடுவே(ன்)
2.	இதையல்லாமல் நானாகவே	என்னென்னமோ செய்யறாங்க
3.	மற்ற கல்லூரி மாணவர் களுக்கும் பல்கலைக்கழகத் திலெ ஆராய்ச்சி செய்யிற மாணவர்களுக்கும்	தொகை கொறவுங்க
4.	அதுவும் வருகின்ற மாண வர்களும்	கொஞ்சம் வேறுபாடு உண்டு.
5.	வெய்யில் நாள்ளெ	சிலபொருள் எடுத்துக்கொண்டு ஆராய வேண்டியுமிருக்குது.

XI. *Summarize the ideas of Dr. M. Varadarajan on today's student life, not exceeding 15 lines.*

ம. பொ. சி. - வானொலிப் பேட்டி

[This text uses mainly the formal written style The text as a whole uses only a few loan words taken from spoken style.]

பேட்டியாளர் : ம. பொ. சி. யவர்களே! வணக்கம்.

ம. பொ. சி. : வணக்கம்

பேட்டியாளர் : உங்களுக்கு சாகித்திய அகடமி பரிசு கிடைத்ததற்காக நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்.

எங்களுடைய வாழ்த்துக்கள். நீங்கள் இதுவரை சுமார் எத்தனை நூல்கள் எழுதியிருப்பீர்கள்?

ம. பொ. சி. : சுமார் அறுபது நூல்கள் வரை எழுதியிருக்கிறேன்.

பேட்டியாளர் : அதில் முக்கியமான நூல்கள் என்ன என்று சொல்ல முடியுமா?

ம. பொ. சி. : இலக்கிய நூல்களாக வீரக்கண்ணகி, பாரதியின் ஒருமைப்பாடு, மகாகவி பாரதி

பேட்டியாளர் : ஓஹோ

ம. பொ. சி. : வரலாற்று நூல்களாக வீரபாண்டியக் கட்டபொம்மன், [1]கப்பலோட்டிய தமிழன், இன்னும் அன்றாட நடைமுறை அரசியலைப் பற்றியவையும் நிறைய எழுதியிருக்கிறேன்.

---

[1] கப்பலோட்டிய தமிழன் — Tamilian who sailed the ship. This is a biography of V. O. Chidambaram Pillai who took part in the freedom struggle. He was the first Indian who organised a shipping company, and ran shipping services in competition with the British.

பேட்டியாளர் : ஓஹோ! "வள்ளலார் கண்ட ஒருமைப் பாடு" என்ற இந்த நூலை எழுத வேண்டும் என்ற ஆர்வம் உங்களுக்கு எப்படி ஏற்பட்டது?

ம. பொ. சி. : [2]வள்ளலாரைப் பற்றிய பல தவறான செய்திகள் நாட்டில் நிலவி வருவதையறிந்து அவற்றைப் போக்க வேண்டும் என்பதனாலும் எழுதினேன்.

பேட்டியாளர் : ஊம் ஹாம்

ம. பொ. சி. : இரண்டாவதாக வள்ளலாருடைய சீர்திருத்தக்கொள்கைகளைப் பற்றியும் மக்களுக்குத் தெளிவாகத் தெரிந்திருக்கவில்லை.

பேட்டியாளர் : ஓஹோ

ம. பொ. சி. : அதனாலும் அவருடைய வரலாற்றை [3]விமர்சனரீதியில் எழுத வேண்டுமென்ற ஆசை. ஒன்பது வருஷ காலம் சேர்த்து.

பேட்டியாளர் : ஓஹோ

ம. பொ. சி. : வைத்த குறிப்புகளைக் கொண்டு இந்த நூல் உருவாகியது.

பேட்டியாளர் : ஓஹோ அந்த நூலின் உட்பொருளை அதாவது ராமலிங்க அடிகளாரின் வாழ்க்கையைப் பற்றி உட்பொருள் அதிகமாக இருக்குமா? அல்லது அவர்களுடைய பாடல்களைப் பற்றி அதிகமாக இருக்குமா? அல்லது இரண்டும் கலந்தே எழுதியிருக்கின்றீர்களா?

ம. பொ. சி. : அப்படிப் பிரித்துச் சொல்லிவிட முடியாது. அவருடைய, அவர் [4]லட்சிய புருஷராதலால்

பேட்டியாளர் : ஓஹோ

---

2 வள்ளலார் — lit. a philanthropist; this is used here to refer to Ramalinga Swamigal. He was a saint and a religious reformer who fought against castism and religious fanatism. He is referred to as வள்ளலார் for his grace and kindness to all beings.

3 விமர்சன ரீதியில் — in the style of a reviewing; in the oritical manner.

4 லட்சிய புருஷர் — ideal man; a man of principle

ம. பொ. சி. : அவருடைய வரலாறே லச்சியம்தான்

பேட்டியாளர் : உம் ஹ¬ம்

ம. பொ. சி. : ஆனல் அவருடைய வாழ்க்கை வரலாறு

பேட்டியாளர் : ஊம்

ம. பொ. சி. : அவருடைய கொள்கை இரண்டையுங் கலந்து தானெழுதியிருக்கிறேன்.

பேட்டியாளர் : ஓஹோ, இந்த நூலின் [5]வாயிலாக தமிழ் மக்கள் எதை முக்கியமாக உணர்ந்து கொள்ளவேண்டுமென்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்?

ம. பொ. சி. : மக்களெல்லாம் ஜாதி, மத வேறுபாடுகளை விரோதப்பாடுகளாக மாற்றிக் கொள்ளாமல், ஒருமைப்பாட்டுடன் வாழவேண்டுமென்பதை உணர்வார்களென்று

பேட்டியாளர் : ஓஹோ

ம. பொ. சி. : அதனல்தான் நூலின் பெயரே ஒருமைப்பாடென்று.

பேட்டியாளர் : ஒருமைப்பாடு. இப்படி இந்தப்பழைய காலத்தில் புலவர்களுக்கு செப்பேடு, பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சியைப் போல, இந்த அகடமி பரிசு அந்த நினைவுகளெல்லாம் உங்களுக்கு ஏற்படுத்தியிருக்குமென்று நினைக்கிறேன்.

ம. பொ. சி. : ஆமாம். இன்னங்கேட்டால் அதைவிட இது இன்னும் சிறப்பு என்றே சொல்லலாம்.

பேட்டியாளர் : ஓஹோ, எந்த வகையில்?

ம. பொ. சி. : அப்பொழுதெல்லாம் குறுநிலமன்னர்களோ தமிழ் நில மன்னர்களோதான் புலவர்களுக்குக் கொடுத்தார்கள். இப்பொழுது பாரத முழுவதற்கும் ஆன ஒரு தலைவரல்லவா சக்கரவர்த்தியினிடத்திலிருந்து கொடுத்திருக்கிறார்?

பேட்டியாளர் : ஓஹோ, தாங்கள் சக்கரவர்த்தியென்று குறிப்பிடுவது தங்களுக்குப் பரிசளித்த குடியரசுத் தலைவரையென்று நினைக்கிறேன். மிகவும் மகிழ்ச்சிக்குரிய நிகழ்ச்சிதானது.

வாயிலாக — through

ம. பொ. சி. : ஆமாம், பழைய சக்கரவர்த்தி இருந்த இடத்தில் இப்பொழுது ஜனநாயக சக்கரவர்த்தி இருக்கிறாரல்லவா?

பேட்டியாளர் : ஊம்

ம. பொ. சி. : அத்துடன் இன்னொரு பெரிய மகிழ்ச்சி என்னவென்றால்

பேட்டியாளர் : என்ன?

ம. பொ. சி. : இந்த நூலை

பேட்டியாளர் : ஊம்

ம. பொ. சி. : முதல் பதிப்பு வெளியான காலத்திலேயே நான் அவருக்கு அனுப்பிவைத்தேன்.

பேட்டியாளர் : ஓஹோ

ம. பொ. சி. : அதை அவர் படித்ததாக இடையில் ஒரு சந்தர்ப்பத்தில் என்னிடம் சொன்னார்.

பேட்டியாளர் : சரி, சரி

ம. பொ. சி. : பரிசு வழங்கிய நாளிலும்

பேட்டியாளர் : ஊம்

ம. பொ. சி. : "ராமலிங்க சுவாமிகள் சரித்திரத்தை நீங்கள் ரொம்ப நன்றாக எழுதியிருக்கிறீர்கள்

பேட்டியாளர் : ஆஹா

ம. பொ. சி. : என்று சொல்லி பரிசு கொடுத்தார்.

பேட்டியாளர் : சரி, சரி.

ம. பொ. சி. : அவர் படித்துக் கொடுத்திருப்பதில் எனக்கு ஒரு பெரிய மகிழ்ச்சி

பேட்டியாளர்: மிகவும் தமிழுக்கே அது பெருமைதான்

ம. பொ. சி. : ஆமாம்

பேட்டியாளர்; இப்படிப் பரிசு கிடைப்பதனால் மாத்திரம் இந்த நூலுக்கு ஒரு பெருமை என்று நினைக்கிறீர்களா? அல்லது இந்த நூல் நாடு முழுவதும் பரவுவதற்கு இது ஒரு வாய்ப்பு என்றும் நினைக்கிறீர்களா?

ம. பொ. சி. ; பரிசு கிடைப்பதனுல் நூலாசிரியனுக்குத்தான் கொஞ்சம் அதிகம் விளம்பரம், பெருமை

பேட்டியாளர்: ஆமாம்

ம. பொ. சி. : நூலின் பெருமை அதில் உள்ள விஷயத்தை மக்கள் வரவேற்பதைப் பொறுத்திருக்கிறது.

பேட்டியாளர்: ஓஹோ

ம. பொ. சி. : அந்த வகையில் இது வரவேற்கப்பட்டிருக்கிறது. ஏனென்ருல்

பேட்டியாளர்; ஊம்

ம. பொ. சி. : வருஷத்துக்கு ஒரு பதிப்பாக நான்கு பதிப்புகள் வெளியாகியிருக்கின்றன.

பேட்டியாளர்: ஓ

ம. பொ. சி. : இது நான்காவது பதிப்பு

பேட்டியாளர்: நான்காவது பதிப்பு

ம. பொ. சி. : அதிலிருந்து தமிழ்நாட்டு மக்கள் அதிகமாக இதைப் படித்திருக்கிருர்களென்று

பேட்டியாளர்: ஆமாம்

ம. பொ. சி. : தெரிகிறது

பேட்டியாளர்: ஆமாம், ஆமாம். சாகித்திய அகடமி பரிசு இது பெற்றதனுல் இன்னும் பிற மொழிகளிலும் இது பரவுவதற்கு வாய்ப்பு இருக்குமென்று நினைக்கிறீர்களா?

ம. பொ. சி. : நினைக்கிறேன். சாகித்திய அகடமியே அதைச் செய்யுமென்று எண்ணுகிறேன்

பேட்டியாளர்! ஓஹோ, பிறகு இந்த வள்ளலார் அவர்களுடைய செய்தி, அவர்களுடைய இலக்கிய நயம் இதெல்லாம் இதன் மூலம் நாடு முழுவதும் பரவுவதற்கு ஒரு வாய்ப்பிருக்கிறது.

ம. பொ. சி. : இப்பொழுதே நிறையப் பரவியிருக்கிறது.

பேட்டியாளர்: ஊம்

ம. பொ. சி. : அதனால் [6]சன்மார்க்க இயக்கமே கூட மறுமலர்ச்சி அடஞ்சிருக்கு

பேட்டியாளர்: ஓஹோ, ம. பொ. சி. அவர்களே! இந்த ஆண்டுக்குத் தமிழ் நாட்டிலுள்ள இரண்டு பேருக்கு சாகித்திய அகடமி பரிசு கொடுத்திருக்கிறது. நமக்கு மிகவும் மகிழ்ச்சி தருகிறது. தமிழ் நூலுக்காக, அதாவது வள்ளலார் கண்ட ஒருமைப்பாட்டுக்காக, தங்களுக்கும், ஸம்ஸ்கிருத இலக்கியம் பற்றிய ஆங்கில நூலுக்காக டாக்டர் ராகவன் அவர்களுக்கும் பரிசு கிடைத்திருக்கிறது. இந்த வகையிலே தமிழ் நாடு இரட்டிப்பு மகிழ்ச்சி அடையவேண்டிய நிலைமை, இந்த சமயத்திலே, எழுத்துத் துறையைப் பற்றி, இலக்கியத் துறையைப் பற்றித் தாங்கள் ஏதும் செய்தி கூற விரும்புகிறீர்களா?

ம. பொ. சி. : நிறைய இருக்கிறது சொல்ல, ஆனால் சுருக்கமாக சொல்லுகிறேன்.

பேட்டியாளர்: ஊம்

ம. பொ. சி. : தமிழ் எழுத்தாளர்கள்

பேட்டியாளர்: ஊம்

ம. பொ. சி. : தமிழ் மொழியின் சிறப்பை

பேட்டியாளர்: ஊம்

ம. பொ. சி. : தமிழ் இலக்கியங்களின் பெருமையை

பேட்டியாளர்: ஊம்

ம. பொ. சி. : தமிழ் நாட்டுக்கு வெளியே பரவும்படி செய்தாக வேண்டும்.

பேட்டியாளர்: ஓஹோ! ஊம்

ம. பொ. சி. : அது ரொம்ப நாளாக பாக்கி விடப்பட்டுள்ள விஷயம்

பேட்டியாளர்: ஊம்

ம. பொ. சி. : இப்பொழுது நான் பரிசு வாங்க டெல்லி போயிருந்த போது

பேட்டியாளர்: ஊம்

சன்மார்க்க இயக்கம் — சமரச சன்மார்க்கம், the name of the discipline
— of Ramalinga Swamy

ம. பொ சி. : பல மொழியினர் கூடிய கருத்தரங்கில் பேசினேன்.

பேட்டியாளர்: ஊம்ஹூம்

ம. பொ, சி. : இந்தக் குறையை வடநாட்டு எழுத்தாளர்க்கும் சொன்னேன்

பேட்டியாளர்: ஊம் ஹூம்

ம. பொ. சி. : அவர்கள் மிக நன்ருக உணர்ந்தார்கள்.

பேட்டியாளர்: ஓஹோ

ம. பொ. சி. : குறிப்பாக சிலப்பதிகாரத்தைப் பற்றி நான் சொன்ன போது

பேட்டியாளர்: ஊம்

ம. பொ. சி. : அதைத் தெரிந்து கொள்ளாதவர்கள் என்னைச் சூழ்ந்து முற்றுகை யிட்டுக் கேட்டார்கள்

பேட்டியாளர்: ஓஹோ

ம. பொ, சி. : அதனுல் தமிழ் நாட்டிலுள்ள அறிவாளிகள் இந்தக் குறையைப் போக்க முயல வேண்டும்

பேட்டியாளர்: ஊம். அதாவது தமிழ் மொழி, தமிழ் இலக்கியத்தைப் பற்றி, மற்ற மாநில மொழிகள், இலக்கிய கர்த்தாக்களுக்குத் தெரிவிக்க வேண்டும்

ம. பொ: சி. : தெரிவிக்க வேண்டும். தெரிவிக்க வேண்டும்.

பேட்டியாளர்: ஊம்ஹூம்

ம. பொ. சி. : அது ஒரு மிக நல்ல யோசனைதான்

பேட்டியாளர்: இந்த வாய்ப்பை எங்களுக்கு அளித்து, வானொலி நேயர்களுக்கு தங்களுடைய கருத்துரைகளைக் கேட்பதற்கு ஒரு சந்தர்ப்பம் அளித்ததற்காக வானொலியின் சார்பிலே எங்களுடைய நன்றி.

ம. பொ. சி. : அழைத்ததற்காக நானும் நன்றி செலுத்துகிறேன்.

EXERCISES

I. *Vocabulary Exercise*:

(*a*) Write an abstract noun for each of the words given below, following the model:

Model :- ஒரு——ஒருமை

(i) நுண்

(ii) பரு

(iii) வெள்

(iv) கரு

(v) பெரு

(*b*) Split the compounds into constituent words and give meanings for the same.

(i) வீரக்கண்ணகி

(ii) மகாகவி

(iii) விமர்சனரீதி

(iv) உட்பொருள்

(v) குடியரசுத்தலைவர்

II. *Fill up the blanks choosing the correct item. Make changes in the sentence if necessary.*

1. உங்கள்——சாகித்திய அகடமி பரிசு கிடைத்ததற்காக நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்.

(i) உக்கு

(ii) உக்குள்

(iii) ஆக

2. நான் சுமார் அறுபது நூல்கள்வரை எழுதியிருக்கிற்——

(i) ஆள்

(ii) ஆன்

(iii) ஏன்

3. இந்த நூலை எழுத வேண்டும் என்ற ஆர்வம் எப்படி உங்களுக்கு ஏற்படு——?

(i) ஏன்

(ii) அது

(iii) அன

4. அதனுலும் அவருடைய வரலாறு——விமர்சனரீதியில் எழுத வேண்டுமென்ற ஆசை.

(i) ஐ

(ii) இன் மேல்

(iii) குள்

5. இந்த நூலின் வாயில்——தமிழ் மக்கள் எதை முக்கியமாக உணர்ந்து கொள்ள வேண்டுமென்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்?

(i) இல்

(ii) ஆக

(iii) ஆல்

6. முதல் பதிப்பு வெளியான காலத்திலேயே நான் அவர்——அனுப்பி வைத்தேன்.

(i) கு

(ii) உடைய

(iii) இன்

III. *Substitution*

1. இரண்டாவதாக வள்ளலாருடைய சீர்திருத்தக் கொள்கைகளைப் பற்றியும் மக்களுக்குத் தெளிவாகத் தெரிந்திருக்கவில்லை.

(*a*) Substitute the following for **இரண்டாவதாக** after making necessary changes in the given words:

(i) முதல்

(ii) மூன்று

(iii) ஆறு

(*b*) Substitute the following for வள்ளலாருடைய after making necessary changes in the given words :

(i) பெர்னுட்ஷா

(ii) பாரதி

(iii) பாரதிதாசன்

(*c*) Substitute the following for மக்களுக்கு after making necessary changes in the given words :

(i) அவர்கள்

(ii) நாங்கள்

(iii) தமிழர்கள்

2. ராமலிங்க சுவாமிகள் சரித்திரத்தை நீங்கள் ரொம்ப நன்ருக எழுதியிருக்கிறீர்கள்.

(*a*) Substitute the following for சரித்திரத்தை after making necessary changes in the given words :

(i) வரலாறு

(ii) காவியம்

(iii) வாழ்க்கை

(*b*) Substitute the following for நன்ருக after making necessary changes in the given words :

(i) மோசம்

(ii) தவறு

(iii) முன்னுக்குப் பின் முரண்

(*c*) Substitute the following for எழுதி after making necessary changes in the given words :

(i) சொல்

(ii) வரை

(iii) படமெடு

3. *சாகித்ய அகாடமியெ அதைச் செய்யுமென்று எண்ணுகிறேன்.*

(*a*) Substitute the following for **செய்யும்** after making necessary changes in the given words :

(i) *நிறைவேற்று*

(ii) *முடி*

(iii) *நடத்து*

(*b*) Substitute the following for **அதை** after making necessary changes in the given words :

(i) *அக்காரியம்*

(ii) *இந்த நியமனம்*

(iii) *இவ்வேற்பாடு*

(*c*) Substitute the following for **எண்ணுகிறேன்** after making necessary changes in the given words :

(i) *சொல்*

(ii) *நினை*

(iii) *கருது*

IV. *Rewrite the following sentences by substituting one item at a time:*

1. *இப்படிப் பரிசு கிடைப்பதனால் மாத்திரம் இந்த நூலுக்கு ஒரு பெருமை என்று நினைக்கிறீர்களா?*

(i) *மட்டும்*

(ii) *இதைப்போல்*

(iii) *இக்காவியத்திற்கு*

(iv) *எண்ணுகிறீர்களா*

2. *நூலின் பெருமை அதில் உள்ள விஷயத்தை மக்கள் வரவேற்பதைப் பொறுத்திருக்கிறது.*

(i) *அடங்கிய*

(ii) *இந்தப் புத்தகத்தின்*

(iii) *சார்ந்திருக்கிறது*

(iv) *நாடு*

3. சாகித்திய அகடமிப்பரிசு இது பெற்றதனுல் இன்னும் பிற மொழிகளிலும் இது பரவுவதற்கு வாய்ப்பு இருக்குமென்று நினைக்கிறீர்களா?

(i) அடைந்ததால்

(ii) நாடுகளிலும்

(iii) நோபல்

(iv) ஏற்படும்

4. அதனுல் சன்மார்க்க இயக்கமே கூட மறுமலர்ச்சி அடஞ்சிருக்கு

(i) திராவிட இயக்கமே

(ii) ஆகையால்

(iii) புத்துணர்ச்சி

(iv) பெற்று

5. இந்த ஆண்டுக்கு தமிழ் நாட்டிலுள்ள இரண்டு பேருக்கு சாகித்திய அகடமி பரிசு கொடுத்திருக்கிறது.

(i) பத்து

(ii) இவ்வருஷம்

(iii) பரிசளித்திருக்கிறது

(iv) இந்தியாவிலுள்ள

6. அழைத்ததற்காக நானும் நன்றி செலுத்துகிறேன்.

(i) கூறு

(ii) நாங்களும்

(iii) வாய்ப்பு கொடுத்ததற்காக

V. *Transform the following into negative sentences.*

1. உங்களுக்கு சாகித்திய அகடமி பரிசு கிடைத்ததற்காக நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

2. வள்ளலாரைப் பற்றிய பல தவறுன செய்திகள் நாட்டில் நிலவி வருகின்றன.

3. அவருடைய வாழ்க்கை வரலாறு அவருடைய கொள்கை இரண்டையும் கலந்து எழுதுவேன்.

4. அதைவிட இது சிறப்பு.

5. நீங்கள் ரொம்ப நன்ருக எழுதியிருக்கிறீர்கள்.

VI. *Transform the following into interrogative sentences, using the underlined phrase/word, following the model:*

Model :–*1.* அழைத்ததற்காக நானும் நன்றி செலுத்துகிறேன்.

எதற்காக நீங்களும் நன்றி செலுத்துகிறீர்கள்?

2. **உங்களுக்கு சாகித்திய அகடமி பரிசு கிடைத்ததற்காக** நாங்கள் மிகவும் மகிழ்ச்சி யடைகிறோம்.

3. **படிப்பதற்காக** முதல் பதிப்பு வெளியான காலத்திலேயே நான் அவருக்கு அனுப்பி வைத்தேன்.

4. **இதைப் பரப்புவதற்காக** சாகித்ய அகடமியே அதைச் செய்யும்.

5. **தமிழ் நூலுக்காக** உங்களுக்குப் பரிசு கிடைத்திருக்கிறது.

6. **சந்தர்ப்பம் அளித்ததற்காக** வானொலியின் சார்பிலே எங்களுடைய நன்றி.

VII. *Change each of the following complex sentences into simple sentences.*

1. உங்களுக்கு சாகித்திய அகடமி பரிசு கிடைத்ததற்காக நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்.
2. வள்ளலாரைப் பற்றிய பல தவறான செய்திகள் நாட்டில் நிலவி வருவதை யறிந்து அவற்றைப் போக்க வேண்டும் என்பதனாலும் எழுதினேன்.
3. அவருடைய வரலாற்றை விமர்சன ரீதியில் எழுத வேண்டுமென்ற ஆசையால் ஒன்பது வருஷ காலம் சேர்த்து வைத்த குறிப்புக்களைக் கொண்டு இந்த நூல் உருவாகியது.
4. அதை அவர் படித்ததாக இடையில் ஒரு சந்தர்ப்பத்தில் என்னிடம் சொன்னார்.
5. அவர் படித்துக் கொடுத்திருப்பதில் எனக்கு ஒரு பெரிய மகிழ்ச்சி.

VIII. *Change the following sentences into complex sentences:*

1. அப்படிப் பிரித்துச் சொல்லிவிட முடியாது. அவர் லட்சிய புருஷராத லால், அவருடைய வரலாறே லட்சியம்தான்.

2. மக்களெல்லாம் ஜாதி, மத வேறுபாடுகளை விரோதப் பாடுகளாக மாற்றிக் கொள்ளக்கூடாது. ஒருமைப்பாடுடன் வாழவேண்டும். இதை உணர்வார்களென்று எதிர்பார்க்கிறேன்.

3. அப்பொழுதெல்லாம் குறுநில மன்னர்களோ தமிழ் மன்னர்களோதான் புலவர்களுக்குக் கொடுத்தார்கள். இப்பொழுது பாரத முழுவதற்கும் ஆன ஒரு தலைவரல்லவா சக்கரவர்த்தியினிடத்திலிருந்து கொடுத்திருக் கிறார்.

4. முதல் பதிப்பு வெளியான காலத்தில் நான் அவருக்கு அனுப்பி வைத்தேன், அதை அவர் படித்ததாக இடையில் ஒரு சந்தர்ப்பத்தில் என்னிடம் சொன்னார்.

IX. *Match the phrases given in column I with those given in column II to make appropriate sentences :*

I	II
1. உங்களுக்கு சாகித்திய அகடமி பரிசு கிடைத்ததற்காக	இந்த நூல் உருவாகியது.
2. இந்த நூலை எழுத வேண்டும் என்ற ஆர்வம்	ஒருமைப்பாடுடன் வாழ வேண்டும்.
3. வைத்த குறிப்புக்களைக் கொண்டு	என்னிடம் சொன்னார்.
3. மக்களெல்லாம் ஜாதி, மத வேறுபாடுகளை விரோதப் பாடுகளாக மாற்றிக் கொள்ளாமல்	உங்களுக்கு எப்படி ஏற்பட்டது?
5. தாங்கள் சக்கரவர்தியென்று குறிப்பிடுவது	எங்களுடைய வாழ்த்துக்கள்.
6. அதை அவர் படித்ததாக இடையில்	தங்களுக்குப் பரிசளித்த குடியரசுத் தலைவரென்று நினைக்கிறேன்.

கன்றின் தாய்

ஜி. மாணிக்கவாசகன்

[This is a play with a historical background presented in written style. In general the style used in this text is characteristic of many plays written with a historical background.]

[1]நாடக உறுப்பினர்

மன்னன்

அமைச்சர்

அரசி

கவிஞர்

இளவரசன் வீதிவிடங்கன்

காட்சி 1

மன்னன் : வருக அமைச்சரே வருக!

அமைச்சர் : சோழப் [2]பேரரசின் புகழும், வீரமும் நாளும் வளர்ந்து வருகிறது வேந்தே! [3]நின்னுல் நாளும் வளர்கிறது.

---

1 நாடக உறுப்பினர் — dramatis personal, literally meaning members of the drama

2 பேரரசு — empire

3 நின்னுல் — archaic form for உன்னுல்

மன்னன் : வளரட்டும், [4]வானுற விளங்கட்டும். ஆனால் [5]களம் பல கண்டவன் [6]கடாரம் வென்றவன் என்கின்ற புகழ்மாலை என் [7]தோளைத் தழுவுவது இன்றோடு நிற்கட்டும், என்னோடு முடியட்டும்

அமைச்சர் : மன்னா! சோழர் குலப் பேரரசின்......

மன்னன் : வெற்றி வீரத்தை நான் அறிவேன் அமைச்சரே! சுற்றிச் சுழலும் அவர் ஈட்டியும் வாட்களும் இமயப் பெருமலை வரையில் சென்று ஈட்டிய புகழை நான் நன்றாக அறிவேன்.

அமைச்சர் : போர் வேந்தர்தம் [8]குலப் பெருமையரசே! வாளும் வேலும் அவர்க்கு உயிரும், உடலும் போல.

மன்னன் : பெருமை! அமைச்சரே! எதைப் பெருமை யென்கிறீர்? [9]பொதிய மலைத் தென்றல் பூவுக்குப் பேருமை, பூ மலர் சிரிப்பு வண்டுக்குப் பெருமை, வாழும் நமக்குப் போரா பெருமை? ஹ ஹ ஹ...... [10]கொற்கையின் முத்தும், [11]குடவரைத் தந்தமும், [12]யவனச் சிற்பமும், மிசிரப்பட்டும், [13]குலவிக்கிடக்க, அமைச்சரே! இங்கே விளையாதபெருமை போரிலா விளையும்?

---

[4] வானுற — sky-high; as high as the sky. great

[5] களம் பல கண்டவன் — one who has seen/many battle fields i.e. participated in many battles

[6] கடாரம் வென்றவன் — one who won Burma i. e. capture Burma

[7] தோளைத் தழுவுவது — lit. embracing the shoulder. Here it means on the shoulder.

[8] குலப் பெருமை — the pride of the family/dynesty

[9] பொதிய மலைத் தென்றல் பூவுக்குப் பெருமை, பூ மலர் சிரிப்பு வண்டுக்குப் பெருமை — The breeze from Podiyamalai (a hill range in Tirunelveli District) is the pride of flowers and the smiling blossoms of a flower is the pride of the bees

[10] கொற்கையின் முத்து— The pearl from the ancient Pandyan harbour Korkai

[11] குடவரைத்தந்தம் — Ivory from the Chera (now Kerala) Hills குட(ம்) West

[12] யவனச் சிற்பம் — sculpture from Rome & Greece

[13] குலவிக் கிடக்க — lying cheerfully (?) i. e. available in abundance

அமைச்சர் : போரில்லா வீரம், புகழ், வாழ்வு, எல்லாம் வேரில்லா மரம் போல் வீழ்ந்து விடும் மன்னவனே!

மன்னன் : போர் முரசின் ஒலி தேடித் தந்த [14]வெற்றிப் புகழ் மாலையின் மீதமர்ந்து பேசுகின்றீர் அமைச்சரே! [15]வெற்றி முரசும் வெம்போர் முழக்கும் உமக்குக் கட்டிக் கரும்பாக இனிக்கிறது. ஆனால் அந்த வெற்றி முரசுக்குப் பின் அழுந்திக் கிடக்கின்ற [16]வேதனைக் கண்ணீரை நீர் அறியமாட்டீர். விழி நீரால் நதி செய்து வருந்தும் மக்கள், வேதனையின் அறுவடைதான் வெற்றி என்றால் வெற்றி விழாக் கொண்டாட்டம், சாம்ராஜ்யப் [17]புகழ் வேட்டை, எனக்கு வேண்டாம், வேண்டவே......வேண்டாம்.

அமைச்சர் : போர், வெற்றி, [18]புகழ்ப்பரணி இவையெல்லாம் வேட்டையெனின் அவையும் அரசர்க்கு ஓர் கலையன்றோ!

மன்னன் : ஹம்! வேட்டையாடுவது அரசர்க்குக் கலையென்றால், வேடர்க்கது தொழிலாகும். விலங்குகட்கோ [19]உயிரின் பாதை! நாட்டைக் காடாக்கி நானுள விரும்பவில்லை. போரில் மிதந்து வரும் புகழ்த் தென்றல் எனக்கு வேண்டாம். [20]வாயில்லா உயிரினமும் [21]வழக்குரைத்து நீதிபெற, [22]ஆராய்ச்சி மணி கட்டியாளுகின்ற மன்னவன் நான். அன்பாலே இவ்வுலகை ஆள்வோம் அமைச்சரே! அதுதான் நிலைக்கும். [23]நீடித்த புகழ் கொடுக்கும்.

---

14 வெற்றிப் புகழ் மலை — the hill of fame of victory i. e. pinnacle of fame due to victory

15 வெற்றி முரசு — drum (beating) signalling victory

16 வேதனைக் கண்ணீர் — tears caused by sorrow or agony

17 புகழ் வேட்டை — hunting for fame; out to do anything for fame

18 புகழ்ப் பரணி — song of fame; *பரணி* is a form of poetry which is composed in praise of a hero especially a warrior

19 உயிரின் பாதை — *உயிருக்கு உபாதை*—suffering to the living being

20 வாயில்லா உயிரினம்— lit. mouthless beings i. e. non-human beings which cannot speak like humans

21 வழக்குரை — present the dispute to seek justice

22 ஆராய்ச்சிமணி — the bell of olden times which could be rung to complain and seek redressal

23 நீடித்த புகழ் — durable fame

அமைச்சர் : மன்னர் மன்னவ! உன் [24]பொன்னுரை கேட்டுப் [25]புனிதமானேன். பெருமை பெற்றேன். புது உலகின் [26]பொற்கவாடங்கள் திறக்கின்றன. புனிதமிகு லட்சியங்கள் வா வா என்றழைக்கின்றன. சோழர் புகழ் மேலும் உன்னால் சுடர் விடப் போகிறது.

மன்னன் : ஹ! புகழ் மாலை போதும் அமைச்சரே! அதிகமானால் என்னால் சுமக்க முடியாது. நான் வருகிறேன்.

காட்சி 2

மன்னன் : தேவி!

அரசி : வந்துவிட்டீர்களா வேந்தே! போரும் புகழும் தந்த வெற்றிப் பெருமிதத்தில் மூழ்கி எங்கே அந்தப்புரத்தையே மறந்து விட்டீர்களோ என்று நினைத்தேன்,

மன்னன் : ஹ……ஹ……மறந்து விடுவதா? எந்தப் புறம் சென்றாலும் என் சிந்தை இந்தப் புறம்தானே இருக்கும்?

அரசி ; இந்தப் புறம் சிந்தையிருந்தால், நேரே இங்கல்லவா வந்திருப்பீர்கள்? என்னைத் தவிக்க விட நினைக்காமல்

மன்னன் : நேரே இங்கேதான் வந்தேன் [27]நேரிழையே! வரும் வழியில் அமைச்சர் பிடித்துக் கொண்டார்.

அரசி : அ(மை)மச்சர் பிடித்துக் கொண்டாரா? ஹம், ஹம்……சரிதா(ன்); அடுத்த போர் முகாம் எங்கேயென்று கேட்டாராக்கும்?

---

[24] பொன்னுரை — golden advice

[25] புனிதமானேன் — I became sacred

[26] பொற்கவாடங்கள் — golden gates

[27] நேரிழை — beautiful ornament; here it refers to the woman (queen) who is wearing beautiful ornaments.

மன்னன் : போரா? போரென்னும் பேரையே வழக்கிலிருந்து நீக்கச் சொல்லி எத்தனை நாட்களாயிற்று? நீ இன்னும் போரையே நினைத்துப் புலம்பிக் கொண்டிருக்கிறாய். போரும் புயலும் இல்லாப் புதியதோர் பொன்னுலகின் வாயில் திறக்க வழியென்ன என்பதையும், ஆராய்ச்சி மணி நான் ஏனமைத்தேனென்பதையும் விளக்கிக் கொண்டிருந்தேன் அமைச்சருக்கு. எனவேதான் தாமதமாயிற்று தையலே! தமிழ்ப் பாடம் கேட்க வர......

அரசி : தமிழ்ப் பாடமா?

மன்னன் : ஊம்......உன் வாய்ச் சொல் தரும் பாடம்!

அரசி , கேலியும் குறும்பும் உங்கள் கூடப் பிறந்தவை......

மன்னன் : ஹ......ஹ......இல்லை......இல்லை......நீ கற்றுக் கொடுத்தவை.

அரசி : ஹ் ஹ ஹ! ஹ ஹ......!

காட்சி 3

கவிஞர் : அரசே!

மன்னன் : கவிஞர் பிரானா? வரவேண்டும். வரவேண்டும். கண்டு நாளாயிற்றே, அழைத்து வர ஆளனுப்பலாமா என்றிருந்தேன். தென்றலைச் சுமந்து நீங்களே வந்து விட்டீர்கள்.

கவிஞர் : கண்டு நாளாயிற்றா? நேற்று முன் தினம் தானே கண்டு பேசினோம் வேந்தே?

மன்னன் : நேற்று முன் தினம்தானே? நேற்று ஒரு நாள் இடைவெளியே எனக்கு வெகு நாள் போல் [28]தோணிவிட்டது.

அரசி : ஹூம் மன்னர்க்கு இப்போதெல்லாம் மறதி அதிகமாகிவிட்டது கவிஞரே!

---

[28] தோணி விட்டது — Appropriate form here is the written form தோன்றிவிட்டது as the text is completely in written register

9

கவிஞர்	:	மறதியல்ல மகாராணி! மறதியல்ல, கன்னித்தமிழ் மேல் கொண்ட காதல். என்னை ஒரு நாள் பிரிந்திருக்கும் இடைவெளியும் பெரிதாகத் [29]தோணுகிறது மன்னர்க்கு; அப்படித்தானே!
அரசி	;	நீங்கள் கொடுத்து வைத்தவர் கவிஞர் அவர்களே!
மன்னன்	;	கவிஞரே! [30] பரணி பாடி முடித்து விட்டீர்களா?
கவிஞர்	:	ஆயிரம் யானைகளைப் போரில் வென்ற வீரன் மேல் பாடுவதே பரணியாகும். ஆனால், வானளாவும் புகழ் பெற்ற உன் வீரம்பற்றி, ஆராய்ச்சி மணி கட்டி ஆளுகின்ற தீரம் பற்றி, காவியமே இயற்றக் கருதிக் கொண்டிருக்கிறேனரசே!
மன்னன்	;	ஹ் ம் - என்னைப் பற்றிக் காவியமியற்ற வேண்டாம் கவிஞரே! சின்ன மனிதனைப் பற்றிப் பாட சிந்தை செய்ய வேண்டாம். காவிரித்தாய் பெற்றெடுத்த கன்னித்தமிழ் நாட்டை பூ விரித்து மணம் பரப்பும் பொருநையாற்றை, வாய் விரித்த கரை மிதக்கும் பாண்டித் துறை முகத்தை, காவிரிப்பூம் பட்டிணத்துக் கடற்கரையை, காலமுள்ளளவும் நிலைக்கக் கவி பாடுங்கள். ஞாலம் புகழும் நன்மை உண்டாகும்.
கவிஞர்	:	உன்னுர்வத்தை மெச்சுகிறேன் வேந்தே! [31] உன்னைப்போல் உள்ளத்தால் உயர்ந்தோர் எவருமில்லை. நாளையே காவியத்தைத் தொடங்குகிறேன்.

காட்சி 4

மன்னன்	:	ஆ! ஆராய்ச்சி மணியல்லவா கேட்கிறது! அசையா மணிக் கயிறு அசைகிறது! ஆராய்ச்சி மணியோசை கேட்கிறது! நீதியின் குரலே என்னை அழைக்கிறது. இறைவா! என்ன சோதனையோ!... யாரங்கே? அமைச்சரை உடனே அழைத்து வா. ஆராய்ச்சி மணியை அடித்தது யார்? என்ன காரணம் என்பதையும் அறிந்து வரச் சொல்.

29	தோணுகிறது	—	தோன்றுகிறது See the note in 28
30	பரணி	—	See note 18
31	உன்	—	the poet addresses the king in the second person singular form; it shows the respect a king has to a poet.

அரசி : வேந்தே!

மன்னன் : தேவி!

அரசி : இத்தனை நாள் நான் கேட்காத மணி ஓசை...

மன்னன் : இன்று கேட்கிறது தேவி! இன்றுதான் கேட்கிறது. என் உயிர்போல் நான் [32] இது காறும் காத்து வந்த மன்னுயிரில் ஒன்றிற்கு இன்று ஏதோ துன்பம். துன்பத்தால் துடித்து உயிர் விடுகின்ற ஒலிதான் ஆராய்ச்சி மணியாகி ஒலிக்கிறது. அழைக்கிறது. அதோ! அமைச்சரே வந்து விட்டார். விவரங் கேட்போம். வருந்தாமல் வா. அமைச்சரே! ஆராய்ச்சி மணி ஓசை கேட்டதே? அதன் காரணம் என்னவென்று கண்டீரா?

அமைச்சர் : கண்டு வந்தேனரசே! பாவம்! கன்றினை இழந்த தாய்ப் பசு ஒன்று கண்ணீர் விட்டுக் கதறியபடி நிற்கிறது. கயிற்றைக் கடித்து மணியை அடிக்கிறது.

மன்னன் : கன்றினை இழந்த பசுவா? ஐயோ? கன்று என்னுயிற்று? எவரேனும் கொன்று விட்டனரா? இல்லை களவு போயிற்று?

அமைச்சர் : கன்றினை எவரும் கொன்றிடவில்லை. களவாடிச் சென்றிடவும் இல்லை வேந்தே! கன்று வீதியில் [33]கொலையுண்டுக் கிடக்கிறது.

மன்னன் : கன்று கொலையுண்டு கிடக்கிறது. அதைக் கண்டு வந்த நீர் கலங்காது நிற்கின்றீர். ஒன்றின் உயிர் போகக் கண்டும் உம் உள்ளம் துடிக்க வில்லை? விந்தைதான் அமைச்சரே! போர் பல கண்டு வந்தவராயிற்றே நீர்! பசுவின் கன்றுதானே, பரவாயில்லை என்று விட்டு விட்டீர். அப்படித்தானே அமைச்சரே? கன்றினைக் கொன்றது யார்?

அமைச்சர் : கொற்றவர்க்குச் சீற்றம் [34]கூடப் பிறந்தது போலும். பெற்றெடுத்த பாசமறியாத பேதையல்ல நான். கொற்றவனே கூறுகிறேன், கோபமின்றிக் கேளும். வீதிவிடங்கன், நம் பட்டத்து இளவரசன், நாளை அரசாளப் போகின்ற தயாளன், தேரேறி [35]வீதி வலம் வரும்போது

---

[32] இதுகாறும் — இதுவரை—until now; so far

[33] கொலையுண்டு — subjected to murder

[34] கூடப் பிறந்தது — of the common/same parentage Here it means that கோபம் was born with the king

[35] வீதி வலம் — street procession

துள்ளி வந்த பசுங்கன்று தேர்க்காலின் பின் விழுந்து துடிதுடிக்க உயிர் விட்டால் யாரதர்க்குப் பொறுப்பாவார்.

மன்னன் : துள்ளிவரும் பசுங்கன்றின் துடிப்பறிந்து தேர் செலுத்த வல்லமையற்றவன் என் மகனே என்றாலும், அவன் பொல்லாத் தனமிதற்குப் பொறுப்பேற்க வேண்டும்.

அமைச்சர் : மன்னவனே! தேர்க்காலின் முன் விழுந்து கன்றிறந்தால் நின் மகனைப் பொறுப்பேற்கச் சொல்வதிலே தப்பில்லை. ஆனால் அவன் அறியாமல் தேரின் பின் வீழ்ந்து, [36]வீணில் உயிரிழந்த விபத்துக்கு யார் பொறுப்பு?

மன்னன் : ஹும்! மதி மிக்க மந்திரியே! தவறிழைத்தான் மன்னன் மகன் என்கின்ற காரணத்தால் மதி மயங்கிப் போகாதீர். துள்ளி வருங் கன்றைத் தூரத்தே கண்டவுடன், மெள்ள நிறுத்தித் தேரைத் திருப்பாமல் மேலும் செல்ல விட்டது அவன் குற்றம். சிற்றரசன் தானென்றும் செருக்கால் கவனமின்றி உயிர் கொன்றது அவன் குற்றம். அதற்குத் தண்டனைத் தரத்தான் வேண்டும். ஆகையினால், பாகனே! விடங்கனைத் தேர்க்காலின் கீழ்க்கிடத்தி தேரை மேல் செலுத்திக் கொன்றிடுக! இது என் கட்டளை. இப்போதே நிறைவேறவேண்டும்.

அரசி : வேந்தே!

அமைச்சர் , அரசே!

வீதிவிடங்கன்: தந்தையே!

அரசன் : வேந்தே என்றழைக்கும் அரசியின் குரலோ, தந்தையே என்றழைக்கும் தனயனின் குரலோ

அமைச்சர் : அரசே!

மன்னன் : அரசே யென்றழைக்கும் அமைச்சரின் குரலோ என் காதில் இனி விழப் போவதில்லை. அதோ! நீதியின் குரலென்னை அழைக்கிறது. அதன் புனிதம் என் உயிரிலும் பெரியது. அரசன் கட்டளையிடுகிறேன், தண்டனை நிறைவேறட்டும்,

---

[36] வீணில் — வீணாக;—வீண்—useless (v)

அரசி : அரசே! கொடுமையிலும் கொடுமை இது. சிறுவன் அறியாது செய்த பிழைக்கு இவ்வளவு பெரிய தண்டனையா? எண்ணிப்பாருங்கள் வேந்தே! எண்ணிப்பா......

மன்னன் : எண்ணிப்பார்க்காமல் எப்போதும் சொன்னதில்லை பெண்ணழகே! ஐயோ! [37]புத்திர வாஞ்சையினுல் புத்தி தடுமாறிப் புலம்புகின்ருய். ஹ்ம்! செய்வேன்! எத்தனையோ மன்னர்களிருந்தார்கள், மறைந்தார்கள். அத்தனை பேரோடு நான் ஒருவன் ஆகாமல், புத்தம் புதியதொரு நீதி முறைதனை வகுக்க, நித்தம் நினைத்ததுவும், நெஞ்சம் புழுங்கியதும், அத்தாணி மண்டபத்தில் அரசர் முன் வந்து வழக்குரைத்து நீதி பெற முடியாது எத்தனையோ [38]வாயில்லாச் சீவன்கள் வருந்துவதைத் தவிர்ப்பதற்காக, கோட்டை மதிற்சுவரில் கொடி மரத்தின் கீழ் நின்று ஆட்சி ஒலி எழுப்பி ஆராய்ச்சி மணியடித்தால், அன்றே [39]வழக்கறிந்து தீர்ப்புரைக்கப்படுமென்று, ஆணிப் பொன் முரசும் அறைவித்து, நீதி முறை பேணி நான் வளர்த்த விதம் நீயறிவாய்!

அரசி : ஆ!

மன்னன் : அறிந்திருந்தும்—

அரசி : ஐயோ!

மன்னன் : தண்டனை ஏற்கப் போகின்ருன் தன் மகனே என்பதற்காய் வருந்தி யழுவதினுல் என்ன பயன்?

அரசி : ஐயனே! விடங்கனைக் கொன்று விட்டால், வேந்தே! கன்று இழந்த [40]உயிர் பெற்று மீண்டும் எழுந்திடுமோ? அழியாத புகழ் பெற்று அரசாள வேண்டுமென்ற ஆசையினுல் புத்திரனைக் கொல்லுகிறீர். நியாயந்தானு? நியாயந்தானு?

மன்னன் : தவருகப் பேசாதே. தமிழ் கற்ற திரு வாயால் அவச் சொல்லை அள்ளி வீசாதே, ஆரணங்கே! விடங்கனுயிர் கன்றுக்கு [41]மாற்று மருந்தல்ல.

---

37 புத்திர வாஞ்சை — love for offspring

38 வாயில்லாச்சீவன்கள் — see note 20

39 வழக்கறிந்து — having known (i. e.) heard the dispute

40 (உயிர்பெற்று) மீண்டும் எழுந்திடுமோ? — will it get life and resurrected?

41 மாற்று மருந்து — antidote

விடங்கனைக் கொன்று விட்டால் கன்றெழுந்து விளையாடும் என்றெண்ணும் பேதமையும் எனக்கில்லை. ஆனாலும்கேள்—கன் றினை இழந்த தாயினைப் போல் நான், கதறிக் கண்ணீர் விட்டலற வேண்டும் —கன்றினைப் பிரிந்த பசுவின் துயரை, அன்பனைப் பிரிந்து நான் இன்றடையவும் வேண்டும், இழப்பு இருவருக்கும் பொதுவாக வேண்டும். இதுவே எனது நீதியின் தத்துவம் என்பதை அறிவாய்.

அமைச்சர் : கற்றினைக் கொன்ற பழி பாவம் அரசே! கன்று போல் ஆயிரம் பொன்னிலே செய்து தானமாக அந்தணர்க்குத் தந்துவிடத் தீருமேன், தரும நூல் கூறு மொழி அறிந்திருந்தும் நீ [42]இப்போ ஒரு மகனை, ஆட்சிப் பொறுப்பேற்க இருப்பவனை தேர்க்காலின் கீழ்க்கிடத்திக் கொன்றுவிடச் சொல்லுகின்ற நீதிமுறை, எனக்குப் புதிதாக இருக்கின்றது.

மன்னன் : ஆயிரமோ, அதற்கு மேலோ, பொன்னாலே கன்று செய்து தானமாய் அந்தணர்க்குத் தந்தாலும் மந்திரியே! தாய்ப் பசுவின் துன்பம் தணிந்திடுமா? [43]வளைந்த என நீதிச் செங்கோல்தான் நிமிர்ந் திடுமோ? அமைச்சரே! பாவத்திற்குப் பரிகாரம் பல கூறும் தரும நூல், ஆனால் நீதியென்னும் செங்கோல் நெருப்பின் முன் அவை யெல்லாம் தூளாகிப்போகும், துரும்பேனும் தேறாது. ஆகையினால் தாமதம் வேண்டாம். தண்டனை நிறைவேறட்டும்.

வீதிவிடங்கன்: தந்தையே! தாயே! அமைச்சர் பெருமக்களே! இந்த தண்டனையை நான் விரும்பி ஏற்கின்றேன். என் தாய்த் திருநாட்டின் நீதி வழுவா நெறிமுறைக்காக என் உயிர் போவதை நான் என் பேறுகக் கருது கிறேன். மன்னுயிரைத் தன்னுயிர் போல் காக்கும் மனு நீதிச் சோழன் என் தந்தையென்கின்ற புகழ் ஒன்றே எனக்குப் போதும். இதோ! இந்தத் தேர்க்காலின் கீழ்க்கிடத்தி

அரசி ; ஆ!

---

42 இப்போ — appropriate written form is இப்போது/இப்பொழுது

43 வளைந்த — நிமிர்ந்திடுமோ?—Will my bent-sceptre become straight again? When a king commits an injustice, it is said figuratively that his sceptre has become bent. A Straight sceptre is thus a symbol of royal justice.

வீதிவிடங்கன்: என்னையே நான் கொன்று கொண்டு

அரசி : ஐயோ!

வீதிவிடங்கன்: மன்னன் தண்டனையை மகிழ்வோடு நிறைவேற்றித் தருகின்றேன்.

அரசி : ஐயையோ!

வீதிவிடங்கன்: வருகின்றேன்

அரசி : மகனே!

அமைச்சர் : இளவரசே;

அரசி : வீதிவிடங்கா!

அமைச்சர் : சோழர் குலப் பேரரசின் சுவை மிக்க வரலாற்றில் இப்படியோர் சோகம் எப்போதும் நிகழ்ந்ததில்லை. எப்படித்தான் நீங்கள் இதைக் தாங்கிக் கொள்கிறீர்களோ?

மன்னன் : எப்படித் தாங்கிக் கொள்கிறேன் என்று கேட்கிறீர்? அமைச்சரே! சோழர் குலம் நடத்திய போர்களெத்தனை? அப்போர்களில் இறந்து மடிந்த வீரர்களெத்தனை? அப்பிள்ளைகளின் பெற்றோர் அழுது வடித்த கண்ணீராற்றை நினைத்துக் கொள்ளும். நீரும் தாங்கிக் கொள்வீர். போரென்னும் துன்ப விதையை விதைத்தோம். சாவென்னும் துயரத்தரவை வளர விட்டோம், வாழ்வெனும் கனிக்கு இப்போ ஏங்குகிறோம். எத்தனை படையெடுப்பு! எத்தனை உயிர்க்கொலை! எத்தனை, எத்தனை பிண மலைகள்! ரத்த ஆறு! அத்தனையும் எதற்காக? அகண்ட சாம்ராஜயம்! அதையாளும் புகழ் வாழ்வு! அதற்குத்தானே! அகண்ட சாம்ராஜ்யம் புகழெல்லாம் என்ன ஆயிற்று? இறந்த கன்றின் உயிர் பிழைக்க இம்மியும் உதவிற்று? இல்லையெனில் பின் எதற்கு? இத்தனைப் போர்ப்படை வரிசை?

அமைச்சர் : வேந்தே!

மன்னன் : கேளும், அமைச்சரே! ஒருயிரை மீட்டுத்தர முடியாக் கோழைகள், நாமெல்லாம் போரில் கொல்லுவதேன் மன்னுயிரை?

அமைச்சர் : எந்தப் போர் நாட்டு மக்களுக்கு வீர விளையாட்டோ, அந்தப் போரே அரசர்க்குப் பாவச் சுமையாகப் படுகிறது.

மன்னன் ; பாவச்சுமைதான் அமைச்சரே, பாவச்சுமைதான். சீறி வரும் புலியைகூட சிறு முறத்தால் விரட்டுகிற பாவையர்கள் வீரத்தை நானறிவேன். இந்த நாட்டில் போரென்ருல், பூஞ்சோலையென் றெண்ணிப் புறப்படும், வீரர்கள் தொகை மிகவுண்டு என்பதுவும் எனக்குத் தெரியும். கோழை மனத்தால் போரை நான் வெறுக்க வில்லை. ஆனுலும், தனி ஒருவன் தேவைக்காகவும், புகழுக்காகவும்' போரென்னும் பேராலே மன்னுயிரைக் கொல்லுகின்ற, தீமை தேவை யில்லை என்பதுதான் என் திட்டம். புரிகிறதா?

அமைச்சர் : புரிகிறது. அரசே! மிக நன்ருகப் புரிகிறது. போரும் புயலுமற்ற புதியதோர் பொன்னுலகம் காண வேண்டும் என்கிற வேட்கை மிகுகிறது. கன்றின் தாய் என் கண்களைத் திறந்து விட்டது.

மன்னன் : எவ்வுயிர்க்கும் எவரும் அன்பு செய எண்ணும் தரும நெறி தழைத் தோங்க வேண்டும் அமைச்சரே! எவ்வுயிர்க்கும் அன்பு செய்யும் மாண்புடைய சன்மார்க்கம், உயிரிலங்கும் உடலனைத்தும் ஈசன் கோயில், என்கின்ற தத்துவம் நிலைத்தாற் போதும்.

EXERCISES

I. *Read the following in spoken Tamil:*

அமைச்சர் : கண்டு வந்தேனரசே! பாவம்! கன்றினை இழந்த தாய்ப்பசு ஒன்று கண்ணீர் விட்டுக் கதறியபடி நிற்கிறது. கயிற்றைக் கடித்து மணியை அடிக்கிறது.

மன்னன் : கற்றினை இழந்த பசுவா? ஐயோ கன்று என்னாயிற்று?

அமைச்சர் : கன்றினை எவரும் கொன்றிடவில்லை. களவாடிச் சென்றிடவும் இல்லை வேந்தே! கன்று வீதியில் கொலையுண்டுக் கிடக்கிறது.

மன்னன் : கன்று கொலையுண்டு கிடக்கிறது. அதைக் கண்டு வந்த நீர் கலங்காது நிற்கின்றீர். ஒன்றின் உயிர் போகக்கண்டும் உம் உள்ளம் துடிக்கவில்லை?

II. *Vocabulary Exercise:*

(*a*) Split the following compounds into constituent words: and write meanings for the same:

(i) தேர்க்கால்	(xi) படைவரிசை
(ii) பெண்ணழகி	(xii) மனுநீதிச்சோழன்
(iii) மணியோசை	(xiii) பாவச்சுமை
(iv) ஆராய்ச்சி மணி	(xiv) பூஞ்சோலை
(v) மன்னுயிர்	(xv) பொன்னுலகம்
(vi) நெறிமுறை	(xvi) கோழைமனம்
(vii) கொடிமரம்	(xvii) தருமநெறி
(viii) பொன்முரசு	(xviii) புகழ்மாலை
(ix) நீதிமுறை	(xix) கட்டிக்கரும்பு
(x) தாய்த்திருநாடு	

(*b*) write the corresponding compound verbs for each of the given verbs, following the model :

Model :- எழுது——எழுதச் செய்

(i) பார்
(ii) நட
(iii) ஓடு
(iv) சாப்பிடு
(v) வீசு
(vi) படி
(vii) பாடு
(viii) குடி
(ix) எடு

III. *Fill up the blanks choosing the correct item.*

Make changes in the sentence if necessary.

1. பசு கயிற்றைக் கடித்து மணியை——

(i) அடிக்கிறது
(ii) ஒடிக்கிறது
(iii) ஓட்டுகிறது

2. ஆராய்ச்சி மணியோசை——

(i) அடிக்கிறது
(ii) அசைக்கிறது
(iii) கேட்கிறது

3. தண்டனை ஏற்கப் போகின்றான் தன் மகனே என்பதற்காய் வருந்தியழுவதால் என்ன——

(i) காரியம்
(ii) பயன்
(iii) விஷயம்

4. நேற்று ஒருநாள் இடைவெளியே——வெகுநாள் போலத் தோன்றி விட்டது.

(i) உங்களுக்கு

(ii) உன்

(iii) உங்களுடைய

5. அதைக் கண்டு வந்த நீர் கலங்காது— —

(i) நிற்கின் றீர்கள்

(ii) நிற்கின்றீர்

(iii) நிற்கின்றாய்

IV. *Substitution :*

1. இங்கே விளையாத பெருமை போரிலா? விளையும்?

(*a*) Substitute the following for பெருமை after making necessary changes in the given words :

(i) வீரம்

(ii) புகழ்

(iii) இன்பம்

(*b*) Substitute the following for விளையாத after making necessary changes in the words given :

(i) வா

(ii) காண்

(iii) கிட்டு

(*c*) Substitute the following for போரிலா after making necessary changes in the words given:

(i) துறவு

(ii) நாடு

(iii) காடு

(iv) வீடு

2. போரென்னும் பேரையே வழக்கிலிருந்து நீக்கச் சொல்லி எத்தனை நாட்களாயிற்று?

(*a*) Substitute the following for **வழக்கில்** after making necessary changes in the given words :

(i) அகராதி

(ii) நடைமுறை

(iii) பேச்சு

(vi) புத்தகம்

(*b*) Substitute the following for **நீக்க** after making necessary changes in the given words:

(i) எடு

(ii) அழி

(iii) மறை

(iv) மாற்று

(*c*) Substitute the following for **பேரையே** after making necessary changes in the given words :

(i) சொல்

(ii) பேச்சு

3. கன்னித் தமிழின் மேல் கொண்ட காதல்.

(*a*) Supstitute the following for **கன்னித்தமிழின்** after making necessary changes in the given words :

(i) காவியம்

(ii) இந்தியா

(iii) சமுதாயம்

(iv) மனைவி

(*b*) Substitute the following for மேல் after making necessary changes in the given words:

(i) மீது

(ii) இடம்

(iii) பால்

(*b*) Substitute the following for கொண்ட after making necessary changes in the given words:

(i) வை

(ii) நிலை

(iii) அழியாது

V. Rewrite the following sentences by substituting one item at a time.

1. தேர்க்காலின் முன் விழுந்து கன்றிறந்தால் நின் மகனைப் பொறுப்பேற்கச் சொல்வதிலே தப்பில்லை.

(i) காயப்பட்டால்

(ii) ஒத்துக்கொள்ள

(iii) காரின்

(iv) ஓடி

(v) எதிரே

2. என் தாய்த்திரு நாட்டின் நீதி வழுவா நெறிமுறைக்காக என் உயிர் போவதை நான் என் பேருகக் கருதுகிறேன்.

(i) மூச்சு

(ii) தருமத்துக்காக

(iii) நினைக்கிறேன்

(iv) தேசத்தின்

(v) பாக்கியமாக

(vi) போற்றுகிறேன்

3. அப்பிள்ளைகளின் பெற்றோர் அழுதுவடித்த கண்ணீராற்றை நினைத்துக் கொள்ளும்; நீரும் தாங்கிக் கொள்வீர்.

(i) பெருக்கிய

(ii) அண்ணன்

(iii) செத்துப்போவீர்

(iv) எண்ணிப்பாரும்

VI. *Transform the underlined phrases into negative ones:*

1. நீடித்த புகழ் கொடுக்கும்.
2. சோழர் புகழ் மேலும் உன்னால் சுடர்விடப் போகிறது.
3. எனவேதான் தாமதமாயிற்று தையலே!
4. நீங்கள் கொடுத்து வைத்தவர் கவிஞர் அவர்களே!
5. வெற்றிவீரத்தை நான் அறிவேன் அமைச்சரே!

VII. *Transform the following into as many interrogative sentences as possible, following the model given below:*

1. நீதியின் குரல் என்னை அழைக்கிறது,

Model:– (a) நீதியின் குரலா என்னை அழைக்கிறது?

(b) நீதியின் குரல் என்னை அழைக்கிறதா?

(c) நீதியின் குரல் என்னையா அழைக்கிறது?

2. கன்று இன்று வீதியில் கொலையுண்டுக் கிடக்கிறது.
3. அதற்கு தண்டனை தர வேண்டும்.
4. பெற்றெடுத்த பாசமறியாத பேதை நான்.
5. அதைக் கண்டு வந்த நீர் கலங்காது நிற்கின்றீர்.
6. விடங்கனுயிர் கன்றுக்கு மாற்று மருந்தல்ல.

VIII. *Change each of the following complex sentences into simple sentences.*

1. அவர் ஈட்டியும் வாட்களும் இமயப் பெருமலை வரையில் சென்று ஈட்டிய புகழை நான் நன்முக அறிவேன்.

2, போர் முரசின் ஒலி தேடித்தந்த வெற்றிப் புகழ் மலையின் மீதமர்ந்து பேசுகின்றீர் அமைச்சரே!

3. அந்த வெற்றி முரசுக்குப் பின் அழுந்திக் கிடக்கின்ற வேதனைக் கண்ணீரை நீர் அறிய மாட்டீர்.

4. வெற்றி முரசும் வெம்போர் முழக்கும் உமக்குக் கட்டிக்கரும்பாக இனிக்கிறது.

5. போரும் புகழும் தந்த வெற்றிப் பெருமிதத்தில் மூழ்கி எங்கே அந்தப்புரத்தையே மறந்துவிட்டீர்களோ என்று நினைத்தேன்.

IX. *Change the following into complex sentence:*

1. உன் பொன்னுரை கேட்டுப் புனிதமானேன். பெருமை பெற்றேன்.

2. புது உலகின் பொற்கவாடங்கள் திறக்கின்றன. புனிதமிகு லட்சியங்கள் வா வா என்றழைக்கின்றன.

3. அசையா மணிக்கயிறு அசைகிறது! ஆராய்ச்சி மணியோசை கேட்கிறது.

4. என் உயிர்போல் நான் இதுகாறும் மன்னுயிரைக் காத்து வருகிறேன். அதில் ஒன்றிற்கு ஏதோ துன்பம்.

5. ஆராய்ச்சி மணி ஓசை கேட்டதே? அதன் காரணம் என்னவென்று கண்டீரா?

6. கன்றினை இழந்த தாய்ப்பசு ஒன்று கண்ணீர்விட்டுக் கதறியபடி நிற்கிறது. கயிற்றைக் கடித்து மணியை அடிக்கிறது.

X. Match the phrases given in column I with those given in column II to make appropriate sentences.

	I	II
1.	நீர் என் மகன் என்ற காரணத்தால்	புலம்புகிருய்
2.	நீ புத்திர வாஞ்சையினுல் புத்தி தடுமாறி	வழக்கறிந்து தீர்ப்புரைக்கப்படும்.
3.	ஆராய்ச்சி மணியடித்தால்	மாற்று மருந்தல்ல.
4.	நீதிமுறை பேணி நான் வளர்த்த விதம்	மதிமயங்கிப் போகாதீர்.
5.	விடங்கனுயிர் கன்றுக்கு	நீயறிவாய்.

IX. Summarize the story of the play not exceeding 40 linse:

[1] தர்ம யுத்தம்

ரா. தயாநிதி

[This is a scene from Mahabharta presented in formal written register generally used for writing historical plays. This text uses many Sanskritic words and cites Sanskrit slokas.]

நாடக உறுப்பினர்கள்

[2] கண்ணன்
[3] சகுனி
[4] திருதராஷ்டிரன்
[5] துரியோதனன்
[6] பிதாமஹர்
[7] வீட்டுமர்
[8] விதுரர்
[9] பீமன்
[10] திரௌபதி
[11] அருச்சுனன்

1	தர்மயுத்தம்	—	The war for Dharma
2	கண்ணன்	—	Krishna
3	சகுனி	—	uncle of Duryothana
4	திருதராஷ்டிரன்	—	father of துரியோதனன்
5	துரியோதனன்	—	eldest brother of கௌரவர்கள்
6, 7	பிதாமஹர், வீட்டுமர்	—	பீஷ்மர் grandfather of பாண்டவர்கள் and கௌரவர்கள்
8	விதுரர்	—	brother of பாண்டு and திருதராஷ்டிரன்
9	பீமன்	—	younger brother of தருமன்
10	திரௌபதி	—	wife of பாண்டவர்கள்
11	அருச்சுனன்	—	younger brother of பீமா great archer, good friend of Krishna

காட்சி—1

சகுனி : கண்ணு! கண்ணு! எங்கே போகிறுய்? துர்யோதனன் குணம் நீ அறியாததா? நான் அவையில் [12]இருந்திருந்தால் துர்யோதனனை உன் மனம் நோகப் பேச விடமாட்டேன். [13]பாண்டவருக்கு தூது வந்த நீ நிற்கலாமா? அதோ அந்தப்

கண்ணன் : ஹ ஹ் ஹ...

சகுனி : பொன்னுசனம் உனக்காகவே காத்திருக்கிறது. அதிலமர்ந்து பேசு.

கண்ணன் : ஆஹா! ஆஹா! இதுவன்றே பண்பு! சகுனியென்றால் சகுனிதான். வீடுமர் அமரச் சொல்லவில்லை. விதுரர் வாய் திறக்கவில்லை, ஆனால் சகுனி! நீயோ கால் நோக நான் நிற்கும் நிலை கண்டு நெஞ்சம் பதறி இருக்கப் பொன்னுசனம் காட்டுகிறுய். உன் அன்பை எப்படிப் போற்றுவதென்றே தெரியவில்லை சகுனி.

சகுனி : ஹ ஹ் ஹ...கண்ணு! [14]உன் பால் எனக்கு எப்பொழுதும் அன்பு உண்டு.

கண்ணன் . ஊம்!

திருதராஷ்டிரன்: ஆமாம் கண்ணு! எவரையும் கேட்காமல் உனக்காகவே பொன்னுசனம் செய்து அத்திஞபுரத்து அவையிலே அழகாக வைத்திருக்கிறுன் சகுனி. என்ன இருந்தாலும் சகுனியும் உன்னைப்போன்றே மதிமிக்கவனல்லவா?

கண்ணன் : ஹ ஹ்...உண்மைதான் திருதராஷ்டிரா, உண்மைதான். ஏனென்றால், கண்ணில்லாத உன்னையே இந்தப் பொன்னுசனம் கவர்ந்து விட்டது என்றால் அது அற்புதமானதாகவேயிருக்கும். ஊம் சகுனிக்கு என்றுமே [15]என் மீது ஒரு கண் உண்டு. இல்லையா சகுனி?

---

[12] இருந்திருந்தால் — appropriate form here is இருந்தால்

[13] பாண்டவருக்கு — appropriate for here is பாண்டவருக்காக i. e. for pandavas

[14] உன்பால் — உன்னிடம்

[15] என் மீது ஒரு கண் உண்டு — has an eye on me

சகுனி : கண்ணு! நீ நிற்கிருய், என் காலன்றே நோகிறது! பொன்னுசனம் உனக்காகவே காத்திருக்கிறது.

கண்ணன் : ஹ ஹ்...சகுனி, நானே பாண்டவர் தூதுவனுக இன்று வந்து நாளே போகிறேன். ஆனுல் நீயோ இந்த சபையில் நிலேயாக இருக்க நினைப்பவன், இல்லையா? அதனுல் பொன்னுசனத்தில் நீயே அமருவாயாக.

சகுனி : கண்ணு! உன் நீல வண்ண மேனி பொன்னுசனத்தில் அமர்ந் திருக்கும் அழகைக் கண் குளிரக் காணவே பொன்னுசனம் செய்தேன்.

கண்ணன் : ஓ சகுனி! இனி உன்னேக் காக்கவைக்க மாட்டேன். அமருகிறேன். ஆம், ஆம் அழகான கலே வண்ணம். மயில் மீது அமர்ந்திருப்பது போல் சுகமாக இருக்கிறது. ஆ! சகுனி! உனக்கு இப்போது திருப்திதானே?

சகுனி : ஹ ஹ் ஹ...நீ இருப்பதால் பொன்னுசனம் அழகு பெற்றது. இனிமேல் நீ தூது வந்த காரணத்தைத் துரியோதனனும் இந்த அவையும் அறியலாமல்லவா?

கண்ணன் : தாராளமாக, துரியோதனு! பாண்டவர்களுக்கு அவர்கள் நாடு வேண்டும். அதைப் பெறவே பாண்டவர் தூதுவனுக நான் உன்னவைக்கு வந்தேன்.

துரியோதனன் : பாண்டவர் நாடா? ஹஹ்...ஏது கண்ணு பாண்டவருக்கு நாடு? அவர்களுக்கென்று நாடு இருந்தால வனவாசம் சென்றிருப்பார் களா? மச்ச நாட்டில் விராடனுக்கு அடிமையாக இருந்திருப்பார் களா? குற்றேவல் புரிந்தவர்கள் ஆளக் கொற்றம் கேட்பதும், அதற்கு தூது வந்திருப்பதும் விசித்திரமே!

கண்ணன் : துரியோதனு! பாண்டவர் வனவாசம் சென்றதும், மச்ச நாட்டில் யாருமறியாது வாழ்ந்ததும், உனக்குத் தந்த வாக்குறுதியை நிறைவேற்ற என்பதை மறந்து விட்டாயா?

துரியோதனன் : நான் மறக்கவில்லே கண்ணு! தோற்றவரென்பதைப் பாண்டவரே மறந்தனர்.

கண்ணன் : ஹ ஹ்...துரியோதனு! தோற்கடிக்க முடிந்தவர்கள்தான் உன்னிடம் தோற்ருர்கள் என்பதை மறந்து விடாதே!

துரியோதனன் : ஹ ஹ் ஹ...தோற்கடிக்க முடிந்தவர்கள்! அதனுல்தான் [16]உலூக முனிவரை ஒரு முறையும், அவர் பின்னே உன்னையும் தூதனுப்பி என்னைத் துதி பாடி நாட்டைப் பிச்சை கேட்கின்றனரோ?

கண்ணன் : துரியோதனு! யார் பிச்சை கேட்கின்றனர்? யார் துதி பாட வந்தார்? மச்ச நாட்டு எல்லையிலே நீயும் உன் குருகுலப்படையும் தன்னந்தனியாகக் களம் வந்த [17]வில்விஜயனுக்கு ஆற்ருது [18]உயிர்ப்பிச்சை கேட்டு ஓடி வந்ததை மறந்து விட்டாயா?

துரியோதனன் : ஹ ஹ் ஹா...கண்ணு! தூது வந்த நீ என் வீரத்தை பழிப்பதா? குருகுலத்தை அவமதிப்பதா? அடிமையோடு போரிடுவது, அதுவும் பேடி உருவில் வந்த அர்ஜுனனேடு போரிடுவது எம் வீரத்திற்கு இழுக்கு என்பதாலேயே அர்ஜுனனை விட்டு வந்தோமே தவிர அஞ்சி வரவில்லை. மச்ச நாட்டு மடப் பள்ளியிலே உணவு சமைத்த பீமனுக்கும் கச்சையணிந்து பேடியாக [19]உத்தரைக்கு நட்டுவம் செய்த அர்ஜுனனுக்கும், கொட்டிலிலே குதிரைகளைக் குளிர வைத்த நகுலனுக்கும், காட்டிலே பசுக் கூட்டத்தை மேய்த்த சகாதேவனுக்கும் எம்மை வெல்லும் திறம் உண்டென்று விவேகம் உள்ளோர் சொல்ல மாட்டார். பாண்டவருக்கு வீரமிருந்தால் இந்த அவையில், அன்று திரௌபதியின் துகிலை உரிந்த போது, ஓங்கி வளர்ந்த நெடுமரங்களாக நின்றிருப்பாரோ? அந்த மானமிழந்தவர்களுக்கு தூது வந்த நீயும் ஒரு நாட்டு மன்னு? காட்டிலே அலைந்து திரியுமந்தக் காட்டு மிராண்டிகளுக்கு நாகரிகம் கற்றுக் கொடுத்ததே எங்கள் குருகுலம்.

---

16 உலூக முனிவர் — a Brahmin saint sent as the first envoy to Duriyodanan to get pandava's land in order to settle the dispute peacefully. Kannan was sent lator.

17 வில் விஜயன் — வியஜன்; அருச்சுனன்

வில் — bow, That is, Arjun who is adept in using the bow.

18 உயிர்ப்பிச்சை — begging for life

19 உத்தரை — daughter of the king விராடன்

கண்ணன் : ஹ ஹ் ..வானகத்து தேவரும், வையகத்து வேந்தரும் வந்திருந்து வாழ்த்த, வெற்றியின் வெற்றியாக, வீரத்தின் சீராக, [20]ராஜசூய வேள்வி செய்த பஞ்சமருக்கோ நீ நாகரீகங் கற்றுக்கொடுத்தாய்? இது போன்ற [21]இமயப் பொய்யை துரியோதனு! உன்னையன்றி யார் துணிந்துரைப்பர்? உண்மையில் உண்மைக்கு [22]வணங்கா முடியோன் நீயே. கயமை நெஞ்சங் கொண்ட உலகில் நீ ஒரு வேந்தனுக இருப்பதே கருணை உள்ளங்கொண்ட பாண்டவரால் என்பதை மறந்தாய். நன்றி செய்தோர் வாழும் நாட்டையே விழுங்க நினைக்கும் நீயும் ஒரு வேந்தனு? உன் அரசும் ஒரு அரசா?

துரியோதனன் : ஹ ஹ்... உண்மைதான் கண்ணு! நான் வேந்தனல்ல, வேந்தருக்கு வேந்தன். என் அரசு அரசல்ல. அரசுக்கு அரசு. [23]இடையோர் குலத்தில் பிறந்த நீ என்னையா "அரசனு நீ?" என்று கேட்டாய்? உரலில்கட்டுண்டு இடைச்சியர் தயிர் மத்தால் அடியுண்ட நீ, எப்படி என் பெருமையை அறிவாய்? எம்மோடு ஆயிரமாண்டுகள் போரிட்டாலும் [24]ஊசி முனையளவு நிலத்தைக்கூட பாண்டவர் பெறமுடியாது. இது திண்ணம்.

கண்ணன் : துரியோதனு! ஒரு குலத்தோர் இரு கூருகி போரிட்டு மடியக் கூடாதென்றே பாண்டவர் பொறுத்திருக்கின்றனர். பாண்டவர் போருக்கு மூண்டெழுந்தால், மாண்டொழியப்போவது நீயே.

துரியோதனன் : ஹ ஹ்...மானமற்ற பாண்டவர் மாண்பு மிக்க எங்கள் குலத்தவர் ஆவாரோ? ஹ! அந்த ஐவருக்கு அன்னையோ இருவர். ஹ ஹ் ஹ...தந்தையோ ஐவர். தாரமோ ஒருத்தி ஹ ஹ்...சீச்சீ! வெட்கம்! வெட்கம்!

---

[20] ராஜசூய வேள்வி —

[21] இமயப் பொய் — lit. Himalayan lie. That is, a lie as big/enormous as the Himalayas

[22] வணங்கா முடியோன் — the king will never bow down, i. e. the king who can never be defeated. lit. the king who wears a crown which never bows down.

[23] இடையோர் — இடையர்

[24] ஊசி முனையளவு — the size of the point of a needle

கண்ணன் : அத்தினபுரத்து அவையில் பதுமைகளாகக் கொலுவிருக்கும் அறவோர்களே! துரியோதனனின் [25]தீச் சொல்லைக் கேட்டுமா உண்மை சொல்ல உங்கள் நா அஞ்சுகிறது? துரியோதனின் பெருநிதி முன் உங்கள் நீதி அடிமையானதா? அவன் பொய்மைக்கு உங்கள் மெய்மை பணிந்ததா? சிறுமதியால் துரியோதனன் [26]சிந்தியாதன சிந்துகிறான். அதனைச் செவிமடுத்து சிலைகளாக வீற்றிருக்கும் நீங்கள் வேதமுணர்ந்த நூலோர்தானா? அறமுணர்ந்த மேலோர்தானா?

பிதாமஹர் : துர்யோதனா! பாண்டவரை இழிவு செய்து பேசுவது அறமன்று. பாண்டவர்க்குரிய பூமியை பாண்டவர்க்கு கொடுப்பதே உனக்கும் உன் வழி வருவோருக்கும் பெருமை.

துரியோதனன் : பிதாமஹரே! இன்று பாண்டவர் பூமி என் கையிலிருக்கிறது. எல்லையோரமிருந்து அரசர்களை வென்று அடிமையாக்குபவனே பேரரசன். அழகும் செல்வமும் கொழிக்கும் பாண்டவரின் இந்திரப் பிரஸ்தத்தையிழப்பது எனக்குச் சிறுமை. பாண்டவர் குலத்தைப் [27]பூண்டோடு அழிப்பதே எனக்குப் பெருமை.

பிதாமஹர் : துரியோதனா! உன் பேராசை கொடியது. மாற்றார் மண்ணுக்கு ஆசை கொண்டு இறுதியில் நீயே [28]மாளாத் துயருக்கு ஆளாகப் போகிறாய். [29]பாரதப் போர் எழுந்தால் பாண்டவரே வெல்வர்.

துரியோதனன் : ஹ ஹ்......நமக்கு அஞ்சித் தூது அனுப்புகின்றனர் பஞ்சமர். நீரோ வெஞ்சமர் வந்தால் வெற்றி கொள்ளப் போவது அவரே யென்று அஞ்சி அஞ்சிச் சாகிறீர். ஹ ஹ்

பிதாமஹர் : துரியோதனா! அச்சமற்ற ஆண்மையுள்ளோரே தூது அனுப்புவர். பாண்டவரின் அன்புணர்ந்து அவருக்குரிய நாட்டினைக் கொடு. பன்னெடுங் காலம் அவரோடு நீயும் வாழ்வாய்.

---

[25] தீச்சொல் — evil word; words that burn life fire.

[26] சிந்தியாதன சிந்துகிறான் — pours out (the words) without thinking சிந்தி—think? சிந்து—pour out

[27] பூண்டோடு அழி — root out

[28] மாளாத்துயர் — unending sorrow; everlasting sorrow

[29] பாரதப்போர் — the war involving the whole of Bharat

கண்ணன் : துரியோதனு! நாடு கொடுக்க விரும்பவில்லையேனும் பஞ்சமர் இருக்க ஐந்தே ஐந்து சிற்றூர்களைக் கொடு.

துரியோதனன் : ஹ! கண்ணு! சிற்றூர் அல்ல, சிறு குடிலல்ல, குரு குலத்தினர் இருக்கும் வரையில் பாண்டவர் ஐந்தடி அளவு நிலமும் பெற முடியாது. முன் தூது வந்த உலூக முனிவரிடமும் இதையே சொன்னேன். இன்று தூது வந்த உன்னிடமும் இதையே சொல்லுகிறேன். இனி உலகெல்லாமுடைய ஈசனே தூது வரினும் இதுவே சொல்வேன்.

கண்ணன் : ஹ ஹ்......துரியோதனு! நீ என் தூதைப் புறக்கணிக்கவில்லை. தருமத்தைப் புறக்கணித்தாய். சரி. பாண்டவரோடு பாரதப் போரில் உன்னை சந்திப்பேன். வருகிறேன்.

சகுனி : ஹ ஹ் ஹ—கண்ணு! இன்னும் சிறிது நாழிகையில் உன்னை மரணம் சந்திக்கப் போகிறது. நீயோ எங்களைப் பாரதப் போரில் சந்திப்பேனென்று சூளுரைக்கிறுய். ஹ ஹ்......

கண்ணன் : சகுனி! சகுனி! உன் பொன்னுசனம் ஏன் இப்படி ஆடுகிறது?

சகுனி : கண்ணு! மயிலில் இருப்பதுபோல் சுகமாக இருக்கிறது என்று சொன்னுயல்லவா? அந்த மயில் உன்னை சொர்க்கத்துக்கு அழைத்துப் போவதைப் பார். ஊம்! ஹ ஹ்......

துரியோதனன் : சகுனி! உன் சூழ்ச்சி பலித்தது. கண்ணன் தொலைந்தான். ஹ ஹ்......எங்கிருந்து வருகிறது [30]வெற்றிச் சங்கம்?

கண்ணன் : துரியோதனு! நிமிர்ந்து பார். என்னைப் பார். நன்ருகப் பார். வெற்றிச் சங்கம் பிடித்து முழங்கும் என் வெற்றிக் கைகளைப் பார். தருமத்தின் வாழ்வதனை சூது கவ்வும். தருமம் மறுபடியும் வெல்லும் உன் வெற்ருரவாரம் இன்று வீழ்கிறது பார். ஹ ஹ்......

---

[30] வெற்றிச் சங்கம் — the (sound of) conch signifying victory

வீட்டுமர் : [31]மூவுலகைத் [32]திருவடியாலளந்த மூலவனே! உன் சினம் சிறியோரவை தாங்குமோ? மண்ணில் திருவடியும் விண்ணில் திருமுடியுமாய் பெருவடிவங் கொண்ட செம்மானே! பிழை பொறுப்பாய்.

விதுரர் : கோபாலா! கோபம் தணிவாய்! கண்ணு!

கண்ணன் : வீட்டுமரே! விதுரரே! சளுக்கர்களை சம்ஹாரம் செய்ய என் சக்கரப்படை ஒன்றே போதும். இரண்யனினும், ராவணனினும், கொடியோனே இந்த துரியோதனன்? இல்லை, இல்லை, பாஞ்சாலி செய்த சபதம் நிறைவேறவும். "படைக்கருவியெடுத்து போர் செய்யேன்" என்று துரியோதனனுக்குக் கொடுத்த உறுது மொழியைக் காக்கவுமே சினம் தணிகிறேன். எனினும் பாரதப் போர் தொடங்கிய பதினெட்டாம் நாள் கௌரவர் குலம் அழியும். மண்ணாசை கொண்டு அதர்மப் போர் தொடங்கிய துரியோதனனும் அவனுக்குத் துணை நின்றோரும் மண்ணோடு மண்ணுவார். என் கைகளாலேயே தருமனுக்கு முடிசூட்டுவேன். இந்தச் சூளுரையை முடித்த பிறகே துவாரகையின் மண்ணை மிதிப்பேன். இது உறுதி.

Mayya asakta manah partha yogam yungan madasrageh
மய்யாஸக்த மனுஹ் பார்த்த யோகம் (யுஞ்சன்?) மதாச்ரயஹ் /

a samsayam samagram kam yatha gnasyasi tac chrnu
அஸம்சயம் ஸமக்ரம் மாம் யதா ஞாஸ்யஸி தச்சுருணு / /

Vedaham samatitani vartamani carjuna
வேதாஹம் ஸமத்தானி வர்த்தமானி சார்ஜுன /

bhavisyani ca bhutani mam thu veda na kas cana
பவிஷ்யானி ச பூதானி மாம்து வேத ந கச்சன / /

---

[31] மூவுலகு — the three worlds, namely the heaven, earth and the under world (hell)

[32] திருவடியாலளந்த மூலவனே — It is believed that Lord Krishna in his tremendous manifestation (Viswaroopam) strode over the three worlds in his two steps.

மூலவன்—The cause of every creation.

Jaramarana moksaya mamasritya yatantiye
ஜராமரண மோக்ஷாய மாமாச்ரித்ய யதந்தியே /

te brobme tad viduh krtsnam adhyatmam karına cakilam
தே ப்ரம்ம தத் விது : க்ருத்ஸ்ன(ஞ)? மத்யாத்மம் கர்ம சாகிலம் / /

காட்சி—2

துரியோதனன் : [33]*மாயக் கண்ணனின் துயில் கண்டோ எண்ணியது முடிக்கா நிற்பேன்? ராஜசூய யாகத்தில் என்னை மானபங்கப்படுத்திய பாஞ்சாலியை இந்த அவையில் இப்பொழுதே பழி தீர்ப்பேன். என் தொடையைத் திரௌபதிக்கு மஞ்சமாக்கிப் பஞ்சமர் கண்குளிரக் காண வைப்பேன். துகில் கொடுத்த கண்ணனுக்குத் துணிவிருந்தால் இங்கே வந்து ஐவர் பத்தினியைக் காக்கட்டும். இல்லையேல் எங்கிருந்து துகில் கொடுத்தானோ அங்கிருந்தபடியே என் தொடைமீது திரௌபதி அமரப் போகும் காட்சியைக் கண்டு ஆனந்தமடையட்டும். ஹ ஹ்......*

பீமன் : *துரியோதனு! கூறத்தகாததைக் கூறிய உன் நாவினை சிதைக்க என் கதை...ஹஹ்ஹ...என் கதை ஒன்றே போதும். சூதிலே தோற்றோமே தவிர வீரத்திலே அல்ல. அவை நடுவே தன்னந் தனியாய் ஒரு பெண்ணை நிறுத்தி பேடி போலப் பேசுவதோ உன் வீரம்! பெண்ணோடு பேசியது போதும். என்னோடு சமருக்கு வா. தனியனாய் வரத் துணிவில்லையேல், உன் தடந்தோள் தம்பியர் சூழ வா. உம் நூற்றுவர் உடலனைத்தையும் யானை கரும்பு முறிப்பது போல் முறிப்பேன்.*

தருமன் : *பீமா! என்ன பேசுகிறாய்? நானுன்னை சூதில் பணயம் வைத்து துரியோதனனிடம் இழந்ததை மறந்தாயா? அல்லது நானே அடிமையான பிறகு என் சொல்லுக்கு ஏது வலிமை என்று எண்ணி என்னை மீறத் துணிந்தாயோ?*

---

[33] *மாயக் கண்ணன்* — Krishna who is cunnion & clever.
lit. Krishna with magical powers.

பீமன் : இல்லையண்ணு! இல்லை, அருள் மணக்கும் உங்கள் அறவுரையை மீறும் துணிவு எனக்கு ஏதண்ணு? அந்தத் துணிவு மட்டும் எனக்கு வந்திருந்தால், திரௌபதியைத் தொடையிலமரச் செய்வேனென்று சொன்ன பொழுதிலேயே துரியோதனனின் தொடையை நான் பிளந்திருக்க மாட்டேனு? சூதில் பணயம் வைத்து என்னை இழந்து விட்டீர்களென்பதை மறக்க முடிந்திருந் தால்,—நம் பத்தினியின் துகில் தொட்ட பொழுதே துச்சாதன னின் உடலைக் கிழித்து கொட்டும் குருதியைக் குடித்திருக்க மாட்டேனு? ஹ...பொறுமையின் சிகரமாய்ப் பிறந்துவிட்ட உங்கள் தம்பியாயிருப்பதால் ஏதும் செய்ய முடியாமல் தவிக் கிறேனண்ணு! தவிக்கிறேன்.

திரௌபதி : அஞ்சுதற்கு அஞ்சாமல், அரசவையில் என்னையேற்றி, [34]பிறமனை நோக்கா மாண்பினை மறந்து, பிற ஆடவர் ஏளனத்தோடு நோக்க என் துகில் தொட்டு, முடித்த கூந்தல் கலைத்த துச்சாதன னையும், தொடைமீது அமர்த்துவேனென்று தீமொழி செய்த துரியோதனனையும், மற்றும் கெடு சிந்தை கொண்டோரையும் கொடுஞ்சமரில் முடிதுணித்து, புலால் நாற, வெங்குருதி பொழிய வெற்றி முரசறையும் பொழுதல்லால், விரித்த குழலினை எடுத்து முடியேன். இது கங்கையாறு போல துகில் தந்து என் மானங் காத்த என் கண்ணன் மீது ஆணை. என்னை மணந்த ஐவர்மீது ஆணை. [35]கற்பு நெறிக்குக் கையெடுத்துத் தொழும் அறவோர் மீது ஆணை. கற்புடைய பெண்டிர்மீது ஆணை. பொற்புடைய தேவரீர் ஆணை.

பீமன் தேவி! தேவி! என் கதையாலே துச்சாதனனையும் துரியோதன னையும் பிளந்து [36]உயிர் குடிப்பேன். அதுவரையிலும் என் கையால் நீர் தொட்டு குடியேன். உன் [37]கார்குழை தொட்ட கயவனின் உதிரத்தைத் தடவி உன் அவிழ்ந்த கூந்தலை [38]முடிக்கச்

---

[34] பிறமனை நோக்கா மாண்பு — the virtue of not coveting another's wife.

[35] கற்பு நெறி — the code of chastity

[36] உயிர் குடி — devour one's life

[37] கார் குழை — the hair as dark as the rainy cloud

[38] முடிக்க — to put up (the loosened hair)

செய்வேன். இதை முடிக்காது போயின் நான் தர்மன் தம்பி யில்லை வாயுதேவனின் புத்திரனில்லை.

அர்ச்சுனன் : அத்தினபுரத்து அவையிலுள்ள அரசர்களே கேளுங்கள். என் தந்தை இந்திரனின் சிந்தை கொண்டு சொல்லுகிறேன். பெற்ற அன்னை மீது ஆணையாக, வித்தை கற்றுத் தந்த துரோணாசார் மீது ஆணையாக என் வெற்றிக் காண்டீபத்தின் மீது ஆணையாக கர்ணனின் உயிரை பலிபுலத்தில் மாய்ப்பேன். இது உறுதி, இது உறுதி.

EXERCISES

I. *Read the following in spoken Tamil:*

சகுனி : கண்ணா! உன் நீல வண்ண மேனி பொன்னுசனத்தில் அமர்ந்திருக்கும் அழகைக் கண்குளிரக் காணவே பொன்னுஸனம் செய்தேன்.

கண்ணன்: ஓ சகுனி! இனி உன்னைக் காக்க வைக்க மாட்டேன் அமருகிறேன். ஆம், ஆம் அழகான கலை வண்ணம். மயில்மீது அமர்ந்திருப்பது போல் சுகமாக இருக்கிறது. ஆ! சகுனி! உனக்கு இப்போது திருப்திதானே?

சகுனி : ஹ ஹ ஹ...நீ இருப்பதால் பொன்னுஸனம் அழகு பெற்றது. இனிமேல் நீ தூது வந்த காரணத்தை துரியோதனனும் இந்த அவையும் அறியலாமல்லவா?

II. *Vocabulary Exercise:*

(*a*) Split the following compounds into constituent words and write meanings for the same:

(i) வனவாஸம்
(ii) பொன்னுஸனம்
(iii) குற்றேவல்
(iv) வில்விஜயன்
(v) மடப்பள்ளி
(vi) காட்டு மிராண்டி
(vii) மண்ணுசை
(viii) அறவுரை

III. *Fill up the blanks choosing the correct item.*

Make changes in the sentence if necessary.

1. இன்னும் சிறிது நாழிகை——உன்னை மரணம் சந்திக்கப் போகிறது.

(i) கு
(ii) இல்
(iii) மேல்

2. கண்ணன் தொலைந்——

(i) அது
(ii) ஆள்
(iii) ஆன்

3. என் கைகளாலேயே தருமனுக்கு முடிசூட்டு——

(i) ஏன்
(ii) ஈர்கள்
(iii) ஓம்

4. சகுனி! சகுனி! உன் பொன்னாஸனம் ஏன் இப்படி ஆடு——

(i) கிறாய்
(ii) கின்றன
(iii) கிறது

5. அதனால் பொன்னாஸனத்தில் நீயே——

(i) அமருவீர்களாக
(ii) அமருவாயாக
(iii) அமருவார்களாக

V. *Substitution*:

1. பொறுமையின் சிகரமாய்ப் பிறந்து விட்ட உங்கள் தம்பியாய் இருப்ப தால் ஏதும் செய்ய முடியாமல் தவிக்கிறேன் அண்ணா!

(*a*) Substitute the following for **பொறுமையின்** after making necessary changes in the given words:

(i) பண்பு
(ii) கலாச்சாரம்
(iii) அறிவு

(*b*) Substitute the following for **தம்பியாய்** after making necessary changes in the given words:

(i) தங்கை
(ii) நண்பன்

(c) Substitute the following for **தவிக்கிறேன்** after making necessary changes in the given words:

(i) திண்டாடு

(ii) விழி

(iii) இரு

2. எம்மோடு ஆயிரமாண்டுகள் போரிட்டாலும் ஊசி முனையளவு நிலத்தைக்கூட பாண்டவர் பெற முடியாது.

(a) Substitute the following for **எம்மோடு** after making necessary changes in the given words:

(i) நீ

(ii) நாங்கள்

(iii) அவர்கள்

(b) Substitute the following for **போரிட்டாலும்** after making necessary changes in the given words:

(i) சண்டையிடு

(ii) வாதமிடு

(c) Substitute the following for **நிலத்தை** after making necessary changes in the given words:

(i) இடம்

(ii) பாகம்

(iii) பங்கு

3. நீ பொன்னூஸலனத்தில் அமர்ந்திருக்கும் அழகைக் கண்குளிரக் காணவே அதைச் செய்தேன்.

(a) Substitute the following for **பொன்னூஸலனம்** after making necessary changes in the given words:

(i) நாற்காலி

(ii) சிம்மாசனம்

(iii) ஊஞ்சல்

(b) Substitute the following for அழகை after making necessary changes in the given words:

(i) கம்பீரம்

(ii) தோற்றம்

(iii) எழில்

(c) Substitute the following for கண் after making necessary changes in the given words:

(i) மனம்

(ii) உச்சி

V. *Rewrite the following sentences by substituting one item at a time.*

1. எவரையும் கேட்காமல் உனக்காகவே பொன்னூஸனம் செய்து அத்தினபுரத்து அவையிலே அழகாக வைத்திருக்கிறான் சகுனி.

(i) நாற்காலி

(ii) அரண்மனையில்

(iii) யாரையும்

(iv) கேளாமல்

(v) நன்றாக

(vi) யாருக்காகவோ

2. உன் நீல வண்ண மேனி பொன்னூஸனத்தில் அமர்ந்திருக்கும் அழகைக் கண் குளிரக் காணவே பொன்னூஸனம் செய்தேன்.

(i) நிறைய

(ii) காட்சியை

(iii) உன்னுடைய

(iv) உட்கார்ந்திருக்கும்

(v) கம்பீரத்தை

(vi) பார்க்கவே

3. மச்ச நாட்டு எல்லையிலே நீயும் உன் குருகுலப் படையும் தன்னந் தனியாகக் களம் வந்த வில்விஜயனுக்கு ஆற்ருது உயிர்ப் பிச்சை கேட்டு ஓடி வந்ததை மறந்து விட்டாயா?

(i) வீரர்களும்
(ii) போனதை
(iii) போருக்கு
(iv) பயந்து
(v) தைரியமாக

VI. *Transform the following into negative sentences using the underlined phrase/word.*

1. அதைப் பெற பாண்டவர் தூதுவனுக நான் உன்னவைக்கு <u>வந்தேன்</u>.
2. பாரதப் போர் எழுந்தால் பாண்டவர் <u>வெல்வர்</u>.
3. காட்டிலே அலைந்து திரியுமந்தக் காட்டு மிராண்டிகளுக்கு நாகரிகம் கற்றுக் <u>கொடுத்தது</u> எங்கள் குருகுலம்.
4. பொன்ஞஸனம் உனக்காகவே <u>காத்திருக்கிறது</u>.
5. பொன்ஞஸனத்தில் நீ <u>அமருவாயாக</u>.

VII. *Transform the following into interrogative sentences, using the underlined phrase/word.*

1. உன் பேராசை <u>கொடியது</u>.
2. <u>பாண்டவர்</u> குலத்தைப் பூண்டோடு அழிப்பது எனக்குப் பெருமை.
3. என் கைகளால் தருமனுக்கு <u>முடி</u> சூட்டுவேன்.
4. <u>மண்ணை</u> கொண்டு அதர்மப்போர் தொடங்கிய துரியோதனனும் அவனுக்குத் துணைநின்ரேரும் மண்ணோடு மண்ணுவார்.
5. <u>மயிலில்</u> இருப்பதுபோல் சுகமாக இருக்கிறது.

VIII. *Change each of the following complex sentences into Simple sentences.*

1. நீயோ நான் கால் நோக நிற்கும் நிலை கண்டு பொன்ஞஸனம் காட்டுகின்ருய்.
2. எவரையும் கேட்காமல் உனக்காகவே பொன்ஞஸனம் செய்து அத்தினபுரத்து அவையிலே அழகாக வைத்திருக்கிருன் சகுனி.

3. நானோ பாண்டவர் தூதுவனாக இன்று வந்து நாளை போகிறேன்.

4. பாண்டவர் வனவாசம் சென்றதும், மச்ச நாட்டிலே யாருமறியாது வாழ்ந்ததும், உனக்குத் தந்த வாக்குறுதியை நிறைவேற்ற என்பதை மறந்து விட்டாயா?

IX. Change the following into complex sentences :

1. பொன்னாஸனம் உனக்காகவே காத்திருக்கிறது. அதிலமர்ந்து பேசு.
2. நீ நிற்கிறாய். என் காலன்றோ நோகிறது.
3. இனி உன்னைக் காக்க வைக்க மாட்டேன். அமருகிறேன்.
4. சிறுமதியால் துரியோதனன் சிந்தியாதன சிந்துகிறான். அதனை செவிமடுத்து சிலைகளாக வீற்றிருக்கும் நீங்கள் வேதமுணர்ந்த நூலோர்தானா?
5. பாண்டவரின் அன்புணர்ந்து அவருக்குரிய நாட்டினைக்கொடு. பன்னெடுங்காலம் அவரோடு நீயும் வாழ்வாய்.

X. Match the phrases given in column I with those given in column II to make appropriate sentences.

	I	II
1.	சூதிலே தோற்றோமே தவிர	ஏதும் செய்ய முடியாமல் தவிக்கிறேன்.
2.	தனியனாய் வரத் துணிவில்லையேல்	நீர் குடியேன்.
3.	உங்கள் தம்பியாய் இருப்பதால்	வீரத்திலே அல்ல.
4.	அதுவரையிலும் என் கையால்	சந்திக்கிறேன் என்று சூளுரைக்கிறாய்.
5.	நீயோ எங்களைப் பாரதப் போரில்	உன் தடந்தோள் தம்பியர் சூழ வா

IX. Summarize the drama not exceeding 30 lines in a narrative form.

வீரமாபத்தினி : ஜார்ஜ் கோமகன்

[This is a play with a historical background presented in written style used usually for historical plays.]

நாடக உறுப்பினர்

சங்கமன் — கபிலபுரத்தைச் சார்ந்தவன்
நீலி — சங்கமனின் மனைவி
சிங்கபுரத்து அரசன்
சிங்கபுர அமைச்சன்
சிங்கபுரத் தளபதி — பரதன்

சங்கமன் : நீலி! நீலீ! ஹ ஹ் ஹ ஹ் ஹா நீலீ.

நீலீ : ஏ! அம்மம்மா, என்ன [1]அத்தான் இது! மாலை கட்ட மலர்களை [2]கீளே கொட்டி வைத்திருந்தால், இப்படியா ஓடி வந்து தடுக்கி விழுவது? எழுந்திருங்கள்.

சங்கமன் : ஊஹூம் எழமாட்டேன்.

நீலீ : எழுந்திருங்களத்தான்.

சங்கமன் : எழமாட்டேன் [3]செவ்வண்ணக் கிண்ணமான உன் சிவந்த வாயிலிருந்து கொட்டியவை இதோ இம் முல்லை அரும்புகளா? அல்லது இந்த முத்துக்களா என்று அறியும்வரை ஊஹூம் நான் எழ மாட்டேன்.

---

[1] அத்தான் — a term of address used by a wife to call her husband, as a Kinship term it refers to aunt's son (father's sister's son)

[2] கீளே — down; it is the collowquial form of

[3] செவ்வணக் கிண்ணம் — செவ்வண்ணம்—red colour; செம்மை—செம்—red வண்ணம்—colour; கிண்ணம்—small metal cup. The mouth of நீலீ is likened here to a small metal cup which is red.

நீலீ : ஐயையோ! கொண்டு வந்த முத்துக்களையும் கீழே கொட்டி விட்டீர்களா?

சங்கமன் : நானில்லையே, நீ தானே.

நீலீ : ஐய போதுமே உங்கள் கலைச்சுவைப்பும், பெரும் ரசிப்பும், [4]மீசையில் மண் ஒட்டாத மாவீரர்தான் நீங்கள். உம்......உம்......எழுந்திருங்களத்தான், ஹ ஹ்......நான் முல்லை மலர்களை யெடுக்கிறேன். ஊம் நீங்கள் கொட்டிய முத்துக்களை யெடுங்கள்.

சங்கமன் : ஆ! நீலீ! முத்து என்றதும் தான் நினைவுக்கு வருகிறது.

நீலீ : என்ன?

சங்கமன் : எதைச் சொல்லத் துடித்து வந்தேனோ அதைக் கூற மறந்து விட்டேன் உன்னால்.

நீலீ : என்ன அத்தான்?

சங்கமன் : நமது அமைதி கலையப் போகிறது.

நீலீ : அத்தான்!

சங்கமன் : ஆமாம்! நாடு போர்க்கோலம் கொண்டு விடுமோ என்ற பயம் சூழ்கிறது.

நீலீ : ஏனத்தான்?

சங்கமன் : ஆதிக்க வெறி கொண்ட சிங்கபுரம், நம் கபிலபுர வீரத்தைச் சோதிக்கத் துணிந்து விட்டது.

நீலீ : அத்தான்!

மீசையில் மண் ஒட்டாத மாவீரர் — literally, the great hero whose moustache was not soiled. This is used to refer satirically to those who pretend to be great and victorious, although they are defeated. An expression from the wrestling in which according to Tamil tradition falling on the floor on one's chest signifies defeat. Although one falls on the floor on his chest, he pretends to be victorious by claiming that his moustache was not soiled.

சங்கமன் : ஆம் நீலி! நம் எல்லையோரத்தில் சிங்கபுரத்து மன்னன் வசு, தொல்லை கொடுக்கத் துணிந்து விட்டான்.

நீலி : நம் தூய திரு நாட்டின் வேந்தரும் உடனே போருக்குத் துணிந்து விட்டாரா?

சங்கமன் : சே சே! கங்கைக்கும் களங்கக் கால்வாய்க்கும் வேற்றுமை இல்லையா நீலி!

நீலி : அங்!

சங்கமன் : அறவழி சிலத்தை மறப்பாரா நம் அரசர் குமரபூபதி? தூதரனுப்ப முடிவு செய்திருக்கிறாராம்.

நீலி : ஓஹோ!

சங்கமன் : நம் அறங்கூறும் வையத்துப் பெரு உறுப்பினர்களும் இதற்கு அனுமதி வழங்கி விட்டார்களாம்.

நீலி : ஊம், சிங்கபுரத்தான் இதற்கு......

சங்கமன் : சம்மதிப்பானா இல்லையா என்று தெரியவில்லை. போர் சூழ்வதற்கு முன்னால் சிங்கபுரத்திலிருந்து நமக்கு வரவேண்டிய [5]பாக்கித் தொகையை வசூலிப்பதோடு [6]வாணிப நிலையையும் கவனித்து வரவேண்டும்.

நீலி : அத்தான்!

மந்திரி : சங்கமன், சங்கமன் (?)

சங்கமன் : இரு நீலி, யாரோ அழைப்பது போல் தெரிகிறது. யாரென்று பார்த்துவிட்டு வருகிறேன்.

நீலி : சரி அத்தான்.

---

[5] பாக்கித் தொகை — the rest of the amount (to be paid) i.e. the money which is given as debt. பாக்கி—மீதம் or மிச்சம்—remainder; தொகை—amount

[6] வாணிப நிலை — business condition; வாணிபம்—business; நிலை—condition.

காட்சி 2

அரசர் : மந்திரியாரே! [7]மஹா மந்திரியாரே! என்ன ஆழ்ந்த சிந்தனை? எதிலே ஆழம் பார்க்கிறீர்? ஊம், ஊம் அமைச்சரே! உம்மைத்தான். உம்மைத்தான் [8]கேழ்க்கிறேனையா.

அமைச்சர் : ஆங்! ஓ! அரசரா?

அரசர் : சரிதான் அதுகூட நினைவில்லையா? எந்த [9]லோகத்திலிருந்தீர்?

அமைச்சர் : ஒன்றுமில்லை. ஒன்றுமில்லையரசே! நம் தளபதி பரதனிடமிருந்து ஒரு தகவலும் வரவில்லையே என்றுதான் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன்.

அரசர் : ஹ ஹ் ஹா......சே நீர் ஒரு கோழையமைச்சரே! மஹா கோழை. [10]சாகரத்திலிறங்கி விட்ட பிறகா சாண் என்றும் முழம் என்றும் அளவு பார்த்துக் கொண்டிருப்பது? தளபதி பரதனென்ன, கொச்சை மொழி பேசும் [11]பச்சைக் குழந்தையா? போரில் பெரும் புலி அல்லவா அவர்? எதிரியின் ரத்தத்தைக் குடித்து விட்டுத் தானே இங்கு வருவார்?

பரதன் : அரசே! வெற்றியரசே! வெற்றி! அரசே வெற்றி!

அரசன் : வெற்றியா? பகைவன் கபிலபுரத்தான் நமது படைக்கு அஞ்சி ஓடி விட்டானு?

பரதன் : ஆமரசே! நம்மை ஏளனமாக நினைத்து வந்தான். எல்லை ஓரத்திலே உள்ள நமது ஏராளமான படை வீரர்களைக் கண்டதும் பின் வாங்கி ஓட்டமெடுத்தார்கள், கபிலபுரத்து சொத்தைகள்.

---

7. மஹா — big; great. மஹாமந்திரி—great/big minister. compare மஹா and மா

8. கேழ்க்கிறேனையா — colloquial form of கேட்கிறேனையா.

9. லோகம் — world. compare this லோகம் with உலகம்.

10. சாகரம்—கடல் — sea

11. பச்சைக் குழந்தை — child which is very young. பச்சை is used to — intensify the quality of head noun e. g. பச்சைத் தமிழன்—Tamilian who is pure i. e., not mixed by race.

அரசன் : ஹ ஹ் ஹா......ஆஹா! அப்படியா? அப்படியா?

பரதன் : [12]அலச்சியமாக இருக்கக்கூடாது அரசே! பின்வாங்குவது பெரும் படையெடுப்புக்குத் தங்களைத்தயார் செய்துக் கொள்வதற்காகவும் இருக்கலாம்.

அரசன் : ஆங்!

பரதன் : கபிலபுரத்து எல்லையில் நமது வீரர்கள் முன்னேறிக் கொண்டிருக் கிறார்கள். என்றாலும் எந்த நேரத்திலும் கபிலபுரப் பெரும் படை நம்மை வந்து தாக்கலாம். அதற்கு நாம் தயாராக இருக்க வேண்டுமல்லவா?

அரசன் : நானும் அமைச்சரும் என்ன செய்யப் போகிறோம்? என்ன செய்ய முடியும்? அதற்காகவென்றுதான் நீரிருக்கிறீரே!

பரதன் : பெருமைப்படுகிறேன் வேந்தே! தங்களின் புகழுரைகளைக் கேட்டு.

அரசன் : எப்படியும் அவன் நாட்டிலுள்ள சில பகுதிகளை நம் சிங்கபுரத்தோடு இணைத்துக் கொள்ளவேண்டும். எனக்கு வேண்டுவதெல்லாம் அதுதான், அவ்வளவுதான்.

பரதன் : கவலைப்படாதீர்கள் மன்னா! மகா பாரதப் போர் 18 நாட்கள் நடந்தது. ராமாயணப்போர் 18 மாதங்கள் நடந்தது. தேவாசுரப் போர் 18 ஆண்டுகள் நடைபெற்றதாம். நாம் தொடுத்த இந்தப் போர் 18 [13]யுகங்கள் நடந்தாலும், கபிலபுரத்தைக் கவராமல், தங்கள் காலடியில் கொண்டு சேர்க்காமல் விடமாட்டேன் அரசே.

அரசன் : ஆஹா! பார்த்தீர்களா மந்திரியாரே! நம் தளபதி பரதன் பரதனேதான். ஒரு கரத்தில் வாளும், மணி மார்பும், போர் முகத்தில் எவர்வரினும் [14]புறங்கொடாத பரு வயிரத் தோளும், வேறு எந்த நாட்டுத் தளபதிக்கு இருக்கின்றன என் நாட்டுத் தளபதி பரதனைத் தவிர?

---

[12] அலச்சியம் — carelessness.

[13] யுகம் — an age of the world; one of the four aeons or ages

[14] புறங்கொடாத — lit. (the one who) does not show one's back i.e., one who is not cowadice.

அமைச்சர் : ஆமாமாமாம்.

பரதன் : கபிலபுரத்தைக் கவருவதோடு கர்வம் பிடித்த அந்தக் குமரனையும் வேட்டைப் பன்றியைத் தொழுவத்திலடைத்து வைப்பது போல் அடைத்து வைப்பேன்.

அரசன் : எனக்குத் தகவல் அனுப்புவீர், தெரியும், தெரியும் நீர்தான் பன்றியைப் பிடிப்பதில் பலே சூரராயிற்றே. உம் விரைந்து செய்யுங்கள். அதை விரைவாகச் செய்யுங்கள்.

பரதன் : தொலைந்தது கபிலபுரம், தொலைந்தான் குமரன், ஹ ஹ் ஹ ஹ்...ஹ

காட்சி 3

சங்கமன் : நீலீ! நீலீ!

நீலீ : அத்தான்! என்ன இது? ஒரே சோர்வாகக் காணுகிறீர்கள். சந்திரனின் ஒரு பாகம் சுந்தரமாய் ஒளிவீசும் தங்கள் முகமா இப்படி வாடி வதங்கியிருக்கிறது?

சங்கமன் : நீலீ! நான் சிங்கபுரம் செல்லுகிறேன்.

நீலீ : ஆ! சிங்கபுரமா? எதற்காக அத்தான்?

சங்கமன் : நீலீ! இரு நாடுகளுக்கும் போர் மூளுவது இன்றோ நாளையோ என்று கூற முடியாத அளவு நிலைமை நெருக்கடியாகிவிட்டது.

நீலீ : என்ன?

சங்கமன் : பூசல் வளர்ந்து கொண்டே போகிறது.

நீலீ : ஐயோ!

சங்கமன் : அதிகார பூர்வமான போர் மூளுவதற்குள் சிங்கபுரத்திலிருந்து நமக்கு வரவேண்டிய பாக்கித் தொகையை வசூலித்தும் நம் கையிருப்பிலுள்ள பொருட்களை விற்று விட்டும் வரலாமென்றிருக்கிறேன். நீலீ! மறுக்காமல் எனக்கு விடை கொடு.

நீலீ : அத்தான்! நீங்கள் அவசியம் சிங்கபுரம் சென்றுதானாக வேண்டுமா?

சங்கமன் : ஹ ஹ் ஹ...நன்று கேட்டாய் நீலீ. மிக நன்று கேட்டாய். சிங்கபுரம் செல்லவில்லையென்றால் என் [15]தங்கத்தேரே! நம் வாழ்வு பாழ்பட்டு விடாதா? அங்குள்ள வணிகரிடமிருந்து வரவேண்டிய தொகைகளை நாம் எப்போது மீட்பது? கையிருப்பிலிருக்கும் நகைகளை வைத்துக் கொண்டு நாம் இங்கு என்ன செய்வது?

நீலீ : ஐயோ அத்தான்! தனிமையை என்னால் எப்படித் தாங்கிக்கொள்ள முடியும்? என் உயிரான தாங்கள் பிரிந்து சென்றால் இந்த உடல் எரிந்து தீய்ந்து கருகி சாம்பலாகி விடாதா?

சங்கமன் : என்னதான் செய்யச் சொல்கிறாய் என்னை நீலீ?

நீலீ : இருவரும் இணைந்தே செல்வோமத்தான்!

சங்கமன் : ஹா! என்ன நீயுமா?

நீலீ : ஊம்.

சங்கமன் : சிங்கபுரத்துக்கா?

நீலீ : ஆமாம். [16]உங்கள் நிழல் உங்களைத் தொடர்ந்துதானே வரவேண்டும்?

சங்கமன் : ஐயோ! அது கடும்புலிகள் வாழும் காடாயிற்றே! கண்ணியமிழந்தோ ராளுகை புரியும் நாடாயிற்றே?

நீலீ : ஹ்ாம் ஹ்ாம்—என் காவலர், கண்ணாளர் இருக்கும்போது எனக்கு என்ன பயமத்தான்? தேரும் தெய்வமும் சென்றால் ஊரும் உலகமும் வணங்கித்தானே தீரவேண்டும்?

---

[15] தங்கத் தேர் — lit. golden chariot: Here it refers to நீலீ who according to சங்கமன் is like a golden chariot (in her gait)

[16] உங்கள் நிழல் உங்களைத் தொடர்ந்து தானே வர வேண்டும்.
— lit. your shadow must follow you. நீலீ compares herself as the shadow of சங்கமன். i. e. they are inseparable.

சங்கமன் : சேறும், சகதியும் போன்றவர்களல்லவா சிங்கபுரத்துச் சிறுமதி யாளர்கள், எனக்கும் உன்னைப் பிரிந்து இருக்கத்தான் இயலாது. இனி எது வந்தாலும் இறைவன் செயல். உனது எண்ணப்படி இருவருமே செல்வோம் நீலீ!

நீலீ : ஆஹா! அத்தான்.

சங்கமன் : வழிப்பயணம் வண்ண நிலவோ? தூரம் நீளுமா, நெருங்குமா தெரிய வில்லையே?

நீலீ : உங்கள் நெஞ்சத்தையே கேளுங்கள் அது கூறும்.

சங்கமன் : ஹ ஹ் ஹ......

EXERCISES

I. Read the following in spoken Tamil:

நீலி : என்ன அத்தான் இது! மாலே கட்ட மலர்களே கீளே கொட்டி வைத்திருந்தால், இப்படியா ஓடி வந்து தடுக்கி விழுவது? எழுந்திருங்கள்.

சங்கமன் : எழ மாட்டேன்.

நீலி : எழுந்திருங்களத்தான்.

சங்கமன் : எழ மாட்டேன். செவ்வண்ணக்கிண்ணமான உன் சிவந்த வாயிலிருந்து கொட்டியவை இதோ இம்முல்லே அரும்புகளா? அல்லது இந்த முத்துக்களா என்று அறியும்வரை ஊஹும் நான் எழ மாட்டேன்.

நீலி : ஐயையோ! கொண்டுவந்த முத்துக்களேயும் கீளே கொட்டி விட்டீர்களா?

சங்கமன் : நானில்லேயே, நீ தானே.

நீலி : ஐய, போதுமே உங்கள் கலேச்சுவைப்பும், பெரும் ரசிப்பும். மீசையில் மண் ஒட்டாத மாவீரர்தான் நீங்கள். உம்...உம்...எழுந்திருங்களத் தான். ஹ் ஹ்...நான் முல்லே மலர்களேயெடுக்கிறேன். ஊம் நீங்கள் கொட்டிய முத்துக்களேயெடுங்கள்.

II. Change the underlined into written form:

1. கொண்டுவந்த முத்துக்களேயும் கீளே கொட்டிவிட்டீர்களா?
2. உம்மைத்தான் கேழ்க்கிறேனேயா?
3. அலச்சியமாக இருக்கக்கூடாது அரசே!
4. பகைவ(ன்) கபிலபுரத்தா(ன்) நமது படைக்கு அஞ்சி ஓடிட்டாளு?
5. நமது வீரருங்க(ள்) முன்னேறிகிட்டிருக்காங்க.

III. Vocabulary Exercise:

(*a*) Write a derivative noun for each of the words given below, following the model:

Model:–சிங்கபுரம்—சிங்கபுரத்தான்.

(i) கபிலபுரம்

(ii) சேலம்

(iii) சிதம்பரம்

(iv) திருவனந்தபுரம்

(*b*) Split the following compounds into constituent words and write meanings for the same.

(i) கலைச்சுவைப்பு

(ii) போர்க்கோலம்

(iii) வாணிபநிலை

(iv) ராமாயணப்போர்

(v) மகாபாரதப்போர்

(vi) உலகப்போர்

IV. Fill up the blanks choosing the correct item. Make changes in the sentence if necessary.

1. கொண்டு வந்த முத்துக்களை——நீளே கொட்டிவிட்டீர்களா?

(i) ஆல்

(ii) உம்

(iii) ஒடு

2. முத்து என்றதும் தான் நினைவு——வந்தது.

(i) கு

(ii) ஒடு

(iii) மேல்

3. எதைச் சொல்லத் துடித்து வந்தேனோ அதைக் கூற மறந்துவிட்——

(i) ஆள்

(ii) ஆர்கள்

(iii) ஏன்

4. கங்கைக்கும் களங்கக் கால்வாய்——வேற்றுமை இல்லையா?

(i) கு
(ii) கும்
(iii) ஆக

5. அறவழி சில——மறப்பாரா நம் அரசர்?

(i) ஆல்
(ii) ஒடு
(iii) ஐ

6. பெரு உறுப்பினர்களும் இதற்கு அனுமதி வழங்——விட்டார்களாம்.

(i) கி
(ii) குவது
(iii) கும்

V. *Substitution*:

1. நான் முல்லை மலர்களை எடுக்கிறேன்.

(*a*) Substitute the following for **முல்லை மலர்களை** after making necessary changes in the given words:

(i) புத்தகம்
(ii) சட்டை
(iii) நாற்காலி

(*b*) Substitute the following for **எடுக்கிறேன்** after making necessary changes in the given words.

(i) கொடு
(ii) பறி
(iii) பார்

2. நம் எல்லையோரத்தில் சிங்கபுரத்து மன்னன் வசு தொல்லை கொடுக்கத் துணிந்துவிட்டான்.

(*a*) Substitute the following for நம் after making necessary changes in the given words :

(i) நாங்கள்

(ii) நீங்கள்

(iii) அவர்கள்

(*b*) Substitute the following for சிங்கபுரத்து after making necessary changes in the given words :

(i) வங்கம்

(ii) மகத நாடு

(iii) மைசூர்

(*c*) Substitute the following for துணிந்து after making necessary changes in the given words :

(i) தயாராகு

(ii) வா

(iii) புறப்படு

3. கபிலபுரத்து எல்லையில் நமது வீரர்கள் முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள்.

(*a*) Substitute the following for கபிலபுரத்து after making necessary changes in the given words :

(i) சிங்களம்

(ii) கிரேக்க நாடு

(iii) பாக்கிஸ்தான்

(*b*) Substitute the following for நமது after making necessary changes in the given words :

(i) நீங்கள்

(ii) அவர்கள்

(iii) நான்

(c) Substitute the following for **முன்னேறி** after making necessary changes in the given words:

(i) பின்னேறு
(ii) வா
(iii) சண்டையிடு

VI. *Rewrite the following sentences by substituting one item at a time.*

1. செவ்வண்ணக் கிண்ணமான உன் சிவந்த வாயிலிருந்து கொட்டியவை இதோ இம் முல்லை அரும்புகளா?

(i) விழுந்தவை
(ii) இவ்வெண் முத்துக்களா
(iii) அழகிய

2. நான் முல்லை மலர்களை யெடுக்கிறேன்.

(i) தொடுக்கிறேன்
(ii) பூக்களை
(iii) மல்லிகை

3. நமது அமைதி கலையப் போகிறது.

(i) அழிய
(ii) பண்பு
(iii) நம்முடைய

4. நம் தூய திருநாட்டின் வேந்தரும் உடனே போருக்குத் துணிந்து விட்டாரா?

(i) அரசரும்
(ii) சண்டைக்கு
(iii) புறப்பட்டு

5. நம் தளபதி பரதனிடமிருந்து ஒரு தகவலும் வரவில்லை.

(i) அசோகனிடமிருந்து
(ii) செய்தியும்
(iii) சேனாதிபதி
(iv) எந்த

6. நம்மை ஏளனமாக நினைத்து வந்தான்.

(i) துச்சமாக
(ii) இருந்தான்
(iii) எண்ணி
(iv) நம் படையை

VII. (*a*) *Transform the following into negative sentences.*

1. நான் முல்லை மலர்களை யெடுக்கிறேன்.
2. நீங்கள் கொட்டிய முத்துக்களை எடுங்கள்.
3. நம்மை ஏளனமாக நினைத்து வந்தான்.
4. நாம் தயாராக இருக்க வேண்டும்.
5. பயம் சூழ்கிறது
6. பெருமைப்படுகிறேன் தங்கள் புகழுரைகளைக் கேட்டு!

(*b*) Transform the following into positive sentences, **following** the model:

1. அதுகூட நினைவில்லையா? அதுகூட நினைவிருக்கிறதா?
2. நம் தளபதி பரதனிடமிருந்து ஒரு தகவலும் வரவில்லை.
3. அலச்சியமாக இருக்கக் கூடாது.
4. தங்கள் காலடியில் சேர்க்காமல் விடமாட்டேன்.
5. இரு நாடுகளுக்கும் போர்மூளுவது இன்றோ நாளையோ என்று கூற முடியாது
6. நம் கையிலுள்ள பொருட்களை விற்றுவிடவில்லை

VIII. *Transform the following into interrogative sentences using the underlined phrase/word:*

1. மகா பாரதப் போர் 18 நாட்கள் நடந்தது
2. நமது அமைதி கலையப் போகிறது
3. ஆதிக்க வெறிகொண்ட சிங்கபுரம், நம் கபிலபுர வீரத்தைச் சோதிக்கத் துணிந்து விட்டது.
4. சிங்கபுரத்து மன்னன் நம் எல்லையோரத்தில் தொல்லை கொடுக்கத் துணிந்துவிட்டான்
5. கபிலபுரத்தான் நம்மை ஏளனமாக நினைத்து வந்தான்

X. *Change each of the following complex sentences into simple sentences.*

1. மாலை கட்ட மலர்களை கீளே கொட்டி வைத்திருந்தால், இப்படியா ஓடிவந்து தடுக்கி விழுவது?

2. எதைச் சொல்லத் துடித்து வந்தேனோ அதைக் கூற மறந்துவிட்டேன் உன்னால்

3. ஆதிக்க வெறி கொண்ட சிங்கபுரம், நம் கபில புர வீரத்தைச் சோதிக்கத் துணிந்து விட்டது.

4. போர் சூழ்வதற்கு முன்னால் சிங்கபுரத்திலிருந்து நமக்கு வரவேண்டிய பாக்கித் தொகைகளை வசூலிப்பதோடு வாணிப நிலையையும் கவனித்து வர வேண்டும்.

5. அங்குள்ள வணிகரிடமிருந்து வர வேண்டிய தொகைகளை நாம் எப்போது மீட்பது?

X. *Change the following into complex sentences.*

1. நான் முல்லை மலர்களை யெடுக்கிறேன். நீங்கள் கொட்டிய முத்துக்களை யெடுங்கள்

2. சம்மதிப்பானா இல்லையா என்று தெரியவில்லை. போர் சூழ்வதற்கு முன்னால் சிங்கபுரத்திலிருந்து நமக்கு வரவேண்டிய பாக்கித் தொகைகளை வசூலிப்பதோடு வாணிப நிலையையும் கவனித்து வரவேண்டும்.

3. நம்மை ஏளனமாக நினைத்து வந்தார்கள். எல்லை ஓரத்திலே உள்ள நமது ஏராளமான படைவீரர்களைக் கண்டதும் பின்வாங்கி ஓட்டமெடுத்தார்கள்.

4. கபில புரத்து எல்லையில் நமது வீரர்கள் முன்னேறிக் கொண்டிருக் கிறார்கள். என்றாலும் எந்த நேரத்திலும் கபிலபுரப் பெரும்படை நம்மை வந்து தாக்கலாம்.

டாக்டர் அல்லி

[This and the following scenes are from a social play presented in simple written style; loan words are avoided and only a few features of spoken style are used.]

காட்சி 4

சோமு : ஐயா! வணக்கம்.

அறவாழி : வா சோமு! என்ன சேதி?

சோமு : என் தங்கைக்குத் திருமணங்க.

அறவாழி : ரொம்ப மகிழ்ச்சி. ஓ! இதுதானு அழைப்பு? சுப்புரத்தினம் [1]பி. யி.

சோமு : மாப்பிள்ளை உங்களுக்குத் தெரியுமா?

அறவாழி : கேள்விப்பட்டிருக்கிறேன்.

சோமு : ஐயா, என்ன, ஏதாவது புத்தகம் எழுதுகிறீர்களா?

அறவாழி : இதுவா? "திருமணம்" என்பதைப் பற்றி நண்பர் ஒருவர் எழுதிய கட்டுரையை அதைத் [2]திருத்தும்படியாகக் கொடுத்தார். படித்துப் பார்த்தேன்! சில இடங்களில் திருத்தங்கள் செய்திருக்கிறேன். பெற்றோர்களுக்காக ஒருவன் திருமணம் செய்து கொள்வது பேதமை. முன் பழக்கம் இல்லாத குடும்பத்தில் யாரோ சொல்லும் சொல்லைக்கேட்டு பெண் கொள்வதோ கொடுப்பதோ அஞ்சத்தக்க செயல். பெண்ணும் பிள்ளையும் ஒருவர்க்கொருவர் நிழற்படத்தை அனுப்பிப் பார்க்கச் செய்வதாலும் பயன் இல்லை. 'திருமணத்திற்

---

[1] பி. யி. — B. E. (Bachelor of Engineering)

[2] திருத்தும்படியாக — திருத்துவதற்காக

காக பெரிய விருந்து, கச்சேரி முதலியவை வைத்துச் செலவு செய்வது அறியாமை." திருமணம் நடந்த பிறகு மணமக்களைத் தனி வீட்டில் புதிய இல்லறம் தொடங்குமாறு செய்வதே அறம்.

சோமு : திருமணத்தைப் பற்றி இவ்வளவு அறிந்தால் போதுமா?

அறவாழி : இவைகள் எல்லாம் முக்கியமே. ஆனாலும் இன்னும் கருத வேண்டியவை, முக்கியமானவை சில உண்டு அப்பா!

சோமு : என்னங்க அவை?

அறவாழி : உனக்குத் தெரியுமா? [3]கழுத்துப் பொருத்தம் பார்க்க வேண்டும் என்று பொண்ணுக்கும் பிள்ளைக்கும் பார்ப்பாங்களே!

சோமு : தெரியாதே!

அறவாழி : அது ஒரு [4]மூடநம்பிக்கை. பெயர்களின் பொருத்தத்தை ஆராய்வது போல!

சோமு : சில வீடுகளில் பெயர் பொருந்தி வராவிட்டால், பெண்ணின் பெயரை மாற்றி வைத்து, பிறகு திருமணம் செய்கிறார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்.

அறவாழி : ஆமா! ஏன்? ஆணின் பெயரை மாற்றி வைக்கக் கூடாதா? ஹ ஹ் ஹ......உண்மையாகப் பார்க்க வேண்டியதை விட்டுவிட்டு, வேறு என்னென்னவோ பார்க்கிறார்கள். ஆணின் [5]உடல் வளத்தையும் பெண்ணின் உடல் வளத்தையும் பார்க்க வேண்டியது கட்டாயம். இவை எல்லாவற்றையும் விட உள்ளத்தின் பொருத்தம் அமைந்து காதல் ஏற்பட்டிருந்தால் எந்தத் தொல்லையும் இல்லை. இந்தக் காலத்தில் காதல் திருமணத்தைக் காண்பது பாலைவனத்தில் நீர் ஊற்றைக் காண்பது போல் அரிதாகி விட்டது. திருமணம் என்றால், திருமணம் ஆன பிறகே கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு வாழ வேண்டியிருக்கிறது. காலமிப்படி இருக்கிறதென்று சொல்லுகிறேன்.

---

3 கழுத்துப்பொருத்தம் — congruity between the necks (of the prospective bride and bridegroom) in size, shape etc.

4 மூட நம்பிக்கை — superstitious belief

5 உடல்வளம் — bodily health; physical fitness

சோமு : ஐயா! திருமணம் ஆன பிறகும் சிலர் ஒழுக்கத்தோடு வாழ முடியாமல் [6]கண்டபடி அலைகிருர்களே!

அறவாழி : அதுவா? மனத்தின் இயல்பு. உனக்குத் தெரியுமே! கையில் இருப்பதைவிட, கைக்கு எட்டியும் எட்டாமலும் இருப்பதைத் தான் மனம் நாடும். அதனுல் போதும் என்ற அமைதி இல்லாமல், ஒரு வகையான ஆசை அலைவு இருந்து கொண்டே இருக்கும்.

சோமு : ஆமாங்க! கணக்குப் போன்ற துறைகளிலும், கலைத் துறைகளிலும் வல்லவர்கள், கூர்மையான அறிவு உள்ளவர்கள் ஒழுக்கமாக வாழ முடியாமல் தொல்லைப்படுகிருர்களே! அது ஏனுங்க?

அறவாழி : அதுவா? வாழ்க்கையில் விழிப்பாக இருக்க வேண்டியவர்கள் அவர்களே. அறிவுக்கூர்மை எவ்வளவு ஆபத்தானது தெரியுமா? மந்த அறிவு உள்ளவர்க்கு நாடி நரம்புகள் நுண்ணுணர்வு இல்லாமல் அப்படியே மந்தமாக இருக்கும். ஆனுல் கூர்மையான அறிவு உடையவர்கள் நுட்பமான உணர்வுடைய நாடி நரம்புகள் உடையவர்கள். அந்த நுட்பமான நரம்புகளுக்கு ஏற்ற [7]பால் உணர்ச்சியும் இருக்கும். அப்படிப்பட்டவர்களுக்கு சிறிது நேரத்தில் [8]உடல்பசி ஏற்படும்! மறுபடியும் மறுபடியும் வரும். ஆகையால் அவர்கள் கெடுவதும் எளிதாகும். அவர்கள் மனத்தை அடக்கி ஆளக்கற்றுக் கொள்வார்களானுல் சிறந்தவர் களாக விளங்க முடியும்.

சோமு : அய்யா! தங்கள் வேலையில் குறுக்கிட்டுத் தொல்லை கொடுத்தேன். நான் வருகிறேன். கட்டாயம் என் தங்கையின் திருமணத்திற்குத் தாங்கள் வரவேண்டும்.

அறவாழி : வருகிறேன்.

சோமு : வணக்கம்.

---

[6] கண்டபடி அலை — wander aimlessly. Here it means indulging in debauchery.

[7] பால் உணர்ச்சி — sexual feeling

[8] உடல் பசி — lit. hunger of the body. i. e. carnal desire.

EXERCISES

I. Read the following in spoken Tamil:

ஏன்? ஆணின் பெயரை மாற்றி வைக்கக் கூடாதா? ஹ்ற ஹ்ற ஹ்ற ......உண்மையாகப் பார்க்க வேண்டியதை விட்டு விட்டு, வேறு என்னென்னவோ பார்க்கிறார்கள். ஆணின் உடல் வளத்தையும் பெண்ணின் உடல் வளத்தையும் பார்க்க வேண்டியது கட்டாயம். இவை எல்லாவற்றையும் விட உள்ளத்தின் பொருத்தம் அமைந்து காதல் ஏற்பட்டிருந்தால் எந்தத் தொல்லையும் இல்லை. இந்தக் காலத்தில் காதல் திருமணத்தைக் காண்பது பாலைவனத்தில் நீர் ஊற்றைக் காண்பது போல் அரிதாகிவிட்டது.

II. Vocabulary Exercise:

(*a*) Write a derivative noun for each of the words given below, following the model:

Model:– அறி—அறியாமை

(i) உணர்
(ii) பொறு
(iii) அஞ்சு
(iv) இயல்

Model:– திருத்து—திருத்தம்

(i) ஒழுகு
(ii) பழகு
(iii) பொருத்து

(*b*) Split the following compounds into constituent words and write meanings for the same.

(i) நிழற்படம்
(ii) நீரூற்று
(iii) மணமக்கள்
(iv) காதல் திருமணம்
(v) துறவறம்

III. *Fill up the blanks choosing the correct item.*

Make changes in the sentence if necessary.

1. யாரோ சொல்லும் சொல்——கேட்டு பெண் கொள்வதோ கொடுப்பதோ அஞ்சத்தக்க செயல்.

   (i) ஐ

   (ii) கு

   (iii) ஆல்

2. திருமணம் நடந்த பிறகு மணமக்களைத் தனி வீடு——புதிய இல்லறம் தொடங்குமாறு செய்வதே அறம்

   (i) கு

   (ii) ஐ

   (iii) இல்

3. திருமணத்திற்காக பெரிய விருந்து, கச்சேரி முதலியவை——செலவு செய்வது அறியாமை

   (i) கள்

   (ii) ஒடு

   (iii) வைத்து

4. உண்மையாகப் பார்க்க வேண்டியதை விட்டு——வேறு என்னென்னவோ பார்க்கிறார்கள்.

   (i) விட்டு

   (ii) பல

   (iii) அவர்கள்

5. இவை எல்லாவற்றையும் விட உள்ளத்தின் பொருத்தம் அமைந்து காதல் ஏற்பட்டு——எந்தத் தொல்லையும் இல்லை.

   (i) இருந்தது

   (ii) இருந்தால்

   (iii) இல்லை

IV. Substitution:

4. *ஆணின் உடல்வளத்தையும் பெண்ணின் உடல் வளத்தையும் பார்க்க வேண்டியது கட்டாயம்.*

(*a*) Supstitute the following for **உடல் வளத்தையும்** after making necessary changes in the given words:

(i) மனப்பொருத்தம்

(ii) தகுதி

(iii) இயல்பு

(*b*) Substitute the following for **பார்க்க** after making necessary changes in the given words:

(i) நோக்கு

(ii) சிந்தி

(iii) ஆராய்

(*c*) Substitute the following for **ஆணின்** after making necessary changes in the given words :

(i) மாப்பிள்ளை

(ii) மணமகன்

(iii) பையன்

2. *திருமணத்தைப் பற்றி இவ்வளவு அறிந்தால் போதுமா?*

(*a*) Substitute the following for **திருமணத்தை** after making necessary changes in the given words :

(i) பெண்

(ii) ஆண்

(iii) வகுப்பு

(iv) மாப்பிள்ளை

(*b*) Substitute the following for **போதுமா?** after making necessary changes in the given words :

(i) போதாது

(ii) தேவலை

(*c*) Substitute the following for **அறிந்தால்** after making necessary changes in the given words :

(i) எழுது

(ii) பேசு

3. அவர்களும் மனத்தை அடக்கி ஆளக் கற்றுக் கொள்வார்களானால் சிறந்தவர்களாக விளங்க முடியும்.

(*a*) Substitute the following for **விளங்க** after making necessary changes in the given words :

(i) பெயர் பெறு

(ii) வாழ்

(iii) நட

(iv) செயலாற்று

(*b*) Substitute the following for **சிறந்தவர்களாக** after making necessary changes in the given words :

(i) நல்லவர்

(ii) ஆன்றோர்

(iii) பெரியவர்

(*c*) Substitute the following for **மனத்தை** after making necessary changes in the given words:

(i) நா

(ii) கோபம்

(iii) உள்ளம்

V. *Rewrite the following sentences by substituting one item at a time.*

1. தங்கள் வேலையில் குறுக்கிட்டுத் தொல்லை கொடுத்தேன்.

   (i) தொந்தரவு
   (ii) செய்தேன்
   (iii) காரியத்தில்

2. திருமணம் ஆன பிறகும் சிலர் ஒழுக்கத்தோடு வாழ முடியாமல் கண்டபடி அலைகிறார்களே!

   (i) கற்போடு
   (ii) மனம் போனபடி
   (iii) பழக
   (iv) போகிறார்களே

3. வாழ்க்கையில் விழிப்பாக இருக்க வேண்டியவர்கள் அவர்களே.

   (i) நடக்க
   (ii) வனமாக
   (iii) நாங்களே
   (iv) உலகத்தில்

VI. *Transform the following into positive sentences*:

1. பெண்ணும் பிள்ளையும் ஒருவருக்கொருவர் நிழற்படத்தை அனுப்பிப் பார்க்கச் செய்வதாலும் பயன் இல்லை.
2. ஆணின் பெயரை மாற்றி வைக்கக் கூடாது.
3. திருமணத்தைப் பற்றி இவ்வளவு அறிந்தால் போதாது.
4. திருமணத்திற்காக பெரிய விருந்து, கச்சேரி முதலியவை வைத்துச் செலவு செய்வது அறியாமை.

VII. *Transform the following into interrogative sentences, using the underlined phrase/word*:

1. இந்தக் காலத்தில் காதல் திருமணத்தைக் காண்பது பாலைவனத்தில் <u>நீர் ஊற்றைக் காண்பது</u> போல் அரிதாகி விட்டது.
2. <u>பெற்றோர்களுக்காக</u> ஒருவன் திருமணம் செய்து கொள்வது பேதமை.

3. **கழுத்துப்** பொருத்தம் பார்க்க வேண்டும்.

4. கூர்மையான அறிவு உள்ளவர்கள் **ஒழுக்கமாக** வாழ முடியாமல் தொல்லைப் படுகிறார்கள்.

VIII. *Change each of the following complex sentences into simple sentences*

1. உண்மையாகப் பார்க்க வேண்டியதை விட்டுவிட்டு, வேறு என்னென்னவோ பார்க்கிறார்கள்.

2. தங்கள் வேலையில் குறுக்கிட்டுத் தொல்லை கொடுத்தேன்.

3. கணக்குப் போன்ற துறைகளில் வல்லவர்கள் ஒழுக்கமாக வாழ முடியாமல் தொல்லைப்படுகிறார்கள்.

4. திருமணம் நடந்தபிறகு மணமக்களைத் தனிவீட்டில் புதிய இல்லறம் தொடங்குமாறு செய்வதே அறம்.

IX. *Change the following sentences into complex sentences.*

1. கையில் இருப்பதைவிட, கைக்கு எட்டியும் எட்டாமலும் இருப்பதைத் தான் மனம் நாடும். அதனால் போதும் என்ற அமைதி இல்லாமல், ஒருவகையான ஆசை அலைவு இருந்து கொண்டே இருக்கும்.

2. படித்துப் பார்த்தேன்! சில இடங்களில் திருத்தங்கள் செய்திருக்கிறேன்.

3. அவர்கள் கெடுவதும் எளிதாகும். அவர்கள் திருந்துவதும் எளிதாகும்.

4. பெண்ணின் பெயரை மாற்றி வைப்பார்கள். பிறகு திருமணம் செய்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன்.

5. இவைகள் எல்லாம் முக்கியமே. ஆனாலும் இன்னும் கருதவேண்டியவை முக்கியமானவைசில உண்டு, அப்பா.

X. *Summarize the story of the drama in a narrative form not exceeding 20 lines.*

டாக்டர் அல்லி

காட்சி 10

சோமுவின் தந்தை: சோமுவின் [1]போக்கில் நேர்ந்துள்ள மாறுதல் வியப்பாகவே இருக்கிறது. முன்னெல்லாம் ஒரு நாளும் நேரத்தோடு அவன் வீட்டிற்கு வந்ததில்லை; அப்படிப்பட்டவன் இப்பொழுது மிக ஒழுங்காக நேரம் தவருமல் வருகிருன். கல்லூரி நேரம் தவிர, மாலையில் வெளியே உலாவப் போகும் காலம் தவிர; மற்றப் பொழுதெல்லாம் வீட்டிலேயிருந்து கடமையைச் செய்கிருன். "நான் நண்பரின் வீட்டிற்குப் போய்ப் படிக்கப் போகிறேன்" என்று சொல்லி விட்டு எங்காவது பொழுதுபோக்கி வந்தவன், இப்போது நண்பர்கள் இந்த வீடு தேடி வந்தாலும் கூட விரைவிலே பேசி முடித்து அனுப்பி விடுகிருன். முன்னெல்லாம் [2]கண்டபடி புத்தகத்தைப் பரப்பிவைத்தவன் இப்பொழுது மேஜையை எவ்வளவு ஒழுங்காக வைத்திருக்கிருன். இது என்ன இது? [3]நாட்குறிப்பு? ஆம், அவனே எழுதியிருக்கிருன். மற்றவருடைய நாட்குறிப்பைத் தெரியாமல் எடுத்துப் பார்ப்பதும் தவறு அல்லவா? என்னதான் எழுதியிருக்கிருன் என்று பார்ப்போமே. "நாள்தோறும் வாழ்க்கையில் உணர்ந்தவைகளை நாட்குறிப்பில் எழுதி வைக்க வேண்டும். அது வாழ்க்கையில் திருந்துவதற்குச் சிறந்த வழியாகும்" என்கிருர் ஆசிரியர் அறவாழி. இது எவ்வளவு பெரிய உண்மை!

---

1 போக்கு — behaviour; generally it is used in the sense of 'trend'; e. g. காலப் போக்கு (trend of the times or age.)

2 கண்டபடி — in disorder.

3 நாட்குறிப்பு — diary used for writing personal matters i. e., to write one's thoughts, feelings etc.

ஓ! அன்று கெட்டவன் என்று நினைத்தது என் மனம் இன்று நல்லவன் என்று நானே மகிழ்கிறேன். கெட்ட வழியில் சென்ற மகன் திருந்தி நல்ல வழிக்கு மாறினால் தகப்பன் மனம் மகிழாதா? இனிமேல் எனக்கு என்ன குறை? அல்லியின் திருமணமும் அருமையாக முடிந்து விட்டது. மகனும் இனி நல்லபடியே வாழ்வான். நானும் கவலை இல்லாமலே சாவேன். என்ன? "இரக்கம் இல்லாதவர்களை — பிறர் துன்பத்தைக் கண்டு கண்ணீர் கலங்காதவர்களை—எளிய வாழ்க்கையை விரும்பாதவர்களை நம்பாதே. திருமணம் செய்து கொள்ளும் காலத்திலும் இப்படிப்பட்ட மனமுள்ள பெண்ணை நாடாதே !" ஓ ! தனக்கு எப்படிப்பட்ட பெண் வேண்டுமென்று திட்டவட்டமாகச் சொல்லிவிட்டான். யாரந்த ஆசிரியர் அறவாழி? யாரவர்?

(சோமுவும் அறவாழியும் வருதல்)

ஆங் ! என்ன சோமு......என்னப்பா? ஏன்?

அறவாழி : ஒன்றுமில்லை. பதறாதீர்கள். பூங்காவில் என்னோடு பேசிக்கொண்டிருந்த பொழுது கொஞ்சம் அதிகமாக இருமினான். அதனால் கொஞ்சம் [4]மார்பு வலி ஏற்பட்டது.

சோமுவின் தந்தை: ஆமா? உடம்புக்கு நன்றாக இல்லாதபோது ஏனப்பா வெளியே போகிறாய்?

சோமு : எனக்கு ஒன்றுமில்லையப்பா. சிறிது ஓய்வெடுத்துக்கொண்டால் சரியாகிவிடும். வணக்கம். ஐயா! மிக்க நன்றி!

அறவாழி : அய்யா ! உடனே டாக்டரிடத்தில் காண்பிக்க வேண்டும். சில நாட்களாகவே மாலை நேரத்தில் இவனுக்குக் காய்ச்சல் வேறு அடிக்கிறது. அவன் யாரிடமும் சொன்னதாகத் தெரியவில்லை.

சோமுவின் தந்தை: அய்யோ ! ஏனக்குத் தெரியாதே. இரவில் நெடுநேரம் படிக்கிறான். எப்போதும் புத்தகமும் கையுமாகவே இருக்கிறான். அதனால் சூடு ஏற்பட்டு இருமுகிறான் என்று எண்ணினேன். ஆனால் என்ன நோய்? நோய் வந்து அவனை துன்புறுத்துவது அறியாமல் போனேனே? அய்யோ ;

---

4 மார்புவலி — chest pain; pain in the chest. compare the structure of this compound with தலை வலி 'head ache'; வயிற்றுவலி ——'stomach–ache'

அறவாழி : நாளையே டாக்டரிடத்தில் காண்பியுங்கள். சரியாகி விடும் கவலைப்படாதீர்கள்,

சோமுவின் தந்தை: வீட்டிலேயே டாக்டர் இருந்தும் அவனை நோய்க்கு ஆளாக்கி விட்டோமே!

அறவாழி : டாக்டர்கள் நோய்க்கு விலக்கானவர்களா?

தந்தை : இவ்வளவு நேரமாக உங்களை யாரென்று தெரிந்து கொள்ளவே இல்லை நான்!

அறவாழி : சோமு என்னிடம் உயர்நிலைப் பள்ளியில் படித்த மாணவன். நான் ஆசிரியன். என் பெயர் அறவாழி.

தந்தை : ஆ! நீங்கள்தானா? நின்று கொண்டிருக்கிறீர்களே! உட்காருங்கள்

அறவாழி : இல்லை. நான் போக வேண்டியதுதான். நாளை வந்து பார்க்கிறேன்.

தந்தை : சரி, செய்யுங்கள். இவ்வளவு சிறந்த அறிஞரின் [5]துணை கிடைத்திருந்தும் இவன் வாழ்க்கை பாழாய்ப் போயிற்றே! அய்யோ! சோமு!

---

[5] துணை — it is here used in the sense of 'company/guidance'

EXERCISES

I. Read the following in spoken Tamil:

முன்னெல்லாம் கண்டபடி புத்தகத்தைப் பரப்பிவைத்தவன் இப்பொழுது மேஜையை எவ்வளவு ஒழுங்காக வைத்திருக்கிறான். இது என்ன இது? நாட்குறிப்பு? ஆம், அவனே எழுதியிருக்கிறான். மற்றவருடைய நாட்குறிப்பைத் தெரியாமல் எடுத்துப் பார்ப்பதும் தவறு அல்லவா? என்ன தான் எழுதியிருக்கிறான் என்று பார்ப்போமே. "நாள்தோறும் வாழ்க்கையில் உணர்ந்தவைகளை நாட்குறிப்பில் எழுதிவைக்க வேண்டும். அது வாழ்க்கையில் திருந்துவதற்குச் சிறந்த வழியாகும்" என்கிறார் ஆசிரியர் அறவாழி. இது எவ்வளவு பெரிய உண்மை!

II. Vocabulary Exercise

(*a*) Write a derivative noun for each of the words given below following the model:

Model:- படி——படிப்பு

(i) மடி

(ii) துடி

(iii) வெடி

(iv) நடி

(*b*) Split the following compounds into constituent words and write meanings for the same:

(i) நாட்குறிப்பு

(ii) மாலைவேளை

(iii) பூங்கா

(iv) மார்புவலி

(v) உயர்நிலைப்பள்ளி

111. *Fill up the blanks choosing the correct item.*

Make changes in the sentence if necessary.

1. நாள்தோறும் வாழ்க்கை——உணர்ந்தவைகளை நாட்குறிப்பில் எழுதி வைக்கவேண்டும்.

   (i) கு
   (ii) மேல்
   (iii) இல்

2. மகன்——இனி நல்லபடியே வாழ்வான்.

   (i) உம்
   (ii) கு
   (iii) இன்

3. தனக்கு எப்படிப்பட்ட பெண் வேண்டுமென்று திட்டவட்டம்—— சொல்லிவிட்டார்.

   (i) கு
   (ii) இன்
   (iii) ஆக

4. அதனால் கொஞ்சம் மார்புவலி ஏற்பட்——

   (i) ஆர்
   (ii) அது
   (iii) ஏன்

5. இரவு——நெடுநேரம் படிக்கிறான்.

   (i) இல்
   (ii) கு
   (iii) இன்

6. டாக்டர்கள் நோய்——விலக்கானவர்கள்.

   (i) மேல்
   (ii) கு
   (iii) ஆக

IV. *Substitution:*

1. *முன்னெல்லாம் கண்டபடி புத்தகத்தைப் பரப்பிவைத்தவன் இப்போது மேஜையை எவ்வளவு ஒழுங்காக வைத்திருக்கிறான்.*

(*a*) Substitute the following for **புத்தகத்தை** after making necessary changes in the given words.

(i) *துணி*
(ii) பேப்பர்
(iii) பொருள்கள்

(*b*) Substitute the following for **வைத்தவன்** after making necessary changes in the given words.

(i) *எறி*
(ii) போடு

(*c*) Substitute the following for **ஒழுங்காக** after making necessary changes in the given words.

(i) *அழகு*
(ii) *சிறப்பு*
(iii) *எடுப்பு*

2. *அல்லியின் திருமணமும் அருமையாக முடிந்துவிட்டது.*

(*a*) Substitute the following for **அல்லியின்** after making necessary changes in the given words.

(i) *தங்கை*
(ii) *லலிதா*
(iii) *கஸ்தூரி*

(*b*) Substitute the following for **அருமையாக** after making necessary changes in the given words.

(i) *எளிது*
(ii) பெருமைப்படும்படி
(iii) போற்றும்படி

(*c*) Substitute the following for முடிந்து after making necessary changes in the given words.

(i) நட

(ii) அமை

3. பூங்காவில் என்னோடு பேசிக்கொண்டிருந்தபோது கொஞ்சம் அதிகமாக இருமினான்.

(*a*) Substitute the following for **பூங்காவில்** after making necessary changes in the given words.

(i) வீடு

(ii) கடை

(iii) கார்

(*b*) Substitute the following for **பேசிக்கொண்டிருந்த** after making necessary changes in the given words.

(i) தூங்கு

(ii) விளையாடு

(iii) பாடு

(*c*) Substitute the following for **இருமினான்** after making necessary changes in the given words.

(i) அலறு

(ii) கத்து

(iii) ஏசு

V. *Rewrite the following sentences by substituting one item at a time.*

1. நாள் தோறும் வாழ்க்கையில் உணர்ந்தவைகளை நாட்குறிப்பில் எழுதி வைக்க வேண்டும்.

(i) அனுபவத்தில்

(ii) தினம்

(iii) அறிந்தவைகளை

(iv) குறிப்பிட

2. இன்று நல்லவன் என்று நானே மகிழ்கிறேன்

(i) உயர்ந்தவன்

(ii) இப்பொழுது

(iii) நாங்களே

3. தனக்கு எப்படிப்பட்ட பெண் வேண்டுமென்று திட்டவட்டமாகச் சொல்லிவிட்டான்

(i) கூறி

(ii) அறுதியிட்டு

(iii) மங்கை

(iv) அவனுக்கு

4. சிறிது ஓய்வெடுத்துக் கொண்டால் சரியாகிவிடும்

(i) குணமாகி

(ii) கொஞ்சம்

(iii) படுத்து

5. நாளையே டாக்டரிடத்தில் காண்பியுங்கள்

(i) மருத்துவர்

(ii) காட்டு

(iii) இப்பொழுதே

6. நோய் வந்து அவனை துன்புறுத்துவது அறியாமல் போனேனே?

(i) தம்பியை

(ii) கஷ்டப்படுத்துவது

(iii) தெரியாமல்

(iv) காய்ச்சல்

VI. *Transform the following sentences into positive sentences :*

1. முன்னெல்லாம் ஒரு நாளும் நேரத்தோடு அவன் வீட்டிற்கு வந்தது இல்லை

2. திருமணம் செய்து கொள்ளும் காலத்திலும் இப்படிப்பட்ட மனமுள்ள பெண்ணை நாடாதே

3. எளிய வாழ்க்கையை விரும்பாதவர்களை நம்பாதே

4. இவன் யாரிடமும் சொன்னதாகத் தெரியவில்லை.

5. எனக்குத் தெரியாதே

6. கவலைப்படாதீர்கள்.

VII. *Transform the following into declarative sentences :*

Model : மற்றவருடைய நாட்குறிப்பைத் தெரியாமல் எடுத்துப் பார்ப்பது தவறு அல்லவா?

மற்றவருடைய நாட்குறிப்பைத் தெரியாமல் எடுத்துப் பார்ப்பது தவறு அல்ல.

1. கெட்ட வழியில் சென்ற மகன் திருந்தி நல்ல வழிக்கு மாறினால் தகப்பன் மனம் மகிழாதா?

2. நீங்கள் தானா?

3. நானும் கவலை இல்லாமல் சாவேனா?

4. தனக்கு எப்படிப்பட்ட பெண் வேண்டுமென்று திட்டவட்டமாகவா சொல்லிவிட்டான்?

5. இரவில் நெடுநேரம் படிக்கிறானா?

VIII. *Change each of the following complex sentences into simple sentences.*

1. சோமுவின் போக்கில் நேர்ந்துள்ள மாறுதல் வியப்பாகவே இருக்கிறது.

2. முன்னெல்லாம் கண்டபடி புத்தகத்தைப் பரப்பிவைத்தவன் இப்பொழுது மேஜையை எவ்வளவு ஒழுங்காக வைத்திருக்கிறான்.

3. இப்போது நண்பர்கள் இந்த வீடு தேடி வந்தாலும்கூட விரைவிலே பேசி முடித்து அனுப்பிவிடுகிறான்.

4. கெட்ட வழியில் சென்ற மகன் திருந்தி நல்ல வழிக்கு மாறினால் தகப்பன் மனம் மகிழாதா?

5. பூங்காவில் என்னோடு பேசிக்கொண்டிருந்தபொழுது கொஞ்சம் அதிகமாக இருமினான்.

6. நாள்தோறும் வாழ்க்கையில் உணர்ந்தவைகளை நாட்குறிப்பில் எழுதி வைப்பது வாழ்க்கையில் திருந்துவதற்கு சிறந்த வழியாகும்.

IX. *Change the following into complex sentences.*

1. முன்னெல்லாம் ஒரு நாளும் நேரத்தோடு அவன் வீட்டிற்கு வந்ததில்லை. அப்படிப்பட்டவன் இப்பொழுது மிக ஒழுங்காக நேரம் தவறாமல் வருகிறான்.

2. அன்று கெட்டவன் என்று நினைத்தது என் மனம். இன்று நல்லவன் என்று நானே மகிழ்கிறேன்.

3. அல்லியின் திருமணமும் அருமையாக முடிந்துவிட்டது. மகனும் இனி நல்லபடியே வாழ்வான்.

4. சில நாட்களாகவே மாலை நேரத்தில் இவனுக்குக் காய்ச்சல் வேறு அடிக்கிறது. இவன் யாரிடமும் சொன்னதாகத் தெரியவில்லை.

X. *Match the phrases given in column I with those given in column II to make appropriate sentences.*

I	II
1. இவ்வளவு சிறந்த அறிஞரின் துணை கிடைத்திருந்தும்	சரியாகிவிடும்
2. வீட்டிலேயே டாக்டர் இருந்தும்	சூடு ஏற்பட்டு இருமுகிறான் என்று எண்ணினேன்
3. டாக்டரிடத்தில் காண்பித்தால்	பெண்ணை நாடாதே
4. எப்போதும் புத்தகமும் கையுமாக இருப்பதால்	இப்பொழுது நேரம் தவறாமல் வருகிறான்
5. திருமணம் செய்துகொள்ளும் காலத்திலும் இப்படிப்பட்ட	இவன் வாழ்க்கைப் பாழாய்ப் போயிற்றே
6. முன்னெல்லாம் நேரத்தோடு வீட்டிற்கு வராதவன்	அவனை நோய்க்கு ஆளாக்கி விட்டோமே

கவரிமான்

மாயாவி

[This is a social play presented in marked Brahmin dialect in the spoken style.]

நாடக உறுப்பினர்கள்

ரகுராமன்

வைதேகி

மாமா

வைதேகி : அட ராமா ! இது என்ன ? தரெயிலே படுத்துண்டிருக்கேள் ? நன்னுருக்கு, தலேக்கு ஜலம்(ம்) விட்டுண்ட அன்னிக்கு தரையிலெ படுத்துண்டு, தணுப்பு தட்டி மறுபடியும் ஜொரம் வந்துடவா ? எழுந்திருங்கோ ! பாயை விரிச்சுத்தரே(ன்) ! அதிலே படுத்துக்குங்கோ, இருங்கோ சித்தே, ஆங்... இந்தாங்கோ, இப்பொ படுத்துக்குங்கோ.

ரகுராமன் : வைதேகி !

வைதேகி : என்ன என்ன வேணும் ?

ரகுராமன் : ஒண்ணு(ம்) இல்லே

வைதேகி : ஹ ஹ ஹ

ரகுராமன் : ஏன் சிரிக்கிறே ?

வைதேகி : என்னவோ அவசரமா கூப்பிட்டேள், என்னுனு கேட்டா ஒண்ணுமில்லேங்கறேளே ?

ரகுராமன் : எனக்கு அதெ எப்படிச் சொல்றதுன்னே தெரியல்லே, வைதேகி.

வைதேகி : எதெ ?

ரகுராமன் : நீ எங்கிட்ட காட்டிண்டுவர அன்பெ

வைதேகி : அன்பெ அன்புன்னு சொல்லுவா! வேறெ எப்படிச் சொல்லுவா ?

ரகுராமன் : ஆனு இந்த அன்பு வெறா(ம்) அன்பூன்னு எப்படி சொல்றது வைதேகி? மூணு வாரமா நீ எனக்கு செய்திருக்கிற பணிவிடை இருக்கே அது ஒரு தாயார் பிள்ளைக்கு செய்யறதெவிட மேலானது. ஒரு தங்கெ அண்ணு வுக்கு செய்யறதெவிட உயர்வானது. அதனுலெதா(ன்) அதெ எதுக்கு ஒப்பிடறதூன்னு தெரியாம தெணர்றே(ன்)

வைதேகி : நீங்க ஒண்ணு(ம்) தெணறி, இன்னு(ம்) ஒடம்புக்கு ஏதாவது வருத்தி விட்டுக்க வேண்டா(ம்), பேசாமெ அன்பெஅன்புன்னே சொல்லுங்கோ போறு(ம்)

ரகுராமன் : இல்லெ வைதேகி ! என்னுலெ அதெ அப்படிச் சொல்ல முடியாது.

வைதேகி : பின்னெ ? என்னது ? கேட்டதுக்கு பதில் சொல்லாமெ, ஒணந்த சுண்ணும்புக் கட்டியாலே தரேலெ கிறுக்கிண்டிருக்கேள் ?

ரகுராமன் : இதெப்பாரே(ன்)

வைதேகி : எதெ ?

ரகுராமன் : இங்கே தரெலே என்ன எழுதிருக்கேங்கிறதெ

வைதேகி : கா...த...போங்க உங்களுக்கு கொஞ்சங்கூட வெக்கமேல்லெ

ரகுராமன் : இதுதா(ன்) வைதேகி நீ இத்தன நாளா என்மேலெ காட்டிண்டுவந்த அன்புக்கு சரியான பத(ம்) வைதேகி !

வைதேகி : என்ன ?

ரகுராமன் : நா(ன்) இப்படி எழுதினது தப்பா ?

வைதேகி : இதிலெ தப்பென்னருக்கு ? உங்க மனசிலே தோணினதை சொல்ல முடியாமே எழுதிக் காட்டிருக்கேள்.

ரகுராமன் : அதுமாதிரி நீயும் ஒம்மனசிலிருக்கிறதெ...

வைதேகி : எழுதிக் காட்டச் சொல்றேளா ? அம்மாடீ...நா(ன்) மாட்டே(ன்)

ரகுராமன் : அப்படீன்னு ஒம் மனசிலிருக்கிறதெ நா(ன்) எப்படி புரிஞ்சிக்கிறது ?

வைதேகி : ஏம் மனசு, ஏம் மனசு இன்னு(ம்) உங்களுக்குப் புரியலியா ?

ரகுராமன் : ஆஹா ! நா(ன்) எவ்வளவு பாக்கியசாலி வைதேகி !

வைதேகி : இருங்கோ, இருங்கோ அப்படி ஒரேயடியா சந்தோஷம் பட்டுடாதேங்கோ !

ரகுராமன் : ஏ(ன்) வைதேகி ?

வைதேகி : நம்ம கல்யாணத்துக்கு நாம ரெண்டு பேர் மட்டும் முடிவு பண்ணிட்டாப் போருது. மாமா சம்மதங் கொடெக்கணுமாக்கிறது நெனப்பிருக்கட்டு(ம்)

மாமா : வைதேகி ! அம்மா வைதேகி !

வைதேகி : ஐயோ ! மாமா. சொல்லி வாய் மூடலே அவரே வந்தாச்சு. நா(ன்) உள்ளே போறே(ன்)

மாமா : ஏண்டா ரகுராமா !

ரகுராமன் : ஆங்

மாமா : என்ன குளிச்சியா, சாப்டியா ?

ரகுராமன் : எல்லா(ம்) ஆச்சண்ணு

மாமா : ஆங்... ஒனக்கு ஒரு சந்தோஷ சமாச்சாரங் கொண்டு வந்திருக்கே(ன்)

ரகுராமன் : என்னண்ணு ?

மாமா : நீ இனிமே நம்ம ஹோட்டல்லெ சர்வர்லே

ரகுராமன் : ஊ(ம்)

மாமா : சரக்கு மாஸ்டரான எனக்கு அஜீஸ்டெண்ட்

ரகுராமன் : அண்ணு

மாமா : ஆமா ரகுராமா! ஒன்னெயெனக்கு ரொம்பப் பிடிச்சுப் போச்சு, ஒனக்கு தெரியுமோ என்னவோ ? நம்ம ஹோட்டல் மொதலாளி பத்மனுப போத்திக்கி சாத்தூர்லெ ஒரு ஹோட்டலு(ம்) சிவகாசீலெ ஒரு ஹோட்டலு(ம்) இருக்கு.

ரகுராமன் : ஊ(ம்)

மாமா : சிவகாசி ஹோட்டல் சரக்கு மாஸ்டர் [1]சாரமில்லே ! வேறொரு ஆள் வேணும்னு நேத்திக்கி இங்கெ வந்திருந்தபோது சொன்னார்.

ரகுராமன் : ஊ(ம்)

மாமா : நா(ன்) ஆறு மாசத்திலே ஒன்னெ பஸ்டு கிளாஸ் சரக்கு மாஸ்டரா தயார்ப் பண்ணி அங்கெ அனுப்பி வெக்யறதா சொல்லியிருக்கே(ன்)

ரகுராமன் : ஆ(ம்)

மாமா : என்ன சரிதானே ?

ரகுராமன் : நா(ன்) ரொம்பக் [2]கொடுத்து வெச்சவண்ணா

மாமா : நீ மட்டு(ம்) என்னடா ? சூதாடறது, பீடி சிகரெட் பிடிக்கிறது, இந்த மாதிரி கெட்ட பழக்க(ம்) ஒண்ணும் இல்லாதவ(ன்) எவனாயிருந் தாலும் அவனெ யெனக்கு பிடிச்சுத்தா(ன்) இருக்கும். அவனுக்காக நான் எதையு(ம்) செய்யதா(ன்) செய்வே(ன்). ஏண்டாப்பா ?

ரகுராமன் : ஊ(ம்)

மாமா : நான், இவ்வளவு(ம்) செய்தப்புறம் என்னை ஏமாத்திறமாட்டியே ?

ரகுராமன் : ஏமாத்தறதா ?

மாமா : ஆமா(ம்). எங்கிட்டெ வேலெயெ கத்துண்டே அந்தப் பசங்களோட சேர்ந்து [3]துட்டு வெச்சு சீட்டாடத் தொடங்கிட மாட்டியே ?

ரகுராமன் : சத்தியமா மாட்டே(ன்) அண்ணா !

மாமா : சந்தோஷ(ம்). ஆமா(ம்) வைதேகி எங்கே காணோ(ம்) ? உள்ளே தூங்கறாளா ?

ரகுராமன் : இல்லேண்ணா. இங்கேதான் ஒக்காந்து இவ்வளவு நேரம் பேசிண் டிருந்தா. இப்பத்தா(ன்) உள்ளே போனா

---

1 சாரமில்லே — ஸாரமில்லை - not so good (in doing things)

2 கொடுத்து வெச்சவன் — கொடுத்து வைத்தவன் lit. the one who had given things to keep in store. i.e., one who is lucky.

3 துட்டு வெச்சு சீட்டாடு — துட்டு வைத்துச் சீட்டாடு to play card game staking money

மாமா : ஹ ஹ ஹ......சள சளன்னு பேசி ஒன்னெத் தூங்கவிடாமே [4]கழுத் தறுத்துண்டிருந்தாளாக்கு(ம்)! ஹ ஹ ஹ... வாயாடிப் பொண்ணு. இருந்தாலுங் கெட்டிக்காரி. இல்லையா ரகுராமா? நீ என்ன நெனெக்யறே?

ரகுராமன் : வைதேகியை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு அண்ணு.

மாமா : பேஷ் பேஷ்...அடெ! இது யாரு? சுண்ணும்பாலெ தரேலெ கிறுக்கிருக்கிறது? என்னது? கா...த...ல் சேச்சேச்சே...பேத்தல்...பேத்தல்

ரகுராமன் : அது வந்து அண்ணு! நா(ன்) பொழக்கடேலெ குளிக்கப் போயிருந்த போது

மாமா : ஆங்...

ரகுராமன் : இந்தப் பக்கத்தாத்துப் பொண்ணு இல்லே?

மாமா : ஆமா... அந்தச் சியாமளி

ரகுராமன் : ஆமா. அவ ஸ்லேட்டும் சாக்கட்டியும் வெச்சிண்டு இங்கெ உக்காந்து என்னமோ எழுதிண்டிருந்தா. அவதான் தரேலெயு(ம்) இப்படிக் கிறுக்கியிருக்கா போல்ருக்கு.

மாமா : சர்தாம்போ. அந்த ஆறு வயஸு பொண்ணு இப்டி கன்னு பின்னுன்னு எழுதியிருக்கு? ஹூம்! கால(ம்) ரொம்பக் கெட்டுப் போச்சுனுப்பா. ஊம், வைதேகி! அம்மா வைதேகி! எனக்குச் சாதம் போட்றியாம்மா?

---

4 கழுத்தறு — lit. to saw the nec. Here it means tiring (boring) some one by incessant talk.

EXERCISES

I. Read the following in spoken Tamil :

ரகுராமன் : அப்படீன்னு ஒம் மனஸிலிருக்கிறதெ நா(ன்) எப்படி புரிஞ்சிக்கிறது ?

வைதேகி : ஏம் மனஸு, ஏம் மனஸு இன்னு(ம்) உங்களுக்குப் புரியலியா ?

ரகுராமன் : ஆஹா ! நா(ன்) எவ்வளவு பாக்கியசாலி வைதேகி !

வைதேகி : இருங்கோ, இருங்கோ அப்படி ஒரேயடியா சந்தோஷம் பட்டுடா தேங்கோ !

ரகுராமன் : ஏ(ன்) வைதேகி ?

வைதேகி : நம்ம கல்யாணத்துக்கு நாம ரெண்டு பேர் மட்டும் முடிவு பண்ணிட்டாப் போறுது. மாமா சம்மதங் கெடக்கணுங்கிறது நெனப்பிருக்கட்டு(ம்).

II. Rewrite the following in written Tamil:

1. தரெயிலெ படுத்துண்டிருக்கேள் ?
2. இதிலெ தப்பென்னருக்கு ? உங்க மனஸிலெ தோணினதை சொல்ல முடியாமே எழுதிக் காட்டிருக்கேள்
3. நீங்க ஒண்ணு(ம்) தெணறி, இன்னு(ம்) ஒடம்புக்கு ஏதாவது வருத்தி விட்டுக்க வேண்டா(ம்)
4. கேட்டதுக்கு பதில் சொல்லாமெ, ஒணந்த சுண்ணும்புக் கட்டியாலே தரேலெ கிறுக்கிண்டிருக்கேள்
5. நா(ன்) ஆறு மாஸத்திலே ஒன்னெ பஸ்டு கிளாஸ் சரக்கு மாஸ்டரா தயார்ப் பண்ணி அங்கெ அனுப்பி வெக்யறதா சொல்லியிருக்கே(ன்)
6. நான், இவ்வளவு(ம்) செய்தப்புறம் என்னே ஏமாத்திறமாட்டியே ?
7. அவ ஸ்லேட்டும் சாக்கட்டியும் வெச்சிண்டு இங்கெ உக்காந்து என்னமோ எழுதிண்டிருந்தா
8. அவதான் தரேலெயு(ம்) இப்படிக் கிறுக்கியிருக்கா போல்ருக்கு
9. சர்தாம் போ
10. நா(ன்) ரொம்பக் கொடுத்து வெச்சவண்ணு

III. *Vocabulary Exercise*:

(*a*) Split the following compounds into constituent words and write meanings for the same:

(i) பணிவிடை

(ii) சரக்கு மாஸ்டர்

(iii) சீட்டாட்டம்

(iv) வாயாடிப்பொண்ணு

(v) பொழக்கடே

(*b*) Read the following phrases which are used and write meanings for the same:

(i) தயார்பண்ணு

(ii) கேலிபண்ணு

(iii) கலாட்டா பண்ணு

(iv) சமையல் பண்ணு

(v) டிரஸ் பண்ணு

(vi) ஜெபம் பண்ணு

(vii) பூஜை பண்ணு

(viii) மனப்பாடம் பண்ணு

(ix) தமாஷ் பண்ணு

(x) சத்யாக்கிரகம் பண்ணு

(xi) தானம் பண்ணு

(xii) காசு பண்ணு

(c) Use the following phrases in sentences:

(i) பீடி சிகரெட்

(ii) வெத்திலே பாக்கு

(iii) இட்லி தோசை

(iv) காஃபி டீ

(v) மஞ்சள் குங்குமம்

(vi) சோறு தண்ணீ(ர்)

(vii) காசு பணம்

(viii) துணிமணி

(ix) மேசை நாற்காலி

(x) வேட்டி சட்டை

(xi) பாவாடை தாவணி

(xii) நகைநட்டு

IV. *Fill up the blanks choosing the correct item.*

Make changes in the sentence if necessary.

1. இந்தாங்கோ இப்பொ படுத்துக் ————

(i) கோ

(ii) குங்கோ

2. ஒணந்த சுண்ணும்புக் கட்டி ———— தரேலெ கிறுக்கிண்டிருக்கேள்

(i) மேலெ

(ii) ஆலெ

(iii) ஒடு

2. எங்கிட்டெ யவேலெயெ கத்துண்டே அந்தப் பசங்க(ள்) ———— சேர்ந்துதுட்டு வெச்சு சீட்டாடத் தொடங்கிட மாட்டியே ?

(i) ஒடு

(ii) இல்

(iii) கு

4. இந்த மாதிரி கெட்ட பழக்க(ம்) ஒண்ணும் இல்லாதவ(ன்) எவனும் ———— அவனெ யெனக்குப் பிடிக்கும்

(i) போனாலும்

(ii) இல்லாவிட்டாலும்

(iii) இருந்தாலும்

5. நான் இவ்வளவு(ம்) செய்தப்புறம் நீ என்னை ஏமாத்திற ————

(i) மாட்டீங்களே ?

(ii) மாட்டியே ?

(iii) மாட்டாங்களே ?

V. *Substitution*:

1. போங்க உங்களுக்குக் கொஞ்சம் கூட வெக்கமேல்லெ

(*a*) Substitute the following for **வெக்கமேல்லெ** after making necessary changes and rewrite the sentences in written Tamil:

(i) அன்பு

(ii) பயம்

(iii) கோபம்

(*b*) Substitute the following for **உங்களுக்கு** after making necessary changes in the given words. Rewrite the sentences in written Tamil:

(i) கோபால்

(ii) சாமி

(iii) அவன்

(*c*) Substitute the following for **கொஞ்சம் கூட** and rewrite the sentences in written Tamil:

(i) இதுக்குக்கூட

(ii) சிறிதளவுகூட

(iii) துளிகூட

2. வேறொருத்தர் ஆள் வேணும்னு நேத்திக்கி இங்கெ வந்திருந்தபோது சொன்னார்

(*a*) Substitute the following for வேணும்னு after making necessary changes in the given words:

(i) தேவை

(ii) போடணும்

(*b*) Substitute the following for சொன்னார் and rewrite all the sentences:

(i) வேண்டு

(ii) கூறு

(iii) சத்தம்போடு

(*c*) Substitute the following for இங்கெ after making necessary changes in the given words:

(i) அங்கெ

(ii) கடை

(iii) வீடு

(iv) சினிமா

3. இங்கேதான் ஒக்காந்து இவ்வளவு நேரம் பேசிண்டிருந்தா

(*a*) Substitute the following for பேசிண்டிருந்தா after making necessary changes in the given words:

(i) சொல்லு

(ii) எழுது

(iii) படி

(iv) பாடு

(b) Substitute the following for **ஒக்காந்து** after making necessary changes in the given words and rewrite sentences in written Tamil:

(i) நில்

(ii) படு

(iii) நட

(c) Substitute the following for **இங்கெதான்** after making necessary changes in the given words:

(i) அங்கெ

(ii) வீடு

(iii) கடெ

VI. Rewrite the following sentences by substituting one item at a time.

1. அவதான் தரேலெயு(ம்) இப்படிக் கிறுக்கியிருக்கா போல்ருக்கு

   (i) சுவரிலெயும்

   (ii) எழுதியிருக்கா

   (iii) நல்லா

   (iv) கமலாதான்

2. அந்த ஆறு வயஸு பொண்ணு இப்படி கன்னாபின்னான்னு எழுதியிருக்கு ?

   (i) குழந்தையா

   (ii) எட்டு

   (iii) அசிங்கமா

   (iv) உளறியிருக்கு

3. ஹோட்டல் மொதலாளி பத்மனுப போத்திக்கி சாத்தூர்லெ ஒரு ஹோட்டலு(ம்) சிவகாசிலெ ஒரு ஹோட்டலு(ம்) இருக்கு.

   (i) பஸ்

   (ii) மெட்ருஸ்லெ

   (iii) இல்லெ

   (iv) கடெயும்

   (v) மூப்பனுருக்கு

4. நா(ன்) ஆறு மாஸத்திலே ஒன்னெ பஸ்டு கிளாஸ் சரக்கு மாஸ்டரா தயார்ப்பண்ணி அங்கெ அனுப்பி வெக்யறதா சொல்லியிருக்கே(ன்)

   (i) எட்டு

   (ii) பேசியிருக்கே(ன்)

   (iii) விட்றதா

   (iv) தபால்காரனு

   (v) அவனெ

   (vi) நல்ல

VII. *Transform the following into negative sentences.*

1. இந்த மாதிரி கெட்ட பழக்க(ம்) ஒண்ணும் இல்லாதவ(ன்) எவனுயிருந்தாலும் அவனெ யெனக்கு பிடிக்கும்

2. அதிலே படுத்துக்குங்கோ

3. ஒன்னெ பஸ்டு கிளாஸ் சரக்கு மாஸ்டரா தயார்ப்பண்ணி அங்கெ அனுப்பி வெக்யறதா சொல்லியிருக்கே(ன்)

4. நா(ன்) கொடுத்து வெச்சவண்ணு

5. அவ ஸ்லேட்டும் சாக்கட்டியும் வெச்சிண்டு இங்கெ உக்காந்து என்னமோ எழுதிண்டிருந்தா.

VIII. *Change each of the following complex sentences into simple sentences.*

1. மூணு வாரமா நீ எனக்கு செய்திருக்கிற பணிவிடை இருக்கே அது ஒரு தாயார் பிள்ளேக்கு செய்யறதெ விட மேலானது.
2. சளசளன்னு பேசி ஒன்னெத் தூங்க விடாமே கழுத்தறுத்துண்டிருந்தா ளாக்கும்.
3. எங்கிட்டெ வேலெயெ கத்துண்டே அந்தப் பசங்களோட சேர்ந்து துட்டு வெச்சு சீட்டாடத் தொடங்கிட மாட்டியே?
4. வேறொரு ஆள் வேணும்னு நேத்திக்கு இங்கெ வந்திருந்தபோது சொன்னார்.
5. நான், இவ்வளவு(ம்) செய்தப்புறம் என்னே ஏமாத்திறமாட்டியே?

IX. *Change the following into complex sentences.*

1. வாயாடிப் பொண்ணு. இருந்தாலும் கெட்டிக்காரி
2. ஒரு தங்கெ அண்ணுவுக்கு செய்யறதெவிட உயர்வானது. அதனுலெ தா(ன்) அதெ எதுக்கு ஒப்பிடறதுன்னு தெரியாம தெணர்றே(ன்)
3. இங்கேதான் உக்காந்து இவ்வள நேரம் பேசிண்டிருந்தா. இப்பத்தா(ன்) உள்ளே போனு.
4. கேட்டதுக்குப் பதில் சொல்லலே. ஒணந்த சுண்ணும்புக் கட்டியாலே தரேலே கிறுக்கிண்டிருக்கேள்?
5. உங்க மனசிலே தோணினது. சொல்ல முடியலே. எழுதிக் காட்டிருக்கேள்.

X. *Summarize the drama not exceeding 25 lines:*

சம்பளம் வரட்டும்

டி. என். சுகி சுப்பிரமணியன்

[This is a social play presented mainly in spoken style using standard non-Brahmin dialect. Telugu, Hindi and Marathi sentences are also used by the characters with the respective linguistic backgrounds. Within the text which is in the spoken style, the formal platform-cum-written style is also used when the event becomes formal.]

நாடக உறுப்பினர்

இராகவன்	அப்பா
தங்கம்	அம்மா
கோபால், குமுதா	குழந்தைகள்
நாராயணன்	இராகவனுடைய நண்பர்

வேலைக்காரன், வீட்டுக்காரர், உமா, மின்விசிறிக் கம்பெனிக்காரர், தையல்காரர், காய்கறிக்காரி, புடவைக்காரி, முதலியோர்.

குமுதா : எல்லா(ம்) சம்பள(ம்) வரட்டும்.

வேலைக்காரன் : இதே மம்மா இது, கொலந்தெ [1]நேனு ஒச்சின தரவாதா ஜீதம் ராணி, சம்பளம் வரட்டும்னு சொல்லுது.

---

[1] நேனு ஒச்சின தரவாதா ஜீதம் ராணி } This is a Telugu sentence meaning— நான் வந்த பிறகு சம்பளம் வரட்டும்னு...... used here to connote the servant's linguistic background. This technique is followed in the text frequently as seen below. Note also that this is resorted to in magazines; but most of the magazines will usually provide a Tamil equivalent in braces.

குமுதா ; இந்த வீட்லே அதுதான் தாய்மொழி. அம்மா சொல்றது நான் சொன்னே(ன்) ஸோத்து மூட்டே ?

வேலைக்காரன் : ஹ ஹ அம்மோய் [2]போன நன்னு கூட பாக்கி உந்தி சேர்ஸி ஈயண்டம்மோய்

தங்கம் : ஆ அதுக்கென்ன மொதல்லே ஒ(ன்) சம்பளந்தான். சம்பள(ம்) வந்தது(ம்) தந்திடுவாங்க, ஏய் குமுதம் ! ஒனக்கு இத்தனே திமிர் கூடாது.

குமுதா : நீ பின்னுல சொன்னதெ நா(ன்) மொதல்லே சொன்னே(ன்) சம்பளம் வரட்டுன்னு.

வீட்டுக்காரர் : ஐயா, ஐயா, போயிட்டாங்களா ஆபீசுக்கு.

கோபால் : எல்லாம் சம்பள(ம்) வரட்டும்.

வீட்டுக்காரர் : என்ன தம்பீ ! நான் ஒண்ணு கேட்டா, நீ ஒண்ணு சொல்றியே, ஒங்கப்பார்ல்லே !

கோபால் : சம்பள(ம்) வரட்டு(ம்) போய் வாங்க, வீட்டுக்காரய்யா

வீட்டுக்காரர் : அட நீ சும்மா இர்ப்பா, முந்திரிக்கொட்(டை) மாதிரி, அம்மா (வ)வக் கூப்பிடப்பா.

தங்கம் : ஓ வீட்டுக்காரு வாடேகே(?) வா...வாங்க (வ)ந்திருக்கீங்களா ?

வீட்டுக்காரர் : ஆமாங்க, ஆமாங்க

கோபால் : ஆமாம், அம்மா இவருக்கு நா(ன்) பதில் சொன்னே(ன்), நீயே ஒ(ன்) வாயால சொல்லு.

வீட்டுக்காரர் : மொதல் தேதி வந்திட்ச்சு பாருங்க. வூட்டு வாடக வொரணும் பாருங்க. மூணு மாசமா துண்டு வேற உளுந்து கிட்டே கடக்குது.

---

[2] போன நன்னுகூட பாக்கி உந்தி சேர்ஸி ஈயண்டம்மோய் } என்னுடைய போன சம்பள பாக்கிகூட இருக்கு; சேர்த்து கொடுங்கம்மா.....!

Note that போன and கூட are Tamil words. This is characteristic of bilingual conversations given in stores etc.

தங்கம் : எல்லா வாடகயு(ம்) இந்த மாசங் கொடுத்துடணு(ம்)

வீட்டுக்காரர் ; ஆங்

தங்கம் : [3]சல்லிக்காசு பாக்கி வைக்யப்படாதுன்னு வீட்லே சொல்லிகிட்ருந்தாங்க.

வீட்டுக்காரர் : ஆங் ஹாங்

தங்கம் : வந்ததும் ஒங்களுக்குத்தா(ன்) மொதல்லே கொடுக்கணும்னு இருக்கோ(ம்)

வீட்டுக்காரர் : ஹம், உம் அப்ப ரொம்ப சந்தோசங்க. சாயங்காலமா நா(ன்) வந்திடறேனங்க.

தங்கம் : சரிங்க

வீட்டுக்காரர் ; தவறும கொடுத்திடணு(ம்), நா(ன்) வாறேங்க, சாயங்காலங் குடுத்திடணு(ம்).

தங்கம் : ஏந்தா(ன்) மாசம் பொறக்குதோ. அவராஞ ஆபீசுப் போயிடருரு. வர்ரங்[4]கடங்காரர(ங்க)ளுக்கு என்ஞல பதிலே சொல்ல முடியல்லே.

கோபால் : சம்பள(ம்) வரட்டு(ம்) சம்பள(ம்) வரட்டு(ம்), ஒரே பதில்தானே சொல்லணு(ம்) ?

உமா : [5](டக் டக் டக் டக்), தங்கம் !

தங்கம் : உமா [6]பேன் !

---

[3] சல்லி — one—twelfth of an anna (coinage used before the adopting of decimal system in India)

[4] கடங்காரங்க — கடன்காரர்கள்—creditors

[5] டக் டக் டக் — the sound of knocking at the door etc.

[6] பேன் (Hindi) — Behen—elder sister

உமா : தங்கம்! [7]சுனோ ந ஏக்பாத், ஹமாரே, லேடீஸ் கிளப்வாலே ஹைங் ந

தங்கம் : ஹாங்

உமா : [8]வே லோக் ஸப் ராமேஸ்வரம் ஜாரஹே ஹைங்.

தங்கம் : ராமேஸ்வரம்

உமா : [9]ஸிர்ப் தீஸ் ரூப்யே லக்தே ஹைங்.

தங்கம் : முப்பது ரூவா தானா?

உமா : [10]ஸிர்ப்தீஸ்

தங்கம் : அப்படியா, குமுதாவையுங் கூட்டிப் போகலா(ம்), நம்ப கோபாலையுங் கூட

உமா : [11]ஐஸே நைங்

தங்கம் : எங்கம்மாவைக் கூட்டிப் போலாமே.

உமா : [12]ஐஸே நைங், சுனோந.

தங்கம் : ஆங்

உமா : [13]ஏக் ஏக் கேலியே தீஸ் ஹை. குல்மிலாகர் சாஹோர் தும் ஆவ், ஏக் ஸோ லகேங்கே.

---

7 சுனோ ந ஏக் பாத், ஹமாரே, லேடீஸ் கிளப்வாலே ஹைங் ந
This is a Hindi utterance meaning — "Listen, ... one word—our ladies club members"

8 வே லோக் ஸப் ராமேஸ்வரம் ஜாரஹே ஹைங்
These people all are going to Rameswaram.

9 ஸிர்ப் தீஸ் ரூப்யே லக்தே ஹைங்
They take only thirty rupees (for the trip)

10 ஸிர்ப் தீஸ் — only thirty rupees

11 ஐஸே ஹைங் — that is so

12 ஐஸே நைங், சுனோந — Listen, it is not like that.

13 ஏக் ஏக் கேலியே தீஸ் ஸை. குல் மிலாகர் சாஹோர் தும் ஆவ், ஏக் ஸோ லகேங்கே — Thirty rupees for each. If you like all of you come & it will be hundred rupees.

தங்கம் : நூர் ரூபாயா ?

உமா : [14]ஸௌ, ஏக் ஸௌ

தங்கம் : நா(ன்) எங்கே போவே(ன்) ?

உமா : [15]க்யாஹை தே தோ ந

தங்கம் : அடுத்த

உமா : [16]அக்லே மாஸ் ஜாயங்கே சலோ ?

தங்கம் : அடுத்த வருசம்.

உமா : [17]அக்லே ஸால்

தங்கம் : அடுத்த வருசங்கூட இல்லே, அடுத்த ஜன்மத்திலே பார்த்துக் கலா(ம்)

உமா : [18]ராம் ராம் க்யா கஹ்னே லகீ தும்

எலக்ட்ரிக்மேன் : ஸார், ஸார் மிஸ்டர் ராகவன் வீடு இதுதானே ?

கோபால் : ஹலோ ! நீங்க யார் ? ஓ ! மின்விசிறி கம்பெனியா ?

எலக்ட்ரிக்மேன் : ஆமாம்! போன மாதமே உங்க வீட்லே வாங்கின மின் விசிறிக்கு உள்ள மாதாந்திர கட்டண(ம்)

தங்கம் : போன மாத தவணையு(ம்) இந்த மாதம் கட்டிடணுன்னு அவர் சொல்லிக்கிட்டிருந்தாரே.

எலக்ட்ரிக்மேன் : ஞாபகப்படுத்த வந்தே(ன்). இல்லையானு விசிறியைப் பறிமுதல் செய்யும்படி.

---

14 ஸௌ, ஏக் ஸௌ — Hundred, one hundred

15 க்யாஹை தே தோ ந — What, please give/won't you give?

16 அக்லே மாஸ் ஜாயங்கோ சலோ? Next month you will go Alright!

17 அக்லே ஸால் — Next year

18 ராம் ராம் க்யா கஹ்னே லக் தும் Ram! Ram! what have you started telling?

தங்கம் : ஊம், ஊம் அதெல்லா(ம்) வேண்டாங்க

குமுதா, கோபால் } இன்னு(ம்) சம்பளம் வர்லலே, வந்ததும் தந்துட்றே(ம்)

தங்கம் : ஆமாங்க. வந்தது(ம்) உங்க கடனேத்தா(ன்) முதல்லே பைசல் செய்யலான்னு இருக்கோ(ம்)

எலக்ட்ரிக்மேன் : ரொம்ப நன்றிங்க, அதோட இன்னொரு விஷய(ம்). எங்க கம்பெனியிலேயே தையல் மிஷின் மாதாந்திர தவணைக்கி கொடுக்கிறோ(ம்)

தங்கம் : மின் விசிறி கடன் மொதல்லே முடியட்டு(ம்) தையல் மிஷின் பின்னடி பார்த்துக்கலா(ம்)னு இருக்கோ(ம்). குமுதா, கோபால், வீட்டை கொஞ்சங் கவனிச்சுக்குங்க. நான் சமையல கவனிக்கிறே(ன்).

தையல்காரர் : [19]சாஹேப், ராஹவன் சாஹேப், [20]சாஹிப் இருக்காராம்மா? அரே [21]பச்சீ.

குமுதா : சம்பள(ம்) வரட்டு(ம்)

தையல்காரர் : ஆங் நீயா சொல்றே சம்பள(ம்) வரட்டும், கிம்பள(ம்) வரட்டு(ம்), [22]வாரேவா, வாரேவா உன் பெரிய [23]பாயி ட்ரௌஸர் தெச்சு வந்திருக்கே(ன்) பெரிய பாயெங்கே?

குமுதா : நீயே சம்பள(ம்) வரட்டுன்னு சொல்லு

கோபால் : சம்பள(ம்) வரட்டு(ம்)

தையல்காரர் : ஆங்! கமால் வேலே பண்றே நீ. பச்சீ

---

19 சாஹேப் — Saheb (Hindi/Urdu), a term of address used to refer to people with superior status, usually by those who know Hindi of Urdu.

20 சாஹிப் — an alternative form for சாஹேப்

21 பச்சீ (Hindi) குழந்தை O! child

22 வாரேவா — O!. come on!

23 பாய் (Hindi) — brother

குமுதா	:	சம்பள(ம்) வரட்டு(ம்)
தையல்காரர்	:	[24]பாபாஜானெங்கேம்மா ? [25]அம்மாஜானெங்கே ? போலோ பச்சீ.
குமுதா	:	சம்பள(ம்) வரட்டும்
தையல்காரர்	:	வாரேவா, வாரேவா, சம்பள(ம்) வரட்டு(ம்), சம்பள(ம்) வரட்டு(ம்)ன்னு எனக்கு [26]குல்லா போட்டு அனுப்பறியா பச்சீ ! உனக்கு நம்பள் [27]சலாம்.
கோபால்	:	டெய்லர் ! டெய்லர் ! ட்ரெளஸரை குடுங்க.
தையல்காரர்	:	சம்பள(ம்) வரட்டு(ம்) ட்ரெளஸர் தரேன். வர்ரே(ன்).
தங்கம்	:	கோபால் !
கோபால்	:	எல்லா(ம்) சம்பள(ம்) வரட்டு(ம்)
தங்கம்	:	உம் ! ஒனக்கு விளையாட்டா இருக்குது. உங்க அப்பா சம்பாதிக்கிறதை நீ என்ன கண்டே, எத்தைக் கண்டே.
கோபால்	:	என்ன கஷ்ட(ம்) ? எகிட்ட சம்பளத்தெ குடுக்கச் சொல்லு நா(ன்) செலவு செய்து மிச்சங் காட்டறே(ன்)
தங்கம்	:	ஆங் என்ன ? ஒனக்கும் சம்பளந்தானே ?
குமுதா	:	எனக்கு சம்பள(ம்) வாண்டாம்மா.
தங்கம்	:	உங்கப்பா சம்பளமே இன்ன(ம்) வர்லியே, வரட்டு(ம்) வந்துடு(ம்)
குமுதம், கோபால்	}	இந்த மாசமாவது பள்ளிச் சம்பளம் அபராத(ம்) இல்லாமக் கட்டியாகணு(ம்)

---

[24] பாபாஜான் — father, a Muslim dialectal form (used mainly in Madras City)

[25] அம்மாஜான் — mother, a Muslim dialectal form (used mainly in Madras City)

[26] குல்லா போடு — lit. to put the cap on somebody i.e. to cheat, deceive or flatter; used here only in the sense of deceiving somebody.

[27] ஸலாம் — Salute

காய்கறிக்காரர் : யம்மா, யம்மா ஐயா இருக்கிறுங்களா வூட்லே ?

கோபால் : சம்பள(ம்) வரட்டு(ம்)

காய்கறிக்காரி : அட என்னடா நீ ஒண்ணு, இந்த வூட்லே இருக்கிற ஆளைக் கூப்பிடறேன். நீ யென்னடா பேசறே ? காதைத் திருகிப் புடுவேந் திருகி.

கோபால் : எங்க வீட்டுக் கடங்காரியோன்னு நெனச்சோ(ம்) நீ அடுத்த வீட்டுக் கடங்காரியான காய்கறியாளா ? சரி, கூப்பிடு தாயே, கூப்பிடு

காய்கறிக்காரி : யம்மா, யம்மாவ், காய்கறியம்மா, பீன்சு, வெண்டிக்கா, கத்தரிக்கா, உருளைக்கிழங்கு, இஞ்சி, கருகப்பிலே, பச்செ மொளகா, கொத்தமல்லி, வாயக்கா, என்னும்மா வோணு(ம்) சீக்கிரமா......

தங்கம் : இவகிட்டெ புது வாடிக்கெ புடிக்கலாமான்னு நெனச்சே(ன்), உம். இவ எங்கே குடுக்கப் போறு ? இவன் தாங் கெடுத்திட்டானே ? அட கடவுளே !

புடவைக்காரி : காயம்மோ

தங்கம் : ஐயய்யோ ! பொடவெக்காரம்மா வந்திட்டாளே

புடவைக்காரி : [28]கேலே வர்ஸி தீவாளிகி ஸவ்லா கடஞு, பந்தர் ருபாய்க்கு.

தங்கம் : தீவாளிக்குத்தா(ன்) நா(ன்) வாங்கினேம் பொடவெ

புடவைக்காரி : [29]மடாகு பாஞ்ச் ருபே தோ உஸ் மேனே.

தங்கம் : அஞ்சஞ்சாக் கொடுத்திடலாண்ணுதா(ன்) வாங்கினே(ன்)

புடவைக்காரி : [30]ஈ மடாங்கு தோ வாகா.

---

[28] Parts of these utterances are recognised as Marati. However the meanings for these utterances are not given here. கேலே வர்ஸ் தீவாளிகி ஸவ்லா கடஞு, பந்தர் ருபாய்கு

[29] மடாகு பாஞ்ச் ருபே தோ உஸ் மேனே

[30] ஈ மடாங்கு தோ வாகா

தங்கம் : ஊம். சம்பள(ம்) வரட்டு(ம்), வந்ததும் மொதல்லே ஒங்க கடனெத் தீத்துர்ரேம்மா

புடவைக்காரி : [31]ஸலி, ஸலி, மொரா பாய் மெல்லா ஜேடியோ.

தங்கம் : காலு தேஞ்சு போச்சுண்ணு சொல்றே, உம்.

புடவைக்காரி : [32]ஆங் ஆங் ஜரிகெ பாவாடெ கெய்ண்டா கொணஞ்சே

குமுதா : அம்மாம்மா நல்லாயிருக்கும்மா

தங்கம் : ஆமடி கண்ணு! ஒனக்கு அளகான கலர்தா(ன்)

புடவைக்காரி : [33]தேமிள்ளா கள்ளு ஒகா, சொக்க சாயி.

தங்கம் : ஊம். என்னம்மா பண்ணுவே(ன்)? கடனோடு கடனு நா(ன்) எப்படி வாங்கிப் போடுவேன்?

புடவைக்காரி : [34]வீண் ஸங்க தேன் கடி தாவாகா ஆபில்லலுகூ. தீவாளி ஆவாரெயச்சீ?

தங்கம் : ஆங்! அப்படின்னு நீ அப்படியே வெச்சிரு. நா(ன்) அடுத்த மாசமா வாங்கிக்கறே(ன்)

புடவைக்காரி : [35]ஆங். மீ ஜாதிகா

தங்கம் : ஆ நீ யார்ட்டெயுங் குடுத்துருதே.

புடவைக்காரி : [36]ஆங், நைங் நைங்

குமுதா : ஹி ஹி ஹி...... அம்மா இந்த அன்யாயத்தை என்னு(லே) பொறுக்க முடியாது.

கோபால் : அம்மா! இந்த அக்கிரமத்தை என்னுல தாங்க முடியாது,

தங்கம் : அட என்னடா ரெண்டு பேரு(ம்) சேர்ந்துட்டு கத்தறீங்க?

---

31 ஸலி, ஸலி மொரா பாய்மெல்லா ஜேடியோ

32 ஆங் ஆங் ஜரிகெ பாவாடெ கெய்ண்டா கொணஞ்சே

33 தேமிள்ள கள்ளு ஒகா, சொக்க சாயி

34 வீண் ஸங்க தேன் கடி தாவாகா ஆபில்லலுகூ, தீவாளி ஆவாரெ யச்சீ?

35 ஆங் மீ ஜாதிகா (Marathi) I am going

36 ஆங், நைங் நைங் No, No

குமுதா : சம்பளம் வரட்(டு), சகல பொருளும் வாங்கித் தருகிறேனென்றுரே எந்தை ? உம்.

கோபால் : சம்பளம் வரட்டு(ம்), சட்டையும் துணியும் சகல பொருளும் வாங்கித் தருகிறேன் என்றுரே, அவர் எங்கே ?

தங்கம் : இதை உங்கள் தந்தையாரிடம் போய்க் கேளுங்கள்

குமுதா, கோபால் இனி நாங்கள் பொறுக்க மாட்டோம், பொறுமையுடனிருக்க மாட்டோம்.

தங்கம் : டே, டே, டே ! என்னடா பேசறீங்க ?

குமுதா : [37]வேறுபட்ட கொள்கை நிலவும் இவ்வீட்டில், எதிர்த்துப் போராட்டம் போடப் போகிறேன்.

தங்கம் : ஆங் ! போராட்டமா ? எதுக்குப் போராட்டம் ? பத்து மாசம் சுமந்து பெத்ததுக்கா ?

கோபால் : உம் பெத்தால் போதுமா ? ஜாங்கிரி கேட்டால் கிடையாது. சந்தன பவுடர் கேட்டால் கிடையாது நாடகம் பார்க்கவேண்டுமென்றுல் நாதியில்லே, அழைத்துப் போக

தங்கம் : டே, கோபால் இது என்னடா இப்படி பேசறே ?

குமுதா : பட்டு கவுன் இல்லே, பகட்டான பாவாடை இல்லே. இது வாழ்க்கையா ? வறண்ட பாலேவனமா ?

கோபால் : நாங்கள் சொல்வது என்ன ? நீங்கள் செய்வது இனி பொறுக்க முடியாதித்துயரம்.

தங்கம் : துயரம் பொறுக்கலேனு போய்ப் பேசாமப் படுத்துக்குங்க. போடா, போடா.

கோபால் : எங்கள் நிலேமை [38]ஆழ்ந்த கவலேக்கு இடமாக இருக்கிறது.

கோமதி : எங்கள் உறவுகளே சகஜ நிலேக்கும் சமாதான நிலேக்கும் கொண்டு வராவிட்டால் உள்வீட்டில் கலகம் பிறக்கும்.

---

[37] வேறுபட்ட கொள்கை differing philosophy or principle

[38] ஆழ்ந்த கவலேக்கு இடமாக lit. for the deep sorrow. i.e. subject for deep worries

குமுதா : அப்பாவின் வண்டவாளம் அம்பலப்படுத்தப்படும்.

ராகவன் : ஹ, ஹ, ஹ ஹா என்ன [39]சகோதர கட்சிகள் என்னபேசுகிறுர்கள்?

தங்கம் : உம், உம் உங்கள் முதல் தேதி கொள்கையை முற்றும் தாக்குகிறுர்கள்.

ராகவன் : பலே, பலே

தங்கம் : உங்கள் முற்போக்குக்கு புடம் போடுகிறுர்கள்.

கோபால் : உண்மைக்குப் பதில் பொய்யைக் கடைப்பிடிக்கும் தந்தையே!

ராகவன் : டேய், டேய், நிறுத்துரு. தனி நபர் வாதமுறைகளைத் தள்ளிப் போட்டுப் பேசுங்க. இது குடும்பம்.

கோபால் : உம். இந்தக் குடும்பத்துள் ஆயுதங்கள் இல்லாத, பலாத்காரம் இல்லாத சகவாழ்வில் நம்பிக்கை உண்டா?

ராகவன் : சாத்தியமா? சாத்தியமில்லையா என்று பார்க்க வேண்டாமாடா மகனே!

குமுதா : எங்கள் நல உரிமையில் நாட்டமில்லாத உங்கள் ஏகாதிபத்தியக் கொள்கையை நாங்கள் கண்டிக்கிறோம்.

ராகவன் : என்ன?

குமுதா : ஆக்கிரமிப்புச் சக்திகள் கட்டவிழ்த்து விடப்படும்.

ராகவன் : என் போக்கைப் பற்றிக் கண்டனத் தீர்மானமா?

கோபால் : உங்கள் முதல் தேதிக் கொள்கையைக் கண்டிக்கிறோம். தப்பிதத்தை தாக்கல் செய்கிறோம். முடிவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

தங்கம் : சம்பளம் வரட்டும், சகலமும் வாங்கலாமென்று கடந்த காலத்திய பொய்யை இப்போது அம்பலப்படுத்துகிறுர்கள்.

ராகவன் : அடேடே! ஹ ஹ், ஹெ ஹ் ஹே இவ்வளவுதானு?

---

[39] சகோதர கட்சிகள்—fraternal parties

தங்கம் : உம் உம் ஆமாங்க!

ராகவன் : நான் கூட

குமுதா : இந்த மாதம் வேண்டுவன வாங்கித் தருவதாகச் சொன்னீர்களே,

ராகவன் : ஆங்

குமுதா : எங்களுக்கு நீங்கள் கொடுத்த வாக்கு என்ன?

ராகவன் : எதைக் கேட்டீர்களோ, அதை வாங்கிக் கொடுப்பேன்.

கோபால் : வாக்குக் கொடுத்தவரே, நீர் வாங்கிக்கொடுப்பீரா?

ராகவன் : அட.

கோபால் : வாங்க முடியாது என்று பேச தைரியமில்லாது வாக்குக் கொடுக்கலாமா?

ராகவன் : எவ்வளவு மொரட்டுத்தனமா பேசறுனே இந்தப்பய, ஆங், ஹெ ஹ் ஹ் ஹ் ஹ ஏங்!

குமுதா : போராட்ட வளர்ச்சிதான் பொன்னைத் தரும் வளர்ச்சி.

தங்கம் : இவர்கள் கேள்விக்கு என்ன பதில்?

ராகவன் : கேள்வி என்ன மொத்தல்லே அதச் சொல்லு.

கோபால் : தந்தையே கேள்வியைக் கேட்டுக்கொள்ளுங்கள்

ராகவன் : பார்ரா!

கோபால் : சமாதான சகவாழ்வை நீங்கள் விரும்புகிறீர்களா?

ராகவன் : ஆமாம் மகனே, [40]கச்சையை வரிந்து கட்டாமல் கழறுவாயடா என் கோபாலா!

குமுதா : நமது குடும்ப கௌரவம் என்னும் பலூன் வெடிக்காமல் தவிர்க்கப்பட வேண்டுமா?

ராகவன் : ஆம், மகளே ஆம்.

---

[40] கச்சையை வரிந்து கட்டு — Tighten (your) dress ready for the fight

கோபால் : இதுவரை கேட்டிராத சர்வ நாசத்தை நோக்கி நீங்கள் போய்க் கொண்டிருக்கின்றீர்கள்.

தங்கம் : டே டே! உங்க அப்பாவெ பயமுறுத்தாம உடனடியா விஷயத்தைச் சொல்லுங்க.

ராகவன் : ஆமா.

தங்கம் : உங்கம்பா ரொம்ப [41]பயந்து சாகிறுரு.

ராகவன் : புனிதமான மௌனத்தை நான் மேற்கொள்ளும் முன்னதாகவே உங்கள் ஏவுகணைகளை ஏவி விடுங்களப்பா

குமுதா : உங்களுக்கு [42]உச்ச கட்டமான நெருக்கடி வந்துள்ளது.

ராவன் : ஆங்!

கோபால் : நமக்குள் ஏற்படும் நிகழ்ச்சிப் போக்குகள், சமாதான பூச்சாண்டித் தனம் ஏதும் வேண்டாம். இந்த வீட்டிற்குள் நிசப்தம், நிர்ப்பயம் நிலவ வேண்டுமானல்......

ராகவன் : யாது செய்யவேண்டும்? யுத்த பயங்கரம் அல்லாத சமாதான முறையில் தீர்த்துக் கொள்ளலாம்.

குமுதா : ஹ ஹ. உங்களுக்குக் குழந்தையன்பும், குடும்பப் பாசமும் உண்மையிலேயே இருக்குமானல்

ராகவன் : இருக்கிறது மகளே இருக்கிறது.

கோபால் : நிரூபியுங்கள் இந்த முதல் தேதி.

ராகவன் : ஏது?

கோபால் : சமாதானத்திலும் சகவாழ்வுக் கொள்கையிலும் உங்களுக்குப் பிடிப்பு இருந்தால்,

ராகவன் : ஆங்

---

41 பயந்து சாகு — die in fear

42 உச்ச கட்டம் — climax

கோபால்	:	[43]சாதகமான சந்தர்ப்பங்களைப் பயன் செய்யுங்கள்.
ராகவன்	:	என்னடா இது.
தங்கம்	:	என்னடா, என்னடா கோபால், என்ன செய்யணு(ம்)?
கோபால்	:	கணிசமான உதவி செய்வதாகக் [44]கையடித்துத் தரல் வேண்டும்.
குமுதா	:	[45]ஏக போக மூலத்தனத்தை எங்கள் கையில் கொடுங்கள். ஊம். கொடுங்கள்.
ராகவன்	:	என்னது? உங்க கையிலே கொடுக்கிறதா? அப்ப இன்னும் சம்பள(ம்) வரட்டும். நிறைய வந்ததும் தர்ரேன் ஹ ஹ் ஹ!
கோபால்	:	அலட்சிய அகம்பாவம் இம்மியும் வேண்டாம். புரட்சிகர நிகழ்ச்சிகளைத் தேடிக் கொள்ளாதீர்கள்.
ராகவன்	:	ஏன்பா சம்பளம் பூராவு(ம்) யாரு கைல கொடுக்கிறதுரு?.........
தங்கம்	:	என்னங்க! எங்கிட்டே சொல்லாரம்பிச்சிட்டிங்களா?
ராகவன்	:	சம்பள விசயம் பாரு. ஊம், கொங்ச(ம்) ஔர்ற மாதிரிதான் தெரியு(ம்)
கோபால்	:	அப்பப்பா! இந்த மாஸ்த்லேயாவது சைக்கிள்ப்பா—
குமுதா	:	அப்பா, அப்பாப்பா! எனக்கு வெளயாட்டு பொம்மப்பா!
ராகவன்	:	சம்பள(ம்) வரட்டு(ம்) அவசிய(ம்) வாங்கித்தர்ரேன்.
கோபால்	:	மாசமாச(ம்) சொல்றதுபொல இதுவும் பொய்தானேப்பா?
ராகவன்	:	அடிச்சேனு பாரு? பல்லு உதிந்துபோம். போடா அந்தப் பக்க(ம்). போடா.
கோபால்	:	காம்பஸ் பெட்டில்லப்பா.

---

[43] சாதகமான சந்தர்ப்பங்களைப் பயன் செய்யுங்கள். — use the favourable opportunities

[44] கையடி — promise by keeping one's palm on another's

[45] ஏகபோக மூலதனம் — monopoly capital

ராகவன் : ஆ! பெரிய கொலம்பஸ் இவரு. காம்ப்ஸ் பெட்டி இல்லேன்னு என்னடா? போ அங்கே, போயிடு

தங்கம் : இன்னிக்கு சம்பள(ம்) ஆச்சுதே. காம்பஸ் பாக்ஸ வாங்கிக் குடுத்துடுங்களே(ன்)

ராகவன் : ஊம் ஊம், பார்க்கலா(ம்), பார்க்கலா(ம்). டேய், நிக்கவா செய்யறே, போடா மூஞ்சியும் மோரக்கட்டையும் பாரு. நின்னே கொன்னுபுடுவே(ன்).

தங்கம் : ஏங் கொளந்தயெ அதட்றீங்க?

குமுதா : அப்பா!

ராகவன் : என்னம்மா நீ கெட்டிக்காரி, நீ கெட்டிக்காரி என்னம்மா, என்னம்மா!

குமுதா : ஆமாப்பா, நானுப்போயிடறே(ன்), [46]நீ அடிச்சு கொல்றத்துக்கு முன்னுலே நானுப் போயிடறேம்பா.

தங்கம் : நீங்க கோவப்பட்றதிலே பலனே இல்லே

ராகவன் : ஊம்

தங்கம் : இந்த மாசம் மொதல்லருந்து அனுவசிய செலவே செய்யாம-

ராகவன் : அத்தனே பணத்தையு(ம்) ஒங்கிட்டே கொண்ணுந்து குடுத்திர்ரேம் போறுமா?. சரி, சரி, டிபனேக் கட்டு, டிபனேக் கட்டு.

தங்கம் : ஆங் என்னங்க இது? ஆபீஸ் ஓட்டல்லே நீங்க சாப்பிள்ளேயா?

ராகவன் : அதெல்லாங் கிடையாது. பார் எல்லார் கடனேயு(ம்) ஒரு வழியா தீர்த்துப் புடறே(ன்) சேச்சே! ரொம்ப மோசமாய்ப் போச்சு, தங்க(ம்) இந்த மாசம் முழுச் சம்பளத்தையுங் கொண்ணுந்து குடுத்திர்றேம் பாரே(ன்)

தங்கம் : ஆங் முளுச் சம்பளமா?

---

[46] நீ அடிச்சு.........போயிடறேம்பா
— Before you kill me I will go

ராகவன் : ஏ(ன்) இப்படி முளிக்கிறே, முளுச் சம்பளமாண்ணு, பூராச் சம்பளமுந்தான்

தங்கம் : அப்பிடீங்களா?

ராகவன் : ஆமா, ஹி ஹி!

கோபால் : அப்பா இந்த மாசம் பூரா சம்பளம் வாங்கிண்டு வரப் போறுங்களே!

குமுதா : எனக்கு பொம்மை வாங்கித் தருவாங்களே!

கோபால் : எனக்கு(ம்) சைக்கிள் வாங்கித் தருவாங்களே!

குமுதா : அப்பா எல்லா பூ ர ா பணத்தையும் அம்மாட்டதானே குடுப்பாங்க? எனக்கு பொம்மை வாங்கித் தருவாங்களே. ஓனக்குக் கிடையாதே! நீ ஊ(ம்) ஊ(ம்)னு அழுவியே! வெவ்வெவ் வெவ்வெவ்வே,

கோபால் : அம்மா எங்கிட்ட பணத்தை நீ தானே தருவே?

தங்கம் : எங் கையிலயே சம்பள(ம்) வர்லியா(ம்) நீ வேறே, போடா, ஹி, ஹி.........

குமுதா : அம்மா, அம்மா அப்பா வராங்க, சம்பள(ம்) வாங்கிட்டு வராங்க!

ராகவன் : ஹஹ்ம்! குமுதா! உனக்குஞ் சம்பள(ம்) உண்டு. வேறென்ன?

கோபால் : அப்பாப்பா!

ராகவன் : ஊம்?

கோபால் : காம்பஸ் பெட்டி?

ராகவன் : நாளக்கே வாங்கிக்க, நாளக்கே வாங்கிக்க பணந்தரேங்க் றேனே.

தங்கம் : என்னங்க! நீங்க ஆபீஸ்லேர்ந்து நடந்தா வந்தீங்க?

ராகவன் : ஆமா வேறென்ன, பஸ் சார்ஜ் மிச்ச(ம்) காபிச் செலவு மிச்ச(ம்) வெத்தல பாக்குக்கூட இன்னிக்கு ஒரே தரந்தா(ன்). அதுவும் பொய்லயில்லாம.

தங்கம் : பலே, பலே இத பாருங்க, இந்த பர்சு முளுக்க முளு சம்பளமா?

ராகவன் , முழு சபளந்தா(ன்)

தங்கம் : ஆங்!

நாராயணன் : ராகவா!

ராகவன் : யாரது?

நாராயணன் : ராகவா!

ராகவன் : நாராயணனு? வரணும், வரணும், வரணும்.

நாராயணன் : வந்தே(ன்) வந்தே(ன்) வந்தே(ன்)

ராகவன் : ஆ(ம்) ஆ(ம்)

தங்கம் : என்னங்க? ஒரு மணிக்கு முன்னலேயே அவரு ஒங்களத் தேடி வந்தாரு.

ராகவன் : அப்படியா ஆ(ம்) ஏது, ஏது? என்னைத் தேடி வந்தது?

நாராயணன் : ராகவா!

ராகவன் : என்ன?

நாராயணன் : இந்த ஒலகமிருக்கே? அக்கிரமமான ஒலகம்.

ராகவன் : என்னப்பா இது?

நாராயணன் : கஷ்ட(ம்) இருக்கே? அது ஈவு, இரக்கம் இல்லாதது. இந்த நண்பர்கள்னு இருக்காங்களே? அவுங்க ஆபத்திலே கழுத்த அறுக்கிறவங்க.

ராகவன் : என்ன நாராயண(ன்) ஏ(ன்) இப்படி பேசறீங்க, என்ன சமாசார(ம்)?

நாராயணன் : என் சம்ஸாரத்துக்கு இது மாதம்.

ராகவன் : த்ஸொ த்ஸொ

நாராயணன் : நேற்று [47] தர்ம ஆஸ்பத்திரிக்கு தொலே தூரம் போக முடியாத நெலமைலே நர்ஸிங் ஹோம்லே சேத்துட்டே(ன்). அம்பது ரூபா இருந்தா வைத்திய(ம்) செய்ய முடியூங்கிறுங்க.

ராகவன் : ஆங்! அதால் என்ன இப்போ?

நாராயணன் : ஹெ! என்னோட உயிருக்குயிரான நண்பர்கள் பத்து பேர்ட்ட நாம் போய்க் கேட்டாச்சு.

ராகவன் ; ஊம்.

நாராயணன் : ஒங்க கிட்டக் கடன் கேக்க எனக்கு வெக்கமா இருக்குது.

ராகவன் : ஊம்

நாராயணன் : அவமானமாக்கூட இருக்குது. என் தாயார்க்குப் பணம் கேட்டு நா(ன்) தந்தி வேறடிச்சிருக்கே(ன்). அடுத்த வார(ம்) எப்படியுந் தந்திடுவே(ன்). இல்லென்னு என்னுடைய அடுத்த மாச சம்பளத்திலெ...

ராகவன் : இருங்க, இருங்க, இந்த மாதிரி நேரத்தில ஒதவறதுதானே மனுஷனுக்கு, ஒரு (வனு)டைய குண(ம்)? பணமா பெரிசு? இந்தாங்க கொண்டு போங்க.

நாராயணன் : என்னுங்க ராகவன்! ஒங்களே நா(ன்) எப்படி பாராட்டுறதுன்னே தெரியல்லியே?

ராகவன் : அட ராகவாண்ணுதாம் பாராட்டுங்களே(ன்)! போய் மொதல்லே ஒங்க மனவியெக் கெவ்னிங்கய்யா, இது, பண(ம்) போறுமா?

நாராயணன் : எதேஷ்ட(ம்) எதேஷ்ட(ம்), ரொம்ப நன்றிங்க. நெஜமாகவே சொல்றேங்க. எனக்கு ஆண் கொழந்தை பிறந்தா ராகவ(ன்)ங்கிற பேரே வெக்கப் போறேங்க.

ராகவன் : ஹ ஹ் ஹ ஹ் ஹ என்னமோ செய்ங்க போங்க.

நாராயணன் : வர்ட்டுமா?

ராகவன் : ஆங், வாங்க, வாங்க, .

---

[47] தர்ம ஆஸ்பத்திரி — Free hospital

நாராயணன்	:	அம்மா எல்லார்க்கு(ம்) வர்ரேங்க
ராகவன்	:	ஆங்
தங்கம்	:	அட என்னங்க இது?
ராகவன்	:	ஹே!
தங்கம்	:	இந்த மாசம் சம்பளத்திலே எல்லாத்தையு(ம்) ஒழுங்கு பண்றேண்ணு சொல்லிட்டு.
ராகவன்	:	அட நீ ஒண்ணு! இந்த அம்பது ரூவா வந்து தானு கட(ன்) அடயப்போவுது? எல்லா(ம்) அடுத்த சம்பளத்திலே ஒழுங்கு பண்ணிக்யலா(ம்) போ!
குமுதா	:	அப்பா எனக்கு பொம்மப்பா
கோபால்	:	எனக்கு காம்பஸ்பா
கோமதி	:	பூ என்னம்மா பூ துட்டு தறியா?
கடைக்காரர்	:	[48]தோரம் பர்ப்பு பாக்கி இஸ்தாரா?
வீட்டுக்காரர்	:	பழே பாக்கி வூட்டு வாடகெ
மின்விசிறிக் கம்பெனியாள்	}	[49]எல்ட்ரி பானெடுத்துட்டுப் போணுமா ஸார்
இன்சூரன்ஸ் ஏஜன்ட்	}	ஸாரே! இன்சூரன்ஸ் பணந்தரேளா?
புடவைக்காரி	:	அம்மோ! புடவ பாக்கி ஸார் எப்ப தரப்போறீங்க ஸார்......

———

48 தோரம் பர்ப்பு பாக்கி இஸ்தாரா?—துவரம் பருப்பு பாக்கியை கொடுப்பீர்களா?

49 எல்ட்ரி பான் — electric fan.

EXERCISES

I. Read the following in spoken Tamil :

கோபால்: நாங்கள் சொல்வது என்ன? நீங்கள் செய்வது என்ன? இனி பொறுக்க முடியாதித்துயரம். எங்கள் நிலைமை ஆழ்ந்த கவலைக்கு இடமாக இருக்கிறது.

கோமதி : எங்கள் உறவுகளை சகஜ நிலைக்கும் சமாதான நிலைக்கும் கொண்டு வராவிட்டால் உன் வீட்டில் கலகம் பிறக்கும்.

குமுதா : அப்பாவின் வண்டவாளம் அம்பலப்படுத்தப்படும்

ராகவன்: ஹ, ஹ, ஹ, ஹா என்ன சகோதர கட்சிகள் என்ன பேசுகிறுர்கள்?

தங்கம் : உம், உம் உங்கள் முதல்தேதி கொள்கையை முற்றும் தாக்குகிறுர்கள்

ராகவன் : பலே, பலே

தங்கம் : உங்கள் முற்போக்குக்குப் புடம் போடுகிறுர்கள்.

II. Rewrite the following sentences in written Tamil :

1. மொதல் தேதி வந்திட்ச்சு பாருங்க
2. அவராளு ஆபீசுப் போயிட்ருரு.
3. இன்னு(ம்) சம்பளம் வர்லே, வந்ததும் தந்துட்றே(ம்)
4. உன் பெரிய பாய் ட்ரௌசர் தெச்சு வந்திருக்கே(ன்)
5. எங்கிட்ட சம்பளத்தை குடுக்கச் சொல்லு
6. சம்பள(ம்) வரட்டு(ம்), சம்பள(ம்) வரட்டு(ம்)ன்னு எனக்கு குல்லா போட்டு அனுப்பறியா
7. மொதல்லே ஒங்க கடனெத் தீத்துர்ரேம்மா
8. காலு தேஞ்சு போச்சுண்ணு சொல்றே
9. கொஞ்ச(ம்) ஔர்ற மாதிரிதான் தெரியு(ம்)
10. அடிச்சேனு பாரு? பல்லு உதிந்து போம்.

III. *Vocabulary Exercise*:

(*a*) Write atleast two derivative nouns for each of the words given below, following the model:

Model :— கடன் = கடன்காரன், கடன்காரி

(i) வீடு
(ii) காய்கறி
(iii) புடவை
(iv) வேலை

(*b*) Split the following compounds into constituent words and write meanings for the same :

Model :— ஏவுகணை missile =

ஏவு =
கணை =

(i) மின்விசிறி
(ii) தையல் மிஷின்
(iii) பறிமுதல்

IV. Fill up the blanks choosing the correct item.

Make changes in the sentence if necessary.

1. அம்மா இந்த அன்யாயத்தை என்.........பொறுக்க முடியாது

(i) மேல்
(ii) ஓடு
(iii) ஆல்

2. கட(ன்).........கடனு நா(ன்) எப்படி வாங்கிப் போடுவேன்?

(i) ஓடு
(ii) ஐ
(iii) ஆல்

3. சட்டை......துணி......சகல பொருளும் வாங்கித் தருகிறேன் என்றாரே, அவர்.. எங்கே?

(i) ஆல்

(ii) ஐ

(iii) உம்

4. முடி(வு)......நடவடிக்கை எடுக்கப்படும்

(i) க்கு

(ii) ஐ

(iii) இல்

5. சகலமும் வாங்கலா(ம்)......கடந்த காலத்திய பொய்யை இப்போது அம்பலப்படுத்துகிறார்கள்

(i) ஆ

(ii) என்று

(iii) ஆக

V. *Substitution* :

1. குடும்ப கௌரவம் என்னும் பலூன் வெடிக்காமல் தவிர்க்க வேண்டாமா?

(*a*) Substitute the following for **தவிர்க்க** after making necessary changes in the given words :

(i) கவனி

(ii) சேர்

(*b*) Substitute the following for **வேண்டாமா** after making the necessary changes in the given words :

(i) வேண்டும்

(ii) முடியும்

(iii) முடியாது

(c) Substitute the following for குடும்ப after making necessary changes in the given words:

(i) நாடு

(ii) ஊர்

(iii) தேசம்

2. யுத்த பயங்கரம் அல்லாத சமாதான முறையில் தீர்த்துக் கொள்ளலாம்

(a) Substitute the following for தீர்த்து after making necessary changes in the given words:

(i) பார்

(ii) முடி

(iii) போ

(iv) நட

(b) Substitute the following for முறையில் after making necessary changes in the given words:

(i) வழி

(ii) தன்மை

(iii) நிலை

(c) Substitute the following for கொள்ளலாம் after making necessary changes in the given words:

(i) வை

(ii) விடு

(iii) முடி

3. எங்க கம்பெனியிலேயே தையல்மிஷின் மாதாந்தர தவணைக்கி கொடுக்கிறோ(ம்).

(*a*) Substitute the following for **கம்பெனியிலேயே** after making necessary changes in the given words :

(i) வீடு

(ii) கட்டிடம்

(iii) ஊர்

(iv) கடை

(*b*) Substitute the following for **மாதாந்தர** after making necessary changes in the given words :

(i) வாரம்

(ii) வருடம்

(*c*) Substitute the following for **தவணைக்கி** after making necessary changes in the given words :

(i) வாடகை

(ii) உபயோகம்

VI. Rewrite the following sentences by substituting one item at a time.

1. இந்த மாசமாவது பள்ளிச் சம்பளம் அபராத(ம்) இல்லாமக் கட்டியாகணு(ம்).

(i) கொடுத்து

(ii) தடவை

(iii) இப்போதாவது

(iv) பில் பணம்

2. துயரம் பொறுக்கலேனு போய்ப் பேசாமப் படுத்துங்க*

(i) தாங்க

(ii) வந்து

(iii) துக்கம்

(iv) சத்தம் போடாம

3. தனிநபர் வாத முறைகளைத் தள்ளிப் போட்டுப் பேசுங்க.

(i) பேசாதீங்க

(ii) வைத்து

(iii) குறைகளை

(iv) அவருடைய

(v) எழுதுங்க

VII. Transform the following into negative sentences :

1. ஐயையோ பொடவக் காரம்மா வந்திட்டாளே!
2. சம்பளம் வந்தது(ம்) தந்திடுவாங்க.
3. வந்ததும் ஒங்களுக்குத்தா(ன்) மொதல்லே கொடுக்கணும்.
4. நா(ன்) வாறேங்க.
5. ஞாபகப் படுத்த வந்தேன்.

VIII. Transform the following into interrogative sentences using the underlined phrase/word :

1. ஒரு மணிக்கு முன்னலயே அவரு <u>ஒங்களைத்</u> தேடி வந்தாரு.
2. அவங்க <u>ஆபத்திலே</u> கழுத்த அறுக்கிறவங்க.
3. <u>அம்பது</u> ரூபா இருந்தா வைத்திய(ம்) செய்ய முடியுங்கிறுங்க

* The usual spoken form is படுத்துக்கோங்க or படுத்துக்குங்க.

4. ஓங்க கிட்டக் கடன் கேக்க எனக்கு வெக்கம்மா இருக்குது.

5. நீங்க கோவப் பட்றதிலே பலனே இல்லே.

6. வெத்தல பாக்குக் கூட <u>இன்னிக்கு</u> ஒரே தரந்தான்.

IX. *Change each of the following complex sentences into simple sentences.*

1. நீ பின்னுலெ சொன்னதெ நா(ன்) மொதல்லெ சொன்னே(ன்).

2. வர்ர கடங்காரங்களுக்கு என்னுலெ பதிலே சொல்ல முடியல்லே.

3. உங்க அப்பா சம்பாதிக்கிறதெ நீ என்ன கண்டே?

4. எங்கள் உறவுகளை சகஜ நிலேக்கும் சமாதான நிலேக்கும் கொண்டு வராவிட்டால் வீட்டில் கலகம் பிறக்கும்.

5. நேற்று தர்ம ஆஸ்பத்திரிக்குத் தொலேதூரம் போக முடியாத நெலமைலே நர்ஸிங் ஹோம்லே சேத்துட்டேன்.

6. இவ கிட்டே புதுவரடிக்கை புடிக்கலாம்னு' இவ எங்கே குடுக்கப் போறு?

X. *Change the following into complex sentences* :

1. எங்கிட்ட சம்பளத்தெ குடுக்கச் சொல்லு. நா(ன்) செலவு செய்து மிச்சங் காட்டறே(ன்).

2. இனி நாங்கள் பொறுக்க மாட்டோம். பொறுமையுடனிருக்க மாட்டோம்.

3. மின்விசிறி கடன் மொதல்லே முடியட்டு(ம்). தையல் மிஷின் பின்னுடி பாத்துக்லா(ம்)னு இருக்கோம்.

4. நாங்கள் சொல்வது என்ன? நீங்கள் செய்வது என்ன?

5. இந்த வீட்லே அதுதான் தாய்மொழி. அதனுலெ அம்மா சொல்றது நான் சொன்னே(ன்).

---

* The emphatic mark—ஏ will not occur with interrogative words such as எது, ஏன், எதை,

XI. Match the phrases given in column I with those given in column II to make appropriate sentencese:

	I	II
1.	குமுதா, கோபால், வீட்டைக் கொஞ்சம்	சொல்லு
2.	நீயே, சம்பள(ம்) வரட்டுன்னு	இத்துயரம்
3.	இனி பொறுக்க முடியாது	அம்பலப்படுத்தப்படும்
4.	அப்பாவின் வண்டவாளம்	பொன்னைத்தரும்
5.	போராட்ட வளர்ச்சிதான்	கவனிச்சுக்குங்க

XII. Summarize the story of the drama in a narrative form not exceeding 25 lines:

நியாயம் இது

கூத்தப்பிரான்

[This is a social play presented in spoken style using the non-Brahmin dialect of the southern districts of Tamil Nadu.]

[1]நாடக உறுப்பினர்

காளியம்மாவின் கணவன்

காளியம்மா

வடிவேலு—காளியம்மாவின் மகன்

கதிர்வேலு

மன்னார்—காளியம்மாவின் தம்பி

செவம்மா—காளியம்மாவின் மகள்

காட்சி 1

காளியம்மாவின் கணவன் : *வடிவேலு! பாத்தியா நம்ம கதிர்வேலுவெ?*

வடிவேலு : *பாத்தெனே*

காளியம்மாவின் கணவன் : *ஆங்*

வடிவேலு : *அழகா முன்னாலெ ஒக்காந்து வண்டி [2]ஓட்டுது*

---

[1] *நாடக உறுப்பினர்* — dramatis personae

[2] *ஓட்டுது* — Note that the third person singular neuter pronoun is used to refer to the third person singular human pronoun. This is an accepted spoken usage in several regional and caste dialects of Tamil.

காளியம்மாவின் கணவன்	:	ஹ ஹ் ஹ......கந்தசாமியைத் [3]திக்குமுக்காட வெச்சிட்டான்.
வடிவேலு	:	கந்தசாமி [4]கரகந்தானெ ஆட்னு(ன்)? திக்குமுக்காட-
	:	லியேப்பா?
காளியம்மாவின் கணவன்	:	ஊம் ஆட்ட(ம்) ஒண்ணுந் தெரியாட்டியு(ம்) அப்பங்கிட்டேயே தமாசு பேசு. ஊம்—ஊம் கந்தசாமிப்பய ஆடமுடியாமத் திணறிப் போய்ட்டாண்ணு சொல்றேண்டா. ஆமா. அந்த தங்கக் காப்பு எங்கே பத்திரமா இருக்குதா?
வடிவேலு	:	இருக்குதுப்பா; பத்திரமா பெட்டிக்குள்ளெ வெச்சிருக்கே(ன்)
காளியம்மாவின் கணவன்	:	ஊம்—ஆமா, என்னடா கதிர்வேலு வாயெத் தெறக்காமயே வண்டியை ஓட்டிக்கிட்டுவாரான்?
வடிவேலு	:	சந்தோசம் ஒரு வேளெ நெஞ்செ [5]படக்குன்னு அடிச்சிரிச்சு போல்ருக்கு
கதிர்வேலு	:	ஊம்—ஊம். அதெல்லா(ம்) ஒண்ணுமில்லீங்க
வடிவேலு	:	பின்னெ என்ன விசய(ம்)? செவம்மா நெனப்பா சும்மா சொல்லுண்ணே.
கதிர்வேலு	:	ஆங், வண்டியெப்பாத்து ஓட்டிக்கிட்டு வரே(ன்) [6]த்ஸொ! எப்படிப் பேசறது?

---

[3] திக்குமுக்காடு — to be choked; திக்கு முக்காட is infinitive form

[4] கரகம் — is a kind of Tamil folk dance in which the performer balances a pot (usually decorated with flowers etc) while dancing.

[5] படக்குன்னு — all on a sudden—onomatopoeic expression

[6] த்ஸொ! — the sound of caution emitted by the driver of a bullock cart which keeps the bull on the right track

வடிவேலு : ஏம் பேச முடியாது? நீ நகந்து ஒக்காரு சொல்றே(ன்) நா(ன்) வண்டியை ஒட்றே(ன்)

காளியம்மாவின் கணவன் : இல்லேல்லே, வேண்டாண்டா

வடிவேலு : அதோ ஒரு கடெ வருது, அங்கெ நெரித்தி வண்டிக்கு வெளக்கு கொளுத்து மொதல்லே

காளியம்மாவின் கணவன் : சரி, சரி, வண்டியெ நெறுத்து, இந்தச் சத்திரத்திலேயே தங்கிட்டு காலெலெ போகலா(ம்)

காட்சி 2

மன்னூர் : அக்கா, அக்கா

காளியம்மா : வாடாப்பா மன்னூரு, என்ன? ஒரு பத்துப் பதினெஞ்சு நாளா [7]ஆளெக் கண்ணிலியே காணோ(ம்)?

மன்னூர் : அக்கா செவம்மாவுக்கும் கதிர்வேலுவுக்கு(ம்) கலியாணமா? யாரெக் கேட்டுக்கிட்டு (நிச்சயம்) செய்தே?

காளியம்மா : ஊம்? [8]கல்யாணங்கட்டிக்கப்போற பொண்ணேயு(ம்) வீட்டுக்கு வரப்போற மருமகப் பிள்ளெ கதிர்வேலுவையுங் கேட்டுகிட்டு செஞ்சே(ன்)

மன்னூர் : அதுதா(ன்) ஏன் செய்தே?

காளியம்மா : அவங்க ரெண்டுபேரு(ம்) ஓர்த்தர் மேலெ ஓர்த்தர் உயிரெயே வெச்சிருக்கிறுங்க. அதனுலெ முடிவு செஞ்சே(ன்)

---

[7] கண்ணிலியே காணோம்— lit. not seen in the eyes. i.e. not at all seen.

[8] கல்யாணங் கட்டிக்கப் போற பொண்ணு — the girl who is going to get married.

மன்னுர் : நா(ன்) செவம்மா மேலே எவ்வளவு ஆசெ வெச்சி-ருக்கேந் தெரியுமா?

காளியம்மா : என்னெக் கேக்காம நீயே எல்லாம் ஒம் மனஸிலெ நெனச்சிகிட்டுருந்தா அதுக்கு என்ன நா(ன்) பொறுப்பா?

மன்னுர் : அக்கா! முன்னெயெல்லா(ம்) வாய்க்கு வாய் "மன்னுரு! எம் மகளேக் கட்டிக்காமெ ஏமாத்தி டாதே"ன்னு கேப்பியே. அதெல்லா(ம்) மறந் திட்டியா? கதிர்வேலு என்னெவிட எந்த வகையிலே ஒசந்தவ(ன்)?

காளியம்மா : மன்னுரு இதோ பாரு, உன்னிஷ்டப்படி எது வேணுன்னுலு(ம்) பேசலாண்ணு நெனக்காதே, செவம்மாவெ ஒனக்குக் கொடுக்க முடியாது. அவ்வளவுதான். தாகத்துக்கு ஏதாச்சும்———

மன்னுர் : சரியக்கா! எல்லா(ம்) நல்லபடியா நடந்தா சரி.

காளியம்மா : உம்

காட்சி 3

கோபால் : குட் மார்ணிங் ஸார்!

முதலாளி : குட் மார்ணிங், என்ன மிஸ்டர் கோபால்! நேத்து பாத்த ஆளு எப்படி? ஹீரோவுக்கு சரியாக இருக்குமா? எப்படி?

கோபால் : ஆளு பிரமாதமாயிருக்கா(ன்) சார், அழகாகூட இருக்கா(ன்). நா(ன்) சுருக்கமாக சொல்லிக்கறே(ன்) குரல் ரொம்ப இனிமையாக இருக்கு. பேச்சுத்தா(ன்) கொஞ்சம் சொகமில்லே. பரவால்லே என்ன செய்யிறது?

முதலாளி : என்ன செய்யிறது ஏங்கிட்டயே கேட்கிறயே?

கோபால் : என்ன ஸார் இது? நீங்கதானே இந்த கோபால் ராம் புரொடக்ஷ(ன்) முதலாளி?

முதலாளி : நல்ல கோபால், நல்ல ராம். மிஷ்டர் கோபால்!

கோபால் : என்ன ஸார்?

முதலாளி : படப்பிடிப்பு ரொம்ப டிலே ஆகுது.

கோபால் : டிலே ஆகட்டு(ம்) ஸார், நாம டிலே செய்ய, செய்ய ஜனங்க என்ன பேசிப்பாங்க தெரியுமா!

முதலாளி : புரொடக்ஷன் மூடு விழா நடத்திடப் போறுங்கன்னு பேசிப்பாங்க.

கோபால் : ஸார், கரெக்ட் ஸார், நாம் எடுக்கப் போற படத்துக்குக் கூட மூடு விழா அப்டீன்னு பேரையே மாத்திட்டா என்ன ஸார்?

முதலாளி : அவ(ன்) அவ(ன்) அலையா அலெஞ்சு ஆரம்பவிழா நடத்தக் கஷ்டப்பட்டுறு(ன்), நீங்க சுலபமா மூடுவிழா நடத்தத் திட்டம் போட்றீங்க.

கோபால் : வசன கர்த்தா சூமந்திரக்காளிகூட இது விஷயமா நல்ல அபிப்பிராயங் குடுத்திருக்காரு ஸார்.

முதலாளி : ஆமாம்! வசன கர்த்தா பேரெ எப்போய்யா சூமந்திரக்காளீன்னு மாத்தினீங்க?

கோபால் : ஹம் ஹம்——அவரே பிரியப்பட்டு "டைரக்டர்ஸார் எம்பேரெ கொஞ்சம் மாத்தி அழகா வெய்யுங்க ளேன்னு கேட்டார். எனக்கு உடனே ஒரு ஐடியா ஸ்டிரைக்காயிடிச்சு, அவர் பேர் சூமந்திரக்காளி ஆய் போச்சு.

முதலாளி : நம்ம புரொடக்ஷன்லே வர வர வெட்டிப் பேச்சு ரொம்ப அதிகமாப்போச்சு, மிஸ்டர் கோபால்! ஒரு வாரத்திலே, கேரக்டர் பிக்ஸ் பண்ணி ஒர்க் ஸ்டாட்டாகணு(ம்).

கோபால் : ஓர்க்குத்தான் ஸ்டார்ட்டாயிடிச்சே ஸார்! நம்ம அஸிஸ்டெண்ட்டு விநோத(ம்) நால் நாளா வெளியூரு போயிருக்கிறு(ன்) நம்ப மனசுபடி, கரகம், தெருக் கூத்து, பொய்க்கால் குதிரை, காவடி சிலம்பு எல்லா(ம்) தெரிஞ்சு ஆடிப்பாடி நடிக்கக் கூடிய ஆளெக்கண்டு பிடிக்கலெ, கோபாலுங்கிற என்னுடைய பேரெ ஒடனே மாத்திக்கிறே(ன்) ஸார்.

விநோதம் : குட் மானிங் சார்!

முதலாளி : குட்மானிங் என்ன(ய்)யா விநோத(ம்)! போன காரிய(ம்) என்னுச்சு?

விநோதம் : ஸார்! இந்த தடவெ போனதிலெ ஒரு விஷய(ம்) தெரிஞ்சு போச்சு ஸார்.

கோபால் : என்னய்யா விஷய(ம்) அது?

விநோதம் : ஆளு கெடப்பா(ன்) ஸார்! ஆனு அதுக்கு அலேயா அலேயணு(ம்) தென்னிந்தியா பூரா தேடிப் பார்த்தா நாம நெனெக்கிறபடி சுலபமா ஹீரோ கெடச்சிடுவா(ன்) இந்த ஆசெ எம்மனசிலே ரொம்ப நாளாருக்கு ஸார்.

முதலாளி : எம் மனசிலெயு(ம்) ரொம்ப நாளா ஒரு ஆசெ இருக்கு

விநோதம் : என்ன ஸார் அது?

முதலாளி : உபயோகமில்லாத உங்களெப் போலவங்களெ டிஸ்மிஸ் பண்ணணு(ம்).

விநோதம் : என்ன ஸார்?

முதலாளி : ஒரு ஹீரோவைத் தேடறத்துக்கு இதுவரேலெ செலவு செய்திருக்கிற பணத்திலெ

விநோதம் : பத்து தேக்கு மர பீரோ செய்யலா(ம்) ஸார்!

முதலாளி : ஆங்!

விநோதம் : ஸார்! பக்கத்திலே ஐநூறு மைல்லெ ஒரு பைய(ன்) இருக்கானு(ம்).

முதலாளி : அதெ விசாரிச்சுட்டு வரதுதானே?

விநோதம் : வரலா(ம்) ஸார்! ஆனு பாருங்க, டைரக்டரு, அப்புற(ம்) இந்த ஹீரோ சரியில்லேன்னு மொகத்தை சுளிச்சார்னு...நா(ன்) சுருக்கமா சொல்லிக்கிறே(ன்) இப்பவே புறப்பட்டுப் போய் நம்ம படத்துக்குத் தகுந்த மாதிரி ஹீரோவை பிக்ஸ் பண்றே(ன்) ஸார். ஒரு பத்து நாள் அவுட்டோர் ஷூட்டிங் கூட இருக்கு. அதெயும் பாத்திட்டு அப்படியே இந்த விஷயமா கூட ஒரு முடிவு செய்திட்டு வந்திர்ரேன்னே(ன்).

காட்சி 4

செவம்மா : அம்மா, அம்மா, அப்பாவு(ம்) அண்ணனு(ம்) வந்திட்டாங்க

காளியம்மா : அதுக்காக ஏண்டி கத்தறே?

காளியம்மாவின் கணவன் : அ

காளியம்மா : வந்தா வீட்டுக்குள்ளெ வரமாட்டாங்களா?

காளியம்மாவின் கணவன் : அப்பா, ஆட்டந்தாந் தெரிலேண்ணு நம்ம பயலுக்கு வண்டி ஓட்டவுந் தெரிலெ, இடுப்பை முறிச்சுட்டானே

காளியம்மா : ஆங்

காளியம்மாவின் கணவன் : என்னு செவம்மா? ஊம்– –சொகமா இருக்கெயா? இந்தா, இந்தப் பையெ அப்பிடி மாட்டு.

செவம்மா : கொண்டாங்க

காளியம்மாவின் கணவன் : எலெ வடிவேலு!

வடிவேலு : என்னுப்பா?

காளியம்மாவின் கணவன் : இத பாரு, அந்த கதிர்வேலு வண்டியெ அவுத்துப் போட்டுட்டு அப்படியே போயிடப் போறு(ன்) என்னெ வந்து பாத்துட்டுப் போகச் சொல்லு.

வடிவேலு : சரிப்பா, இதோ சொல்றே(ன்). ஊம்

காளியம்மாவின் கணவன் : என்னு, புள்ளெ காளியம்மா!

காளியம்மா : ஊம்

காளியம்மாவின் கணவன் : ஊரெல்லா(ம்) எப்படியிருக்கு?

காளியம்மா : ஊம், நியாய(ம்) சொல்லி வழக்கெத் தீர்த்து வெக்ய நீங்க இல்லேயேண்ணு வருத்தப்படுது. வந்தது(ம்) வராதுமா ஊரெப்பத்தி விசாரிக்கிறதெப்பாரு, போனிங்களே, என்ன கொண்டு வந்தீங்க?

காளியம்மாவின் கணவன் : எனனு கொண்டு வந்திங்களா? இதொ பாரு புள்ளே!

காளியம்மா : ஆங், ஹூம்! என்னங்க? தங்கக் காப்பு!

காளியம்மாவின் கணவன் : ஆங், தங்கக் காப்பு ஹ ஹ் ஹ

காளியம்மா : ஏது?

காளியம்மாவின் கணவன் : ஆங் நம்ம சீடப் பிள்ளெ கதிர்வேலு

காளியம்மா : ஊம்

காளியம்மாவின் கணவன் : மாரி(ய)ம்மன் கோயில் முன்னுடி

காளியம்மா : ஊம்

காளியம்மாவின் கணவன் : கரகமாடி

காளியம்மா : ஊம்

காளியம்மாவின் கணவன் : அதுக்காக அந்தக் கந்தசாமி பயலெ சயிச்சு

காளியம்மா : ஊம்

காளியம்மாவின் கணவன் : அதுக்காக கெடச்ச சன்மான(ம்), பரிசு புள்ளே, பரிசு.

காளியம்மா : அப்படீங்களா?

காளியம்மாவின் கணவன் : ஆங்

காளியம்மா ; நம்ப கதிர்வேலுவா?

காளியம்மாவின் கணவன் : ஆமாம்

காளியம்மா : என்னங்க, என்னங்க, இந்தத் தங்கக் காப்பு ஒரு ரெண்டு பவுனிருக்குங்களா?

காளியம்மாவின் கணவன் ! அடியாத்ரீ இவ சும்மா தரித்திரம் பிடிச்சவளா இருக்கறு?

காளியம்மா : ஊம்

காளியம்மாவின் கணவன் : ரெண்டு பவுனும்ல, ரெண்டு பவுனு

காளியம்மா : ஊம்

காளியம்மாவின் கணவன் : இதெத் தூக்கிப் பாரு

காளியம்மா : ஊம்

காளியம்மாவின் கணவன் : எம்மா கனம் இருக்குது?

காளியம்மா : ஊம்

காளியம்மாவின் கணவன் ; கிட்டத்தட்டப் பத்துப் பவுனு இருக்கு(ம்), ஆங்

காளியம்மா : ஆம்மாடி! இருக்கும் போலதான் தெரியுதுங்க

காளியம்மாவின் கணவன் : ஆ

காளியம்மா : என்னங்க, என்னங்க, இதெ நா(ன்) எங்கையிலெ போட்டுப் பாக்கிறேங்க

காளியம்மாவின் கணவன் : என்னது? ஆங்

காளியம்மா	:	இங்கெ வாங்களே(ன்) எங்கையெப் பிடிச்சு இந்த வளேலெக் கொஞ்சம் போடுங்க.
காளியம்மாவின் கணவன்	:	ஏய்! என்னடி என்னமோ வெளயாட்றே?
காளியம்மா	:	ஊம்
காளியம்மாவின் கணவன்	:	ஒங்கையெப் புடிச்சு நா(ன்) வளெயல் போட்ற தாவது?
காளியம்மா	:	ஏ(ன்), போட்டா என்னவா(ம்) போடுங்கன்னு என்னமோ பெரிய பிகு பண்றீங்களே!
காளியம்மாவின் கணவன்	:	ஆங்
காளியம்மா	:	வேண்டா(ம்) போங்க. நானே போட்டுக்கறேன். உம். அப்பா கொஞ்சம் சின்னதா இருக்கு
காளியம்மாவின் கணவன்	:	ஆங்
காளியம்மா	:	ஒரு வழியாக் கைலெ போட்டே(ன்). ஹூம் என்னுங்க
காளியம்மாவின் கணவன்	:	ஆங்
காளியம்மா	:	இப்ப எப்டி இருக்கு பார்த்தீங்களா?
காளியம்மாவின் கணவன்	:	ஆங் ஆங்! அளகாத்தா(ன்) இருக்குது. ஆனு அந்தக் கதிர்வேலு பய கூட, இதெ ஒனக்குத்தான் கொடுக்கணும்னு
காளியம்மா	:	பிரியப்பட்டிருக்கும்
காளியம்மாவின் கணவன்	:	ஆமா.
காளியம்மா	:	ஊம்
காளியம்மாவின் கணவன்	:	அவ(ன்) பிரியப்பட்டா(ன்) அதென்னமோ வாய்ஸ்தவந்தா(ன்)
காளியம்மா	:	ஊம்

காளியம்மாவின் கணவன் : ஆறு நான்தா(ன்) ஒத்தப் பேச்சிலெ "டேய்! அது கூடாதுருன்னு" சொல்லிப்பிட்டே(ன்)

காளியம்மா : எப்படி சொல்வீங்க? இதோ பாருங்க, இந்தத் தங்கக் காப்பெ எங்கையிலெருந்து நா(ன்) கழட்ட முடியாது.

காளியம்மாவின் கணவன் : ஆங்

காளியம்மா : இது எனக்குத்தா(ன்) சொந்தம்

காளியம்மாவின் கணவன் : நல்லாருக்கே ஒ(ன்) நியாயம்? ஊம் அவன் பைய(ன்) சிறு வயசு. கஷ்டப்பட்டு கரகமாடி, ஓடம்பெ வில்லா வளச்சு, இதெ பரிசா வாங்கினு(ன்) இதெ எடுத்து ஒங்கையிலே போட்டுகிட்டு ரொம்பப் பெரிசா பேசறியே? சரி, சரி, மொதல்லெ கழட்டு புள்ளே

காளியம்மா : ஊம்

காளியம்மாவின் கணவன் : ஏந்திரிந்து கழட்டு, ஊம்

காளியம்மா : ஊஹூம்——உக்கும் ஏங்கையெ வெட்டினுக்கூட நா(ன்) கழட்ட முடியாது.

காளியம்மாவின் கணவன் : என்னது

காளியம்மா : ஏ(ன்) இந்தத் தங்கக் காப்பு நியாயமா எனக்குத் தா(ன்) சொந்தமாகும்

காளியம்மாவின் கணவன் : ஹூக்குங்; எப்படி ஒனக்கு சொந்தமாகும்னு கேக்கறே(ன்). நீயு(ம்) ஒ(ன்) நியாயமும்!

காளியம்மா : நா(ன்) சொல்றதை மொதல்லே நீங்க கேளுங்க

காளியம்மாவின் கணவன் : ஆங்

காளியம்மா : நீங்க எனக்கு சொந்த(ம்).

காளியம்மாவின் கணவன் : ஆங்

காளியம்மா	:	உங்களுக்குத் தெரிஞ்ச தொழில் அறிவு எல்லா(ம்) எனக்கு சொந்த(ம்)
காளியம்மாவின் கணவன்	:	சரி
காளியம்மா	:	நீங்க சொல்லிக் கொடுத்த தொழில்லெ கெடச்சது, இது. உங்க தொழிலுக்குத்தானே சேரணும்?
காளியம்மாவின் கணவன்	:	ஆங்
காளியம்மா	:	அதாவது எனக்குத்தானே சேரணும்?
காளியம்மாவின் கணவன்	:	அது சரிதா(ன்)
காளியம்மா	:	ஊம்
காளியம்மாவின் கணவன்	:	நியாயப்படி நா(ன்) கரகமாடி, அந்த கந்தசாமியெ ஜயிச்சிருந்தா அல்லது நம்ம கதிர்வேலுவெ ஜயிச்சிருந்தா நீ சொல்றது நியாய(ம்), ஆங்!
காளியம்மா	:	இதோ பாருங்கா, நா(ன்) எப்பவும் உண்மெ தவறிப் பேசமாட்டே(ன்), போக மாட்டே(ன்).
காளியம்மாவின் கணவன்	:	காளியம்மா
காளியம்மா	:	ஊம்
காளியம்மாவின் கணவன்	:	ஒனக்கு(ம்), ஒ(ன்) நியாயத்துக்கு(ம்) வீட்லெ தா(ன்) மதிப்பு, வெளியிலெ கெடயாது.
காளியம்மா	:	ஊம்
காளியம்மாவின் கணவன்	:	இந்தக் காப்பை ஞாயமா கதிர்வேலு கிட்டதா(ன்) சேக்கணும், ஹும், பாவம் சங்கரமூர்த்தி இந்த வயசிலெ, ஆங்! இதெ நெனச்சி எவ்வளவு சந்தோசப் படுவாரு!
காளியம்மா	:	நம்மகிட்ட இருந்தா நம்ம சந்தோசப்படமாட்டமா? அழுவமா?
மன்னூர்	:	என்னுத்துக்காக நா(ன்) இருக்கும்போது நீ அழணும்?

காளியம்மாவின் கணவன் : வாப்பா மன்னுரு, வா. எப்ப வந்தாப்பலே?

மன்னுர் : காலெயிலெதான் (அ)த்தா(ன்) வந்தேன். ஆமா அக்காவிக்கு(ம்) அத்தானுக்கு(ம்) என்ன தகருறு?

காளியம்மா : உக்கும், தகராரு என்னிக்கு(ம்) தா(ன்) இருந்து கிட்டேயிருக்குது.

மன்னுர் : இன்னிக்குக் கொஞ்சம் அதிகமா இருக்கு(ம்) போலருக்கே?

காளியம்மா : தம்பீ! இந்த தங்கக்காப்பை பாத்தியா?

மன்னுர் : அழகா இருக்கே. அத்தா(ன்) ஒனக்குப் பண்ணிப் போட்டாரா? ஆங், பரவால்லியே

காளியம்மா : அவரு ஏண்டா எனக்கு தங்கத்திலெ, அதுவும் பத்து பவுனுக்கு காப்பு செய்து போடப் போருரு?

மன்னுர் : ஏ(ன்) போட்டதில்லையா? தங்க காப்பு பத்து பவுனு?

காளியம்மா : ஊம்

காளியம்மாவின் கணவன் : ஏ......காளியம்மா! கழட்டு காப்பை. ஊ(ம்) ஊ(ம்)

காளியம்மா : முடியாது. கழ்ட்ட முடியாது, தங்கக் காப்பு எனக்கு வெணு(ம்) அதுவு(ம்) இதுதா(ன்) எனக்கு வேணு(ம்)

மன்னுர் : அக்கா கையிலெ இருக்கிறது எவ்வளவு அழகாருக்கு!

காளியம்மா : ஊம்.

மன்னுர் : அதெப்போய் ஏ(ன்) அத்தா(ன்) கழட்டணு(ம்)?

காளியம்மாவின் கணவன் : எலெ! சாம்பிருணி! தூபம் போட வந்தியா? ஆமா(ம்) மரியாதெயா ஒ(ன்) வேலெயெப் பார்த்துட்டுப் போயிடு. இந்தக் காப்பு கதிர்வேலுது. கரகமாடி சன்மான(ம்) வாங்கிட்டு வந்தது. போட்டியிலெ ஜயிச்சத்துக்கு கெடச்ச பரிசு. அதெ எடுத்துக் கையிலெ மாட்டிக்கிட்டு என்னுது அப்பிடி இப்படின்னு நியாய(ம்) வேறெ பேச வந்திட்டா. இவ(ன்) வேறெ தூபம் போட வந்திட்டா(ன்).

மன்னுர்	:	அப்படியா விசய(ம்)? அக்கா தங்கத்திலெ காப்பு தானே வேணும்?
காளியம்மா	:	ஊம்
மன்னுர்	:	பத்து பவுனென்ன, இருபது பவுன்லெ நா(ன்) பண்ணித்தாரே(ன்)
காளியம்மா	:	மன்னுரு! இந்த விஷயத்திலெ நீ தலையிடாமெ இரு. இது எப்படித்தா(ன்) போய் முடியுதூண்ணு நா(ன்) பார்க்கிறே(ன்)
மன்னுரு	:	சரி......எனக்கென்ன? நா(ன்) வரே(ன்)
வடிவேலு	:	என்னுப்பா? அம்மா ஏ(ன்) உம்முனு இருக்காங்க?
கதிர்வேலு	:	நா(ன்) போய்ட்டு சாயந்திரமா வரேங்க
காளியம்மாவின் கணவன்	:	கதிர்வேலு! நீ நில்லு. காளியம்மா! தங்கக் காப்பை கழட்டி கதிர்வேலு கையிலெ கொடு
காளியம்மா	:	முடியாது.
கதிர்வேலு	:	வேண்டாங்க. அதெ அம்மாவே போட்டுக்கட்டு(ம்)
காளியம்மாவின் கணவன்	:	என்னுது?
கதிர்வேலு	:	கையிலிருக்கிறத்தைக் கழட்ட வேண்டாங்க
காளியம்மாவின் கணவன்	:	அட நீ சும்மாயிருப்பா! ஆங் காளியம்மா
செவம்மா	:	அம்மா! இதென்னமா வீண் தகராறு?
காளியம்மாவின் கணவன்	:	இது சாதாரண தகராறில்லெ, சாதாரண தகராறில் லேன்னே(ன்) பேராசெ புடிச்ச தகராறு. தங்கக் காப்பு நியாயப்படி உங்கம்மாவுக்குத்தா(ன்) சேரணுமா(ம்), கேட்டுக்க
வடிவேலு	:	அந்தக் காப்பு கதிர்வேலுக்குத்தா(ன்) சேரணு(ம்)
காளியம்மாவின் கணவன்	:	அப்பிடிச் சொல்லு

கதிர்வேலு	:	வடிவேலு! நீ சும்மாயிரு. பொருளுக்குச் சொந்தக் கார(ன்) நானே சொல்றே(ன்) முழு மனஸோடே சொல்றே(ன்). இத அம்மாவே சந்தோஷமா போட்டுகிடட்டு(ம்)
வடிவேலு	:	என்னுது?
கதிர்வேலு	:	அதுதா(ன்) நா(ன்) நெனச்சது(ம்) நான் வரேங்க
காளியம்மா	:	ஊம்
காளியம்மாவின் கணவன்	:	என்னுடா இவெ(ன்)?
காளியம்மா	:	கதிர்வேலு சொல்லிவிட்டுப் போனதெப் பாத்தீங்களா? நியாய அநியாய(ம்) தெரிஞ்சு அவ(ன்) நடந்துக்கரு(ன்)
காளியம்மாவின் கணவன்	:	ஆமாமாம்
காளியம்மா	:	போயி வேறெ வேலெ இருந்தாப் பாருங்க
செவம்மா	:	என்னப்பா இது. இப்ப என்ன செய்யிறது?
வடிவேலு	:	கதிர்வேலுவு(ம்) என்னுடான்னு இப்பிடி சொல்லிட்டுப் போய்ட்டா(ன்)
காளியம்மாவின் கணவன்	:	அதாம்ப்பா எனக்கும் புரியல்லே
வடிவேலு	:	ஏம்ப்பா! கதிர்வேலுவோட அப்பாவுக்கு இந்த விஷய(ம்) தெரிஞ்சா, நம்பளெப்பத்தியென்ன நெனெப்பாரு?
காளியம்மாவின் கணவன்	:	என்னு நெனெப்பாரு? ஊருக்கெல்லா(ம்) நியாய(ம்) சொல்ற நீ இப்படி செய்யிறது நியாயந்தானு, நியாய(ம்), நியாய(ம்)னு சொல்லி அநியாயமா நடக்கலாமான்னு நாலுபேரெக் கூட்டிக்கிட்டு வந்து மேளதாளத்தோட கேப்பானே அந்த ஆளு,
வடிவேலு	:	அப்போ, இதுக்கு முடிவுதா(ன்) என்னப்பா?
காளியம்மாவின் கணவன்	:	ஐயோ

காளியம்மா : ஐயய்யோ

காளியம்மாவின் கணவன் : ஆண்டவன் தா(ன்) ஒரு வழி விட்ணு(ம்)

காளியம்மா : ஐயய்யோ! ஓடிவாங்களே(ன்)! ஓடிவாங்களே(ன்)

காளியம்மாவின் கணவன் : என்னுது? என்னுது?

காளியம்மா : ஐயய்யோ

செவம்மா : என்னம்மா?

காளியம்மா : அட, ஐய்யோ!

செவம்மா : அம்மா, அம்மா

காளியம்மா : ஐயோ!

காளியம்மாவின் கணவன் : என் ஆச்சு?

வடிவேலு : என்னம்மா? என்ன? என்ன?

காளியம்மாவின் கணவன் : என்னு புள்ளே? என்னு கலவரம் பண்றே, என்ன ஆச்சு ஒனக்கு (இ)ப்போ?

காளியம்மா : சும்மாயிருங்க நீங்க எங்கெ வந்தீங்க? தேளு ஒண்ணு எங்கையிலெ கொட்டிடுத்து

காளியம்மாவின் கணவன் : அப்பா, அடாடாடா

காளியம்மா : ஐயய்யோ

செவம்மா : அம்மா! எங்கெம்மா? எங்கே? கொண்டாங்க

காளியம்மா : அங்கேதா(ன்) தொடாதே. எவ்வளவோ பெரிய தேளு! வெறகுக் கட்டெயெடுக்கப்போனே(ன்) ஐயோ! படுபாவித் தேளு! கொட்டிடுத்து

காளியம்மாவின் கணவன் : எந்தக் கையிலே?

காளியம்மா : அம்மாடீ! பாத்துக்கிட்டே எல்லாரு(ம்) சும்மா நிக்கிறீங்களே, போயி ஏதாவது மருந்து கிருந்து கொண்டு வாங்களே(ன்)

காளியம்மாவின் கணவன் : என்னுது?

காளியம்மா : ஐயோ! அப்பா ரொம்பக் கடுக்குது

காளியம்மாவின் கணவன் : ஆங், ஏ புள்ளே! காளியம்மா! இந்தத் தங்கக் காப்பு போட்டிருக்கிறயே, அந்த கையிலெயா கொட்டிடுச்சு?

காளியம்மா : அந்தக் கையிலெதா(ன்) கொட்டிடுச்சு

காளியம்மாவின் கணவன் : அடாடா அந்தத் தேளுக்கு கூட......

காளியம்மா : இந்தக் கையிலெ கொட்டப்படாதா?

காளியம்மாவின் கணவன் : ஒன் நியாயமான வழி புடிக்கலெ போலிருக்கே

காளியம்மா : என்னுது? பரிகாசமா செய்யறீங்க? கையெல்லா(ம்) கடுக்குதே!

காளியம்மாவின் கணவன் : தேளு கொட்டுனு எப்டியிருக்கும்?

காளியம்மா : ஐயோ, நா(ன்) என்ன செய்வே(ன்)? ஏ(ன்) எல்லா(ம்) மர(ம்) மாதிரி நிக்கிறீங்க? ஏதாவது மருந்து போடுங்களே(ன்)

காளியம்மாவின் கணவன் : மொதல்லெ அந்தக் காப்பெக் கழட்டு, வேறெ ஒண்ணு(ம்) மருந்து தேவையில்லெ......ஊம்

காளியம்மா : அடி காளியாத்தா, எ(ன்) உயிர் போகுதே?

காளியம்மாவின் கணவன் : இந்தா புள்ளே! நா(ன்) நல்லதனமா சொல்றே(ன்)

காளியம்மா : ஊம்

காளியம்மாவின் கணவன் : அந்தக் காப்பைக் கழட்டு, உயிர் போகாது. உயிர் போனலு(ம்) காப்பைக் கழட்டமாட்டே, தெரியும் எனக்கு.

காளியம்மா : மாட்டே(ன்) மாட்டே(ன்)

காளியம்மாவின் கணவன் : செவம்மா!

செவம்மா	:	என்னப்பா?
காளியம்மாவின் கணவன்	:	ஒங்கம்மா கெயிலெந்து மொதல்லே அந்தக் காப்பை கழட்டு
செவம்மா	:	அம்மா! கொண்டாங்கம்மா! கையெ, நா(ன்) மெதுவாக் கழட்றே(ன்), கொண்டாங்க மெதுவா கொண்டாங்க
காளியம்மா	:	மெதுவா, மெதுவா கழட்றயா? ஆமாம். இந்தா மெதுவ்வா கழட்டி எங்கையிலெயே கொடு பெட்டிலெ வெச்சுப் பூட்றே(ன்)

EXERCISES

I. (a) *Rewrite the following in written Tamil :*

காளியம்மாவின் கணவன்	:	என்ன புள்ளே? என்ன கலவரம் பண்றே: என்ன ஆச்சு ஒனக்கு (இ)ப்பொ?
காளியம்மா	:	சும்மாயிருங்க நீங்க எங்கெ வந்தீங்க? தேளு ஒண்ணு எங்கையிலே கொட்டிடுத்து.
காளியம்மாவின் கணவன்	:	அப்பா, அடாடாடா
காளியம்மா	:	ஐயய்யோ
செவம்மா	:	அம்மா! எங்கெம்மா? எங்கே? கொண்டாங்க.
காளியம்மா	:	அங்கேதா(ன்) தொடாதே. எவ்வளவோ பெரிய தேளு! வெறகுக் கட்டெடுக்கப் போனே(ன்) ஐயோ! படுபாவித் தேளு! கொட்டிடுத்து.

(b) *Rewrite the following words in written Tamil :*

(i) ஒங்கம்மா

(ii) கழட்றயா

(iii) பெட்டீலெ

(iv) மொதல்லெ

(v) கொட்டப்படாதா

(vi) வெறகு

(vii) புடிக்கலெ

(viii) நம்பளப்பத்தி

(ix) நெனெக்கிறபடி

(x) ரொம்ப நாளாருக்கு

II. *Vocabulary Exercise :*

Split the following compounds into constituent words and write meanings for the same :

(i) மூடு விழா
(ii) தெருக்கூத்து
(iii) பொய்க்கால் குதிரை
(iv) மர பீரோ
(v) ஐநூறு
(vi) தங்கக்காப்பு
(vii) சீடப்புள்ளே
(viii) பேராசை

III. *Fill up the blanks choosing the correct item.*

Make changes in the sentence if necessary.

1. கல்யாணங்கட்டிக்கப் போற பொண்ணையு(ம்) வீட்டுக்கு வரப்போற மருமகப் பிள்ளெ கதிர்வேலு———கேட்டுகிட்டு செஞ்சே(ன்).

(i) ஐயும்
(ii) ஐயோடு
(iii) ஒடு

2. கதிர்வேலு என்னெ———எந்த வகையிலே ஒசந்தவ(ன்)?

(i) ஒடு
(ii) விட
(iii) மேலே

3. என்னங்க,———நா(ன்) எங்கையிலெ போட்டுப் பார்கிறேங்க.

(i) இதெ
(ii) இதோடு
(iii) இதிலெ

4. இந்தத் தங்கக் காப்பு நியாயமா———தான் சொந்தமாகும்.

(i) என்னோடு

(ii) எனக்கு

(iii) என் மேல்

5. ஒனக்கு(ம்), ஒ(ன்) நியாயத்துக்கு(ம்) வீட்டிலெதா(ன்) மதிப்பு, வெளி——கெடயாது.

(i) இலெ

(ii) கு

(iii) ஓடு

IV. *Substitution*:

1. அழகா முன்னுலெ ஒக்காந்து வண்டி ஓட்டுது.

(*a*) Substitute the following for **ஒக்காந்து** after making necessary changes in the given words. Rewrite the sentences in written Tamil:

(i) நில்

(ii) இரு

(iii) பார்

(iv) வா

(*b*) Substitute the following for **அழகா** and rewrite the sentences in written Tamil after making necessary changes in the given words:

(i) வீரம்

(ii) ஜோர்

(iii) எடுப்பு

(*c*) Substitute the following for **முன்னாலெ** and rewrite the sentences in written Tamil after making necessary changes in the given words:

(i) பக்கம்

(ii) எதிர்

(iii) உயரம்

2. ஒரு பத்துப் பதினெஞ்சு நாளா ஆளெக் கண்ணிலியே காணோ(ம்)

(*a*) Substitute the following for **பத்துப் பதினெஞ்சு** and rewrite the sentences in written Tamil after making necessary changes in the given words :

(i) ரெண்டு மூணு

(ii) நாலஞ்சி

(iii) ஏழெட்டு

(iv) பத்திருவது

(*b*) Substitute the following for **நாளா** and rewrite them in written Tamil after making necessary changes in the given words :

(i) தினம்

(ii) வருஷம்

(iii) மாத

(*c*) Substitute the following for **ஆளெ** and rewrite them in written Tamil after making necessary changes in the given words:

(i) மனுசன்

(ii) பொண்ணு

(iii) பையன்

(iv) அப்பா

3. நியாய(ம்) சொல்லி வழக்கெத் தீர்த்து வெக்ய நீங்க இல்லேயேண்ணு வருத்தப்படுது

(a) Substitute the following for **வருத்தப்படுது** and rewrite the sentences in written Tamil after making necessary changes in the given words :

(i) வெசனம்
(ii) சஞ்சலம்
(iii) துக்கம்

(b) Substitute the following for **வழக்கெ** and rewrite the sentences in written Tamil after making necessary changes in the given words :

(i) தகராறு
(ii) சண்டை
(iii) வம்பு
(iv) கலகம்

(c) Substitute the following for **சொல்லி** and rewrite the sentences in written Tamil after making necessary changes in the given words :

(i) கேள்
(ii) பார்
(iii) விசாரி

V. *Rewrite the following sentences by substituting one item at a time.*

1. அந்த கதிர்வேலு வண்டியெ அவுத்துப் போட்டுட்டு அப்படியே போயிடப் போறு(ன்)

(i) நிறுத்து
(ii) சாமிநாதன்
(iii) வர
(iv) பேசாமல்

2. டைரக்டர் ஸார் "எம்பேரெ கொஞ்சம் மாத்தி அழகா செய்யுங்களேன்னு" கேட்டார்

(i) சொன்னர்

(ii) அவம்பேரெ

(iii) எப்படியாவது

(iv) கூப்பிடுங்களேன்னு

3. இந்தக் காப்பை ஞாயமா கதில்வேலு கிட்டதா(ன்) சேக்கணும்

(i) அந்த

(ii) பொதுவா

(iii) பழனி

(iv) கொடுக்கணும்

(v) கலையத்தெ

VI. *Transform the following into positive sentences.*

1. நா(ன்) செவம்மா மேலே எவ்வளவு ஆசெ வெச்சிருக்கேன்னு தெரியாதா?
2. செவம்மாவெ ஒனக்கு கொடுக்க முடியாது.
3. இதோ பாருங்க, நா(ன்) எப்பவும் உண்மெ தவறிப் பேச மாட்டே(ன்), போக மாட்டே(ன்)
4. முடியாது கழட்ட முடியாது.
5. கையிலிருக்கிறத்தைக் கழட்ட வேண்டாங்க

VII. *Transform the following into interrogative sentences using the underlined phrases words:*

1. நீங்க சுலபமா மூடுவிழா நடத்தத் திட்டம் போட்றீங்க.
2. அவர் பேர் சூமந்திரக்காளி ஆய் போச்சு
3. இந்த ஆசெ எம்மனசிலெ ரொம்ப நாளாருக்கு ஸார்
4. பக்கத்திலே ஐநூறு மைல்லெ ஒரு பைய(ன்) இருக்கா(ன்)
5. தகராறு என்னிக்கு(ம்) தா(ன்) இருந்துகிட்டேயிருக்குது

VIII. *Change each of the following complex sentences into simple sentences.*

1. அங்கெ நெர்த்தி வண்டிக்கு வெளக்கு கொளுத்து மொதல்லே
2. கல்யாணங் கட்டிக்கப் போற பொண்ணேயு(ம்) வீட்டுக்கு வரப் போற மருமகப் பிள்ளெ கதிர்வேலுவையுங் கேட்டுக்கிட்டு செஞ்சே(ன்)
3. ஒரு வாரத்திலெ, கேரக்டர் பிக்ஸ் பண்ணி ஒர்க் ஸ்டாட்டாகணு(ம்)
4. நம்ப மனசுபடி, கரகம், தெருக்கூத்து, பொய்க்கால் குதிரை, காவடி சிலம்பு எல்லா(ம்) தெரிஞ்சு ஆடிப்பாடி நடிக்கக் கூடிய ஆளெக் கண்டு பிடிக்கலெ, கோபாலுங்கிற என்னுடைய பேரெ ஒடனே மாத்திக்கிறே(ன்) ஸார்!

IX. *Change the following into complex sentences.*

1. வண்டியெப் பாத்து ஓட்டிக்கிட்டு வரே(ன்). எப்படிப் பேசறது?
2. எம்பேரெ கொஞ்சம் மாத்தி அழகா வெய்யுங்களேன்னு கேட்டார். எனக்கு உடனே ஒரு ஐடியா ஸ்டிரைக்காயிடிச்சு.
3. எம் மனசிலெயு(ம்) ரொம்ப நாளா ஒரு ஆசெ இருக்கு. உபயோகமில்லாத உங்களெப் போலவங்களெ டிஸ்மிஸ் பண்ணணும்.
4. ஆட்டந்தாந் தெரிலேண்ணு நம்ம பயலுக்கு வண்டி ஓட்டவுந் தெரிலே. இடுப்பை முறிச்சுட்டானே.
5 பொருளுக்கு சொந்தக்கார(ன்) நானே சொல்றே(ன்). முழு மனஸோட சொல்றே(ன்)

X. *Summarize the story of the drama not exceeding 25 lines:*

காப்புக்கட்டிச் சத்திரம்

தாம்பூல ஜான்

[This is a social play presented in spoken style using non-Brahmin dialect of several regions. It uses also the Brahmin dialect for the Brahmin characters.]

நாடக உறுப்பினர்கள்

வேலு
ஸாப்ஜான்பாயி
பிச்சைக்காரன்
ராமய்யர்
அப்பாவு
பாக்யம்
ஒடெயார்
அன்னபூர்ணி
ஸாப்ஜான்பாயியின் பையன்

ஒருவர் : *இவர்தாண்டா [1]ஜாலவித்தை காட்ற ஸாப்ஜான்பாயி*

வேலு : *ஆங்*

ஸாப்ஜான் பாயி : *ஏ ஸலாம் ஸலாம் வர்தூ, ஸலாம் வர்துங்கோ, ஸலாம் வர்தூங்கோ, வேலு எசமான் ஸலாம் வர்தூ*

வேலு : *ஸாப்ஜான்பாயி!*

ஜால வித்தை — magic; jugglenj

ஸாப்ஜான்பாயி	:	உம்
வேலு	:	வாய்யா, வாய்யா வா......ஊம்......ஆமா......? போயும் போயு(ம்) இந்தக் காப்புக்கட்டிச் சத்திர அத்துவான்த்திலெ ஒனக்கு எங்கேப்பா கூட்டஞ் சேரப் போகுவுது?
ஸாப்ஜான் பாயி	:	ஆங்!
வேலு	:	இந்தப் [2]பாம்புப் பெட்டியெத் தூக்கிட்டு நீ வேறெ வந்திட்டியா?
ஸாப்ஜான் பாயி	:	ஆங்!
வேலு	:	யோவ்! ஸாப்ஜான்பாயீ! பாம்பெக் கண்டா பஸ்ஸே ஓடிருமேய்யா?
ஸாப்ஜான்பாயி	:	அரே இல்லீங்கோ வெலெசமான்!
வேலு	:	உம்
ஸாப்ஜான்பாயி	:	நம்மள்கி திருக்காசூர்லே திருவிழா நடக்குதா ல்லே?
வேலு	:	உம்
ஸாப்ஜான்பாயி	:	அங்கே போய்க்கிட்டிருக்கேன்
வேலு	:	உம்
ஸாப்ஜான்பாயி	:	அரே இன்ன(ம்) எட்டுக்கல் டிக்கல்(?) நடந்தாகுணு(ம்) வெயில்லெ நம்ப சின்னப் பைய(ன்) இருக்காம்பாரு, கள்ச்சீப் போயிட்டான். ஒரு நால்ணு இருந்தாக்குடு ஸாமி! ரெண்டு இட்டிலி வாங்கிப் போட்டு இட்டுகினு போறே(ன்) அவனெ. பொதங்கௌமெ காத்தாலெ குட்த்துர்றே(ன்)
வேலு	:	என்னது? பொதங்கௌமெ தர்றியா?
ஸாப்ஜான்பாயி	:	ஆமா ஸாமி

பாம்புப்பெட்டி — snake box; a small covered box type basket in which the snake is kept

வேலு : ஏய்! வர்றவங்க போறவங்களுக்கெல்லா(ம்) கடங்குடுக்க நா(ன்) என்ன வட்டிக்கெடயா வெச்சிருக்கே(ன்)? ஒனக்கென்ன தேவை? ரெண்டே ரெண்டு இட்லி, அவ்வளதானே? பேசாமெ, அந்த இடுக்காலெ தெரியுது பார் பீம விலாஸ் ராம அய்யர் ஓட்டல், அங்கெ போயி ரெண்டு இட்லி கேளு. நாலு இட்லியா குடுப்பாரு.

ஸாப்ஜான்பாயி : அரே வேலு எசமான்!

வேலு : உம்

ஸாப்ஜான்பாயி : அவன்கீ மேலெ பேசாதே

வேலு : உம்

ஸாப்ஜான்பாயி : அவன்கீ எச்சி கையாலெ கூட காக்கா ஓட்டமாட்டான் ஸாமீ! அவன்கீ மேலெ பேசறியே, காசு கொடுப்பானு?

வேலு : ஊம்

ஸாப்ஜான்பாயி : நீ குடு ஸாமி நா(ன்) வாங்கித் தர்றே(ன்)

வேலு : ஏங்

ஸாப்ஜான்பாயி : பொதங்கெழமெ கட்டாயந் தந்திர்றேன்

வேலு : ஏய்! இந்தா வியாபார டைம்லெ சும்மா தொணதொண தொணன்னு கத்திகிட் நிக்காதே, ஸாப்ஜான்பாயி! போய் வா.

ஸாப்ஜான்பாயி : அரே வேல் ஸாமி! வேலெசமான்!

வேலு : ஓய்

ஸாப்ஜான்பாயி : ஒரு பீடியாவது குடு

வேலு : யோவ்! சொன்னு கேக்கமாட்டெ நீ? பீடியெக் குடு, பொள்ளங்காயேக் குடுன்னுட்டு. ஸகயிலெ காசிருந்தா பேசு, இல்லேன்னு நடெயெக்கட்டு போய்யா.

ஸாப்ஜான்பாயி : சரி எசமான் கீ மன்ஸூ இல்லே, போய் வர்ரேன் இந்த பஸ்ஸிலேருக்கிற மகாராசங்கிட்டெ கையெ நீட்டினுலு(ம்) ஏதாவது காசு கெடக்யு(ம்) வர்ரே(ன்) சாமீ!

பிச்சைக்காரன்	:	ஐயா......சாமே! மொடவாதி சாமே! ஒரு தர்மம் செய் சாமே......!
ஸாப்ஜான்பாயி	:	டேய்! நம்பள்கீ காசு மேலெ அலெயருன், நிம்பள்கி காசு கேக்கருன் போ போ.
பிச்சைக்காரன்	:	ஐயோ......நம்பளோட சேர்ந்த ஆளாப்பா!
ராமய்யர்	:	அப்பாவூ! அப்பாவூ!
வேலு	:	யோவ்! யோவ்! ராமையரே!
ராமய்யர்	:	என்ன வேலூ!
வேலு	:	நான் தா(ன்) அவனெ சோடா, கலர் வித்துகிட்டு வாடான்னு அனுப்ச்சிருக்கெனே, இப்ப எனக்குக் கூப்பிடறீங்க அவனெ?
ராமய்யர்	:	டே......யப்பாவு!
அப்பாவு	:	இதோ வந்தே(ன்) வேலண்ணே!
வேலு	:	வராதே, நீ ஒ(ன்) வேலயெ கவனிச்சுகிட்டேயிரு
அப்பாவு	:	சரீண்ணே!
ராமய்யர்	:	என்ன வேலூ! நானு(ம்) அன்னபூர்ணியு(ம்) எவ்வளவோ ஸ்ரமப்பட்டு அவனெ "அப்பம், வடை, தயிர்ச்சாதம், அப்பம் வடை, தயிர்சாதம்......"னு விக்கிறத்துக்கு தயார் பண்ணிருக்கோ(ம்) நீ இப்ப அவனெ சோடா, கலர் விக்க அனுப்பறியா? ஏ அப்பாவூ!
அப்பாவு	:	என்னுங்க?
ராமய்யர்	:	சோடா கலரெ பொட்டியோடெ கீழே போட்ரு, போட்ரு கீழேன்னு
பாக்யம்	:	அப்பாவு
அப்பாவு	:	ஆங்
பாக்யம்	:	சாமீ சொல்ருகளே, போடு கீளே. ஆத்தாத்தோ! எப்படி ஒளயுந்தெரியுமா? படாருண்ணு!

அப்பாவு : அதுக்கு மேலெ எம்முதுகுலெ எப்படிப் பளீர் பளீருண்ணு வெடிக்குந் தெரியுமா? அ(து)தாஞ் சொல்லுமே

பாக்யம் : அக்கங்

ராமய்யர் : என்ன வேலூ! காலங்காத்தாலெ தகராறு பண்றியே, பக்கோடாவுக்குப் பச்செ மொளகா யில்லேனு தவிச்சுண்டிருக்கே(ன்) நா(ன்)

வேலு : ஆமா! பொல்லாத பக்கொடா சுட்டீங்க. காலெயிலெருந்து பச்செ மொளகா வெட்றதுக்கு நாலு தர(ம்) வெங்காய(ம்) வெட்றதுக்கு ஏளு தர(ம்) அந்த அப்பாவுப்பயலெக் கூப்ட்டு வெரட்டி கிட்டேயிருந்திங்களே,

ராமய்யர் : உக்கு(ம்)

வேலு : அப்பல்லா(ம்) நா(ன்) அவனெக் கேட்டெனு? ஏதோ பஸ்ஸு வந்து நிக்கிற நேரமாச்சே, நாலு கலராவது காலியாகட்டு மேன்னு பாத்தா, கண்ணு பொறுக்கலேயோ? ஒமக்கு?

ராமய்யர் : ஊஹூம் ஊஹூம்

ஒடெயார் : என்னப்பா வேலு! நல்லாருக்கெயா?

வேலு : வாங்க ஒடெயாரையா, வாங்க

ஒடெயார் : என்ன? பீமவிலாஸு ராமய்யர் எப்படி இருக்கு?

ராமய்யர் : அடேடே! மரக்காணத்து ஒடயார்வாளா, வாங்கோ வாங்கோ. ஹெ.

ஒடெயார் : ஆ அப்பா ஸ்ஸு, என்ன வெயிலு! என்ன வெயிலு! ஒரே கொளுத்து கொளுத்துதே.

ராமய்யர் : ஹ——ஆமாமா(ம்) ஒடெயார்வாள்! நா(ன்) சொன்னு நீங்க நம்பமாட்டேள்......

ஒடெயார் : ஏ(ன்)?

ராமய்யர் : இப்பத்தா(ன்) ஒங்களெ பத்தி நெனச்சே(ன்)

ஒடெயார் : அப்பிடியா?

ராமய்யர் : நீங்க வந்துட்டேள்

ஒடெயார் : ஹங்

ராமய்யர் : ஆயுசு நூறு

ஒடெயார் : இருக்கட்டு(ம்) இருக்கட்டு(ம்)

ராமய்யர் : அ, ஸ்ஸ்ஸ்ட்டாங்கா ஒரு காப்பி சாப்பிட்றேளா?

வேலு : காப்பியாவது கீப்பியாவது, பட்டெயெ உரிக்குது வெய்யிலு! படார்னு ஒடக்யறேங் கலரெ, சாப்பிடுங்க.

பாக்யம் : என்னு? ஒடெயாரையா! சவுக்கியமா இருக்கியகளா?

ஒடெயார் : ஹ……அடெடெ! பனையூரு பாக்யமா?

பாக்யம் : ஆங்!

ஒடெயார் : ஏம்மா' சவுக்கியமா இருக்கெயா? ஒன்னெ மறந்தே போய்ட்டே(ன்)

பாக்யம் : இப்படித்தேங். எங்க வீட்டுக்காரவுகளும். பளகினவுகளெச் சமேத்திலெ மறந்திறுவாக

ஒடெயார் : ஹ ஹ் ஹ ஹ் ………!

பாக்யம் : ஆமா! ஐயா!

ஒடெயார் : ஆங்

பாக்யம் : நம்ம வீட்டுக்கு அடுத்த வீட்டுக்கு எதுத்த வீட்டு ஒடெயாரு

ஒடெயார் : ஆங்

பாக்யம் : ப்ஸ! அதேங்! ஒங்க கூட வருவாகளே புலிக்குட்டி ஒடெயாரு

ஒடெயார் : ஓஹோ! ஆங், ஆமா

பாக்யம் : அவுக சொகமா இருக்காகளா?

ஒடெயார் : இருக்கா இருக்கா இருக்கா

பாக்யம் : பாத்து வெகு நாளாச்சு. அவுகளெப் பாத்தியகண்ணு

ஒடெயார் : ஆங்

பாக்யம் : நாஞ்சாரிச்சேண்ணு சொல்லுங்க. அவுகளுக்கு எலந்தெப்பள முண்ணு உசுரு

ஒடெயார் : ஹ ஹ ஆமா

பாக்யம் : ஆத்தாத்தோ! அவுகளு(ம்) எங்க வீட்டுக்காரவுகளு(ம்) சாவச்சண்டெ விடுவாக பாருங்க

ஒடெயார் : ஆங்

பாக்யம் : ஐயய்யோ, இருவது வருசத்துக்கு முன்னெ போய்ட்டா சணமுன்னு சண(ம்), ஒங்க வூட்டு சண(ம்) எங்க வூட்டு சணமா...........?

ஒடெயார் : பின்னெ சாவச்சண்டெயாச்சே?

பாக்யம் : ஊரு சணமெல்லா(ம்) அங்கணெதா(ன்) நிக்யும்

ஒடெயார் : இருக்கு(ம்)

பாக்யம் : சரி, சரி. நா(ன்) பாட்டுக்கு பேசிக்கிணே இருக்கே(ன்) பளய கதெயெ நெணச்சென்னு, எனக்கு ஆத்தாத்துப்போவு......

ஒடெயார் : ஒண்ணு(ம்) வருத்தப்படாதே

பாக்யம் : அது கெடக்கட்டும்

ஒடெயார் : ஆங்

பாக்யம் : நீங்க பஸ்ஸுலேர்ந்து வேர்த்து விறுவிறுத்து வந்திருக்கியக

ஒடெயார் : ஹ ஹ் ஹ.........

பாக்யம் : ஒரு கூறு வேர்க்கடலெ தின்னுங்க, வேணும்னுலு(ம்) இன்னொரு கூறுதின்னுங்க!

ஒடெயார் : வேர்க்கடலெ.........

பாக்யம்	:	கூறு ஒரணுத்தே(ன்)
ஒடெயார்	:	ஹ ஹ் ஹ் ஹ.........அப்படியா?
பாக்யம்	:	ஊம்
ஒடெயார்	:	அவிச்ச கடலெ தானே?
பாக்யம்	:	ஆமா
ஒடெயார்	:	சரி குடு
பாக்யம்	:	உம் ஹூம் நமக்குப் போட்டியா வரானே இந்த வேலு!
அன்னபூர்ணி	:	அடுப்பிலே வெறகு இல்லெ. உள்ளெ போங்கோ. உள்ளெ வாங்கோணு!
ராமய்யர்	:	வந்துட்டே(ன்) வந்துட்டே(ன்)
அன்னபூரணி	:	உள்ளெ வாங்கோணு கையெ வீசிண்டு வராதேங்கோ. நாலு டவரா செட்டெ எடுத்து பக்கெட்லெ போட்டுண்டு வாங்கோ அப்பிடியே அந்தப் பெஞ்சி மேலே இருக்கிற இலெக்கட்டெயு(ம்) எடுத்துப் போட்டு வாங்கோ
ராமய்யர்	:	ஆகட்டு(ம்)
ஒடெயார்	:	ஏ(ன்) வேலு? ஒனக்கு(ம்) ஐயருக்கும் பதினெட்டாம் பொருத்தமோ?
வேலு	:	ஹ ஹ் ஹ.........
ஒடெயார்	:	ஆங்
வேலு	:	அதெல்லா(ம்) ஒண்ணு(ம்) இல்லீங்க ஒடெயாரையா!
ஒடெயார்	:	ஆங்
வேலு	:	சும்மா இப்பிடித் தமாஷுக்கு இப்பிடித்தா(ன்) நாங்க எதையாச்சும் பேசிக்கிட்டிருப்பே(ன்)
ஒடெயார்	:	ஓகோ!

வேலு : இந்தக் காப்புக்கட்டிச் சத்திர அத்துவானத்திலெ எங்களுக்குப் பொழுது போகணும் பாருங்க

ஒடெயார் : ஏங்

வேலு : ஆங் சரி, இந்தாங்க, வெத்திலெ போடுங்க

ஒடெயார் : வெத்திலெயா?

வேலு : ஆங்

ஒடெயார் : துளிர் வெத்திலெயா எடு

வேலு : ஏங்

ஒடெயார் : ஆமா! கைச்சீவல் வெச்சிருக்கெயா?

வேலு : சேச்சே! அது என்னுத்துக்குங்க?

ஒடெயார் : ஏன்?

வேலு : கமகமான்னு வறுவல் சீவல்ருக்கு, அதெப்போட்டுப் பாருங்க

ஒடெயார் : ஆஹாங்! பொகயிலே இருந்தா ஒரு பொட்டலங் குடு

வேலு : பொட்லம் புகெயிலெயா? ஐயய்யோ அது கெட்டுது போங்க

ஒடெயார் : ஏன்?

வேலு : துண்டு போகிலெ தாங்க இந்தக் காப்புக்கட்டிச் சத்திரத்திலெயே பேர் போனது

ஒடெயார் : அப்பிடியா!

வேலு : இதேப் போடுங்க

ஒடெயார் : ஆங்

வேலு : அப்புற(ம்) வேறெ போயிலெயெப்பற்றி நீங்க நெனக்யுவு(ம்) மாட்டீங்க, தொடவு(ம்) மாட்டீங்க

ராமய்யர் : ஹ ஹ் ஹ் ஹ் ஹ.........! ஆமாமா(ம்) பொகயிலெ போடணுாங்கிற ஆசெயே விட்டுப் போயிடு(ம்) ஒடயார்வாள்!

வேலு : யோவ் ராமய்யரு! இதெக்கூட என்ன ஒம்ம கடெ கரம் பக்கடான்னு நென்ச்சுகிட்டீரா?

ஒடெயார் : பீமவிலாஸ் பக்கடாவுக்கென்ன? நல்லாத்தானே போட்ராரு

ராமய்யர் : நன்னு சொல்லுங்கோ ஒடயார்வாள்! இன்னூரு தர(ம்) சொல்லுங்கோ

வேலு : அக்கங்! ஹூ ஹூ உம்ம குருடாயில் பொக்கடா வெப் பத்தீ, ட்ரைவர் நடருஜங்கிட்டெ......ஹி ஹ் ஹி......ல்லியா கேக்கணூரம்?

ஒடெயார் : வேலு! சொல்லு சொல்லு சொல்லு, குருடாயில் பொக்கடாவா? என்னப்பா இது கூத்து?

வேலு : அதெ ராமையரு கிட்டெயே கேளுங்க, அவர்தாஞ் சொல்லுவாரு

ஒடெயார் : என்னய்யா?

ராமய்யர் : ஆமா சொன்னு! ஆங் போய்யா பொலெக்கடெ

வேலு : உம்

அன்னபூரணி : வேலெயில்லாமெ எதையாவது பேசிண்டு.........சொல்லி வாயெ மூடலெ அதுக்குள்ளெ வந்து நின்னுட்டேளா? துருதுருனு துருவிரு.........

ராமய்யர் : அடுப்பிலே வெறகிருக்கே, நா(ன்) என்னத்துக்க அன்னம்?

அன்னபூரணி : துருவுறது யாரு?

ராமய்யர் : ஊம்

அன்னபூரணி : துருதுருன்னு ஓடிண்டே இருக்கேளே?

பாக்யம் : ஆமா! மரத்திலேந்து வெட்டிப்போட்ட எளனியாட்டஞ் சாமி துள்ருக

வேலு : ஒடெயாரையா!

ஒடெயார் : ஆ

வேலு : நம்ம துண்டு பொகியிலெ எப்படி? அதெப்பத்தி கொஞ்சம் சொல்லுங்க

ஒடெயார் : ஆ, பரவாயில்லெ, பரவாயில்லெ, சுமாராயிருக்கு

வேலு : ஆங்! சுமாராயிருக்குதுல்ல?

ஒடெயார் : ஏங்

வேலு : பரவால்லெ, கூடவே ஒரு தாம்பூலஜான் போட்டுப் பாருங்க இன்னு(ம்) நல்லாவேருக்கு(ம்)

ஒடெயார் : என்னுடு? டாம்பூலஜானு? என்னய்யாடு?

வேலு : அதாங்க தாம்பூல மாத்திரெ. தாம்பூலஜான்

ஒடெயார் : ஆஹாங்!

வேலு : பாக்கெட்டு ஒரணுத்தான்

ஒடெயார் : ஆங்! ஹ்ற ஹ்ற ஹ......சரிதா(ன்) சரிதா(ன்)

வேலு : ஆங்

ஒடெயார் : அந்த அட்டெயிலெ பொட்லம் பொட்லமா ஒட்டி வெச்சிருக்கையே அதெச் சொல்றியா வேலூ?

வேலு : ஆக்கங்

ராமய்யர் : கஷ்ட காலம்......ஹெ......ஆறு மாசமா......

வேலு : யோவ் யோவ் யோவ் ராமையரே! ஒமக்கென்னயா தெரியும்? இது நேத்து வந்த சரக்கு. அப்பாவேண்ணு கேட்டுப்பாருங்க!

ராமய்யர் : ஹெ...அப்பாவுவெக் கேழ்ப்பானே(ன்)?

வேலு : ஊம்

ராமய்யர் : அந்த அட்டெயிலெ படிஞ்சிருக்கிற அரெயங்குலந் தூசியெக் கேட்டாலே போறுமே!

ஒடெயார் : ஆமாப்பா வேலு! நீ இதையெல்லா(ம்) தூசி தட்டி வெக்யணும்ப்பா!

வேலு : நீங்க ஒண்ணு!

ஒடெயார் : ஏங்

வேலு : ராமையரு சொல்றுருண்ணு போயும்போயு(ம்) அவர் பேச்செக் கேக்கறீங்களே!

ஒடெயார் : ஹி ஹி ஏன்?

வேலு : இங்கே காலெயிலெருந்து எத்தனெ பஸ்ஸு வருது? எத்தனே பஸ்ஸு போவுது? நம்ம மொகத்திலயே ரேக்யாலங்குலந் தூசி படிஞ்சு போவுதே!

ஒடெயார் : ஆமாமாமா.........

வேலு : சும்மா ஒரு மாத்திரெயெ அப்டி போட்டுப்பாருங்க

ஒடெயார் : ஏங்

வேலு : ஜிலுஜிலுன்னுருக்கு(ம்)! அஜீர்ண(ம்) கிஜீர்ண(ம்) எல்லாமே குளோஸ்!

ராமய்யர் : ஹி ஹி......ஒடனே ஒரு கொப்பரெத் தேங்காயெயு(ம்) வாங்கி சாப்பிடணு(ம்)!

ஒடெயார் : ஊம்?

ராமய்யர் : இல்லேன்ன வாயெல்லா(ம்) அப்பளா மாதிரி கொப்பளமாயிடு(ம்)

ஒடெயார் : ஹி ஹி

வேலு : ஓ ராமையரே! சும்மா இரய்யா, குறுக்கே குறுக்கே பேசிக்கிட்டு, இந்தாங்க ஒடெயாரையா!

ஒடெயார் : அடடட! அது வேண்டாம்ப்பா!

வேலு : நீங்க சாப்பிடத்தா(ன்) வேணு(ம்)

ஒடெயார் : ஹெ! ஏற்கனவே தொண்டையெல்லா(ம்) எரிச்சலாயிருக்கு

வேலு : ஊம்

ஒடெயார் : இதெ வேறே போட்டுக்கிட்டா தொண்டையெல்லா(ம்) ரணமாயிடப் போவுது

வேலு : நல்லா சொன்னீங்க போங்க, நல்லாச் சொன்னீங்க ஒரு வார்த்தெ!

ஒடெயார் : ஏ(ன்) ?

வேலு : தொண்டெ ரணத்துக்கு கைகண்ட சஞ்சீவியாச்சே இது!

ஒடெயார் : ப்ஸ! ஒஹோ! அப்படியா?

ராமய்யர் : என்ன வேலூ? ஆ, நீ மேடையிலெ இந்த மாத்திரெயெத் தின்னுட்டுத்தாம் பாடுவெயாக்கு(ம்)?

வேலு : பின்னே? சிங்கப்பூர்லெ எங்க கம்பெனி இருந்தப்போ

ஒடெயார் : அம்

வேலு : அந்த நாள்ளெ ஒரு ஸ்டெஜிலெ

ஒடெயார் : ஊம்

வேலு : எனக்கு நல்லாத் தொண்டெயெக் கட்டிக்கிச்சு......

ராமய்யர் : ஆ, சரிதான், ஆரம்பிச்சுட்டையா?, அப்புறம் என்னுச்சு?

வேலு : கேளுங்க ஒடெயாரையா!

ஒடெயார் : ஆங்

வேலு : நெஞ்செல்லாம் ஒரே ரண(ம்)

ஒடெயார் : ஆங்

வேலு : அன்னிக்யாணு

ஒடெயார் : ஆங்

வேலு : வள்ளித்திருமண(ம்) ஸ்பெஷல் நாடக(ம்)

ஒடெயார் : ஓஹோ?

வேலு : நம்ம ராகாமணி பாய் தெரியுங்களா?

ஒடெயார் : யாரவெங்க? ராகாமணியா?

வேலு : அஹெம்!

ஒடெயார் : ஏங்

வேலு : மணி மணியா ராகத்தெப் பாடறதுனுலெ அதுக்கு ராகாமணி பாய் அப்டீன்னு ஸிங்கப்பூர்லெயே பேர் கொடுத்துப்டாங்க

ஒடெயார் : ப்ஸ! ஒஹோ! அங்கெயே குடுத்துட்டாங்களா?

வேலு : ஆமாம். அது அண்ணிக்கு வள்ளியாப் போடுது

ஒடெயார் : ஆங்

வேலு : எனக்கா?

ஒடெயார் : ஆங்

வேலு : ஒரே திகில்

ஒடெயார் : ஆமா இருக்காது பின்னே?

வேலு : ஆங். பாடவேண்டியதாச்சே! ஆங் அப்பல்லாம்

ஒடெயார் : உம்

வேலு : நம்ம நாடிலிங்க வைத்தியர் அங்கெ தானெ இருந்தாரு சிங்கப்பூர்லெ!

ஒடெயார் : நாடிலிங்க வைத்தியர் அங்கெயா இருந்தாரு அப்போ?

வேலு : அதா(ன்) நம்ம நாட்டு வைத்தியர்லலே

ஒடெயார் : ஆமாமா...தெரியு(ம்)

வேலு : அவுரு என்னெப்பாத்தாரு. அட பாவிப்பயலே! கொரலெக் கெடுத்துக்கிட்டியேடா!

ராமய்யர் : ஹெ ஹ் ஹெ......நாசமாப்போச்சு! கெடறதுக்கு அதிலெ என்ன இருக்கு வேலு

ஒடெயார் : ஹ ஹ் ஹ்...

வேலு : ஐயரே ஐயரே சும்மா இருக்கமாட்டீரா? சும்மா இருக்க மாட்டீரா?

ராமய்யர் : சும்மா அளந்து தள்ளு

வேலு : ஏ...ஏ...அப்புறம் வந்து ஒடெயாரையா

ஒடெயார் : அப்புற(ம்)?

வேலு : அ, அவரு சொல்றுரு, கொரலெக் கெடுத்து கிட்டியேடா

ஒடெயார் : ஊம்

வேலு : இந்தா, இதெத்தின்னுான்னு சொல்லி

ஒடெயார் : ஊம்

வேலு : அந்த நாடிலிங்க வைத்தியரு இந்த மாத்திரேலெ ரெண்டெக் கொடுத்தாரு

ஒடெயார் : ஊம்

ராமய்யர் : இந்த மாத்திரையெயா?

வேலு : ஆமா(ம்) த்ஸ! ஆமாய்யா குடுத்தாரு

ராமய்யர் : ஊம்

வேலு : அந்த ஸ்டெஜிலெ சும்மா [3]ஜமாய்ச்சுப்ட்டே(ன்)

ராமய்யர் : ஏங்! ஆங்!

வேலு : குரல் சும்மா கணீர்னு சுருதி சேந்திச்சு

ஒடெயார் : அப்படியா?

ராமய்யர் : ஹ, அப்ப பிடிக்க முடிஞ்சிருக்காதே!

ஒடெயார் : ஹெ ஹ்......

---

[3] ஜமாய் — perform well

வேலு : அதெப்படி முடியு(ம்)?

ஒடெயார் : ஆங்

வேலு : வேடன் சீன்லெ

ஒடெயார் : ஏங்

வேலு : சும்மா அப்டி பிச்சி எறிஞ்சிட்டே(ன்)

ராமய்யர் : என்னத்தெ?

வேலு : எப்படித் தெரியுங்களா?

ராமய்யர் : என்னது? கீத்தையா? கொட்டகெக்கீத்தெ, ஹெ ஹ்

வேலு : கேளுய்யா, இதெக்கேளுய்யா, எப்படித் தெரியுமா? தேடி வந்தேனே, வள்ளிமானே!

ஒடெயார் : ஆஹா

வேலு : மோடி செய்யாதே செழுந்தேனே ஏ...ஏ...ஏ...

ஒடெயார் : பலே பலே

வேலு : தேடி வந்தேனே, வள்ளிமா ஆ ஆ ஆ...னே!

ஒடெயார் : பேஷ் பேஷ் பேஷ்

வேலு : தீனமாக குரலொடு பரமிசை கானவாயி

ஒடெயார் : சபாஸ்

வேலு : ஓறுதல் சரியல்லவே!

ஒடெயார் : ஆஹா!

வேலு : தேடி வந்தே ஏ ஏ ஏ...னே

ஒடெயார் : ஆங்! பிரமாதம்

வேலு : வள்ளி மா...ஆ...னே !

ஒடெயார் : ஹ ஹ் ஹ! சபாஷ் சபாஷ் சபாஷ்

வேலு : அப்டீனு அடிச்சிருக்கேம் பாருங்க

ஒடெயார் : ஆங்

வேலு : ஓர்ரேஏ...அப்ளாஸ்

ஒடெயார் : ஹ ஹ் ஹ ஹ்...அங்கெ உள்ளவங்க கூடவா கை தட்றுங்க? ஹெ ஹ்...ஏங். பலே பலே எங்கே? எனக்கு ஒரு பொட்ல(ம்) எடு பார்க்கலா(ம்)

ராமய்யர் : பிரமாதம் போ வேலு, உண்மையாகவே பிச்சுத்தா(ன்) எறியறே நீ!

வேலு : ராமையர்

ராமய்யர் : ஊம்

வேலு : ஏது நல்ல காலம்! நீங்க கூட உண்மயெப் பேச ஆரம்பிச்சுப்புட்டீங்க!

ராமய்யர் : இதிலெ என்னப்பா அதிசியம் வேலு!

வேலு : ஊம்

ராமய்யர் : தெரிஞ்சத்தெ நாலு பேர் கிட்டெ சொல்ல வேண்டியதுதானே?

வேலு : ஊம்

ராமய்யர் : போன மாசம் கூட, இந்த மாத்திரெயத் தின்னுப் புட்டுத்தானே ஒரு வாரம் வரெயிலெ செங்கம்பட்டிச் சின்னச்சாமி, ஆடு மாதிரி "அஸ்ஸு, அஸ்ஸு"ன்னு தும்மிக்கிண்டு அவஸ்தெப்பட்டாரே

ஒடெயார் : ஐயய்யோ! சரிதா(ன்)

வேலு : ஐயோ ஐயோ ராமையரே சும்மா இருய்யா, சும்மா இருய்யா...

ஒடெயார் : இந்தாப்பா

வேலு : ஊம்

ஒடெயார் : வேலு!

வேலு : உம்

ஒடெயார் : ஒந்தாம்பூலஜானே நீயே வெச்சிக்கொ

வேலு : ஹ! ஒடெயார்வாள்! நீங்க அப்டி சொல்லப்படாது. நீங்க அப்டி சொல்லப்படாது. நா(ன்) தர்ரே(ன்) நீங்க

ஒடெயார் : தொல்லெ பண்ணுதேப்பா

வேலு : கேட்டுப்பாருங்க

ஒடெயார் : அ, இன்னொரு சமய(ம்) பார்க்கலா(ம்) நா(ன்) வர்றே(ன்)

வேலு : அங்...அங்...யோவ் ராமையரே!

ராமய்யர் : என்ன?

வேலு : நல்ல ஆளுய்யா நீரு! அந்தப் பாழாப்போன வைத்தியரு, இதெ ஏந்தலேலெ கட்டிட்டுப்போய்ட்டாரு. இருந்திருந்து ஆ...றுமாசத்துக்கப்புறம் ஒரு பொட்ல(ம்) விக்யலாம்னு நா(ன்) எவ்வள(வு) சந்தோஷப்பட்டு(கி)ட்டிருந்தேன்

ராமய்யர் : ஊம்

வேலு : சகுனி மாதிரி வந்து குறுக்கே புகுந்து பேரத்தெக் கெடுத்திட்டியேய்யா

ராமய்யர் : ஆ, நீ மட்டு(ம்) சனி மாதிரி வர்றவா, போறவா கிட்டெ எல்லா(ம்), ஏ(ன்)பகோடாவெப்பத்திக் கிண்டல் பண்ணி என் மானத்தெ வாங்கலாமாக்கு(ம்)?

வேலு : அதெப்பத்தி இப்பத் தேவெயில்லெ, அனுவசியமான பேச்சு

ராமய்யர் : ஊஹும்

வேலு : அப்ப நா(ன்) சொல்றே(ன்)

ராமய்யர் : என்ன?

வேலு : அந்த ஆளு ஒரு குடும்பஸ்த(ன்)

ராமய்யர் : ஆங்

வேலு : ஒரு பொட்லத்தெ மொதல்லெ ஸாம்பிள் குட்த்துப் பூராத் தெயுமே கட்லாம்னு நெனச்சிகிட்டிருந்தேன்

ராமய்யர் : ஊஹூம்?

வேலு : இப்ப அத்தனேயு(ம்) நீர்தா(ன்) எடுத்துக்கணு(ம்) எனக்கு ஆறேகால் ரூபாலெ அசல் அசல் குடும்

ராமய்யர் : என்னென்ன? என்னப்பா வேலு! ஒம் மாத்திரெ பூராவு(ம்) நா(ன்) வாங்கிக்கணுமா?

வேலு : ஆமா

ராமய்யர் : நன்னாருக்கே நீ சொல்றது!

வேலு : ஆறேகால் ரூபா தேவெ இல்லய்யா, அஞ்சு ரூபா கொடும், இல்லே, நீர் வாங்கலே, இந்த எடத்தெ விட்டு ஒரு அடி நகர விடமாட்டே(ன்) பாத்துக்கும்

ராமய்யர் : சரி, வேலு!

வேலு : அங்

ராமய்யர் : மூணு ரூபா குடுத்துர்றே(ன்)

வேலு : ஊம்

ராமய்யர் : பேசாதெ குடுத்துறு

வேலு : உம்

ராமய்யர் : தயவுபண்ணி அன்னபூர்ணிட்ட மாத்திர(ம்) இந்த விஷயத்தெ சொல்லிடாதெ வேலு! ஒனக்கு புண்ணியமுண்டு.

வேலு : நீர் மூண்ரூபாயெ இப்பக் குடு(ம்)

ராமய்யர் : அ, பண(ம்) அப்புறமா குடுக்கறே(ன்) வேலூ, இதோ வந்துட்டே(ன்).

ஸாப்ஜான்பாயி : குடுகுடு...அரே வாங்கோ, வாங்கோ பாருங்கோ, பாருங்கோ, வாங்கோ, வாங்கோ, ஜெய் காளி! ஜெய் அல்லா பரமாத்மா! குண்டுப் பிசாசு, குட்டிச்சாத்தா(ன்), குடியெக் கெடுத்தா(ன்), ஓடீவா, ஓடீவா, குட்டிபயில்வான் ஓடீவா ஓடீவா

பையன் : ஆங்

ஸாப்ஜான்பாயி : அரே பஹவான்கீமேலே சத்தியம் சொல்றே(ன்)

பையன் : சொல்றே(ன்)

ஸாப்ஜான்பாயி : இந்த மண்டெ ஓட்டீ(ன்) மேலே சத்தியம் சொல்றே(ன்)

பையன் : சொல்றே(ன்)

ஸாப்ஜான்பாயி : இப்போ என்கீ மேலெ சத்யம் சொல்றே(ன்)

பையன் : சொல்றே(ன்)

ஸாப்ஜான்பாயி : இந்த விஷப்பாம்ப்கீமேலே சத்யம் பண்றே(ன்)

பையன் : சத்தியம் பண்றே(ன்)

ஸாப்ஜான்பாயி : ரொம்ப வேணு விஷத்மேலே சத்யம் பண்றே(ன்)

பையன் : விஷம்

ஸாப்ஜான்பாயி : அரே யாரு(ம்) ஒக்காந்த எடத்தெ விட்டுப் போகாதே சாமீ!

பையன் : போகாதே

ஸாப்ஜான்பாயி : அரே தப்பித்தவறிப்போனு மூக்கிலே வாயிலே ரத்தம் வரும்

பையன் : வரும்

ஸாப்ஜான்பாயி : கபுகபூன்னு வரும், லபுலபூன்னு வரும். அரே ஸாப்ஜான் மேலே ஸால்ஜாப்பு சொல்லாதே, எங்கே ஒரு முறை ஜோரா கை தட்டுங்கோ...(கை தட்டல்) பலே! அரே மூக்கிமேலே பாம்பு உடுவே(ன்) கை தட்டு. ஏய் ஓரம்போ ஓரம்போ, ஓரம்போ அரே! ஊம். வாங்கோ, பாருங்கோ, மந்திரமில்லே மாயமில்லே, மந்திரமில்லே, மாயமில்லே ஸார்! சொன்னதெ செய்வோம், மேளமடிக்காதே

பையன் : அடிக்கலே

ஸாப்ஜான்பாயி : அடிக்காதே. அரே வா இப்படி

பையன் : வந்தே(ன்)

ஸாப்ஜான்பாயி : இந்தக் கையிலெ என்ன இருக்குதூ?

பையன் : மண்ணு

ஸாப்ஜான்பாயி : இதெ என்ன பண்(ண)ணு(ம்)?

பையன் ; ஒ(ன்) வாயிலே போடணு(ம்)

ஸாப்ஜான்பாயி : ஒ(ன்) வாயிலே?

பையன் : சக்கரே போடணு(ம்)

ஸாப்ஜான்பாயி : அரே பாருங்கோயா, நம்பள்கி வாயிலே மண்ணு போட்ணு(ம்), அவன்கீ வாயிலே சக்கரெ போட்ணுமா(ம்), டே! படாகுட்டிச் சைத்தா(ன்) அரே! ஜோரா இன்னொரு தர(ம்) கை தட்டுங்கோ (கை தட்டுதல்)

ஸாப்ஜான்பாய் : இந்த மண்ணையென்ன செய்யணு(ம்)?

பையன் : சக்கரெயாக்கணு(ம்)

ஸாப்ஜான்பாயி : இந்த நட்டிருக்கிற செடிலெ மாங்கா ஆக வெக்யணு(ம்)

பையன் : ஆமா

ஸாப்ஜான்பாயி : இந்த மண்டையோட்டேப் பேச வெக்யணு(ம்)

பையன் : ஆமா

ஸாப்ஜான்பாயி : இந்தப் பாம்புக்கும் கீரிக்கு(ம்)?

பையன் : கல்யாண(ம்) பண்ணி வெக்யணு(ம்)

ஸாப்ஜான்பாயி : அரே! நல்லா சொல்ரு. அப்பொ வந்திருக்கிற ஐயாமாருங்க என்ன கொடுப்பாங்கோ?

பையன் : காசு குடுப்பாங்கோ

ஸாப்ஜான்பாயி	:	மணிபர்ஸ் குடுக்கமாட்டாங்களா?
பையன்	:	மணிபர்ஸ்ஸூம் குடுப்பாங்கோ
ஸாப்ஜான்பாயி	:	யார் வாங்கறது?
பையன்	:	நா(ன்) வாங்குவே(ன்)
ஸாப்ஜான்பாயி	:	வாங்கி என்ன பண்ணுவே?
பையன்	:	எடுத்திட்டு ஓடிப்போயிடுவே(ன்)
ஸாப்ஜான்பாயி	:	ஏ...பாருங்கோய்யா, எடுத்திட்டு ஓடிப்பூடுவானு(ம்)ரே சொல்றேன் குட்டிச்சாத்தான் டேய்! [4]சுப்ரக்கப்? சத்தம் போடாதே சத்தம், எல்லாரு(ம்) ஒரு தர(ம்) ஜோரா கை தட்டீங்கோ (கை தட்டுதல்) ஆர ஆர பையா! ஒக்காரு, ஒக்காரு, சல் ராமக்கா சல் ராமக்கா, பொம்மக்கா, மந்திரக் காளி, மந்திரக்காளி, மநத்ரக்காளி, மந்திரக்காளி, ஓடிவா, குஸ்தி பயில்வான் குஸ்தி பயில்வான், குஸ்தி பயில்வான், ஏய்...மோளமடிக்காதே
பையன்	:	அடிக்கலே
ஸாப்ஜான்பாயி	:	அடிக்காதே
பையன்	:	தமாஷூக்கு அடிக்கறே(ன்)
ஸாப்ஜான்பாயி	:	தமாஷூக்கு அடிக்காதே
பையன்	:	சரி, சரி
ஸாப்ஜான்பாயி	:	அரே வா குட்டிச்சாத்தான் வாயா!
பையன்	:	வந்தேன்
ஸாப்ஜான்பாயி	;	வாயிந்தபக்கம்
பையன்	:	வந்தேன்

---

[4] சுப் ரக்கப் (Hindi) = Shut up

ஸாப்ஜான்பாயி : கேட்டா?

பையன் : சொல்லுவேன்

ஸாப்ஜான்பாயி : ஐயா வெயிலுக்குக் கையிலெ என்ன வைத்துக் கொண்டிருக்கிறுர்?

பையன் : கருப்புக்கொடை

ஸாப்ஜான்பாயி : இந்தப் பள்ளிக்கூடத்துப் பையன் பையின் மேலெ என்ன வெச்சிருக்கான்?

பையன் : புஸ்தகம், ஐப்ஜாடா(?) சிலேட்டு

ஸாப்ஜான்பாயி : பலே பலே பலே, கேட்டா

பையன் : சொல்லுவேன்

ஸாப்ஜான்பாயி : இந்த வாலிபர் காலிலெ என்ன போட்டிருக்கார்?

பையன் : அளகான கருப்புச்செருப்பு

ஸாப்ஜான்பாயி : இந்த சகோதரி காதிலே என்ன போட்டிருக்கிறு?

பையன் : ஆ அரெப்பவுன்...ஜிமிக்கி

ஸாப்ஜான்பாயி : ஆ! அப்பொ அந்த அம்மா கையிலெ என்ன போட்டீரக்கா?

பையன் : ஆறு வளையல்

ஸாப்ஜான்பாயி : என்ன வளையல்?

பையன் : தங்க வளையல்

ஸாப்ஜான்பாயி : எத்தனெ பவுன்?

பையன் : அரெப்பவுன்

ஸாப்ஜான்பாயி : என்னுது?

பையன் : அவ்வளவுங்காலி

ஸாப்ஜான்பாயி : பலே பலே பலே. இப்போது நேரமென்ன?

பையன் : ஒண்ணு ஒண்ணு

ஸாப்ஜான்பாயி : அப்பொ இந்த ஐயா ஏன் சோர்ந்திருக்கார்?

பையன் : பசி

ஸாப்ஜான்பாயி : அவர் எத்தன் நாளா பட்னி கெடக்கிறார்?

பையன் : அது சொல்லப்படாதுங்கோ

ஸாப்ஜான்பாயி : பலே பலே நல்ல பையன், இப்ப தெறந்து பார்! சக்கரை இக்குது, இதெ என்னு பண்ணணு(ம்)?

பையன் : இதெ வாயிலெ போடணு(ம்)

ஸாப்ஜான்பாயி : மண்டெ ஓட்டெப் பேச வெக்யணு(ம்)

பையன் : பேச வெக்யணு(ம்)

ஸாப்ஜான்பாயி : அதுக்கு முந்தி பாம்பெ கொஞ்சம் புடி

பையன் : அ, ஐயோ! நா(ன்) வந்து செத்துப் போயிடுவே(ன்)

ஸாப்ஜான்பாயி : ஏ...யார்ரா சுப்ரகோபைடோ...அரே பாம்பே புட்ச்சா கட்ச்சீ போடும். விஷநாக(ம்), வெள்ளே நாக(ம்), பச்சே நாக(ம்), பாப்பார் நாக(ம்), கட்டுவிரியன் கண்ணுடிவிரியன், ராசராசப் பிரியன், சுடல் பாம்பு, வறட்டீபாம்பு குச்சிப்பாம்பு, கொம்பேறி மீக்கன், பாம்பிலே பத்து வகையிருக்கு ஸார்! பத்தாயிர வகெயிருக்கு

பையன் : இருக்கு

ஸாப்ஜான்பாயி : அரே வயல் வரப்பிலே போனோம்

பையன் : போனோம்

ஸாப்ஜான்பாயி : அரே சினிமாவுக்குப் போனோம்

பையன் : சினிமாவுக்குப் போனோம்

ஸாப்ஜான்பாயி : அரே காப்புக்கட்டிச் சத்திரத்துக்குப் பஸ்மேலே போனோம், அங்கே தேள் கீது, பாம்ப்கீது கட்ச்சு கெட்ச்சுது

பையன்	:	செத்துப் போறே(ம்)
ஸாப்ஜான்பாயி	:	லபோலபோன்னு அட்ச்சிக்கிறே(ம்)
பையன்	:	ஆமா
ஸாப்ஜான்பாயி	:	அம்மா ஐயோன் கத்தறே(ம்), பொண்டாட்டிக்கி புள்ளக்கி கத்தறே(ம்)
பையன்	:	ஆமா
ஸாப்ஜான்பாயி	:	நம்கீ உசிர் போனு வருமா?
பையன்	:	வராது
ஸாப்ஜான்பாயி	:	ஐயா வருமாய்ய?
பையன்	:	உயிருபோனு வராது
ஸாப்ஜான்பாயி	:	அதுக்கு என்னு பண்ணணு(ம்)?
பையன்	:	மருந்து கொடுக்கணு(ம்)
ஸாப்ஜான்பாயி	:	என்னு மருந்து கொடுக்கணு(ம்)
பையன்	:	நம்ம மாத்திரெ
ஸாப்ஜான்பாயி	:	நம்பள்கீ மருந்து கொட்த்தா என்னு செய்வான்?
பையன்	:	செத்தவன் ஏந்துருவான், செத்தவன் சிரிப்பான்
ஸாப்ஜான்பாயி	:	லபோலபோங்கிறவ(ன்) என்ன செய்வான்?
பையன்	:	குபூகுபூன்னு சிரிப்பா(ன்)
ஸாப்ஜான்பாயி	:	அதுக்கு நம்பள்கீ மருந்து குட்த்தா நல்லாயிருக்குமில்லே?
பையன்	:	நல்லாயிருக்கு(ம்)
ஸாப்ஜான்பாயி	:	அதெப்பாருங்கோயா! நம்பள்கீ பொய்யில்லே மந்திரமில்லே, மாயமில்லே, சொல்றதே கேளுங்கோயா. நம்பள் குருநாதன் கொடுத்த விஷமூலிகெ மருந்து ஸார். நாகூர் ஆண்டவன் மேலெ சொல்லி இந்த மாதிரி, ஒரு மாத்திரெ எடுத்து இந்த மாதிரி கண்லே எளெச்சுத் தடவுவேன். அஞ்சு நிமிசத்திலே வியாதியெல்லா(ம்) பஞ்சாப் பறக்கு(ம்)

ஃபயன் : பிஞ்சாப் பறக்கு(ம்)

ஸாப்ஜான்பாயி : அப்பிடி பறக்கலேன்னு நேரா வா, நல்லா ஆச்சுன்னு ஆண்டவர் பேர் சொல்லி நாலு பேருக்கு சாப்பாடு போடு

பையன் : என்னெப்போலே ஆளுக்குப் போடு

ஸாப்ஜான்பாயி : இவம் மாதிரி ஆளுக்குப் போட்டு கையிலெ ஓட்டெ எடுத்திட்டுப் போங்கய்யா, இந்தப் பாருங்கய்யா உனக்கு அப்படிப் பலிக்கலே

பையன் : பலிக்கலே

ஸாப்ஜான்பாயி : நா(ன்) அட்ரஸ் தர்ரே(ன்)

பையன் : தர்ரேன்

ஸாப்ஜான்பாயி : மூர்மார்க்கட் பக்கம் நேராவா, எங்கே ஸாப்ஜான்பாயீன்னு கேளு

பையன் : கேளு

ஸாப்ஜான்பாயி : அரே ஸப்போஸ் ஸாப்ஜான் இல்லேண்ணுபோனு கேராப் நம்ம சிஷ்ய(ன்) இருக்கா(ன்), அவ(ன்) மூஞ்சீலெ தூன்னு காறித்துப்பு

பையன் : காறித்துப்பு

ஸாப்ஜான்பாயி : காறித்தும்பு. அரே ஸாப்ஜான் இந்த மாத்திரெ விசத்துக்கு மாத்திரமாண்ணு கேப்பே, எதுக்கு மிஞ்சினுலும் நீ கேக்கலா(ம்)

பையன் : ஆமா

ஸாப்ஜான்பாயி : இந்த விசத்துக்கு மாத்திரமில்லெ, எல்லா வியாதிக்குங் கண்டிக்கு(ம்)

பையன் : எல்லா வியாதி

ஸாப்ஜான்பாயி : ஓ(ன்) ஒடம்பிலுள்ள அத்தனெக்கும் கண்டிக்கும்

பையன் : என்ன வியாதி

ஸாப்ஜான்பாயி : எண்பத்தெட்டாயிரத்து ஐநூத்தி நாப்பத்தெட்டு வியாதி ஓ(ன்) ஒடம்பிலெ. அது அத்தனையு(ம்) கண்டிக்கும்

பையன் : ஊம்

ஸாப்ஜான்பாயி : மத்த வியாதி எண்ண நேரமில்லே. மேலுக்கு தடவலாம். உள்ளுக்கு சாப்பிடலா(ம்) கண்ணுக்கு கலிகம் போட்லா(ம்) அதிக வேலையில்லே சார்! பாக்கெட் ரெண்ணுதா(ன்)! பாக்கெட் ரெண்ணுதா(ன்) பாக்கெட் ரெண்ணுதா(ன்)! பாக்கெட் ரெண்ணுதா(ன்) கொஞ்சம் ஸ்டாக்கு இருக்குது ஸார்! யார் வேணுனு லும் வாங்கிக்கலாம். நெசம் சொல்லப்போறே(ன்)

பையன் : ஊம்

ஸாப்ஜான்பாயி : மன்சன்கீ மேலே

பையன் : மன்சன் கீ மேலே

ஸாப்ஜான்பாயி : மண்டே ஓட்கீமேலே

பையன் : மண்டே ஓட்கீமேலே

ஸாப்ஜான்பாயி : நம்பள்கீ நல்லே மாத்ரே

பையன் : நல்லே மாத்ரே

ஸாப்ஜான்பாயி : நல்லே கண்டிக்கும் மாத்ரே

பையன் : வாங்கிக்கோ

ஸாப்ஜான்பாயி : அப்புறம் மேலே யோனு! காப்புக்கட்டிச்சத்திரம் பஸ்மேலே போறு(ன்), நம்பள்கீ டயங்கெடயாது

ஒருவர்கூட்டத்தில்: அட வித்தக்காரா! எனக்கு ஒண்ணு குடுக்கறியா? இந்தா காசு

ஸாப்ஜான்பாயி : ஆரே பாட்டிக்கு மேலே ஒரு மாத்ரே குடு

மற்றொருவர் : நேக்குக்கூட ஒண்ணு குடு

ஸாப்ஜான்பாயி : அந்த அம்மாவிக்கு ஒரஞ்சு மாத்திரே குடு

மற்றொருவர் : எனிக்கி ஒந்நு வேண(ம்), ஒரு பாக்கெற்றெண்ட குட்டிக்கு ஒரு பாக்கெற்று வேண(ம்)

ஸாப்ஜான்பாயி : அந்தர் சிஷ்யா! அந்த அம்மாளுக்கு கேளண்டது கொடு

பையன் : ஆ(ம்)

ஒடெயார் : இந்தாப்பா பாய் நமக்கு ஒரு டஸன் கொடுப்பா

ஸாப்ஜான்பாயி : ஐயாவுக்கு ஒரு டஸன் மாத்ரே குடு

பையன் : ஆகட்டும்

ஒடெயார் : இந்தாப்பா, ஒண்ணுர் ருவா பிடி

கூட்டத்தில் பலர் : எனக்கு ஒரு பாக்கெட்டு...எனக்கு எனக்கு...

ஸாப்ஜான்பாயி : ஏய் கூச்சல் போடாதே...இந்தா இந்தா

வேலு : என்ன ஒடெயாரையா என்ன இப்பிடி ஓடியாறீங்க?

ஒடெயார் : ஆங்...இந்தாப்பா! ஒனக்கு மூண்ணு தரணுமில்லே

வேலு : ஆமா

ஒடெயார் : வெத்தலெக்யுங் கலருக்குமா

வேலு : ஆங் ஆங்

பாக்யம் : ஒடெயாரையா எனக்குக்கூட ஒரு கூறுகடலெக்கி ஓரணு பாக்கி

ஒடெயார் : அடெடெ! பாக்கியத்தம்மாக்குக்கூட ஒரணு குடுக்கணு(ம்) நாலணுவா சேத்து எடுத்துக்கப்பா

வேலு : ஊம் ஊம்...ஆமா ஏ(ன்) ஒடெயாரையா இப்பிடி ரெக்கெ கட்டிக்கிட்டுப் பறக்கிறீங்க?

ஒடெயார் : ஏங்! பர்ஸு போகப்போவுதுப்பா

வேலு : ஆங்! நம்ம டிரைவர் தங்கவேலு தானே! ரெண்டு நிமிசம் வண்டியெ நிப்பாட்டுப்பா அப்டீன்ஞ, நிப்பாட்டிட்டுப் போறுரு, அது கெடக்கட்டும்

ஒடெயார் : ஆங்

வேலு : ஒடெயாரையா என்ன நீங்க கூட கொளந்தெ கணக்கா ஜாலவித்தெயெப் போய் பாத்துகிட்டிருந்தீங்க! அ(ம்)?

ஒடெயார் : ஜாலவித்தையா?

வேலு : ஊங்

ஒடெயார் : இந்தா பாருப்பா!

வேலு : ஊம்

ஒடெயார் : சர்வரோக சஞ்சீவி மாத்திரெ

வேலு : ஊம்

ஒடெயார் : பாரு ஒரு டஸ(ன்) வாங்கிட்டு வந்திருக்கே(ன்)

வேலு : ஹி ஹ ஹி...

ஒடெயார் : ஏன்னு பெரிய குடும்பம்பாரு. தலெக்கி ஒண்ணு குடுத்து வெக்யலாமே அப்டீண்ணுட்டு

வேலு : ஹி ஹி ஹி...

ஒடெயார் : என்னு சிரிக்கிறே நீ?

வேலு : ஹி ஹி ஹி...

ஒடெயார் : அ, இப்பிடிப் பல்லெக்காட்ன ஒடனெ நா(ன்) குடுத்துருவனு? ஒனக்கு வேணுமானு அங்கே போய் வாங்கிக்க, என்னு வேலு! என்ன சிரிச்சுட்டே இருக்கே நீ?

வேலு : ஒடயாரையா! நா(ன்) சிரிக்காம என்ன பண்ணுவே(ன்)

ஒடெயார் : ஆமா, இது கூட என்ன தாம்பூலஜான் மாத்திரேண்ணு நெனச்சிட்டியா நீ?

வேலு : தாம்பூலஜானு?

ஒடெயார் : ஆங்

வேலு : தாம்பூலஜான் மாதிரியேதான்

ஒடெயார் : ஒண்ணூர்ருவா குடுத்து வாங்கியிருக்கே(ன்)

வேலு : அய்யோ! எட்டணுவுக்கு நா(ன்) குடுத்திருப்பெனே!

ஒடெயார் : என்னது?

வேலு : தாம்பூலத்தோட சேத்து வெச்சி குடுத்திருப்பேண்ணு சொல்ல வர்ரே(ன்), அதப்போயி ஒண்ணூர்ருவா கொடுத்து...ஹி ஹி ஹி

ஒடெயார் : எட்டணுவுக்கு நீ கொடுப்பியா? ஆங்!

வேலு : ஆமா, இது என் தாம்பூலஜான் மாத்திரெ

ஒடெயார் : அடெடே நா(ன்) போறெம்பா, பஸ்ஸுக்கு நேர(ம்) ஆயிடிச்சி. ஏ...தங்கவேலு! கொஞ்சம் பஸ்ஸெ நிறுத்தப்பா, இந்தா வந்திட்டே(ன்). இந்தா வந்திட்டே(ன்) தங்கவேலு!

EXERCISES

I. Rewrite the following into written Tamil :

1. போயும் போயு(ம்) இந்தக் காப்புக்கட்டிச் சத்திர அத்துவானத்திலெ ஒனக்கு எங்கேப்பா கூட்டஞ் சேரப் போகுவுது?
2. ரெண்டு இட்டிலி வாங்கிப் போட்டு இட்டுகினு போறே(ன்) அவனெ
3. வர்றவங்க போறவங்களுக்கெல்லா(ம்) கடங்குடுக்க நா(ன்) என்ன வட்டிக்கெடயா வெச்சிருக்கே(ன்)?
4. இந்த பஸ்ஸிலேருக்கிற மகாராசங்கிட்டெ கையெ நீட்டிணுலு(ம்) ஏதாவது காசு கெடக்யு(ம்). வர்ரே(ன்) சாமீ!
5. நம்பளோட சேர்ந்த ஆளாப்பா!
6. நீ ஒ(ன்) வேலயெ கவனிச்சுகிட்டேயிரு.

II. Vocabulary Exercise:

(a) Write atleast two derivative nouns for each of the words given below, following the model :

Model: கடை—கடைக்காரன்

கடை—

(i) காவல்

(ii) வித்தை

(iii) பணம்

(iv) வேட்டை

(*b*) Split the following compounds into constituent words and write meanings for the same.

(i) ஜாலவித்தை

(ii) பாம்புப்பெட்டி

(iii) மகாராசன்

(iv) வேலண்ணன்

(v) புலிக்குட்டி

III. *Fill up the blanks choosing the correct item.*

Make changes in the sentence if necessary.

1. வெயில்———நம்ப சின்னப் பையன் இருக்காம்பாரு

    (i) ஆல்

    (ii) ஏ

    (iii) கு

2. அங்கே நான் போய்க்கிட்டிருக்———

    (i) ஆள்

    (ii) ஆர்

    (iii) என்

3. நாலு இட்லி———கொடுப்பாரு?

    (i) ஆலே

    (ii) கீழ்

    (iii) யா

4. நா(ன்) என்ன வட்டிக்கெட———வெச்சிருக்கேன்?

    (i) கு

    (ii) ஆ

    (iii) ஓடு

5. சொன்னுக் கேக்க மாட்———நீ

    (i) ஏன்

    (ii) ஆள்

    (iii) எ

6. நீ ஒ(ன்) வேரு———கவனிச்சுக்கிட்டிரு

    (i) எ

    (ii) கு

    (iii) ஆல்

IV. Substitution :

1. இந்தப் பாம்புப்பெட்டியெத் தூக்கிட்டு நீ வேறெ வந்துட்டியா?

(*a*) Substitute the following for பாம்புப்பெட்டியெ after making necessary changes in the given words :

(i) பணப்பெட்டி

(ii) பணப்பை

(iii) **சாமான்**

(*b*) Substitute the following for **தூக்கிட்டு** after making necessary changes in the given words:

(i) எடு

(ii) வச்சு

(iii) கொண்டு

(*c*) Substitute the following for **வந்திட்டியா** after making necessary changes in the given words :

(i) போ

(ii) இரு

(iii) கிட

2. கையிலெ காசிருந்தா பேசு, இல்லேன்னு நடயெக்கட்டு போய்யா

(*a*) Substitute the following for **கையிலெ** after making necessary changes in the given words :

(i) பை

(ii) ஜோப்பு

(iii) பர்ஸ்

(*b*) Substitute the following for காசிருந்தா after making necessary changes in the given words:

(i) பணம்

(ii) பொன்

(iii) நோட்டு

(*c*) Substitute the following for பேசு after making necessary changes in the given words:

(i) நில்

(ii) பார்

(iii) கவனி

V. *Rewrite the following sentences by substituting one item at a time.*

1. *பாம்பெக் கண்டா பஸ்ஸே ஓடிருமேய்யா?*

(i) புலியெ

(ii) பாத்தா

(iii) ஊரே

2. *ஒரு நால்ஞ இருந்தா குடு ஸாமி!*

(i) கிடெச்சா

(ii) சார்

(iii) தா

(iv) ரூபா

3. *பொதங்கெளமெ கட்டாயம் தந்திர்றேன்*

(i) கொடுக்கறேன்

(ii) நாளேக்கு

(iii) நிச்சயமா

4. அதுக்கு மேலெ எம்முதுகுலெ எப்படிப் பளீர் பளீருண்ணு வெடிக்குந் தெரியுமா?

(i) உம் தலையிலெ

(ii) அப்புறம்

(iii) பட்படட்டெண்ணு

(iv) ஒடெயும்

5. காலங் காத்தாலெ தகராறு பண்றியே

(i) வம்பு

(ii) சாயங்காலத்தலெ

(iii) செய்றியே

VI. Transform the following into negative sentences :

1. அங்கே போய்க்கிட்டிருக்கேன்

2. அவன்கி எச்சி கையாலெகூட காக்கா ஓட்டுவான்

3. காசு கொடுப்பானு?

4. போய் வா!

5. போ போ!

VII. *Transform the following into interrogative sentences, using the underlined phrase/word :*

1. இவர் ஜாலவித்தை காட்ற ஸாப்ஜான் பாயி
   இவர் ஜாலவித்தையா காட்ற ஸாப்ஜான் பாயி?

2. ரெண்டு இட்லி வாங்கி போட்றேன்

3. நீ வட்டிக்கடெ வெச்சிருக்கெ

4. அவன் சைக்கிள்கூட ஓட்டமாட்டான்

5. நான் அவனெ சோடாகலர் வித்துக்கிட்டு வர அனுப்ச்சிருக்கேன்.

6. பக்கோடாவுக்கு மொளகாயில்லேனு தவிச்சுண்ட்ருக்கேன்.

VIII. *Change each of the following complex sentences into simple sentences.*

1. அந்த இடுக்காலே தெரியற பீமவிலாஸ் ராம அய்யர் ஓட்டல், அங்கெ போயி ரெண்டு இட்லி கேளு

2. இந்த பஸ்ஸிலேருக்கிற மகராசங்கிட்டெ கையெ நீட்டினாலும் ஏதாவது காசு கெடக்யும்

3. பக்கோடாவுக்குப் பச்செ மொளகாயில்லேனு தவிச்சுண்ட்ருக்கப்போ, தகராறு பண்றியே.

4. பளய கதெயெ நெனச்சு, நான் பாட்டுக்கு பேசறேன்

5. சொல்லி வாயெ மூடலெ அதுக்குள்ளெ வந்து நின்னுட்டேளா?

IX. *Change the following into complex sentences :*

1. நம்மெ துண்டு பொகயிலெ எப்படி?
அதெப்பத்தி கொஞ்சம் சொல்லுங்க

2. கூடவே ஒரு தாம்பூல்ஜான் போட்டுப் பாருங்க. இன்னும் நல்லாவே இருக்கும்.

3. அது மணி மணியா ராகத்தெ பாடும். அதனாலே அதுக்கு ராகமணிபாய் அப்டீன்னு சிங்கப்பூர்லே பேர் கொடுத்தாங்க.

4. நல்ல காலம். நீங்க கூட உண்மையெ பேச ஆரம்பிச்சுட்டீங்க.

5. நான் தர்ரேன். அப்போ நீங்க அப்படி சொல்லப்படாது.

6. அந்த வைத்தியரு பாழாப் போனாரு. இதெ ஏந்தலேலெ கட்டிட்டாரு.